# பாரதி:
# சில பார்வைகள்

ரகுநாதன்

# பாரதி: சில பார்வைகள்

ரகுநாதன்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098

முதற் பதிப்பு: ஜூன், 1982 (மீனாட்சி புத்தக நிலையம்)
இரண்டாம் பதிப்பு: டிசம்பர், 1990
© தொ. மு. சி. ரகுநாதன்

Code No. A 517

விலை: ரூ. 24-00

அச்சிட்டோர்:
பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,
சென்னை-600 014

# முதற் பதிப்பின் முன்னுரை

நாற்பதாண்டுக் காலம் கூட முழுமையாக வாழாமல் நம்மை விட்டுப் பிரிந்து சென்றவன் பாரதி. இந்த நாற்பதுக்கும் குறைவான ஆயுட் காலத்தில், அவன் தேசிய கவியாகப் பரிணமித்து, மகா கவியாக மலர்ந்து மணம் பரப்பிய இலக்கிய வாழ்க்கைக் காலம் பதினாறே ஆண்டுகள்தான். இந்தப் பதினாறு ஆண்டுக் காலத்தில் அவன் படைத்தளித்த கவிதைகள்தான் அற்பாயுளில் உயிர் நீத்த பாரதியை அழியாப் புகழ் படைத்த அமர கவிஞனாக்கி யுள்ளன. இன்று பாருலகே அஞ்சலி செலுத்தும் விதத்தில் தனது முதல் நூற்றாண்டு விழாவைக் காணும் அந்தக் கவிஞன், இலக்கிய உலகில் இன்னும் பல்லாண்டுக் காலம் வலுவும் வனப்பும் குன்றாமல் ஆட்சி செலுத்தி வருவான் என்பதும், பல நூற்றாண்டு விழாக்களைக் காண்பான் என்பதும் நிச்சயம். எனவே இத்தகைய கவிஞனைப் பலவாறும் ஆழமாக ஆராய்ந்து எழுதுவதற்கு விஷயமும் உண்டு; அதற்கான அவசியமும் உண்டு.

என்னைப் பொறுத்தவரையில் பிள்ளைப் பருவம் முதலே பாரதியிடம் ஈடுபாடு அதிகம். மேலும், எனது இலக்கிய, அரசியல், சமுதாயக் கருத்துகள் பலவற்றை உருவாக்குவதிலும் பாரதி பெரும் பங்கு வகித்திருக்கிறான். இதனால் அவனது படைப்புக்கள் அனைத்தையும் ஆழமாகப் பயின்று புதிய உண்மைகளைக் காண்பதில் நான் பல்லாண்டுகளாகவே ஆர்வத்தோடு ஈடுபட்டு வந்திருக்கிறேன். இதன் பயனாக நான் 'கங்கையும் காவிரியும்' (தாகூரும் பாரதியும்), 'பாரதி

யும் ஷெல்லியும்' என்ற இரண்டு ஒப்பு நோக்கு நூல்களை ஏற்கெனவே எழுதி வெளியிட்டிருக்கிறேன். பாரதி பற்றிய எனது ஆராய்ச்சிகளில் நூல் வடிவில் வெளிவரும் மூன்றாவது படையல் இது.

நான் எழுதத் தொடங்கிய காலம் தொட்டு, குறிப்பாக, கடந்த முப்பது ஆண்டுகளில், ஆண்டுதோறும் பாரதி தினத்தை ஒட்டி பாரதியைப் பற்றி நான் கண்டறிந்த உண்மைகளைக் கட்டுரை வடிவில் வழங்கி வருவதை ஒரு கடமையாகவே மேற்கொண்டு வந்துள்ளேன். 'பாரதி: சில பார்வைகள்' என்ற இந்த நூலில் கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் நான் எழுதிய கட்டுரைகளில் சில இடம் பெற்றுள்ளன.

இவற்றில் முதல் கட்டுரையான 'முடியாத கதை' 1956-ல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அழைப்பின் பேரில் நான் இலங்கை சென்று நாற்பது நாட்கள் தங்கி, அங்கு நடந்த பாரதி விழாக்களில் உரையாற்றி வந்த காலத்தில், இலங்கையின் பிரபல தினசரிப் பத்திரிகையான 'தினகர'னின் அந்நாள் ஆசிரியர் திரு. வி. கே. பி. நாதன், நான் அங்கு தங்கியிருந்த நாட்களில் தமது பத்திரிகையின் வார மலரில் தொடர்ச்சியாக வெளியிடுவதற்கெனக் கேட்டுக் கொண்டதற்கிணங்க எழுதப்பட்ட கட்டுரை. பாரதியின் ''பாஞ்சாலி சபதம்' பற்றிய இந்த நீண்ட கட்டுரையை, ஓடுகிற ஓட்டத்தின் மத்தியில் எழுதி முடிப்பதற்கு எனக்கு உறுதுணையாக நின்று ஊக்கமளித்த, அன்று இலங்கையில் இருந்தவரும், இப்போது ஒட்டப்பிடாரவாசியுமான எனது இனிய நண்பர் திரு. ஆ. குருசாமியையும் நான் இங்கு நன்றியுணர்வுடன் நினைவு கூராமல் இருக்க முடியாது. 1964-ல் வெளிவந்த 'கரும்புத் தோட்டத்திலே' என்ற கட்டுரை, பாரதி பாடியுள்ள அற்புதமான பாடலின் தோற்ற வரலாற்றுப் பின்னணியை இன்றைய தலைமுறையினருக்கு இனம் காட்டுவதாகும். 'மாயையைப் பழித்தல்' பற்றிய விசாரணை

(1967), இந்தத் தலைப்பில் பாரதியின் 'வேதாந்தப் பாடல்கள்' வரிசையில் இடம் பெற்றுள்ள பாடல், உண்மையில் வேதாந்தப் பாடல் அல்ல என்ற உண்மையை நிறுவிக் காட்டுவதாகும். 'தாயின் மணிக்கொடி' (1966) பாரதி இனம் காட்டியுள்ள கொடி எழுப்பிய புதிருக்கு முதன் முதலில் விடை கண்ட கட்டுரையாகும். இந்தக் கட்டுரை வெளி வந்த சமயத்தில் பாரதி ஆராய்ச்சியாளரான திரு. ரா. அ. பத்மநாபன் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இவ்வாறு எழுதியிருந்தார்:

''செப்டம்பர் 'தாமரை' இதழில் பாரதியின் 'தாயின் மணிக்கொடி' பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். எனக்கும் இதே சந்தேகங்கள் இருந்தன, ஆனால் கல்கத்தாவில் முதலில் தோன்றிய கொடியின் விவரம் தெரியாததால் தவித்ததுண்டு. இப்போது உங்கள் கட்டுரை மூலம் அதை அறிந்து மகிழ்ந்தேன். மிக்க நன்றி. இன்று பெரியசாமித் தூரன் அவர்கள் இந்த விஷயமாய் அகஸ்மாத்தாக டெலிபோன் செய்தார். அவருக்கும் கொடி பற்றிய சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன! உங்கள் கட்டுரையை அவர் பார்த்ததில்லை. பார்க்குமாறு சொன்னேன்.''

அடுத்து இடம் பெற்றுள்ள 'பரிசு பெறத் தவறிய பாடல்' (1979) பாரதியின் பிரசித்தமான 'செந்தமிழ் நாடு' என்ற பாடலின் தோற்றக் காலம் பற்றிய ஆராய்ச்சியின் போது தெரிய வந்த சுவையான தகவல்களைக் கூறும் கட்டுரையாகும். 'புதிய ருஷ்யாவும் பாரதியும்' (1966) என்ற கட்டுரை மகத்தான அக்டோபர் புரட்சியைத்தான் பாரதி போற்றிப் பாடினான் என்பதை நிறுவிக் காட்டும் கட்டுரையாகும். இந்தப் பொருள் குறித்து முதன் முதலில் வெளிவந்த முழுமையான கட்டுரை இதுவே எனச் சொல்லலாம். இந்தக் கட்டுரைக்குப் பின் நான் தெரிய வந்த புதிய உண்மைகளை 'அக்டோபர் புரட்சியும் தமிழ் இலக்கியமும்' என்ற எனது நூலிலும், வேறு பல கட்டுரைகளிலும்

தெரிவித்திருக்கிறேன். கடந்த பதினைந்து ஆண்டுக் காலத்தில் இதே பொருள் குறித்து நான் செய்து வந்துள்ள ஆராய்ச்சியின் மணிச் சுருக்கமான தொகுப்பும் சாரமுமே, இந்தப் பாரதி நூற்றாண்டில் நான் எழுதி வெளியிட்ட 'கிருதயுகம்' என்ற கட்டுரையாகும். இதனைக் குறித்து இலங்கையைச் சேர்ந்த பிரபல இலக்கிய விமர்சகர் டாக்டர் திரு. க. கைலாபதி எனக்கு எழுதியுள்ள கடிதத்தில், "கிருதயுகம் பற்றிய கட்டுரை அவ் விஷயத்தைத் தீர்க்கமான ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது என்பதில் ஐயமில்லை" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

அடுத்துள்ள 'பாரதியும் தாகூரும்' (1961), கவியரசர் தாகூரின் நூற்றாண்டு விழாச் சமயத்தில் எழுதப்பட்டது. இதன்பின் விரைவில் நான் எழுதி வெளியிட்ட 'கங்கையும் காவிரியும்' என்ற ஒப்பீட்டு நூலுக்கு இதுவே முன்னோடியாக விளங்கியது. இறுதியில் இடம் பெற்றுள்ள 'வீடும் வெளியும்' (1961), 'பாரதியும் தேசிய ஒருமைப் பாடும்' (1973), 'பாரதி பரம்பரை' (1954), 'பாரத சமுதாயப் பாடல்' (1966) ஆகிய நான்கும், பாரதியின் தேசிய, சர்வதேசிய நோக்கையும், அவனது புகழ்க் காரணத்தையும், இன்றும் பாரதியைப் பற்றி எழுப்பப்படும் ஐயப்பாடுகளுக்கும், அவன்மீது பொழியப்படும் அவதூறுகளுக்கும் உரிய பதில்களையும் கூறும் கட்டுரைகளாகும். இந்தக் கட்டுரைகள் அனைத்தையும் அவை வெளிவந்த காலத்திய வடிவத்திலேயே பெரும்பாலும் வழங்கியுள்ளேன். பின்னர் தெரியவந்த புதிய செய்திகளை அவற்றோடு சேர்க்கவில்லை. எனினும் அத்தகைய செய்திகள் சிலவற்றை அவசியத்தை முன்னிட்டு ஓரிரு கட்டுரைகளில் பின் குறிப்பாகச் சேர்த்திருக்கிறேன்.

பாரதியைப்பற்றி நாம் ஆராயும்போது அவன் இலக்கிய கர்த்தாவாக மட்டுமல்லாமல், அரசியல்வாதியாகவும் திகழ்ந்தான் என்ற உண்மையை மறக்க முடியாது; மறக்கக் கூடாது. 'நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற் குழைத்தல்'

என்பது அவனது மணிவாக்கு. இதற்கொப்ப அவனிடத்தில் நாடும் மொழியும், இலக்கியமும் அரசியலும் பின்னிப் பிணைந்தே இருந்தன. இவற்றைப் பிரித்துப் பார்ப்பதற் கில்லை. எனவே இந்த நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் வெவ்வேறு விஷயம் பற்றியவையாயினும், அவை யாவற்றிலும் இந்தக் கண்ணோட்டத்தோடு, வரலாற்று உண்மைகளின் அடிப்படையில், பாரதியின் இலக் கியப் படைப்புகளை ஆராயும் ஒருமைத்தன்மை அடிச்சர டாக ஊடுபாய்ந்திருப்பதை எவரும் காணலாம், இந்தக் கட்டுரைகளில் நான் தெரிவித்துள்ள கருத்துக்களிலும் முடிபு களிலும் கருத்து வேற்றுமை கொள்பவர்கள் இருக்கலாம். எனினும் அவற்றுக்குத் துணை நிற்கும் ஆதாரங்கள் பல வற்றையும் நான் போதிய அளவுக்கு வழங்கியே இருக்கிறேன். இந்த நூலில் வாசகர்கள் பாரதியைப் பற்றிய பல புதிய உண்மைகளையும் செய்திகளையும் நிச்சயம் காண முடியும்.

இந்தக் கட்டுரைகள் இலங்கை தினகரன், மற்றும் தாமரை, சாந்தி, ஜனசக்தி, தீபம் முதலிய பத்திரிகைகளில் வெளிவந்தவை. இவற்றை வெளியிட்ட பத்திரிகை ஆசிரியர் களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது

ரகுநாதன்

# உள்ளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | முடியாத கதை | ... | 9 |
| 2. | கரும்புத் தோட்டத்திலே! | ... | 48 |
| 3. | மாயையைப் பழித்தல் : ஒரு விசாரணை | ... | 81 |
| 4. | தாயின் மணிக்கொடி | ... | 104 |
| 5. | பரிசு பெறத் தவறிய பாடல் | ... | 124 |
| 6. | புதிய ருஷ்யாவும் பாரதியும் | ... | 143 |
| 7. | கிருத யுகம் | ... | 176 |
| 8. | பாரதியும் தாகூரும் | ... | 190 |
| 9. | வீடும் வெளியும் | ... | 205 |
| 10. | பாரதியும் தேசிய ஒருமைப்பாடும் | ... | 214 |
| 11. | பாரதி பரம்பரை | ... | 230 |
| 12. | பாரத சமுதாயப் பாடல் | ... | 246 |

# முடியாத கதை

மகாகவி பாரதி தனது 'பாஞ்சாலி சபத'த்தின் முன்னுரையில் பின்வருமாறு தன்னடக்கத்துடன் பேசுகிறான்:

> ''எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக இந்நூலை வியாச பாரதத்தின் மொழிபெயர்ப்பென்றே கருதி விடலாம். அதாவது, 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்தச் சரக்கு' அதிகமில்லை. தமிழ் நடைக்கு மட்டுமே நான் பொறுப்பாளி.''

பாரதிக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வில்லிபுத்தூரார், பெருந்தேவனார், நல்லாப்பிள்ளை முதலிய புலவர்கள் பாரதக் கதையைத் தமிழில் பாடி வைத்து விட்டார்கள். எனினும் இருபதாம் நூற்றாண்டின் புரட்சிப் புலவனாகத் திகழ்ந்து, ''சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொல் புதிது, சோதி மிக்க நவ கவிதை'' எனப் புகழத்தக்க கவிதைகளை ஆக்கிப்படைத்த பாரதி, ஆகத் தொன்மையான பாரதக் கதையை மீண்டும் ஏன் பாட முனைந்தான் என்பது ஒரு கேள்வி; அடுத்து, கம்பனுக்குப் பின்னர் 'ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது வந்த மாமணி'யாக விளங்கும் மகாகவி எனப் பல்லோராலும் மதிக்கப்படும் பாரதி, கம்பன், இளங்கோ முதலிய கவிஞர்களைப் போல் காப்பியப் புலவனாக மதிக்கத்தக்கவனா, அந்த அந்தஸ்தை அவன் இயற்றிய 'பாஞ்சாலி சபதம்'

அவனுக்குப் பெற்றுத் தருகிறதா என்பது மற்றொரு கேள்வி. இந்த இரண்டு கேள்விகளையும் பரிசீலனை செய்து விடை காண்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

## எது காவியம்?

தமிழ் மொழியில் காவியத்தின் இலக்கணம் பற்றிக் கூறப் பட்டிருக்கிறதா? ஆம். தண்டியலங்காரம் என்ற இலக்கண நூல், பெருங்காப்பியம், காப்பியம் இரண்டுக்கும் இலக்கணம் கூறுகின்றது.

*''பெருங்காப்பிய நிலை பேசுங்காலை...*
*நாற்பொருள் பயக்கு நடை நெறித்தாகித்*
*தன்னிகரில்லாத் தலைவனை யுடைத்தாய்...''*

என்று தொடங்கி, பெருங்காப்பியத்தின் பல்வேறு அம்சங் களையும் வரையறுத்துக் கூறுகின்றது. இதன்படி, பெருங் காப்பியம் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கின் பயனையும் பாடுவதோடு, தன்னிகரில்லாத் தலைவன் ஒருவனையும் காவிய நாயகனாகக் கொண்டிருக்க வேண்டும் என்றும், நவரசங்களும், மற்றும் பல்வேறு வருணனைகளும் இடம் பெற வேண்டும் என்றும் கூறுகின்றது. இதே போன்று காப்பியத்தின் இலக்கணத்தை,

*''அறம் முதல் நான்கினும் குறைபாடுடையது*
*காப்பியம் என்று கருதப்படுமே''*

என வரையறுக்கின்றது. அதாவது அறம் முதலிய நான்கு பொருள்களில் ஒன்றோ, பலவோ குறைந்திருந்தால், அது காப்பியம் எனக் கூறுகின்றது.

தண்டியலங்காரத்தின் இலக்கண வரையறையை அளவு கோலாகக் கொண்டு, ஐம்பெருங் காப்பியங்கள் என்று சொல் லப்படுவனவற்றில் நமக்குக் கிடைத்துள்ள நூல்களான

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய இலக்கியங்களை நாம் அளவிட்டுப் பார்த்தால், இவற்றில் எதுவுமே தன்னிகரில்லாத் தலைவனைக் காவிய நாயகனாகக் கொள்ளவில்லை என்பது தெளிவு. மேலும் சிலப்பதிகாரம் வீடு பேற்றைப் பற்றிப் பாடாத குறைக்கும் ஆளாகியுள்ளது. எனவே இவற்றைக் காப்பியம் என்றுதான் மதிக்க வேண்டும். பெருங்காப்பியங்களின் இலக்கணத்தில் சேராத, இந்த முப்பெருங் காப்பியங்களுக்குப் பின்னர் தோன்றிய கம்பனுடைய ராம கதைதான் தன்னிகரில்லாத் தலைவனான ராமனைக் காவிய நாயகனாகக் கொண்டுள்ளது; வீடு பேற்றையும் வெகுவாகப் பேசுகின்றது. எனினும் நாம் சிலப்பதிகாரம் முதலியவற்றைப் பெருங்காப்பியங்களாகவே மதித்து வருகிறோம். அதுபோலவே சேக்கிழார் இயற்றியுள்ள பெரிய புராணத்தையும் நம்மவரில் பலர் பெருங் காப்பியமாகவே மதித்து வருகிறார்கள். ஆனால் பெரிய புராணமும் தனிப்பட்ட ஒரு தலைவனை, தன்னிகரில்லாத் தலைவனைப் பற்றிய காவியமல்ல. பல்வேறு சிவனடியார்களின் வரலாறுகளைக் கூறும் உபாக்கியானங்களின் கோவையாகத்தான் பெரிய புராணம் காட்சியளிக்கின்றது. இருப்பினும், அதனைப் பெருங்காப்பியமென மதிப்பவர்கள் பெரிய புராணம் நாடு நகரச் சிறப்புக்களைப் பாடி, சுந்தரரோடு ஆரம்பித்துச் சுந்தரரோடு முடிவதையும், அதில் சிவபக்தியே மையமாக இருப்பதால், சிவனே அதற்குக் கதாநாயகன் என்று கற்பிக்க இடமிருப்பதையும் சுட்டிக்காட்டி, அதனைப் பெருங் காப்பிய இலக்கணத்துக்குக் கட்டுப்பட்ட ஒன்றாகக் காட்ட முனைகிறார்கள்.

தமிழில் தோன்றியுள்ள காவியங்கள் பலவும் தண்டியாசிரியரின் 'பெருங்காப்பிய நிலை'க்கு ஒட்டி வரவில்லை. எனினும் நாம் அவற்றைப் பெருங் காப்பியங்களாக மதிக்கிறோம். அப்படியானால், நம்மவர்கள் காவியத்தை எவ்வாறு காவியமென நிர்ணயிக்கிறார்கள் என்ற சிந்தனை நம்மில் எழுவது இயல்பு. தண்டியலங்காரம் 'காவிய தரிசனம்'

என்ற வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு. எனவே தண்டியாசிரியரின் அளவுகோல் நமது இலக்கியத்தில் அழியாத இடம் பெற்று விட்ட பேரிலக்கியங்களுக்கு ஒத்து வருமென்றோ, ஒத்துவர வேண்டுமென்றோ நாம் எதிர் பார்க்க வேண்டியதில்லை. "இலக்கியம் கண்டதற்கே இலக்கண" மன்றி, இலக்கணத்துக் கொத்த இலக்கியம் என்பது நடைமுறை அனுபவம் அல்ல. இலக்கணத்துக்குத் தக்கபடிதான் இலக்கியம் இருக்க வேண்டும் என்று கருதினால், அது "தொன்னைக்கு நெய்தான் ஆதாரம்" என்ற தலைகீழ் வாதத்தில்தான் கொண்டு போய் விடும்.

காவியம் என்ற சொல்லை நாம் பெரும்பாலும் பெருங் கதைப் பேரிலக்கியம் என்ற அர்த்த பாவத்திலேயே பயன் படுத்தி வருகிறோம். எனினும் காவியம் என்றால் என்ன என்ற கேள்வியை எழுப்பினால் அதற்கு நாம் சூத்திர வடிவில் ரத்னச்சுருக்கமாகப் பதிலளிப்பதென்பது சிரமமான காரியம். ஏனெனில் காவியத்துக்கெனத் தனித்ததொரு இலக்கண வரம்பு இருக்கிறதா என்று பார்த்தோமானால், காவிய கர்த்தா தனது மனோபாவத்துக்குத் தக்கவாறு வகுத்துக் கொள்ளும் உருவ அமைதியும், கதா சாரமும், கற்பனா வின்னியாசமும்தான் அவன் இயற்றும் காவியத்துக்கான இலக்கணமாக அமைந்து விடுகின்றன என்பதையும் நாம் நமது இலக்கிய அனுபவத்தின் மூலமாக உணர்ந்து வருகிறோம். எனவே இன்று நமக்குக் கிடைத்துள்ள இலக்கி யங்களின் துணை கொண்டுதான் நாம் காவியத்தின் தன்மைகளை ஒட்டுமொத்தமாகக் கண்டுணர முடியும். இந்த உண்மையை நாம் உணர்ந்து கொண்டால், நமது காவிய இலக்கியங்கள் அனைத்திலும் பல்வேறு திசைகளிலும் ஓடித் திரியும் ரத்த நாளங்களைப்போல் எத்தனை எத்தனையோ சம்பவங்களும், கருத்துக்களும் ஊடு பாவோட்டமாகக் குறுக் கும் மறுக்கும் காட்சியளித்த போதிலும், எவ்வாறு உடம்பி லுள்ள ரத்த நாளங்கள் அனைத்தும் இருதய கமலத்தோடு சம்பந்தப்பட்டிருக்கின்றனவோ, அதேபோல் காவியத்தி

லுள்ள சம்பவங்களும் கருத்துக்களும் காவியத்தின் ஜீவா தாரமான கருத்தோடு அவயவ சம்பந்தம் கொண்டன வாகவே இருப்பதை நாம் கண்டறிய முடியும். காவியத்தின் கதாசாரம் முழுவதும் கதையின் பிரதான சம்பவத்துக்கு வழி வகுத்துக் கொடுக்கும் மார்க்கத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கும்; கதையின் பிரதான சம்பவமோ குறிப் பிட்ட ஒரு கருத்தையோ அல்லது தத்துவத்தையோ கருவாகக் கொண்டு சிறுகச் சிறுக வளர்ந்து பெருகி, இறுதியில் நமக்குத் தத்துவ தரிசனம் வழங்கும். காவியத்தின் இத்தகைய அலங்காரத் தன்மையைப் பற்றி, தமிழ்நாட்டின் இன்றைய இலக்கிய விமர்சனக் கலைக்குப் பிதாமகன் என்று சொல்லத் தகும் திரு. வ.வெ.சு. அய்யர் தமது "கம்ப ராமாயண ரசனை" என்ற தமிழ் நூலிலும், அதே முறையில் எழுதப்பட்டுள்ள ஆங்கில நூலிலும் நன்கு விளக்கியிருக் கிறார்; இதனைக் கம்ப ராமாயணத்தின் 'பீஜக் கருத்தான' ராவண வதம் ராம காவியத்தில் எவ்வாறு இருதய கமலம் போல் அமைந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டி விளக்கு வதன் மூலம் அவர் தெளிவு படுத்தியிருக்கிறார்.

## சிலப்பதிகாரமும், ராம காதையும்

அவயவ சம்பந்தம் கொண்ட கதாம்ச அமைப்பு என வ.வெ.சு. அய்யர் குறிப்பிடும் இந்த ஒட்டு மொத்தமான உருவ அமைதியைத் தவிர, நம்மவர்களின் காவிய இலக் கியங்கள் பலவும் மனித குலத்தையே இயக்கி நடத்துவதாகக் கருதப்படும் விதி அல்லது ஊழ் என்பதே காவியத்தின் ஆதார சுருதியாக நின்று சம்பவங்களை வளர்த்துச் செல்வ தாகவும், அந்த விதி அல்லது ஊழ் என்பது தருமத்தின் இறுதி வெற்றிக்குப் பாதை வகுத்துக் கொடுக்கும் மார்க்க பந்துவாக நின்று நிலவுவதாகவும்தான் பொதுவாகச் சித்தரிப்பதை நாம் காணலாம். "**ஊழ்வினை உருத்து வந்தூட்டும்**" செய்தியை விளக்குவதற்காகவே இளங்கோ வடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார் என்று அதன் பாயிரம் கூறுகின்றது. அவதார புருஷனான ராமனைக்

கதாநாயகனாகக் கொண்ட ராமாயணத்திலும்கூடவிதிதான் ராமனுடைய சகல இயக்கங்களுக்கும் கிரியைகளுக்கும் காரணமாக நின்று நிலவுகிறது. அந்தக் காரணத்தின் காரிய சொருபமாகத்தான் ராமன் காட்சியளிக்கிறான். எனவேதான் ''துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன''த்துக்காக அவதாரமெடுத்து வந்த ராமன் கைகேயியின் சூழ்ச்சியால் அரச பதவியை இழக்கிறான். ராமன் முடி சூடி வருவான் என்று எதிர்பார்த்திருந்த அவனது தாய் கோசலையின் முன்னிலையில், அவன் முடி சூடாத வெறுந் தலையனாக வருகின்ற காட்சியை

குழைக்கின்ற கவரி இன்றி
கொற்றவெண் குடையும் இன்றி
இழைக்கின்ற விதி முன்செல்ல,
தருமம் பின் இரங்கி ஏக

வந்ததாகக் கம்பன் கூறுகின்றான். அதாவது ராமனது வாழ்வில் நிகழும் சகல நிகழ்ச்சிகளும் விதியே முன்னின்று நிகழ்த்தி வைப்பனவாகும் என்பதையும், அவ்வாறு நிகழும் விதியின் செயல்கள் அனைத்தும் ராமனது அவதார காரணமான ராவண வதத்தை, தருமத்தின் வெற்றியை நோக்கிச் செல்லும் பாதையைச் செப்பனிட்டுத் தரும் காரியங்களே என்பதையும் கம்பன் குறிப்பிட்டுக் காட்டுகிறான். இதனால்தான் தசரதன் தன் தமையனுக்கு முடி சூடவில்லை என்பதையறிந்து, **''மூட்டாத காலக் கடைத் தீ என மூண்டு''** எழுந்து வருகின்ற இலக்குவனை ராமன் சமாதானப்படுத்தும் காலத்திலும் **''விதியின் பிழை! நீ இதற்கு என்கொல் வெகுண்டது?''** என்று கூறி, இலக்குவனின் சீற்றத்தைத் தணிக்கிறான். எனவே கம்பனது ராமாயணம் விதி வகுத்துச் செல்லும் பாதையிலே சென்று தரும ஜெயம் என்ற இறுதி லட்சியத்தை எய்துகிறது என்று சொல்லலாம். சிலப்பதிகாரக் காவியமும் **''ஊழ்வினை உருத்து வந்தூட்டும்''** செய்தியை ஆதார

சுருதியாகக் கொண்டு, "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்''றாவதையும், "உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்து'' வதையும் விளக்கி நிற்கின்றது. எனவே சிலப்பதிகாரமும் ஊழ் வகுத்துத் தரும் பாதை வழியே சென்று, அரசியல் பிழைத்த மன்னனுக்கு அறம் கூற்றாவதன் மூலம் தருமம் வெற்றி பெறுவதைச் சித்திரிக் கிறது என்று சொல்லலாம்.

தமிழ் இலக்கியத்தின் மிகச் சிறந்த காவியங்களான இவ்விரு நூல்களிலும் காணப்படும் தன்மைகள், மற்றும் மேலே கூறிய விமர்சனம், வியாக்கியானம் ஆகியவற்றைக் கொண்டு, நம் நாட்டுக் காவிய லட்சணம் பற்றிச் சில வரையறைகளுக்கு வரமுடியும். அவையாவன:

1. காவியத்தில் நிகழும் சகல விதமான காரியங் களுக்கும் காரணமாக, ஆதார சுருதியாக, விதி அல்லது ஊழ் நின்று நிலவ வேண்டும்.

2. அவ்வாறு விதியின் வழிச் சென்று நிகழும் சகல சம்பவங்களும் இறுதியில் தரும ஜெயம் என்ற லட்சியத்தில் முத்தாய்ப்புப் பெற வேண்டும்.

3. தரும ஜெயத்தை நிர்த்தாரணம் செய்யும் கதை யாக எழுதப்படும் இத்தகைய காவியங்களில் கதாம்சத்தில் அடிப்படையான ஆதாரக் கருத்து ஒன்றும் பிரதிபலிக்கப்பட வேண்டும்.

மேற்கூறிய இந்த மூன்று நிர்ணயிப்புக்களை மனத்தில் நிறுத்திக் கொண்டு, நாம் பாரதியின் பாஞ்சாலி சபதத்தை விமர்சனம் செய்து பார்த்தால், நாம் அதனில் ஒற்றுமை களையும் காண முடியும்; வேற்றுமைகளையும் காண முடியும். இந்த ஒற்றுமை வேற்றுமைக்கான காரண காரியங்களையும் நாம் ஆராய்ந்து பார்த்து விட்டால், பாரதியின் பாஞ்சாலி சபதம் எவ்வாறு காவியத் தன்மை பெறுகிறது என்பதையும் கண்டுணர முடியும்.

இதனைக் காண்பதற்கு நாம் சில கேள்விகளை எழுப்பி விடை காண வேண்டும். பாரதி பாஞ்சாலி சபதத்தை ஏன் பாடினான்? இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த கவிஞனாக விளங்கும் பாரதி, தான் பாட முனைந்த காவியத்துக்கு, பழம் புகழ் பெற்ற ஓர் இதிகாசத்தினின்றும் ஏன் தனது கதையைத் தேர்ந்தெடுத்தான்? அவ்வாறு பாரதக் கதையைத் தேர்ந்தெடுத்தபோதும் அவன் ஏன் பாரதக் கதை முழுமையையும் எடுத்து, ஒரு பாரத காவியம் பண்ணாமல், ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொண்டான்? தேர்ந்தெடுத்த பகுதியிலும் அவன் ஏன் பாஞ்சாலியின் சபதத்தோடு தனது கதையை முடித்துக் கொண்டு விட்டான்?—என்பன போன்ற கேள்விகளுக்கு விடை காண்பதன் மூலம் தான் நாம் பாரதியைப் புரிந்து கொள்ள முடியும்; அவனுடைய காவியத்தின் உயர்வையும், ஏனைய காவிய கர்த்தாக்களைப் போல், அவனும் தமிழ்க் காவிய உலகிலே சிறந்ததொரு ஸ்தானத்தைப் பெற்று நிற்கின்ற காட்சியையும் நன்குணர முடியும்.

## பாரதி — யார்?

பாரதி இருபதாம் நூற்றாண்டின் இந்திய தேசிய இயக்கம் உருவாக்கித் தந்த தேசிய மகாகவி. எனவே அவனது கவிதாவிலாசமும் தத்துவ விசாரமும் இந்திய நாட்டின் தேசியத் தேவைகளைக் கருத்தில் கொண்டு மலர்ந்தவையேயாகும். பழைய கதாம்சங்களை அவன் தேர்ந்தெடுத்துப் பாடுகின்ற காலத்திலும், அவன் வாழ்ந்த காலத்தின் தேசியத் தேவைகளைக் கருத்தில் கொண்டுதான் பாடினான். உதாரணமாக, **குருகோவிந்தர், சத்ரபதி சிவாஜி** ஆகிய பாடல்களைச் சுட்டிக் காட்டலாம். தேசிய விடுதலைக்காகப் போராடிய போர்க்களப் புலவனாக விளங்கிய பாரதி, தேச விடுதலைக்கும், தேசிய முன்னேற்றத்துக்கும் முட்டுக்கட்டைகளாக வழியடைத்துக் கிடக்கும் சமூகக் கொடுமைகளையும் எதிர்த்துச் சாடினான். அத்தகைய கொடுமைகளிலிருந்து மனித சமூகம் விடுதலையடைய

வேண்டும் என்றும் விரும்பினான். அந்தக் கொடுமைகளில் ஒன்றுதான் பெண்ணடிமைத்தனம். ஆண் பெண் என்ற இருவேறு பாற்பிரிவுகளாகப் பிரிந்து தோன்றும் மனித வர்க்கத்தில் ஆண் பாலர் பெண்பாலரை அடக்கியாள்வ தென்பது மனித வர்க்கத்தின் செம்பாதியையே முடமாக்கும் காரியமாகும் என்று பாரதி கருதினான். ஆணும் பெண்ணும் சமூகத்தின் இரு கண்கள் என்றும், அவற்றில் ஒன்றைக் குத்திக் கெடுப்பது அறிவீனம் என்றும் அவன் கூறினான்.

நாடு முன்னேற வேண்டுமானால், பெண்களுக்கும், சமுதாய சமத்துவமும், உரிமையும், சந்தர்ப்பங்களும் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து, பாரதி காலத்துக்கு முன்பே பாரத மண்ணில் வேர் பரப்பித் தழைத்தோங்கத் தொடங்கி விட்டது. வங்க நாட்டு மறுமலர்ச்சியின் மூலவர்களில் ஒருவரான **ராஜாராம் மோகன ராய்**, 'ஸதி' என்கிற உடன்கட்டை ஏறும் வழக்கத்தை எதிர்த்தும், பெண் கல்வியை ஆதரித்தும் எப்போதோ குரல் எழுப்பி விட்டார். அவருக்குப் பின்னர் **வித்தியாசாகரும்**, தென்னாட்டில் **வேதநாயகம் பிள்ளையும்**, மற்றும் சிலரும் தமது கருத்துக்களைச் செயல் மூலமாகவும் செய்யுள் மூலமாகவும் வற்புறுத்திச் சென்று விட்டனர். எனவே இருபதாம் நூற்றாண்டின் இந்திய தேசிய இயக்கத்தின் தேவைகளில் பெண் விடுதலை இயக்கமும் அத்தியாவசியமான முக்கியத் துவத்தைப் பெற்றபோது, பாரதி போன்ற கவிஞர்களுக்கு முன்பிருந்தோர் செய்த சேவை நல்லதோர் அஸ்தி வாரத்தையும் ஆரம்பத்தையும் வித்திட்டுச் சென்றிருந்தது என்றே சொல்ல வேண்டும். மேலும் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டுக் கவிதைப் பணியாற்றிய பாரதி தனது ஆதர்சக் கவிஞர்களில் ஒருவனாக ஆங்கிலக் கவிஞனான ஷெல்லியை வரித்திருந்தான் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். 'ஷெல்லியன் கில்டு' என்ற பெயரில் ஓர் இலக்கியச் சங்கத்தை உருவாக்கி, தன் பெயரை 'ஷெல்லிதாசன்' என்று வைத்துக் கொள்ளும் அளவுக்கு, பாரதி ஷெல்லியிடம் ஈடுபாடு

கொண்டிருந்தான். ஆங்கிலக் கவிஞனான ஷெல்லி பாரதியைப் போலவே கொடுங்கோன்மையை எதிர்த்தும், மக்களின் அவல நிலைகளையும் பெண்மக்களின் அடிமை நிலையையும் போக்கவும் கவிதை பாடியவன். பத்தொன் பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஷெல்லியின் பாடல்கள் எவ்வாறு ஆங்கில நாட்டில் முழங்கியதோ, அதே போன்றுதான் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் பாரதியின் பாடல்கள் முழங்கத் தொடங்கின. கம்பனும் இளங்கோவும் கற்றுத் தந்த கவிதாநோக்கும், பதினெட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் எளிய இனிய பாடல்களைப் படைத்துத் தந்த திரிகூட ராசப்பக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார் போன்றவர்கள் உருவாக்கித் தந்த எளிமைப் போக்கும் கொண்டு, தமிழில் புதிய கவிதைகளை, தேசியத் தேவைக்கேற்ற கவிதைகளைப் படைத்து வந்த பாரதி, ஆங்கிலக் கவிஞன் ஷெல்லியிட மிருந்து புதுமைக் கருத்துக்களையும், ஆவேசத்தையும், ஆதர் சத்தையும் பெற்று வளர்ந்தான் என்பதை இலக்கிய ஒப்பு நோக்காளர்கள் எளிதில் உணர்வார்கள்: அதே போன்று பெண் விடுதலைக்காகப் போர்க்கொடி ஏந்தி நின்ற பாரதி, பெண்குலத்தைப் பற்றியும், பெண் விடுதலை பற்றியும் ஷெல்லி தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ள இஸ்லாமின் புரட்சி, ராணி மாப் (Revolt of Islam; Queen Mab) முதலிய நெடுங்கவிதைகளிலிருந்தும், மற்றும் பிற கவிதைகளிலிருந் தும் லட்சிய வேகமும் ஞான போதமும் பெற்றுச் சிறந்தான் என்பதையும் ஷெல்லியையும் பாரதியையும் அறிந்தவர்கள் நன்குணர்வார்கள்.

## பாரதியும் பெண்மையும்

எனவே மேற் கூறிய சூழ்நிலைகளாலும், அவற்றின் அனுசரணைகளாலும், பாரதியின் பெண்மை பற்றிய கண் ணோட்டம் தெளிவும் உறுதியும் தீர்க்கமும் பெற்று விளங் கியது என்பதை நாம் பாரதி பெண்குலத்தைப் பற்றிப் பாடிய பல பாடல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்,

இந்திய நாட்டுப் பெண்குலத்தின் அவல நிலையை நேரிலேயே கண்டுணர்ந்த பாரதி,

> பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் மிகப்
> பீழை இருக்குமடி தங்கமே தங்கம்!

என்று தனது கண்ணன் பாட்டில் அதனைச் சுட்டிக் காட்டினான். பாரதிக்கு முன்பிருந்த அறிஞர் பெருமக்களில் பலர் பெண்களை இழிவாகத்தான் மதித்தனர். ''பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு'' என்று கசந்து போய்ச் சொன்னார் பட்டினத்தார். பாரதியோ, ''தங்கச் சிலை போல நிற்கிறாள் மனைவி. நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள்; நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள்; நமது குழந்தைகளை வளர்த்தாள். அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்யா? பெற்றவரிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா?'' என்று அதற்கு எதிர்க்குரல் எழுப்பினான். 'பெண்ணில் பெருந்தக்க யாவுள' என்று பெண்ணைப் புகழ்ந்து பாடிய வள்ளுவனும் கூட, பெண் சொல்லைக் கேட்கக் கூடாது என்பதற்காக, 'பெண் வழிச் சேறல்' என்ற ஓர் அதிகாரத்தையே எழுதி வைத்தான். இதன் காரணமாக, ''அறிவறிந்த மக்கள் பேறல்ல பிற'' என்ற தொடருக்கு உரை எழுதப் புகுந்த பரிமேலழகரும்கூட, ''அறிவறிந்த என்றதனான், மக்களென்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது'' என்று வலிந்தும் துணிந்தும் பொருள் கூறியுள்ளதையும் நாம் காண்கிறோம். ஆம், பெண்ணென்றாலே 'பேதை' என்றும், 'மடவார்' என்றும்தான் நமது முன்னோர்கள் பலரும் கூறி வந்திருக்கிறார்கள். இதன் காரணமாகத் தானோ என்னவோ, அறிவுத் துறையைச் சேர்ந்த அறிஞன், கலைஞன், கவிஞன், புலவன் முதலிய ஆண்பாற் பெயர்களுக்கெல்லாம் சரி நேரான பெண்பாற் பெயர்களே தமிழ் மொழியில் அன்று (ஏன், இன்றும்கூட) உருவாகாமலே போய் விட்டது போலிருக்கிறது! பெண்பாற் புலவரான

அவ்வையாரின் பெயரில் உள்ள பழைய ஆத்திசூடியும் கூட 'தையல் சொல் கேளேல்!'' என்று நீதி போதிக்கிறது. பெண் பேச்சைக் கேட்காதே என்று பேசுபவர் யார் தெரியுமா? ஒரு பெண்தான்! அப்படியானால் அவ்வையின் நீதியை யார் கேட்பது? (இந்த ஆத்திசூடியை அவ்வையோ, வேறு எந்தவொரு பெண்பாற் புலவரோ எழுதியிருக்க முடியாது. எவரோ ஓர் ஆண் மகன்தான் இதனை ஆக்கி, அவ்வையின் தலையில் கட்டியிருக்க வேண்டும்) ஆனால் புதிய ஆத்திசூடியை எழுத வந்த பாரதியோ ''**தையலை உயர்வு செய்**'' என்று பழைய ஆத்திசூடிக் கருத்தை மறுத்து, புதிய நீதி வழங்கினான். பெண்களைப் பேதையர் என்றும், மடவார் என்றும், அறிவற்றவர் என்றும் கூறிய பழைய கூற்றுக்களை மறுத்துப் பாரதி பின்வருமாறு பாடினான்:

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.

கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடும் காணீர்!

ஆம். பெண்களை அறிவற்றவர்கள் என்று கூறிய அறிஞர் பெருமக்களுக்குப் பாரதி வழங்கும் பட்டம் 'மூடர்' என்பதுதான்!

இவ்வாறாக, 'பீழை மிகுந்த பெண் குல'த்தின் நிலைமையைக் கண்டு மனம்கொதித்த பாரதி, பெண் மக்களை அடிமை கொண்டு வாழும் ஆண்குலத்தின் அதிகார

வெறிக்கு நியாயம் கற்பித்து நிற்கும் சாஸ்திரங்களையும் தர்மங்களையும் எதிர்த்துச் சாடினான். அத்துடன் நில்லாமல் பெண்மக்களின் சார்பிலே நின்று, அவர்களின் விழிப்புக்கும், விழிப்புற்ற நிலையில் தோன்றும் வீராவேசத்துக்கும் வழி வகுத்தான். எனவே 'பெண்ணுக்கு விடுதலை' என்பதை ஒரு தர்ம சாஸ்திரமாகவும் சட்டமாகவும் பிரகடனப் படுத்தி விடுகிறான்.

> பெண்ணுக்கு விடுதலை என்று இங்கோர் நீதி
> பிறப்பித்தேன்; அதற்குரிய பெற்றி கேளீர்.
> மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமென்றால்
> மனையாளும் தெய்வமன்றோ? மதி கெட்டீரே!
> விண்ணுக்குப் பறப்பது போல் கதைகள் சொல்வீர்!
> விடுதலை என்பீர்! கருணை வெள்ளம் என்பீர்!
> பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லையென்றால்
> பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை!

என்று ஆணித்தரமாக, வேதாந்த உண்மையின் அடிப்படையிலே பெண் விடுதலைக்கு ஆதாரம் காட்டுகிறான். மேலும், பெண் குலத்தை அடிமைகொண்டு வாழும் ஆண் குலத்தின் சிறுமையையும்,

> பெண்டாட்டி தனை அடிமைப்படுத்த வேண்டிப்
> பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?

என்று ஒவ்வோர் ஆண்மகனின் உள்ளத்தையும் தொட்டுச் சுட்டு உறைக்கும் வண்ணம் கேள்வியெழுப்பினான்.

இவ்வாறு பெண் விடுதலைக்காகப் போராடி நின்ற பாரதி இந்திய நாட்டின் தேசிய இயக்கப் போராட்டக் காலத்தின் போது, அன்னிய ஆதிக்கத்தின் அதிகார வர்க்கப் பிடாரிகளால் மானபங்கப்படுத்தப்பட்ட பெண்களின் துயரங்கண்டு சீறியெழுந்தான். அதுமட்டுமல்ல!

சொந்தச் சகோதரிகள் போன்ற தாய்நாட்டுப் பெண் குலத்தை அன்னிய ஆதிக்க வெறியர்களும், அவர் தம் அடியாட்களும் மானபங்கப்படுத்திய காலத்திலும், அந்த இழிசெயலைத் தடுத்து நிறுத்த வலியற்று, தெம்பற்று, திராணியற்று, ஆண்மையிழந்து நின்ற மக்களைக் கண்டும் அவன் கோபம் கொண்டான்.

மாதரைக் கற்பழித்து
வன்கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போல் உயிரை—கிளியே
பேணி இருந்தாரடி!

என்று பாடி, தமது உயிரைக் கருப்புக் கட்டியாய் மதித்து, தாய்நாட்டின், தாய்க்குலத்தின் மானத்தைக் காப்பாற்றத் துணிச்சலற்றிருந்த, உயிருக்குப் பயந்த கோழைகளான நடிப்புச் சுதேசிகளையும் அவன் அம்பலப்படுத்தினான்.

இதேபோன்று, கடல் கடந்து பிழைப்பின் காரணமாகக் கண்காணாத சீமைகளுக்குச் சென்ற தமிழ்ப் பெண்கள் பீஜி முதலிய தீவுகளில் பட்ட துன்பத்தையெல்லாம் கண்டு அவன் மனம் வெதும்பினான். அதன் காரணமாக, அவனது பிர சித்தமான 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாட்டும் பிறந்தது.

நெஞ்சம் குமுறுகிறார் — கற்பு
நீங்கிடச் செய்யும் கொடுமையிலே அந்தப்
பஞ்சை மகளிரெல்லாம் — துன்பம்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமும் இல்லாதே — அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ?...

என்று பாரதி பாடியுள்ள வரிகள் பெண்மக்களை மானபங்கப் படுத்தும், அவர்களின் கற்பையும் கன்னிமையையும் சூறை

யாடும் அநியாயக் காரர்களைக் கண்டு கொதித்தெழுந்த வெஞ்சின வார்த்தைகளாகும். பீஜித் தீவைப் போன்று தென்னாப்பிரிக்கா, மற்றும் பல தீவுகள், நாடுகள் முதலிய வற்றில் தமிழ் மக்கள் படும் துன்பங்களையும் அவன் காணத் தவறவில்லை.

"ஆப்பிரிக்கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்,
பூமிப்பந்தின் கீழ்ப் புறத்துள்ள
பற்பல தீவினும் பரவி, இவ் எளிய
தமிழச் சாதி தடியுதை யுண்டும்,
காலுதை யுண்டும், கயிற்றடி யுண்டும்
வருந்திடும் செய்தியும், மாய்ந்திடும் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடும் செய்தியும்"

அறிந்து, அவன் மனம் கொதித்தான், இவ்வாறாக, பாரதி பெண் மக்களின் விடுதலைக்காகவும், முன்னேற்றத்துக்காக வும் மான சம்ரக்ஷணத்துக்காகவும் ஆக்ரோஷமும் ஆவேசமும் மிகுந்த பல கவிதைகளை இயற்றியுள்ளான். பெண் விடுதலை பற்றிய பாரதியின் இந்தக் கருத்துக்களையும், தாகத்தையும் நாம் நன்கறிந்து கொண்டோமானால், பாரதி ஏன் பாஞ்சாலி சபதத்தைப் பாடினான் என்ற கேள்விக்கு விடை காண்பது சுலபமாகிவிடும்.

## பாரதக் கதை

பாஞ்சாலி பாரதக் கதையிலே வரும் ஒரு பாத்திரம்; பாரதக்கதை இந்திய இதிகாசங்களிலே மிகவும் பழமை யான தொன்று. எனவே பாரதத்தில் காணப்படும் சம்பவங் களும் பழக்கவழக்கங்களும் பாரதக் கதை தோன்றிய காலத்துக்கு முன்பே இருந்திருக்க வேண்டும். அதாவது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாரதக்கதை

பிரதிபலிக்கும் சமுதாய அமைப்பும் கட்டுப்பாடும் இருந்திருக்க வேண்டும். இல்லையா?

பாரதக் கதையின் சாராம்சம் என்ன? பாண்டவருக்கும் துரியோதனாதியருக்கும் நடக்கும் குருக்ஷேத்திர யுத்தம் தான் பாரதத்தின் முத்தாய்ப்பான நிகழ்ச்சி. குருக்ஷேத்திர யுத்தம் ஏன் ஏற்படுகிறது? பாண்டவருக்கும் துரியோதனாதியருக்கும் ஏற்பட்ட பகைமையின் காரணமாக, பாண்டவர் தம் தேவியான பாஞ்சாலி துரியோதனின் சபையில் மானபங்கப்படுத்தப்பட்ட காரணத்தினால், அந்த யுத்தம் ஏற்படுகிறது. காவியத்துக்கான அம்சங்களில் ஒன்றான விதி வழியே நடந்து சென்று குருக்ஷேத்திர யுத்த முடிவில் தர்ம ஜெயத்தைக் காண்பது பாரதக் கதை. இதனைப் புரிந்து கொண்டால் பாரதி ஏன் பாஞ்சாலி சபதத்தைப் பாடினான் என்பதை இன்னும் சுலபமாகப் புரிந்துகொள்ளலாம்.

பாரதக் கதையில் பாஞ்சாலி துரியோதனின் சபையில், அவன் தம்பி துச்சாதனனால் மானபங்கம் செய்யப் படுகிறாள்; துகிலுரியப் படுகிறாள். துகிலுரியப்படும் இடமோ நீதிதேவனின் கொலுபீடமாகக் கருதப்படும் அரச சன்னிதானம்; அந்தச் சன்னிதானத்தில் குழுமியிருப்பவர் களோ கலைநூல் வல்லார்கள், சாஸ்திர விற்பன்னர்கள், அரச வம்சத்தினர், ஆண்மை மிகுந்த வீரர்கள். இத்தகைய தொரு 'சத்சங்க'த்தின் சந்நிதியிலேதான் ஒரு பெண், ஒரு அரசகுமாரி, ஒரு ராஜ்யத்தின் ராணி மானபங்கப் படுத்தப் படுகிறாள்; அந்த மானங்கெட்ட செயலைத் தடுத்து நிறுத்த அங்கிருந்த யாருக்குமே வலிவில்லை; வகையில்லை. கூடி நிற்கும் மனித குல மாணிக்கங்கள் எவரும் தனது பாது காப்புக்கு வழிகோலவில்லை என்றறிந்த பாஞ்சாலிதான் கடவுளைத் துணைக்கு அழைக்கிறாள். கண்ண பரமாத்மா வான கடவுளின் திருவிளையாடலால் அவள் காப்பாற்றப் பட்டதாகக் கதை.

இந்தக் கதையைப் பாரதி தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்ன? பாஞ்சாலிக்கு இழைக்கப்பட்ட கொடுமை பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்த ஒன்றாகும்.

ஓர் அரசகுமாரி, பட்டமகிஷி, வீரர்களான பாண்டவர் களின் பத்தினி என்றெல்லாம் கூறக்கூடிய பெண்ணொருத் திக்கு, அரசர்களும், சாஸ்திர விற்பன்னர்களும் கூடிய அரச சபையில், அதாவது அரசுநீதியை நிலைநாட்டும் நீதி மன்றத்திலேயே இத்தகைய கொடுமை நிகழ்ந்திருக்கு மானால், அந்த நாட்டிலே வாழ்ந்த சாதாரணப் பெண் மக்களின் நிலை எவ்வாறு இருந்திருக்கும்? அதை நம்மால் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியுமா? அன்று தொடங்கிய, அல்லது அதற்கும் முன்பே நிலவி வந்த பெண்ணடிமைத்தனம் பாஞ்சாலியின் சபதம் நிறைவேறி யதுடன் முடிவு கண்டு விட்டதா? ஆம். பாஞ்சாலிக்கு இழைக்கப்பட்ட கொடுமை பாரதி வாழ்ந்த இருபதாம் நூற்றாண்டில் மட்டும் மறைந்து விட்டதா? அவ்வாறு மறைந்திருந்தால், பாரதி கரும்புத் தோட்டத்துப் பெண்களுக்காகவும், நடிப்புச் சுதேசிகளின் கையாலாகாத் தனத்துக்காகவும் கண்ணீர் சிந்தியிருக்க வேண்டியதில்லை; கனன்று பொங்கியிருக்க அவசியமில்லை. எனவே பாஞ்சா லியின் காலம் தொட்டும், அதற்கு முன்பிருந்தும் கூட, பெண்களுக்கு இழைக்கப்பட்டு வரும் சமூக அநீதி ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் அழிந்தொழியவில்லை என்பதையும், அந்த அநீதி எவ்வாறு நமது சமூகத்தில் வேரோடிக் கிளையோடி விழுதோடி நிற்கின்றதென் பதையும், அத்தகைய நச்சுமரத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் வெட்டி வீழ்த்த வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதையும் பாரதி உணர்ந்தான். எனவே பெண் விடுதலைக்கோர் பேராயுதமாக, பேரிலக்கியமாக, காவியச் செல்வமாகத்தான் பாரதி பாஞ்சாலி சபதத்தைப் பாடினான். பாஞ்சாலி சபதத்தைக் கருத்தூன்றிப் படிப்ப வர்கள் எவரும் இந்த உண்மையை நிதரிசனமாக உணர்ந்து தீருவார்கள் என்பது உறுதி.

## பாஞ்சாலி சபதமும் பெண்மையும்

இனி நாம் பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' எவ்வாறு பெண்ணின் உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் பாடுபடு

கின்றது என்பதை அந்தக் காவியத்தின் சில அம்சங்களின் மூலம் காண்போம்.

பாரதக் கதை நமக்கெல்லாம் தெரியும்; எனவே, கதையை விளக்கிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. பாரதக் கதை பாரதியின் கவிதா தரிசனத்துக்குட்பட்டு எத்தகைய இதய ஒலியை எழுப்புகிறது என்பதைத் தான் நாம் பார்க்க வேண்டும்.

துரியோதனனோடு தருமபுத்திரன் சூதாடி, தனது ராஜ்யத்தையும் செல்வங்களையும் தன் தம்பியரையும் இறுதியில் தன்னையுமே தோற்றுவிட்டான். இவ்வாறு தோல்வி மேல் தோல்வி கண்ட தருமனின் சூதாட்ட வெறி அடங்கிவிடவில்லை. துரியோதனனும் சகுனியும் அந்த வெறிக்குத் தூபம் இடுகிறார்கள். இவ்வாறு வளர்ந்தோங்குகின்ற சூதாட்ட வெறிக்குத் தருமன் தன் மனைவி பாஞ்சாலியையே பலியாக்கத் தீர்மானித்து விடுகிறான்; பாஞ்சாலியையே பணயமாக, பந்தயமாக வைத்து விடுகிறான். இந்தக் கதையிலிருந்து விரிந்து வளரும் கதாம்சமே பாரதியின் பாஞ்சாலி சபதத்தின் நான்காவது சருக்கமாக, காவியத்தின் சிகர கும்பமாகக் காட்சியளிக்கிறது; பாரதியின் மணிவாக்கும் மனச்சாட்சியும் இந்தச் சருக்கம் முழுவதும் கணீரென்று ஒலித்து நிற்கிறது.

பாஞ்சாலியை பந்தயமென வைத்த செய்கையை எடுத்த எடுப்பிலே வன்மையாக, தயா தாட்சணியம் எதுவுமின்றிக் கண்டிக்கத் தொடங்குகிறான் பாரதி.

வேள்விப் பொருளினையே—புலைநாயின்முன்
மென்றிட வைப்பவர்போல்
நீள்வட்டப் பொன் மாளிகை—கட்டிப் பேயினை
நேர்ந்து குடியேற்றல் போல்

ஆள்விற்றுப் பொன் வாங்கியே—செய்த பூணைஓர்
ஆந்தைக்குப் பூட்டுதல் போல்
கேள்விக்கு ஒருவரில்லை!—உயிர்த்தேவியைக்
கீழ்மக்கட்கு ஆளாக்கினான்!

என்று தருமனின் அடாத செய்கையை, அநீதியைக் கண்டிக்கிறான் பாரதி. அத்துடன் நில்லாது,

செருப்புக்குத் தோல்வேண்டியே—இங்குக்
கொல்வரோ
செல்வக் குழந்தையினை!
விருப்புற்ற சூதினுக்கே—ஒத்த பந்தயம்
மெய்த்தவப் பாஞ்சாலியோ?

என்று தனது காவியத்தின் உயிர்நாடியை, பிரதானக் கருத்தை ஆரம்பத்திலேயே தொட்டுக் காட்டி விடுகிறான்.

பாஞ்சாலியைத் தருமன் தோற்றுவிட்ட பின்னர், அதாவது அவள் துரியோதனனின் 'உடைமை'யான பின்னர், துரியோதனன் அவளை அரச சன்னிதானத்துக்கு அழைத்து வரச் சொல்கிறான். அவ்வாறு அவன் அவளை இழுத்து வரச் சொன்ன போது பிரபஞ்சத்திலே எல்லா நிகழ்ச்சிகளும் தறிகெட்டுப் போய்விட்டன என்று பாரதி பாடுகிறான். பாஞ்சாலிக்கு நிகழவிருந்த அநியாயத்தை அறிவுறுத்தும் தீச்சகுனங்களாக, பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. எவ்வாறு?

தருமமும் அழிவெய்த, சத்தியமும் பொய்யாக,
பெருமைத் தவங்கள் பெயர் கெட்டு மண்ணாக,
வானத்துத் தேவர் வயிற்றிலே தீப்பாய,
மோனமுனிவர் முறைகெட்டுத் தாம் மயங்க,
வேதம் பொருள் இன்றி வெற்றுரையே ஆகிவிட,

நாதம் குலைந்து நடுமையின்றிப் பாழாக,
கந்தருவர் எல்லாம் களையிழக்க, சித்தர் முதல்
அந்தரத்து வாழ்வோர் அனைவோரும் பித்துறவே
நான்முகனார் நாவடைக்க, நாமகட்குப் புத்திகெட
வான்முகிலைப் போன்றதொரு வண்ணத்
திருமாலும்
அறிதுயில் போய் மற்றாங்கே ஆழ்ந்த துயில்
எய்திவிட
செறிதரு நற் சீரழகு செல்வமெலாம் தானாகும்
சீதேவி தன்வதனம் செம்மைபோய்க் கார் அடைய
மாதேவன் யோகம் மதிமயக்கம் ஆகிவிட....

இவ்வாறு பல்வேறு குழப்பங்கள் நேர்ந்ததாகப் பாரதி கூறுகிறான். பெண்ணொருத்திக்கு இழைக்கப்படவிருக்கும் தீங்குக்கு அறிகுறியாய் விளங்கும் இந்தத் தீச்சகுனங்கள் நமக்கு வேறோர் உண்மையையும் புலப்படுத்தி நிற்கின்றன. அதாவது, தருமமும் சத்தியமும் தெய்வங்களும், அறிஞர்களும் முறைகெட்டுத் திரிந்து நிற்கின்ற ஒரு பைசாச உலகிலேதான், பெண்ணினத்துக்கு இத்தகைய கொடுமைகளை இழைக்க முடியும் என்பதை இந்த அறிகுறிகள் சுட்டி நிற்கின்றன.

இத்தகைய தீச் சகுனங்கள் கட்டியங்கூறி நிற்கின்ற வேளையில்தான் துரியோதனின் அதர்ம உணர்ச்சி மேலோங்கி நிற்கிறது. துரியோதனன் தனது தேர்ப்பாகனை அனுப்பி, பாஞ்சாலியை அழைத்துவரச் சொல்கிறான். தேர்ப்பாகன் பாஞ்சாலியிடம் சென்று துரியனின் ஆணையைத் தெரிவித்தபோது, பாஞ்சாலி கேட்கின்ற கேள்விகள் பாரதத்துப் பெண்ணினத்தின் கேள்விகளாகப் பாரதியின் வாயிலாக ஒலிக்கின்றன.

நாயகர் தாம் தம்மைத் தோற்றபின் — என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை

என்று அவள் தர்க்கிப்பதும்,

—மன்னர்

சௌரியம் வீழ்ந்திடு முன்னரே அங்கு
சாத்திரம் செத்துக் கிடக்குமோ?

என்று அவள் கேள்வி கேட்பதும் பாரதத்துப் பெண்ணினத்தின் கேள்விகள் தாம்.

தேர்ப்பாகனிடம் பல்வேறு கேள்விகளை எழுப்பி அவனைத் திணறடித்து விடுகிறாள் பாஞ்சாலி. தேர்ப்பாகனோடு பாஞ்சாலி வராததைக் கண்டு, துரியோதனன் தன் தம்பி துச்சாதனனையே அனுப்பி வைக்கிறான். துச்சாதனனோ பாஞ்சாலியிடம் தர்ம விசாரம் செய்து கொண்டிருக்க விரும்பவில்லை.

''ஆடி விலைப்பட்ட தாதிநீ; உன்னை
ஆள்பவன் அண்ணன் சுயோதனன்''

என்று கூறிப் பாஞ்சாலியை மன்னர் சபைக்கு அழைக்கிறான். பாஞ்சாலியோ தான் மாத விடாயில் இருப்பதால் ஒற்றையாடையில் இருப்பதாகவும், தான் சபைக்கு வருவது நியாயமல்ல என்றும் எடுத்துக் கூறுகிறாள். ஆனால் ''கருமமே கண்ணான'' துச்சாதனனோ, பாஞ்சாலியைப் பலவந்தமாக இழுத்து வர முனைகிறான். பாஞ்சாலியின் தலைமயிரைப் பிடித்து அவளைக் கரகரவென வீதி வழியே இழுத்து வருகிறான். இந்தக் கோரக் காட்சியை, பெண்மைக்கு இழைக்கப்படும் கொடுமையின் இரண்டாவது கட்டத்தைப் பாரதி ஆத்திரத்தோடு வருணிக்கின்றான். இவ்வாறு பாஞ்சாலியை மட்டு மரியாதை எதுவுமின்றி வீதி வழியே இழுத்து வருகின்ற அலங்கோலத்தை வழிநெடுகிலும் நின்று கொண்டிருந்த மக்கள் காண்கிறார்கள். ஆனால், அத்தனை மக்கள் கூடி நின்றும் அவர்களில் ஒருவருக்கேனும் இந்த அநியாயத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற உணர்வோ உத்வேகமோ பிறக்கக் காணோம். பெண்மைக்கு இழைக்கப்படும் கீழ்த்தரமான கொடுமையைக் கண்ணால்

கண்டும் அதனைத் தட்டிக்கேட்கவோ, தடுத்து நிறுத்தவோ முனையாத மக்களைப் பாரதி மனிதர்கள் என்றே மதிக்க வில்லை.

வழிநெடுக மொய்த்தவராய்
"என்ன கொடுமைஇது!" என்று பார்த்திருந்தார்

என்று கூடிநின்ற மக்களைப் பற்றிப் பாடுகின்ற பாரதி அடுத்த அடியிலேயே அந்த மக்களின் கோழைத் தன்மையை யும், அதர்மத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற உணர்வற்ற இதயத்தையும் ஆத்திரத்தோடு தாக்க முனைகிறான்.

வீரம் இலா நாய்கள்! விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்து தராதலத்தில் போக்கியே
பொன்னை, அவள் அந்தப் புரத்தினிலே
சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?

என்றும் பாடுகிறான். அநீதியை எதிர்த்துப் போராடத் தெம்பற்ற மக்களை நாய்கள் என்றும், நெட்டை மரங்கள் என்றும், "பெட்டையர்கள்" அதாவது கையாலாகாத சோதா ஜென்மங்கள் என்றும் பாரதி பாடுகின்றான் என்றால், அவனது ஆத்திர உணர்ச்சி எந்த அளவுக்குக் கொதிப்புண்டு கொப்புளித்து நின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

பாஞ்சாலியின் காலத்திலும் பெண்ணடிமைத்தனம் நிலவிற்று; அந்தக் காலத்திலும் மக்கள் அதனைத் தடுத்து நிறுத்த முன்வரவில்லை. அதே போன்று இருபதாம் நூற்றாண்டுக் காலத்திலும் "மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர் செய்யும்" புன்மை நிலவியது; ஆனால், இந்தக் காலத்திலும் அந்தக் கொடுமையைத் தடுத்து நிறுத்தாது "பேதைகள் போலுயிரைப் பேணியிருந்தவர்

கள்'' உண்டு. எனவே ஆயிரம் ஆயிரம் ஆண்டுக் காலமாகப் பெண்ணினத்திற்கு இழைக்கப்பட்டு வரும் தீமையை எதிர்த்துப் போராட முனையாது ஆண் மக்கள் வாளா விருந்து வருகிறார்கள் என்ற ஆத்திரம்தான் பாரதியின் இந்த வரிகளுக்குக் காரணம். மகாபாரதக் காலத்துக்கும் பாரதி வாழ்ந்த காலத்துக்கும், இருந்த இந்த ஒற்றுமையை புரிந்து கொண்டோமானால், பாரதி ஏன் பாஞ்சாலி சபதத்தைத் தனது கதைப் பொருளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான் என்பதை மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

## பேயரசு செய்தால்

பாஞ்சாலியை வீதிவழியே இழுத்துவந்தபோது மக்கள் எவ்வாறு செயலிழந்து நின்றார்களோ, அதுபோலவே நாட்டின் ''அறநிலைய''மான அரசர் சன்னிதானத்திலுள்ள அறிஞர் பெருமக்களும்கூடச் செயலிழந்துதான் நிற்கிறார்கள். பாஞ்சாலிக்குத் துரியோதனனும் அவனது சகாக்களும் இழைக்கும் வெங்கொடுமைச் செயலை எதிர்த்து, பாஞ்சாலி யின் கணவர்களான பாண்டவர்களோ, அல்லது வேறு எவரோ தமது கண்டனத்தைக் கூறவில்லை; அந்த அநீதியைத் தடுக்கக் கைநீட்டவில்லை. அது மட்டுமல்லாமல், அறிஞர் பெருமக்களில் ஒருவனாகக் கருதப்படும் வீட்டு மாசார்யனோ, பாஞ்சாலிக்கு இழைக்கப்படும் கொடுமை சாஸ்திர சம்மதமானதே என்று ''சட்டம்'' படிக்கத் தொடங்கித் தலைகுனிகிறான். அதாவது தனது மனச் சாட்சி ஏற்றுக்கொள்ளாத ஒரு சட்டத்தை, மனச் சாட்சிக்கு விரோதமாயிருந்தபோதிலும் அதனை முறித் தெறியச் சக்தியோ தெம்போ திராணியோ அற்ற தனது ஏலாத்தனத்தை அம்பலப்படுத்திக் கொள்கிறான்.

''இப்பொழுதை நூல்களினை எண்ணுங்கால்
ஆடவர்க்கு
ஒப்பில்லை மாதர்: ஒருவன் தன் தாரத்தை

விற்றிடலாம்; தானமென வேற்றுவர்க்குத்
தந்திடலாம்''

என்றும்,

''சாத்திரம்தான்
வைகுநெறியும் வழக்கம் நீ கேட்பதனால்
ஆங்கவையும் நின்சார்பில் ஆகாவகை
யுரைத்தேன்.
தீங்கு தடுக்கும் திறமிலேன்''

என்றும் கூறித் தனது கைகளை தரும சாஸ்திரம் கட்டிப் போட்டுவிட்டது என்று தனது கையாலாகாத் தனத்துக்கு தத்துவ நியாயம் கற்பிக்க முனைகிறான்.

இவ்வாறு வீட்டுமாசார்யன் சாஸ்திர சம்மதம் குறித்துப் பேசியது கேட்டுப் பாஞ்சாலி அந்தச் சாஸ்திரங்களையே தாக்கிப் பேசுகிறாள்.

''பேயரசு செய்தால்
பிணம் தின்னும் சாத்திரங்கள்''

என்று அந்த சாஸ்திரங்களையும் அதன் சிருஷ்டி கர்த்தாக்களையுமே தாக்குகிறாள். எனினும் 'பேயரசு செய்யும்' அந்த இராஜ சபையில் பாஞ்சாலியின் மானம் காப்பாற்றப் படவில்லை. பாஞ்சாலியின் துகில் பறிக்கப்படுகிறது. பாஞ்சாலிக்கு இழைக்கப்படும் கொடுமையைக் கண்டுதான் பாண்டவர்களைச் சேர்ந்த பீமனுக்கும், ஆத்திர உணர்ச்சி பொங்குகிறது. அண்ணன் செய்துவிட்ட தீமையை, கட்டிய மனைவியைச் சூதாடித் தோற்றுவிட்ட சிறுமையைக் கண்டு வீமன் கொதித்தெழுகிறான்.

இது பொறுப்பதில்லை—தம்பி!
எரிதழல் கொண்டுவா.

கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம்

என்று ஆத்திரப்படுகிறான்.

இத்தகைய ஆத்திரத்துக்கும் அவமானத்துக்கும் மத்தியில் ஒரே ஒரு குரல் மட்டும் தான் பாஞ்சாலிக்காக வாதாட முன் வருகிறது அந்தக் குரல்தான் விகர்ணன் என்ற இளைஞனின் குரல். அவன் ஒருவன் தான் வீட்டு மாசார்யனின் 'சாஸ்திர சம்மத'மான பேச்சை வெட்டிப் பேசத் துணிகிறான்.

"...விலைமாதர்க்கு
விதித்ததையே பிற்கால நீதிக்காரர்
சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்தி விட்டார்!"

என்று அந்தச் சாஸ்திரத்தையே தாக்கிப் பேசுகிறான். விகர்ணனின் பேச்சில்தான் அந்தச் சபையில், அதாவது உலகில் தருமத்தின் குரல் முற்றும் ஒடுங்கி ஒய்ந்து போய் விடவில்லை என்ற உண்மை புலப்படுகிறது. விகர்ணனின் பேச்சுத்தான் அங்குகூடி நின்ற மன்னர்களின் அவிந்துகிடந்த மனச்சாட்சியைத் தூண்டிவிடும்தூண்டுகோலாகஅமைகிறது. இதன் காரணமாக, அவர்கள் தங்கள் ஆட்சேபத்தையும் கண்டனத்தையும்தான் தெரிவிக்கிறார்களே ஒழிய, பலவந்தமாக இழைக்கப்படும் அந்தக் கொடுமையைத் தடுத்து நிறுத்துவதே சரியான தர்மம் என்பதை உணரத் தவறி விடுகிறார்கள்.

இவ்வாறு பாஞ்சாலி மானபங்கத்துக்கு ஆளாகிறாள். மானபங்கத்துக்கு ஆளாகி நின்ற பாஞ்சாலிதான் தன்னை அவமானப்படுத்தியவர்களைப் பழிக்குப்பழி வாங்கியே தீருவேன் என்று சபதம் செய்கிறாள்; தன்னைத் துகிலுரிந்து அவமானப்படுத்திய துச்சாதனனின் இரத்தத்தையும், துகிலுரிந்து அவமானப்படுத்துமாறு அவனைத் தூண்டிவிட்ட

துரியோதனனின் இரத்தத்தையுமே தைலமாகக் கொண்டு தனது தலைமயிரை முடிப்பதாக அவள் சபதம் செய்கிறாள், அவர்கள் செய்த அவமானத்தால் அவிழ்ந்து குலைந்த தலை மயிரைத் தனது சபதம் நிறைவேறும் வரையிலும் அள்ளி முடிப்பதில்லை என்று வைராக்கியம் கொள்கிறாள். அதாவது பெண்ணினத்துக்கு இழைக்கப்பட்ட தீமைக்குப் பழிக்குப்பழி வாங்குகின்ற வரையிலும் அதனை அள்ளி முடிப்பதில்லை என்று விரதம் கொள்கிறாள்.

இத்துடன் பாஞ்சாலி சபதம் முற்றுப் பெறுகிறது.

பாஞ்சாலியின் கதையைப் பாரதி ஏன் பாடினான் என்ற கேள்விக்கு நாம் இன்னும் தெளிவாக இங்கு விடை கண்டு கொள்கிறோம். பாஞ்சாலி சபதக் காவியம் பாரதியின் பெண்மை பற்றிய நோக்கையே கருவாகக் கொண்டு மலர்ந்த காவியம். காவியம் என்பது அடிப்படையில் ஓர் ஆதாரக் கருத்தைக் கொண்டு விளங்க வேண்டும் என்று ஆரம்பத்திலே குறிப்பிட்டோம். பாஞ்சாலி சபதத்தின் ஊடுபாவோட்டமாக நின்று நிலவும் ஆதாரக் கருத்து பாரதியின் பெண் விடுதலை பற்றிய கருத்துத்தான் என்பதை நீங்கள் இதற்குள் உணர்ந்து கொண்டிருக்கக்கூடும்.

## காவியமும் விதியும்

இனி நாம் பாரதியின் பாஞ்சாலி சபதம் எவ்வாறு காவியத்தன்மை பெறுகிறது என்ற சர்ச்சையின் அடுத்த கட்டத்துக்குப் போகலாம். இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் நம் நாட்டுக் காவியங்களின் மரபிலக்கணமாக ஒரு விஷயத்தைப் பற்றி, அதாவது காவியத்தில் நிகழும் சகல விதமான காரியங்களுக்கும் விதி அல்லது ஊழ் காரண கர்த்தாவாக நின்று நிலவ வேண்டும் என்ற ஒரு வரையறையைப் பற்றிக் குறிப்பிட்டோம்.

இந்த வரையறையைப் பாரதி எந்த அளவுக்கு ஒட்டிச் சென்றிருக்கிறான்? எந்த அளவுக்கு இந்த வரையறையை

வெட்டிச் சென்றிருக்கிறான் என்றால், ஏன் சென்றிருக்கிறான்?—இந்தக் கேள்விகளுக்கும் நாம் விடை காண வேண்டும்.

பாரதி தனது பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையிலேயே "எனது சித்திரம் வியாசர் பாரதத்தைத் தழுவியது, பெரும் பான்மையாக'' என்று குறிப்பிட்டிருக்கிறான் என்று ஆரம்பத்தில் சுட்டிக் காட்டினோம். தமிழ்நாட்டில் தோன்றிய கம்பனும், இளங்கோவும் எவ்வாறு தங்களுடைய காவியங்களின் காரணகர்த்தாவாக விதி அல்லது ஊழைக் கையாண்டு தமது காவியங்களைச் சிருஷ்டித்தார்களோ, அதுபோலவேதான் வியாச முனிவனும் தனது பாரதத்தைச் சிருஷ்டித்திருக்கிறான். வியாசனை அடியொற்றி நின்று காவியமாக்கிய பாரதி,வியாச முனிவனைப் போலவே தனது காவியத்திலும் விதி என்பதையே சகல கிரியைகளுக்கும் வழி வகுத்துக் கொடுக்கும் அமானுஷ்ய சக்தியாகக் கொண்டு கதாபாத்திரங்கள் செயல்படுவதாக நடத்திச் சென்றிருக்கிறான்.

துரியோதனன் பாண்டவர்களை விருந்துக்கழைத்துச் செல்வத்தையெல்லாம் சூதாட்டத்தின்மூலம் கவர வேண்டும் என்ற தனது திட்டத்தைத் தந்தையான திருதராஷ்டிரனிடம் தெரிவித்து, அவனுடைய சம்மதத்தைப் பெற முனைகிறான். மகனுடைய விருப்பத்துக்கு முதலில் ஒப்புக்கொள்ளாத திருதராஷ்டிரன் பின்னர் விதியின் செயலை எண்ணித் துரியோதனின் விருப்பத்துக்குத் தலைவணங்கி விடுகிறான்.

''விதி செய்யும் விளைவினுக்கே—இங்கு
வேறு செய்வார் புவிமீது உளரோ?''

என்ற மனச்சாந்தியுடன் மகனின் விருப்பத்துக்குச் சம்மதித்து விடுகிறான்.

துரியோதனின் சூழ்ச்சியையெல்லாம் நன்கு அறிந்திருந்தும் விதுரன் பாண்டவரை அழைத்துவரச் செல்கின்ற காலத்திலும்,

"பாரதர் தம் நாட்டினிலே நாசம் எய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே!"

என்று விதியின் செயலை வியந்தே செல்கிறான்.

இவ்வாறு விதுரன் பாண்டவர்களிடம் சென்று தரும புத்திரனைச் சந்தித்து, கௌரவர்களின் சதித்திட்டத்தையும் தெரிவிக்கிறான். இருந்த போதிலும், தருமன் கௌரவர் களின் அழைப்பை ஏற்றுக் கொள்கிறான். அதுமட்டுமல்ல, தனது தம்பியர் சதித்திட்டத்தோடு கூடிய அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று எடுத்துக் கூறியபோதும் தருமன் அவர்களது ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வில்லை.ஏற்றுக் கொள்ளாமைக்குக் காரணமாகத் தருமனும் விதியையே சுட்டிக்காட்டுகிறான்.

"இங்கிவை யாவும் தவறிலா—விதி
ஏற்று நடக்கும் செயல்களாம்—முடிவு
எங்கணும் இன்றி எவற்றினும்—என்னும்
ஏறி இடையின்றிச் செல்வதாம்—ஒரு
சங்கிலி ஒக்கும் விதி கண்டீர்!—வெறும்
சாத்திரம் அன்றிது சத்தியம்"

என்று கூறத் தொடங்கி, விதியின் திருவிளையாடல் சக்தியைப் பற்றி நீண்டதொரு வியாக்கியானம் செய்து முடிக்கிறான். இதனைக் கேட்டுத், தம்பியரும் தருமனின் பேச்சை ஆமோதித்து விடுகிறார்கள்; அவர்களும் விதி விட்ட வழி நடக்கத் துணிந்து விடுகிறார்கள்.

இதே போன்று தருமனும் அவனது தம்பியரும் கௌர வரின் தலைநகரான அஸ்தினாபுரத்துக்கு வந்து சேர்ந்த பின்னர், திட்டமிட்டிருந்தபடியே துரியோதனன் தருமனைச் சூதாட அழைக்கிறான். சூதாடுவது தகாத செயல் என்பதைத் தருமன் தெரிந்திருந்தும் தான் தெரிந்திருந்ததைக்

கௌரவருக்கும் எடுத்துக்கூறத் தவறாதிருந்தும்கூட, தருமன் அந்தச் சூதாட்டத்துக்கு ஒப்புக் கொள்கிறான். அதற்கும் அவன் விதியின்மீதே பழியைப் போட்டு விடுகிறான். இதே போன்று பாண்டவர்கள் சூதாட்டத்தில் தோற்க நேர்ந்ததைக் கண்டு, விதுரனும் அதன் காரணத்தை விதி யென்றே கொண்டு சமாதானம் பெறுகிறான்.

பாஞ்சாலியைச் சூதில் தோற்றபோதும், அவளைத் துரியோதனாதியர் அரச சபையிலே மானபங்கப் படுத்திய போதும், அர்ச்சுனனும் அவற்றுக்கெல்லாம் விதி என்ற சக்தியே காரணமெனக் கருதிக் கொள்கிறான்.

> ''தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
> தருமம் மறுபடி வெல்லும் எனும் இயற்கை
> மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
> வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தான்''

என்று சமாதானம் காண்கிறான்.

இவ்வாறு பாரதியின் பாரதத்தில் வரும் பாத்திரங்கள் பலரும் தங்களுடைய சிந்தனைத் திரிபுகளுக்கும் செயல் வழுக்களுக்கும் காரணமாக, விதியையே சுட்டிக் காட்டு கிறார்கள். அதாவது தாங்கள் செய்யும் தவறுகளுக்கும், தாங்கள் ஆளாக நேரும் துன்பங்களுக்கும் தங்களது சொந்தக் கிரியைகளே காரணம் என்பதை உணராமல் அல்லது ஒப்புக்கொள்ளாமல், விதியின் மீது பழியைச் சுமத்தி விடுகிறார்கள்.

## விதியும் பாரதியும்

வியாசனைப் பின்பற்றி, வியாச பாரதத்தின் மொழி பெயர்ப்புப் போலவே தனது காவியத்தைச் சிருஷ்டித்த பாரதி, வியாசனைப் போலவே தனது காவியத்திலும் விதியே கண்காணாத மத்திய பாத்திரமாக நின்று நிலவுகிறது என்றும், விதியே பாண்டவர்களின் சகல காரியங்களுக்கும்

களையும் அவற்றின் காரண காரியங்களையும் மனிதர்கள் தாமே புரிந்துகொண்டு செயலாற்றுவதன் மூலம், தமது வாழ்க்கையையே மாற்றியமைத்துவிட முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்தவன் அவன். எனவே கண்காணாத விதிதான் மனிதர்களான நமது இயக்கத்துக்கெல்லாம் சூத்திரதாரியாக இருந்து வருகிறது என்ற கொள்கை பாரதிக்கு எந்த வகையிலும் உடன்பாடல்ல என்பது தெளிவு எனினும் பாரதியின் இந்த நம்பிக்கைக்கும் உறுதிப்பாட்டுக்கும் பாஞ்சாலி சபதத்தில் இடமில்லாமல் போய் விட்டதா?

இல்லை. பாரதி வியாச முனிவனைப் பின்பற்றித் தனது காவியக் கதையை அமைத்துக்கொண்ட போதிலும், அந்தக் காவியத்தில் வரும் பாத்திரங்கள் விதியையே தங்களுடைய செயல்களுக்கெல்லாம் காரணகர்த்தா எனக் கருதுவதாகப் பாரதி சித்திரித்த போதிலும், பாரதி விதியை ஏற்றுக் கொள்ளவில்லை. ''விதி'' என்று சொல்லப்படும் ஒரு பொய் யான கொள்கையை, அறிவுக்குப் பொருந்தாத மூட நம்பிக்கையை, மக்கள் குலத்தினரைச் செயலற்றவர் களாகச் செய்து அவர்களது நியாயமான தர்மாவேசத்தை யும் போராட்ட உணர்ச்சியையும் முடக்கிப்போட முனையும் சமூக முட்டுக்கட்டையை அம்பலப்படுத்தவும் பாரதி தவறி விடவில்லை.

தருமபுத்திரன் விதியின் செயலை எண்ணி வியந்து சூதாட்டத்துக்கு உடன்படும் கட்டத்தில்தான் பாஞ்சாலி சபதத்தின் கதை புதிய திருப்பத்தை எய்துகிறது. பின்னர் நிகழப்போகும் சகல துன்பங்களுக்கும், விதிதான் காரண கர்த்தா என்று தருமன் சமாதானம் கொண்டு விடுகிறான். பாஞ்சாலி போன்ற ஒரு பெண்ணின் மானபங்கத்துக்கும், வஸ்திராபஹரணத்துக்கும் உண்மையில் தருமனுடைய சூதாட்ட வெறிதான் காரணமாக விளங்குகிறது. தருமன் சூதாடச் சம்மதித்திருக்காவிட்டால், பாண்டவரையோ, பாஞ்சாலியையோ சூதில் தோற்றிருக்க வேண்டிய

சூத்திரதாரி என்றும், அவ்வாறு அவர்களை இயக்கிச் செல்கின்ற விதி, தருமஜெயத்தை உத்தரவாதம் செய்யக் கூடிய குருக்ஷேத்திர யுத்த களத்தை நோக்கி அவர்களைப் படிப்படியாக அழைத்துச் செல்கிறது என்றும்தான் பாடியிருக்கிறான். அந்த முறையில் அவன் பழைய காவிய லட்சணத்தை அடியொற்றியே சென்றிருக்கிறான்.

எனினும் பாரதிக்கு இந்த 'விதி'யின் மீது நம்பிக்கை உண்டா? நாட்டுமக்களின் தேசியத் தேவைகளையும் அவர்களின் கொடுமை நிறைந்த வாழ்வுக்கான காரண காரியங்களையும் அலசி ஆராய்ந்து மக்களுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டிய புலவன் அவன்; அது மட்டுமல்ல. அறிவு வளர்ச்சியும் விஞ்ஞான வளர்ச்சியும் மேம்பட்டு நிற்கும் இந்த நூற்றாண்டில் வாழ்ந்தவன் அவன்.

பொய்க்கும் கலியை நான் கொன்று
பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்கும் கிருத யுகத்தினையே
கொணர்வேன். தெய்வ விதி இஃதே

என்று தனது கவிதா சக்தியின் மீதும், தனது உறுதிப்பாடான கொள்கையின் மீதும் கொண்ட தன்னம்பிக்கையோடு பேசிநின்ற புலவன் அவன். 'வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவது' என்ற எண்ணத்தோடு வாழ்ந்து வந்த மக்களிடையே,

"இனி ஒரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று புதியதோர் ஆணைமொழியை உருவேற்றியவன் பாரதி. வாழ்க்கையின் தாரதம்மியங்களையும் கொடுமை

அவசியமே இராது. விவேகமுள்ள எவனும் அத்தகைய காரியத்தைத்தான் செய்ய விரும்புவான் என்பதுதான் அறிவியல் நமக்குக் கற்றுத்தரும் பாடம். எனவே பாஞ்சாலியின் மானபங்கத்துக்குக் காரணமாக நிற்கும் தருமனுடைய சூதாட்டத்துக்கு, உண்மையில் தருமன்தான் பொறுப்பாளி ஆகவேண்டும். ஆனால் தருமனோ தனது பொறுப்புணர்ச்சியையும் விவேகத்தையும் விதி என்ற கண்காணாத அமானுஷ்யமான நம்பிக்கையின் சந்நிதியில் காவுகொடுத்து விடுகிறான்; அதன் மூலம் பாஞ்சாலிபட்ட கஷ்டங்களுக்கு அவனே காரணஸ்தனாகி விடுகிறான்.

## பொய்யான வழக்கு

இப்படிப்பட்ட ஒரு கட்டத்தில், கதையின் திருப்புமுனையாக விளங்கக்கூடிய ஒரு கட்டத்தில்தான் பாரதி விதியை எதிர்த்துச் சாடத் தொடங்குகிறான். "சூதாடுவது தவிர்க்க முடியாதது" என்று நிர்ணயம் பெறுகின்ற தருமன்,

"வெய்யதான விதியை நினைந்தான்;
விலக்கொணாது அறம் என்பது உணர்ந்தான்"

என்று பாடத் தொடங்குகின்ற பாரதி, அடுத்த அடியிலிருந்தே விதி என்ற மூட நம்பிக்கையை, அந்த நம்பிக்கையால் அழிந்து கெட்ட பாரத சமுதாயத்தை, எதிர்த்துப் பாடத் தொடங்கி விடுகிறான்.

"பொய்யதாகும் சிறு வழக்கு ஒன்றை
புலன் இலாதவர் தம் உடம்பாட்டை
ஐயன் நெஞ்சில் அறம் எனக் கொண்டான்.
ஐயகோ! அந்த நாள் முதலாகத்
துய்ய சிந்தையர் எத்தனை மக்கள்
துன்பம் இவ்வகை எய்தினர் அம்மா!"

என்று பாடுவதன் மூலம் விதியை "பொய்யான சிறு வழக்கு" என்றும், "புலன் இல்லாதவர் தம் உடன்பாடு"

என்றும் வியாக்கியானம் செய்கிறான். அத்துடன் இத்தகைய விதி என்ற நம்பிக்கையின் காரணமாகப் பாரத மக்கள் பண்டுதொட்டு இன்றுவரை அடைந்து வந்துள்ள துன்பங்களையும் நினைவு கூர்கிறான். பாரதி அத்துடன் நின்றுவிடவில்லை. வேதவியாசன் வகுத்துச் சொல்லியிருந்தாலும் சரி, வேறு பல புலவர்கள் ஆதரித்தாலும் சரி, விதி என்பது ஒரு மூட நம்பிக்கையே என்பதையும், இத்தகைய மூட நம்பிக்கை வெகு காலமாக நம்மிடையே நிலைத்து வாழ்ந்து வந்துவிட்ட ஒரே காரணத்தால் அது உண்மையாகிவிட முடியாதென்பதையும், அறிவு வளர்ச்சி மிகுந்த இந்த இருபதாம் நூற்றாண்டிலேயே மக்கள் மத்தியில் எத்தனையோ மூட நம்பிக்கைகள் இன்னும் மறையாதிருக்கின்ற நிலையில், விஞ்ஞான வளர்ச்சி மேம்பட்டிராத பண்டைய மக்கள் மத்தியில் மூடநம்பிக்கைகள் வேரோடி நின்றதில் வியப்பில்லை என்பதையும் பாரதி பின் வரும் பாடல்களிலே தொடர்ந்து விளக்குகின்றான்:

முன்பிருந்த தோர் காரணத்ாலே
மூடரே! பொய்யை மெய் எனலாமோ?
முன்பு எனச் சொலும் காலம் அதற்கு
மூடரே, ஓர் வரையறை உண்டோ?
மூன்பு எனச் சொலின் நேற்றும் முன்பேயாம்;
மூன்று கோடி வருடமும் முன்பே;
முன்பு இருந்து எண்ணிலாது புவிமேல்
மொய்த்த மக்கள் எலாம் முனிவோரோ?

நீர் பிறக்குமுன் பார்மிசை மூடர்
நேர்ந்ததில்லை என நினைந்தீரோ?
பார்பிறந்தது தொட்டு இன்று மட்டும்
பலப்பல பல பற்பல கோடி

கார் பிறக்கும் மழைத்துளி போலே
கண்ட மக்கள் அனைவருள்ளேயும்
நீர் பிறப்பதன் முன்பு மடமை
நீசத் தன்மை இருந்தன அன்றோ?
பொய் வழக்கை அறமென்று கொண்டும்
பொய்யர் கேலியைச் சாத்திரம் என்றும்
ஐயகோ, நாங்கள் பாரத நாட்டில்
அறிவிலார் அறப்பற்று மிக்குள்ளோர்
நொய்யராகி அழிந்தவர் கோடி!...

இவ்வாறு பாடுவதன்மூலம் பாரதி யதார்த்த வாழ்க்கைக்கு உதவாத ''விதி'' என்ற தத்துவத்தையே தகர்த்தெறிய முனைகிறான். எனவே கம்பன், இளங்கோ முதலிய புலவர்களின் வழியைப் பின்பற்றித் தான் எடுத்துக்கொண்ட வியாச பாரதக் கதையை, விதியையே இணைப்புச் சரடாக, இயக்க கர்த்தாவாகக் கொண்டு இயற்றியபோதிலும், தனது மனச்சாட்சிக்கு ஒத்துக் கொள்ளாத அந்தக் கருத்தைத் தக்க சமயத்தில் வெட்டிப் பேசுவதன்மூலம், பாரதி காவிய உலகில் ஒரு புதிய மரபு தோன்றுவதற்கு வழி வகுத்துக் கொடுக்கிறான் என்பது மட்டுமல்ல, தமிழ்க் காவிய உலகின் மரபிலக்கணத்தையே மாற்றவும் துணிந்திருக்கிறான் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். இத்தகைய மாற்றம் வரவேற்கவேண்டிய ஒன்றாகும் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ள முடியும்.

### காவிய அலங்காரமும் சம்பிரதாயமும்

இனி நாம் கடைசியாகப் பாரதியின் காவிய அமைப்பு பற்றிய விசாரணையில் இறங்கலாம்.

ஆரம்பத்தில் காவிய லட்சணம் பற்றிய வரையறைகளைக் குறித்தபோது ''காவியத்தின் சகல சம்பவங்களும்

இறுதியில் தருமஜெயம் என்ற இறுதி லட்சியத்தில் முத்தாய்ப்புப் பெற வேண்டும்'' என்றும் குறிப்பிட்டிருந்தோம். இத்தகையதொரு வரைவிலக்கணத்தை நமது பண்டைப் பெருங் காவியங்களினின்றும் வகுத்திருந்தோம்.

இந்த இலக்கணத்தைப் பாரதியின் பாஞ்சாலி சபதம் எந்த அளவுக்கு ஒட்டி நிற்கிறது, எவ்வாறு ஒட்டி நிற்கிறது அல்லது எந்த அளவுக்கு இதனை அக் காவியம் வெட்டி நிற்கிறது. ஏன் நிற்கிறது என்பனவற்றையும் நாம் சிறிதே ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

''பாட்டுத் திறத்தாலே வையத்தைப்
பாலித்திட வேண்டும்''

என்று பாரதி பாடியுள்ளான். அதாவது தனது கவிதையின் துணைக்கொண்டு நாட்டு மக்களை வாழ்விக்க வேண்டும். நாட்டு மக்களின் நல்வாழ்க்கைக்கான வழி முறைகளை, நம்பிக்கைகளை வளர்க்க வேண்டும் என்று அவன் கருதினான். இந்தக் கருத்துத்தான் உண்மையான இலக்கிய கர்த்தாக்களின், கவிஞர் பெருமக்களின் கருத்தாகும். நாட்டு மக்களுக்கு வாழ்க்கையிலும், தருமத்திலும், சத்தியத்திலும் நம்பிக்கையை மேன்மேலும் வளர்த்து, அவர்களை மேன்மேலும் மனிதத்தன்மை பெற்றுச் சிறக்கச் செய்ய முனையும் கர்மயோக சாதனைகளாகத்தான் கவிஞர்களின் சிருஷ்டிகள் அனைத்தும் உலகில் விளங்கி வருகின்றன; வர வேண்டும். எனவே தரும ஜெயத்தைத்தான் எல்லா இலக்கியங்களும் ஆதார சுருதியாக மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதில் எந்தவிதச் சந்தேகமுமில்லை. தருமம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை வளர்த்தால்தான் வாழ்க்கை மேம்பட முடியும்.

## தரும ஜெயமே இறுதியா?

ஆனால் இந்தத் தரும ஜெயத்தை நம்முடைய பண்டைப் புலவர்கள் எவ்வாறு கற்பிதம் செய்தார்கள்? உதாரணமாகக்

கம்பனின் இராமகதையை எடுத்துப் பார்த்தோமானால், ராமனுடைய திருஅவதாரத்திலே தொடங்கி, ராமனுடைய பட்டாபிஷேகம் வரையிலும் கதை சென்று முடிகிறது. அதாவது ராமனுடைய வாழ்க்கை முழுவதையுமே அடி முடியாகக்கொண்டு இராம கதை எழுதப்பட்டுள்ளது. சுருங்கச் சொன்னால், ராவணன் வீழ்ச்சி அடைந்தவுடனேயே தருமம் வெற்றியடைந்து விடுகிறது. ஆனால் கவிஞர் அத்துடன் கதையைநிறுத்தி விடவில்லை. ராமனுக்குமகுடாபி ஷேகம் செய்து முடித்தால்தான் அவருக்குக் கதை பூரணத் தன்மை பெற்றதாகப் படுகிறது. இதேபோன்று சிலப்பதி காரத்தை எடுத்துக் கொண்டோமானால், சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டத்தின் இறுதியிலே, கண்ணகி பாண்டிய மன்னனின் சபையிலே தருமத்துக்காக வாதாடி, தருமத்தை நிர்த்தாரணம் செய்தபோதே, 'அரசியல் பிழைத்த அரசனுக்கு அறம் கூற்'றாகித் தருமம் வெற்றி பெற்று விடுகிறது. எனினும் சிலப்பதிகார ஆசிரியர் தமது கதையை மதுரைக் காண்டத்தோடு முடித்து விடவில்லை. வஞ்சிக் காண்டம் ஒன்றையும் எழுதிக் கண்ணகியையும் பத்தினித் தெய்வமாக்கி, அவளுக்குக் கோயிலும் கட்டிமுடித்த பின்னர் தான் கதையை முடிக்கிறார். அப்போதுதான் இளங்கோ வுக்குத் தமது கதை பூர்த்தி பெற்றதாகத் தோற்றுகிறது.

அதாவது கதாபாத்திரங்களின் வாழ்க்கை முழுவதை யும் அடிமுடி தொட்டுக் காட்டுவதன் மூலமாகவே, எடுத்துக் கொண்ட கருத்தையும் அடிமுடி தொட்டுக் காட்ட முடியும் என்று நினைத்து வந்த ஒரு சம்பிரதாயத்தின் விளைவாக, நம்நாட்டுக் கதைகள்பலவும் தரும ஜெயத்தை நிர்த்தாரணம் செய்யும் இன்பியல் கதைகளாகவே, கதையின் இறுதியில் மேளதாளத்தோடு மங்களம் பாடி முடிப்பதாகவே அமைந்து வந்திருக்கின்றன. 'சுபம், சுபம், சுபம்' என்று சம்பிரதாய வக்கணை குறையாமல் கதையை முடித்தால்தான் தருமத் தின் வெற்றியை உத்திரவாதம் செய்ததாகும் என்று நம்ம வர்கள் கருதி வந்திருக்கிறார்கள். ஆனால் வாழ்க்கை என்

பதோ இவ்வாறு சுபம், மங்களங்களோடு முற்றுப் பெற்றுப் போகின்ற ஒரு விஷயமல்ல. வாழ்க்கை என்றென்றும் வளர்ந்தோங்கிச் செல்வதாகும். அதற்கு இறுதி கிடையாது. வாழ்க்கையிலே தருமத்துக்கும் அதருமத்துக்கும் பல்வேறு போராட்டங்கள் நிகழலாம். ஆனால், அந்தப் போராட்டங்கள் அனைத்திலும் அதருமத்தை எதிர்த்துத் தருமம் போராடி நிற்கும்; தர்மம் சிறுகச் சிறுக வெற்றி பெற்று மேலோங்கும். எனினும் தருமமும் வாழ்க்கையைப்போல் முடிவு கண்டு முற்றுப்புள்ளி பெற்று நிற்கக்கூடிய ஒரு தத்துவமல்ல. தருமமும் வாழ்க்கையோடு வளர்ந்து பரிணமித்துச் செல்லும். எனவே தருமத்தின் வெற்றி இதுதான் என்று எந்த ஒரு இடத்திலேனும் அதற்கு நாம் இறுதி கண்டுவிட முடியாது. காவிய கர்த்தாக்கள் நிர்மாணம் செய்து காட்டும் தரும வெற்றியின் இலக்கியக் காட்சி, தருமம் வெற்றி பெற்று வளரும் சமுதாய வாழ்க்கையில், ஒரு குறிப்பிட்ட வெற்றியைத்தான் சுட்டி நிற்க இயலும். இந்த உண்மையை நாம் உணர்ந்து கொண்டோமானால் வாழ்க்கையிலோ தருமத்திலோ மங்களம் பாடி முடித்து விடுவதற்கான எந்த ஓர் இறுதியான கட்டமும் இல்லை என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். எனவேதான் மேல்நாட்டு இலக்கிய கர்த்தாக்கள் பலர் துன்பியல் கதைகளை எழுதுவதன் மூலமே, அதாவது கதையை மங்களம் பாடி முடிக்காமலே, தருமம் ஏன் வெற்றி பெறவேண்டும் என்ற கேள்வியை, தருமம் வெற்றிபெற வேண்டிய அவசியத்தை வற்புறுத்தும் இலட்சிய வேட்கையை வாசகர்கள் மனத்திலே ஊட்ட முனைந்தார்கள். ஷேக்ஸ்பியரின் துன்பியல் நாடகங்களைப் படித்தவர்கள் இந்த உண்மையை இலகுவில் உணர்ந்து கொள்ள முடியும்.

### பாரதியின் புதிய சம்பிரதாயம்

இத்தகையதொரு சம்பிரதாயத்தை நாம் மேல்நாட்டு இலக்கியங்களிலேதான் கண்டு வந்திருக்கிறோம். பாரதி இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞன் என்பதையும் மேல்நாட்டுக் காவியங்களை இலக்கிய விமர்சனக்

கண்ணோட்டத்தோடு விசாரணை செய்து, தமிழிலே 'கம்பராமாயண ரசனை'யை எழுதிச் சென்ற வ.வே.சு. அய்யரோடு நட்புக் கொண்டிருந்தவன் என்பதையும், மேல்நாட்டுக் காவிய கர்த்தாக்களின் இலக்கியங்களிலும் ஈடுபட்டவன் என்பதையும் நாம் கருத்தில் கொண்டால், பாரதி ஏன் தனது பாஞ்சாலியின் கதையை அவளுடைய சபதத்தோடு முடித்து விடுகிறான் என்பதை நாம் புரிந்து கொள்ள இயலும்: அத்துடன் தமிழ்க் காவிய உலகிலே பாரதி புகுத்திய புதிய காவிய அலங்கார சம்பிரதாயத்தையும் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

பாரதி ஏன் பாஞ்சாலியின் சபதத்தோடு கதையை முடிக்கிறான்? பாஞ்சாலியின் விரதம் பாரதக் கதையிலே தான் முடிவுற்றதேன்றி, பாரத சமுதாயப் பெண்களின் வாழ்வில் முடிவுறவில்லை. பாரத காலத்திலேயே நிலவிய பெண்ணடிமைத்தனம் பாரதி வாழ்ந்த இருபதாம் நூற்றாண்டிலும் நீடித்தது. எனவே பாரதியைப் பொறுத்த வரையில் பாரத நாட்டுப் பெண் குலத்தின் பிரதிநிதியாக, பாஞ்சாலி பாரத காலத்தில் எடுத்த சபதம், பாரதி காலத்திலும் நிறைவேறாத சபதமாகவே, முடியாத கதையாகவே இருந்தது. எனவே பாரத நாட்டுப் பெண்குலத்தின் சகல அடிமைத் தனங்களும் நீங்கி, அவர்கள் விடுதலை பெறும் நாளிலேதான் பாஞ்சாலியின் சபதம் உண்மையில் நிறைவேறும். அதுவரையிலும் பாஞ்சாலியின் சபதம் ஒலித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதுதான் பாரதியின் நோக்கம். எனவே தான் அவன் கதையைப் பாஞ்சாலி சபதத்தோடு முடித்து விடுகிறான். பாஞ்சாலி சபதம் தருமத்தின் வெற்றியை நிர்த்தாரணம் செய்து முற்றுப் பெறவில்லையாயினும், வெற்றி பெற்றுத்தான் ஆக வேண்டும் என்ற ஒரு வேட்கையை, தாகத்தைக் கதையின் முத்தாய்ப்பு நம்மில் ஏற்படுத்தி விடுகிறது. இத்தகையதொரு புதிய சம்பிரதாயத்தைத் தமிழ்க் காவிய உலகிலே முதன்முதலில் புகுத்திய பெருமை பாரதியையே சாரும்.

எனவே கம்பனும், இளங்கோவும் வேறு பல காவிய கர்த்தாக்களும் எவ்வாறு தங்களுடைய காவிய அமைப்பின் மூலம் காவிய அலங்காரம் பற்றிய வரையறைகளையும் சம்பிரதாயங்களையும் ஏற்படுத்தி அற்புதமான காவியங்களை நமக்குச் சிருஷ்டித்துத் தந்தார்களோ, அது போலவே இருபதாம் நூற்றாண்டின் சகாப்த புருஷனாக விளங்கிய பாரதியும், தமிழ்க் கவிதையுலகின் இலக்கிய பாரம்பரியத்தை ஒட்டி நின்று, இன்றைய அறிவு வளர்ச்சிக்கும் இலக்கிய இலட்சியங்களுக்கும் விமர்சன நோக்குகளுக்கும் ஏற்றவாறு, அந்தப் பாரம்பரியத்தை வளர்த்து, அதற்கேற்ற புதிய சம்பிரதாயங்களையும் வரையறுத்து, ஓர் அற்புதமான காவியத்தை—''பாஞ்சாலி சபத''த்தை—நமக்கு உண்டாக்கித் தந்திருக்கிறான். ''எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்'' என்று பாரதி தனது பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் குறிப்பிடுகின்றான்.

அத்தகைய புதிய உயிரைத் தருகின்ற பணியில் பாரதி வெற்றி கண்டதன் விளைவே பாஞ்சாலி சபதம்; பாரதியின் பாரதம்.

# கரும்புத் தோட்டத்திலே

தற்காலத்தில் வெளிவருகின்ற பாரதியின் கவிதைத் தொகுப்புக்களில் 'கரும்புத் தோட்டத்திலே' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள கவிதை பின்வருமாறு தொடங்குகின்றது:

கரும்புத்தோட்டத்திலே! - ஆ!
கரும்புத்தோட்டத்திலே!

எடுத்த எடுப்பில் நோக்கினால் இவ் வரிகளில் எவ்விதக் கவிதை நயமும் இல்லையென்றே சொல்லத் தோன்றும். ஆனால், சிறிது ஊன்றிக் கவனித்தால், இவ்விரு வரிகளே அற்புதமான கவிதை வடிவமாக விளங்குவதை நாம் இனம் காண முடியும். எப்படி? கரும்புத் தோட்டத்தில் பாடுபடும் பெண்களின் பரிதாப நிலையைப் பற்றிப் பாட முனையும் பாரதி 'கரும்புத் தோட்டத்திலே' என்று அடியெடுக்கிறான். ஆனால் அவ்வாறு அடியெடுத்து, அந்தத் தோட்டத்தைப் பற்றி எண்ணிப் பார்த்தவுடனேயே, 'ஆ!' என்ற கொடிய நெடிய வேதனைக் குரல்தான் அவனது இதயத்தைப் பிளந்து கொண்டு பீறிட்டுக் கிளம்புகிறது. இவ்வாறு அலறிப் பிறக்கும் வேதனைக் குரலுக்குப் பின்னால், அவனுக்கு மேற்கொண்டு வார்த்தை பிறக்கவில்லை. அத்தகைய மன வேதனை. எனவே 'கரும்புத் தோட்டத்திலே' என்ற அதே அடிதான் அடுத்த வரியாகவும் அமைகின்றது. இதன் மூலம் இவ்விரண்டு அடிகளுமே அவன் பாட வந்த பாடலுக்குப் பல்லவியாக, ஆதார சுருதியாக அமைந்து விடுகின்றன.

இவ்வாறு பார்த்தால், இந்த இரண்டு வரிகளுமே ஒரு கவிதை வடிவம் பெற்றுவிடுகின்றன. இத்தகைய கவிதையை உருவாக்குவது 'ஆ!' என்ற அந்த ஒரே சொல்தான்! ஒரே எழுத்துத்தான்!

ஆனாலும், 'ஆ!' என்ற இந்தச் சொல்லுக்குள்ளே, எழுத்துக்குள்ளே கனத்துப் புழுங்கித் தவிக்கும் பாரதியின் கழிவிரக்க உணர்ச்சியையும், மனவேதனையையும் நாம் உணர வேண்டுமென்றால், அவனது கவிதை முழுவதையும் படித்துப் பார்க்க வேண்டும். அந்தக் கவிதையை மேலும் முழுமையாகவும் முற்றாகவும் அனுபவிக்க வேண்டுமென்றால், அதற்குக் கருவாக விளங்கிய சூழ்நிலையையும், அந்தச் சூழ்நிலையில் பிறப்பெடுத்த அதன் வரலாற்றையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவற்றை இன்றைய தலைமுறையைச் சேர்ந்த பாரதி அன்பர்களுக்கு இனம் காட்டும் முயற்சியே இந்தக் கட்டுரை.

'கரும்புத்தோட்டத்திலே' என்ற இந்தக் கவிதை முதன் முதலில் பாரதி பிரசுராலயத்தாரின் 'தேசிய கீதங்கள்' என்ற தொகுப்பில் வெளிவந்தபோது, 'பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்' என்ற தலைப்பிலேயே வெளிவந்தது; இந்தத் தலைப்பு பாரதி பாடலின் குறிப்பிட்ட கருவைச் சுட்டிக் காட்டுவதாகவே உள்ளது. ஆனால், பாரதியின் பாடல் களைச் சென்னை அரசாங்கம் பொதுச் சொத்தாக்கி, அவற்றைத் தொகுத்து வெளியிட்ட காலத்தில், அதற்குப் பொறுப்பான பதிப்பாசிரியர்கள் சரித்திரக் குறிப்புகளை வழங்கும் பழைய தலைப்புக்கள் சிலவற்றை ஏனோ மாற்றிப் புதிய தலைப்புக்களை வழங்கி விட்டார்கள். இத்தகைய அர்த்தமற்ற செய்கையால்தான் பழைய தலைப்பு மாறி, 'கரும்புத் தோட்டத்திலே' என்ற புதிய தலைப்பு இப்போதைய பதிப்புக்களில் இடம் பெறத் தொடங்கி விட்டது. பழைய தலைப்பு குறிப்பிடுவது போல், இப்பாடல் பிஜித் தீவின் கரும்புத் தோட்டத்தில் பாடுபட்ட இந்திய நாட்டுப் பெண்களின் அவல நிலையைக் குறித்து எழுந்ததுதான்.

இந்தப் பாடல் பிறந்த சூழ்நிலையையும் வரலாற்றையும் தொட்டுக் காட்டும் விதத்தில், பாரதியின் ஜீவிய காலத்தில் 'சுதேச மித்திர'னில் உதவியாசிரியர்களில் ஒருவராக இருந்தவரும், சரித்திரக் கதை எழுத்தாளருமான காலஞ்சென்ற எம். எஸ். சுப்ரமணிய ஐயர் ஒரு கட்டுரையில் பின் வருமாறு எழுதியுள்ளார்:

"முன்னம் நம்மவர் இங்கே பிழைப்பின்றி, ஒப்பந்தத்தின் மீது பிஜித் தீவு சென்று படாத பாடு பட்டனர். அந்த ஒப்பந்தக் கூலிமுறையை உடைத்தெறிய இத்தேசத்திலே பெருங்கிளர்ச்சி நடந்தது. அதற்கு மக்களின் மனத்தை ஈர்க்கும் படியான இனிய கவிதைகளை ஆங்கிலத்தில் பாடினார் கவியரசி சரோஜினிதேவி. ஒப்பந்தக் கூலி முறை ஒழிப்பில் அரும்பாடுபட்ட சி. எஃப். ஆண்ட்ரூஸ் என்னும் ஆங்கிலப் பெருமகனார் அந்த ஆங்கிலக் கவிகளைத் தமிழில் பெயர்க்க வேண்டி, வேண்டுகோள் விடுத்தார். தமிழ்ப் புலவர் எவரும் அந்த ஆங்கிலக் கவிகளைத் தமிழில் பாடித்தர முன்வரவில்லை. பாரதியார் அதனையறிந்து, 'கரும்புத் தோட்டத்திலே' என்னும் நான்கு கவிகள் பாடியனுப்பினார். அது கண்டு ஆண்ட்ரூஸ் மிக அகமகிழ்ந்தார். ஆங்கிலக் கவியை விடத் தமிழ்க் கவியிலே மிக்க சோகரசம் இருப்பதைக் கண்டு உள்ளமும் உடலும் சிலிர்த்தார். அந்நாளிலே ஒப்பந்தக் கூலி முறையைக் கண்டிருக்கும் பொதுக் கூட்டங்களிலே பாரதியின் அப் பாடல்கள் தஞ்சை நடராஜன் என்பவரால் பாடப்பெறும். ஹரிச்சந்திரா மயான காண்டத்தைக் காணும் மக்கள் கண்ணீர் விட்டுக் கதறுவதைப் பார்த்துள்ளோம். 'கரும்புத் தோட்டத்திலே' என்னும் பாடல் பாடப்படுகையில் பொதுக் கூட்டத்திலுள்ள மக்கள் கண்ணீர் வடித்துத் தேம்பித் தேம்பி அழுவதை, அனிபெஸண்ட் அம்மையாரும், ஆண்ட்ரூஸ் பெருமகனாரும் பார்த்துப் பரவசம் அடைந்தனர்."

(தினமணி சுடர் அனுபந்தம்: 8-9-1956)

இந்தப் பயனுள்ள குறிப்பின் அடிப்படையில் நாம் அந்தப் பாடல் பிறந்த சூழ்நிலையையும், அதிற் பொதிந்துள்ள பிரச்சினையையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள முனையலாம்.

## ஒப்பந்தக் கூலி முறை

ஒப்பந்தக் கூலி முறை (Indentured labour system) என்பது நமது நாட்டை ஆண்டு வந்த ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த மிருகத்தனமான அடிமை முறையாகும். அவர்கள் நமது நாட்டு விவசாயத்தையும், கைத்தொழிலையும் சீர்குலைத்து, அவற்றை நம்பி வாழ்ந்த பஞ்சைப் பாமர மக்களைப் பஞ்சத்துக்கும் பட்டினிக்கும் இரையாக்கி அலைய வைத்தனர். இவ்வாறு பிழைப்பிழந்து வறுமைக்கும் பஞ்சத்துக்கும் ஆளாகிப் பரிதவித்த மக்களை, வீட்டையும் நாட்டையும் துறக்கச் செய்து, கண்காணாத வேற்று நாடுகளுக்குக் கப்பலேற்றி அனுப்பி, அங்கு அவர்களை மாளாத, மீளாத கொத்தடிமைப் புலை வாழ்வுக்கு இரையாக்க வகுத்த சூழ்ச்சியே இந்த ஒப்பந்தக் கூலி முறை. இதனை இன்றைக்குச் சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேய முதலாளிகள் புகுத்திய காலத்தில், அதற்கு அன்றைய கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியும் ஆசீர்வாதம் செய்து அனுமதி வழங்கியது. இந்த முறையை அவர்கள் புகுத்தியதற்குக் காரணம் உண்டு. ஆங்கிலேயர்கள் தாம் அடிமைப்படுத்திய பல்வேறு பிற்பட்ட நாடுகளிலும் தீவுகளிலும் நிலவி வந்த பண்டைய விலையடிமை முறையை ஒழித்தார்கள். ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சிக்கும் ஏக போகச் சுரண்டலுக்கும் இந்த விலையடிமைத்தன ஒழிப்பு அவசியமாக இருந்தது. ஆனால் இந்த ஒழிப்புக்கு முன்னர் அந்நாடுகளிலுள்ள தோட்டங்களில் வேலை பார்த்துவந்த அடிமைகள், விலையடிமைத்தன ஒழிப்புக்குப் பின்னர் ஓரளவுக்குச் சுதந்திரம் பெற்ற காரணத்தால், அந்தத் தோட்டங்களில் அல்லும் பகலும் ஓய்வறியாது உழைத்து வந்த மனித உழைப்பின் சக்தியும் அளவும் குறைந்தன. எனவே

அடிமைத்தனத்தைப் புதிய வடிவத்தில் புகுத்தித் தமது சுரண்டலை அதிகரித்துக் கொள்வதற்காகக் ''கண்டு பிடிக்கப் பட்ட'' புதிய அடிமைத்தனப் பாதையே ஒப்பந்தக் கூலி முறை. இதன்படி எந்தவொரு தோட்ட முதலாளியும் ஒருவனை ஐந்தாண்டு—ஒப்பந்தம் என்ற பெயரால் கூலியாக அமர்த்தி, அவனை அயல்நாடுகளுக்கு அழைத்துச் சென்று வேலைவாங்க, ஆங்கிலேய முதலாளிகள் இந்தியாவில் அனுமதி பெற்றார்கள். ஆனால், பஞ்சம் பிழைப்பதற்காக ஐந்தாண்டுக் காலம் பரதேசம் சென்று பாடுபட்டால், ஏதோ காசு பணத்தை மிச்சம் பார்த்துக்கொண்டு தாய்நாடு திரும்பி, உருக்குலைந்து போன தமது குடும்ப வாழ்வை மீண்டும் புனரமைத்து விடலாம் என்ற ஆசைக் கனவோடு இந்த ஒப்பந்த முறைக்கு ஆளாகிக் கப்பலேறிய ஆணும், பெண்ணும் நிரந்தரமான மீளா நரக வாழ்வான அடிமைத் தனத்துக்கே இரையானார்கள்.

தாம் குடியேறி அடிமைப்படுத்திய நாடுகளில் விலையடி மைத்தனத்தை ஒழித்து அந்நாடுகளைத் தாங்கள் 'நாகரிகப் படுத்தியதாக' ஆங்கிலேயர்கள் பெருமையடித்துக் கொண் டாலும், அவ்வாறு விலையடிமைத்தனத்தை யொழித்த சிறிது காலத்திலேயே ஒப்பந்தக் கூலி முறை என்ற, ஒரு விதத்தில் விலையடிமைத்தனத்தைக் காட்டிலும் படுகேவல மான ஒரு சுரண்டல் முறையை உருவாக்கி விட்டார்கள். விலையடிமைத் தனத்தைக் காட்டிலும் கூலிக்கு வேலை செய்வது மேலானதுதான்; சுதந்திரமானதுதான். ஆனால் ஒப்பந்தக் கூலி முறையோ சில அம்சங்களில் விலை யடிமைத்தனத்தைக் காட்டிலும் கேவலமானதாயிருந்தது. விலையடிமைத்தனத்தில் அடிமைகளின் சொந்தக்காரன் தனது சொந்த நலனை முன்னிட்டேனும், தனது அடிமைகளின் ஆரோக்கியமும் பலமும் குன்றாமல் பார்த்துக் கொள்வான். ஏனெனில் அடிமை என்பவன் அவனது சொத்து. அந்த அடிமை நோய்வாய்ப் பட்டாலோ, இறந்தாலோ, வேலை செய்வதற்கு இயலாதவனாகப் போனாலோ, சொந்தக்காரனுக்கு அது

நஷ்டமாகவே முடியும். எனவே அவன் அவர்களுக்குப் போதுமான உணவும் ஓய்வும் கொடுத்து, பசு மாட்டைப் பேணிப் பாதுகாத்துப் பாலை மட்டும் சுண்டக் கறந்துவிடுவது போல், அந்த அடிமைகளிடம் வேலை வாங்கி விடுவான். ஆனால் ஒப்பந்தக் கூலியாகச் செல்பவனோ, வாங்கிய கூலிக்கு ஒப்பந்தப்படி தனது முதலாளிக்கு உழைத்துப் பாடுபட மட்டுமே கடமைப்பட்டவன். விலையடிமையைப் போல் அவன் தனது எஜமானனின் சொத்தல்ல. ‘‘சுதந்திர புருஷன்!’’ எனவே அந்தக் கூலிக்காரன் ஆரோக்கியத்துடனும், பலத்துடனும் அகமகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டுமே என்ற கவலை, அவனது முதலாளிக்கு இருப்பதில்லை. சொன்ன படி உழைக்க வேண்டியதொன்றே ஒப்பந்தக் கூலியின் கடமை. அதற்குப் பெறும் கூலியைத் தவிர, அவன் வேறு எதையும் தன் முதலாளியிடமிருந்து எதிர்பார்ப்பதற்கில்லை. அந்தக் கூலிக்காரன் நோய்வாய்ப்பட்டு நிரந்தரமாக வேலை செய்ய இயலாது போனாலும் அல்லது இறந்தேபோனாலும் முதலாளிக்கு அதனால் கவலையில்லை; நஷ்டமும் இல்லை. அவன் போனால், அவன் இடத்தை நிரப்ப லட்சக்கணக்கான பஞ்சை மக்கள் அந்த முதலாளிக்குக் கூலிக்காரர்களாகக் கிடைப்பார்கள். இது தான் ஒப்பந்த முறை.

## ஒப்பந்த முறையின் கொடுமைகள்

இத்தகைய ஒப்பந்த முறைக்கு ஆங்கிலேய சாம்ராஜ்யத்திலேயே முழுக்க முழுக்க இரையானவர்கள் இந்திய நாட்டு மக்கள்தான். ஆங்கிலேயர்கள் வேறு எந்தக் காலனி நாடுகளிலிருந்தும் இவ்வாறு ஒப்பந்தக் கூலி முறையின் மூலம் மக்களை அயல்நாடுகளுக்குக் கொண்டு செல்லவில்லை. இம் முறைப்படி அயல்நாடுகளிலுள்ள ஆங்கிலேயத் தோட்ட முதலாளிகளின் ஏஜெண்டுகள் இந்திய நாட்டில் பிழைப் பிழந்து தவித்த லட்சக்கணக்கான பஞ்சை மக்களை ஆசை வார்த்தைகள் கூறி ஒப்பந்தம் செய்து அயல் நாடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். இந்த ஏஜெண்டுகள் சேர்த்துக்

கொண்டு வரும் நபர்களுக்கு, தலைக்கு இவ்வளவு என்று முதலாளிகள் கமிஷன் கொடுத்ததால், அதிகப்படியான நபர்களைச் சேர்ப்பதற்காக இந்த ஏஜண்டுகள் கையாண்ட அயோக்கியத்தனமும், ஏமாற்றும் கொஞ்ச நஞ்சமல்ல வயது வந்த ஆண் பெண்களை மட்டுமல்லாமல், பதினைந்து வயதை எட்டிப் பிடிக்காத பாலகர்களையும் கூட, இவர்கள் பிள்ளை பிடிப்பவர்கள் போல் ஏமாற்றிக் கூட்டிச் சென்று, அவர்கள் வயதை அதிகமாகக் காட்டி எழுதி, அவர்களைக் கப்பலேற்றி அனுப்பி வைத்தார்கள். இவ்வாறு அயல் நாடுகளுக்குச் சென்ற இந்திய மக்களின் நிலையை நேரில் கண்டறிந்து வந்த ஆண்ட்ரூஸ் பெருமகன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "இந்தியாவில் ஒப்பந்தக் கூலி முறையின் மூலம் பதிவு செய்யப் பெற்று, பிஜித்தீவுக்குக் கொண்டு வரப்பட்ட பல சிறுவர்களை நாங்கள் நேரில் கண்டோம். ஒருநாள் ஒப்பந்தக்கூலி முறையில் வந்த ஒரு குழந்தைப் பையன் எங்களிடம் வந்தான். அவனைக் கூட்டி வந்தபோது அவனுக்கு வயது பன்னிரண்டுதான் என்று சொன்னான். அவன் அங்கு வந்து சுமார் ஒரு வருடம்தான் ஆகியிருந்தது; அவனது தோற்றத்திலிருந்தும் அவனுக்குப் பதினாலு வயதுக்கு மேல் மதிக்க முடியாது என்றே எங்களுக்குத் தோன்றியது. உண்மையில் இத்தகைய சிறுவர்களின் வயதெல்லாம் அதிகமாகக் காட்டி எழுதப் பட்டிருந்தது. உதாரணமாக, பதினைந்து வயதுகூட மதிக்க முடியாத ஒரு சிறுவனுக்கு வயது பதினேழு என்று எழுதப்பட்டிருந்தது. அந்தப் பையனைப் பதிவு செய்த கல்கத்தாப் பதிவுப் புத்தகத்தை நாங்கள் பரிசீலித்தபோது, பதிவு செய்த காலத்தில் அவனது வயது இருபது என்று எழுதப் பட்டிருந்தது." (Report on Indentured Labour in Fiji-An Independent Enquiry: C. F. Andrews & W.W. Pearson, 1916. Pub: The Anti-Indenture League, Madras-பக்.15).

இவ்வாறு ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக ஏறத்தாழ இருபது லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அயல்

நாடுகளுக்கு ஏமாற்றி அழைத்துச் செல்லப் பட்டார்கள். இவ்வாறு சென்ற பிரதேசங்களும் அக்கம் பக்கத்தில் உள்ளவை அல்ல. மலேயாவிலுள்ள ரப்பர் தோட்டங்கள், கனிச்சுரங்கங்கள் முதலியவற்றுக்கும், தென்னாப்பிரிக்கா கென்யா முதலியவற்றிலுள்ள கனி சுரங்கங்களுக்கும் ஆஸ்திரேலியாவுக்கருகிலுள்ள பிஜித் தீவுகள், தென் அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் கயானா, மற்றும் இந்து மகா சமுத்திரத்தில் மடகாஸ்கர் தீவுக்கருகிலுள்ள மோரீசுத் தீவு, தென் அமெரிக்காவுக்கு வடக்கேயுள்ள ஜமய்க்கா, டிரினிடாட் தீவுகள் ஆகியவற்றுக்கும் அந்த மக்கள் அழைத்துச் செல்லப் பட்டார்கள். இவ்வாறு பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள தீவுகளுக்கும் நாடு களுக்கும் கடல் கடந்து ஒப்பந்தக் கூலிகளாகச் சென்ற இந்திய மக்களில் வட இந்தியாவில் சில பகுதிகளைச் சேர்ந்த மக்களும், தென்னிந்தியாவில் சென்னை ராஜதானியைச் சேர்ந்த மக்களும், அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களுமே அதிகமானவர்கள்.

தாம் கையொப்பமிடும் ஒப்பந்தத்தின் ஷரத்துக்களைக் கூடப் புரிந்து கொள்ளாது—உண்மையில் அதனைத் தெரிந்து கொள்ளாது—அதிலே கையொப்பமிட்டு ஒப்பந்தக்கூலி களாகக் கண்காணாத சீமைக்குச் சென்ற அந்த அப்பாவி மக்கள் பாஷையும் பழக்கமும் புரியாத அந்த வேற்று நாடுகளில் எண்ணற்ற கொடுமைகளுக்கு ஆளானார்கள். போகும் போது கவர்ச்சிகரமாகத் தோற்றிய கூலிப்பணம் அந்நாடுகளில் அவர்களின் குறைந்தபட்சத் தேவைகளைக் கூடப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இல்லை. ஆண்ட்ரூஸ் பெருமகன் மேற்கூறிய அதே அறிக்கையில் பின்வருமாறு எழுதுகிறார்: "எங்களது பரிசோதனையில், தாயகம் விட்டுக் கிளம்புமுன் ஒரு கூலிக்காரன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் போது அந்த ஒப்பந்தம் பிஜியிலுள்ள கூலி வாழ்க்கையைப் பற்றிய உண்மைகளைச் சரிவரப் பிரதிபலிக்கவில்லை என்பதைக் கண்டோம். அந்த ஒப்பந்தத்தில் அந்தக்

கூலிக்கு நாளொன்றுக்குப் பன்னிரண்டணா கூலிப்பணம் தரப்படும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் பிஜித்தீவில் அந்தப் பன்னிரண்டணாவுக்குரிய வாங்கும் சக்தி இந்தியாவில் ஐந்தணாவுக்குரிய வாங்கும் சக்திக்குக்கூடச் சமானமில்லை என்ற விஷயம் அவனுக்குக் கூறப்படவில்லை. உண்மையில் உடை மற்றும் அத்தியாவசியமான வாழ்க்கைத் தேவைகளுக்கு இந்தியாவில் எவ்வளவு தேவையோ, அதைக் காட்டிலும் மும்மடங்குப் பணம் பிஜியில் தேவைப்பட்டது'' (பக்.12). எனவே கடல் கடந்து சென்றேனும் கஷ்டமில்லாமல் காலம் தள்ளலாம் என்று நம்பிச் சென்ற மக்கள் அங்கும் மீளாக் கடனுக்கு ஆளானார்கள். இதனால், தமது ஐந்தாண்டுக் கால ஒப்பந்தத்தை மீண்டும் மீண்டும் அங்கேயே புதுப்பித்துக் கொள்ளும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி நிரந்தர அடிமைகளானார்கள். வேலை நேரம், வேலைப் பளு, கூலிப் பணம் ஆகியவை சம்பந்தமான நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடுவதோ, வேலை நிறுத்தம் செய்வதோ அவர்களுக்குக் கனவிலும் நினைக்க முடியாத காரியமாக இருந்தது. சின்னஞ்சிறிய குற்றங்களுக்குக்கூட அவர்களுக்குச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இதனால் அவர்களது வாழ்க்கை வளம் பெறுவதற்கான எவ்வித நம்பிக்கைக்கும் நப்பாசைக்கும் அங்கு இடமில்லை வைத்தியவசதி, குடியிருப்பு வசதி, குழந்தைகளுக்கான கல்வி வசதி முதலியன எதுவுமே அங்கு குறைந்த பட்ச அளவுக்கும் இருக்கவில்லை. இதனால் நோயும் நொடியும் அவர்களைப் பலி வாங்கின. இத்தகைய கேவலமான வாழ்க்கையால் அவர்கள் மத்தியில் அகால மரணமும், சிசு மரணமும், தற்கொலைகளும் பெருமளவில் அதிகரித்தன. இத்தகைய நிலைமையிலும் அவர்களிடமிருந்து வேலையை வாங்குவதற்கு அரசாங்கமும், அதிகாரமும், போலீசும் முதலாளிகளுக்கு அனுசரணையாக இருந்தன. எனவே 'நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு!' என்ற நிலையில் அவர்கள் கொடுமைகளுக்கும், சித்திரவதைக்கும், கொத்தடிமைக்கும், சுரண்டலுக்கும் இரையாகி உடலையும் உயிரையும் ஒட்டவைத்து வாழ முயன்றார்கள்.

மேலும் அங்கு சென்ற ஒப்பந்தக் கூலிகளின் மத்தியில் ஒழுக்கக்கேடும் விபசாரமும் பெருமளவுக்குத் தலைதூக்கவும் ஏதுவாயிற்று. ஏனெனில் அங்கு கொண்டு செல்லப்பட்ட பெண்களின் தொகை ஆண்களின் தொகைக்குப் பாதியிலும் குறைவு. அத்துடன் அவ்வாறு சென்ற பெண்களும் அங்கு வாழ வகையில்லை. அவர்கள் அங்குள்ள கங்காணிகளுக்கும், காவலாளிகளுக்கும், காமுகர்களுக்கும் தமது கற்பையும் மானத்தையும் பறிகொடுக்கும் நிர்ப்பந்தத்துக்கே இரையானார்கள். மேலும் அங்குள்ள நிலைமையும் விபசாரத்தை வளர்ப்பதாகவே இருந்தது. ஆண்ட்ருஸ் பெருமகன் பிஜித் தீவு பற்றிய தமது அறிக்கையில் பின்வருமாறு எழுதுகிறார்: ''இத்தகையதொரு விஷயத்தைப் பற்றி விளக்கமாக எழுதுவதென்பது எங்களுக்கு முற்றிலும் கசப்பாக இருக்கிறது. எனினும் சாத்தியமானவரை குறைந்தபட்சமாக வாவது தெரிவிக்கிறோம். ஆனாலும், ஒரு தோட்டத்திலுள்ள பலம் படைத்த மனிதர்கள் தங்கள் எண்ணிக்கைக்குச் சமமான அளவுக்குப் பெண்களை எடுத்துக் கொண்டு விட்டால், மீதியுள்ள பெண்களின் தொகை மீதியுள்ள ஆண்களின் தொகைக்கு விகிதாசாரத்தில் மிகவும் குறைவாகவே இருக்கும் என்பதை எளிதில் காணலாம். இந்த விகிதாசார வேற்றுமை நான்கு ஆட்களுக்கு அல்லது ஐந்து ஆண்களுக்கு ஒரு பெண் என்ற விகிதத்தில்தான் இருந்தது. இத்தகைய சந்தர்ப்பத்தில், அங்குள்ள தோட்ட முதலாளி ஒருவர் கூறிய கருத்தைக்கொண்டு, நிலைமையை அப்படியே புரிந்து கொள்ளலாம். எங்களில் ஒருவர் அவரிடம் கெட்டழிந்து போன பெண்களை ஒப்பந்தக் கூலிகளாகச் சேர்ப்பது பற்றிப் பேசியபோது, அவர் ''ஏன்? அத்தகையவர்கள் இல்லாமல், இந்த ஒப்பந்த முறையே ஒழுங்குக்கு வராதே'' என்றார். மேலும் ஒரு தோட்டத்தில் ஒரு கங்காணி, கூலியாட்களின் 'லைன்' களில் அமைதி நிலவுவதற்காக ஒரு பெண்ணுக்கு இத்தனை ஆண்கள் என்று நிர்ணயிப்பதையே

வழக்கமாகக் கொண்டிருந்ததாகவும் கேள்விப்பட்டோம். இது முறைபடுத்தப்பட்ட விபசாரமாகத்தான் இருந்தது'' (பக். 32).

இத்தகைய சூழ்நிலையில் அங்கு சென்ற பெண்கள் யாரையேனும் மணந்து கொண்டு வாழ முனைந்தாலும், அங்கு புகுத்தப்பட்ட சட்டம் இந்திய முறைப்படி நடைபெறும் திருமணங்களை ஒப்புக் கொள்ளவில்லை. இதன் மூலம் திருமணமான இந்தியப் பெண்களும்கூட அங்கு விபசாரிகளாகவே கருதப்பட்டனர். எனவே அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் சோரக் குழந்தைகளாகவே கருதப் பட்டன. இத்தகைய மிருக வாழ்க்கைக்குப் பலி கொடுப்பதற் காக இந்தியப் பெண்களைக் கூலிக்காரர்களாகக் கூட்டிச் சென்ற கங்காணிகள் எந்தவிதமான காலித்தனத்தையும் செய்யத் தயங்கவில்லை. ஏறத்தாழ நூறு ஆண்களுக்கு நாற் பது பெண்கள் வீதமே அழைத்துச் செல்லப்பட்டார்கள். இவ்வாறு கூட்டிக்கொண்டு போவதற்கு அந்தக் கங்காணி களும் அவர்தம் கையாட்களும் எந்தவிதமான மோசடியையும் செய்யத் துணிந்தார்கள். ஆட்களைக் கூட்டிக் கொண்டுவரும் கையாளுக்கு, தலைக்கு இவ்வளவு என்று சன்மானம் தரப் பட்டதோடு, ஆணைக்காட்டிலும் பெண்ணை ஏமாற்றிக் கூட்டி வந்தால் அந்தச் சன்மானம் அதிகமாகவும் தரப் பட்டது.ஒப்பந்தக் கூலிமுறைக்குள்ளாகி அயல் நாடுகளுக்குச் சென்ற அப்பாவிப் பெண்கள் அங்கு படும் பாட்டைப் பற்றிய விவரங்கள் நமது நாட்டிலும் பரவப் பரவ, இங்கிருந்து பெண்களை அழைத்துச் செல்வதில் கங்காணிகளுக்குச் சிரமமேற்பட்டது. இவ்வாறு ஒப்பந்தக் கூலிகளாக வருவதற்குப் பெண்கள் யாரும் முன்வராத நிலையில், ஒரு பெண்ணை எப்படியாவது கொண்டு வந்து சேர்த்துவிட்டால் அவ்வாறு கொண்டு வந்து சேர்த்த கையாளுக்கு எண்பது முதல் நூறு ரூபாய் வரை சன்மானம் கொடுக்கப்பட்டது! இந்தப் பெருந்தொகைக்கு ஆசைப்பட்டு, அயோக்கியர்களும் காலிகளும், எந்தவொரு மனிதத் தன்மையும், நெஞ்சீரமும்

அற்ற மாபாதகத்தையும் செய்யத் தயங்கவில்லை. இத்தகைய விவரங்களையெல்லாம் ஆண்ட்ரூஸ் பெருமகன் தாம் எழுதியுள்ள மேற்குறிப்பிட்ட பிஜித் தீவு பற்றிய அறிக்கையிலும், 'இந்தியாவும் பசிபிக்கும்' (India and the Pacific—C.F. Andrews) என்ற நூலிலும் விவரமாகக் குறித்துள்ளார். வாழ வகை தேடிச் சென்ற இந்திய நாட்டு மக்கள் கானலை நம்பி ஏமாந்த மானைப் போல், கண்காணாத சீமைகளில் நாயினும் கேடுகெட்ட நரக வாழ்க்கை வாழ்ந்து மடிந்தசோக வரலாறுதான் ஒப்பந்தக் கூலிமுறை உருவாக்கிய சித்திரம்!

## காந்திஜியும், கோகலேயும்

இத்தகைய கொடிய ஒப்பந்தக் கூலிமுறையை எதிர்த்து அதனை ஒழிப்பதற்காக எழுந்த போராட்டம் சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே தொடங்கி விட்டது. 1893ம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவுக்கு வக்கீலாகச் சென்ற காந்தியடிகள் அங்கு சென்று இறங்கியதுமே அங்கு வாழ்ந்துவந்த இந்திய மக்களின் படுகேவலமான வாழ்க்கை நிலையைக் கண்டார். அதனைக் கண்டதும் தமது வாழ்க்கைப் பணியே வேறு என்பதை உணர்ந்து, வக்கீல் தொழிலையும் புறக் கணித்துவிட்டு, இந்தியக் கூலிக்காரர்களின் நியாயமான உரிமைகளுக்காகவும் கோரிக்கைக்காகவும் விடுதலைக்காகவும் போராடத் தொடங்கினார்; சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தார். சத்தியாக்கிரக இயக்கமும் தத்துவமும் ஒப்பந்தக் கூலிமுறை ஒழிப்புப் போராட்டத்தில்தான் பிறப் பெடுத்தன. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தையும் அங்கு வாழ்ந்து வந்த இந்திய மக்களின், கூலிகளின் அவல நிலைகளையும் நாம் அவர் எழுதியுள்ள "தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம்" (Satyagraha in South Africa) என்ற மகத்தான சரித்திரச் சாசனத்தில் காணலாம். காந்தியடிகளின் இந்தப் போர் நீண்ட நெடும் போராட்டமாகவே இருந்தது. மேலும் அவரும், அவருக்குத் துணையாக நின்று போராடிய போலக்

என்பவரும் இந்தியாவுக்கு வரும்போதெல்லாம் இங்கு செய்த பிரச்சாரத்தால், ஒப்பந்தக் கூலிமுறை ஒழிப்புப் போராட்ட உணர்ச்சி இந்தியாவிலும் பரவியது. இந்தப் போராட்டத்தை ஓர் அரசியல் லட்சியமாக ஏற்று நடத்து மாறு காந்தியடிகள் பழம்பெரும் தேசபக்தர்களான கோபால கிருஷ்ண கோகலே, பண்டிதர் மதன்மோகன் மாளவியா ஆகியோரையும் தூண்டினார். இதன் பின்னர் கோகலே தென்னாப்பிரிக்கா சென்றார்; 1912-ம் ஆண்டின் இறுதியில் காந்தியடிகளோடு சேர்ந்து, அங்கிருந்த இந்தியக் கூலிகளின் நிலைமைகளையும், சத்தியாக்கிரகப் போராட்டத்தையும் நேரிலேயே கண்டு திரும்பினார். கோகலே திரும்பி வந்த பின்னர் 1913-ம் ஆண்டிலேயே ஒப்பந்தக் கூலிமுறை ஒழிப்புப் போராட்டம் இந்தியாவில் சூடுபிடித்து விட்டது என்றே சொல்ல வேண்டும். அன்றைய ஆங்கிலேயராட்சியில் வைஸ்ராயின் சட்டசபையில் (Indian Imperial Legislative Council) அங்கத்தினராகவிருந்த கோகலே அச் சபையிலேயே ஒப்பந்தக் கூலி முறையை ஒழிப்பதற்காகப் போராடினார். அச் சபையில் அவர் ஆற்றிய பிரசங்கம் சரித்திரப் பிரசித்த மும் முக்கியத்துவமும் வாய்ந்தது. அதில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இந்த முறை உண்மையில் எப்படிப்பட்டது என் பதை இச்சபைக்கு விரிவாக எடுத்துக் கூற வேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதவில்லை. அதன் பிரதான அம்சங்களை ஏறத்தாழ ஆறு வகையாகக் கூறலாம். முதலா வதாக, இந்த முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பாஷையும் பழக்க வழக்கமும் தமக்குத் தெரியாத, நண்பர் களோ உறவினர்களோ இல்லாத ஓர் இனந்தெரியாத தூரா தொலைநாட்டுக்குச் செல்லக் கடமைப்படுகிறார்கள். இரண் டாவதாக, அங்கே அவர்கள் தமக்கென நிர்ணயிக்கப்படும் எந்த ஓர் எஜமானனிடமும், தமக்கும் அவரைத் தெரியாத, அவருக்கும் தம்மைத் தெரியாத, தம்மாலும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையற்ற ஓர் எஜமானனிடம் வேலை பார்க்க

வேண்டியவர்களாகிறார்கள். மூன்றாவதாக அவர்கள் தமது முதலாளியின் தோட்டத்திலேயே தாமும் வாழ வேண்டியவர்களாகவும், எழுத்து பூர்வமான அனுமதியின்றி எங்கும் செல்ல அனுமதியற்றவர்களாகவும், தமக்கு இடப்படும் வேலை எத்தனை தொல்லையும் துன்பமும் தருவதாக இருந்தாலும், அத்தனையையும் செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள்.

"நான்காவதாக இந்த ஒப்பந்தத்தின் காலவரம்பு குறிப்பிட்ட காலமாக, வழக்கமாக ஐந்தாண்டுக் காலமாகவே இருந்தாலும், இந்த ஒப்பந்தத்திலிருந்து அவர்களாகவே விலகிக் கொள்ளவோ, ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் எவ்வளவு கொடுமையும் கடுமையும் மிக்கதாயினும், அவற்றிலிருந்து தப்பிக்கவோ இயலாதவர்கள் ஆகிறார்கள். ஐந்தாவதாக, அவர்கள் இந்த ஒப்பந்த காலத்தில் ஒரு குறிப்பிட்ட கூலிக்கே, அதுவும் குறைந்த கூலிக்கே, சில பிரதேசங்களில் சுற்றுவட்டாரத்திலுள்ள சுதந்திரமான தொழிலாளிகள் பெறும் கூலியைக் காட்டிலும் குறைவான கூலிக்கே, உழைக்க வேண்டியவர்களாகிறார்கள். ஆறாவதாக—இறுதியாக—இந்த முறையின் படுமோசமான அம்சமாக எனக்குப் படுவது என்னவெனில், இந்த நாட்டை விட்டு அவர்கள் கிளம்பிச் செல்லுமுன்னர் அவர்களுக்கு என்றுமே விளக்கப்படாத, அவர்களுக்குப் புரியாத மொழியில் எழுதி வைக்கப்பட்டுள்ள ஒரு பிரத்தியேகமான சட்டத்துக்கும் அவர்கள் ஆளாகிறார்கள். ஒப்பந்த ஷரத்துக்களைத் தெரியாத்தனமாக மீற நேரும் அற்ப விஷயங்களுக்குக்கூட அவர்கள்மீது பெருங்குற்றம் சாட்ட அந்தச் சட்டம் வழி செய்கிறது... இவ்வாறாக, அவர்கள் மோசடி செய்தால் மட்டுமல்ல, ஏமாற்றினால் மட்டுமல்ல, அசிரத்தை அல்லது கவனக் குறைவின் காரணமாக ஏதாவது செய்ய நேர்ந்தாலும்—நான் சொல்வதை இந்தச் சபையோரால் நம்ப முடியுமா?—தமது மானேஜர் அல்லது கங்காணியை நோக்கி, ஏதாவதொரு கண்ணிய குறைவான வார்த்தையையோ, வக்கணையையோ வெளிப்படுத்தி விட்டாலுங்கூட, அவர்கள்

அந்தச் சட்டத்தின்படி இரண்டு மாதம் முதல், சில சமயம் மூன்றுமாதம் வரையிலும் கடுங்காவல் சிறைத் தண்டனைக் கும் ஆளாகிறார்கள்......

''இந்த முறையின் பிரதான அம்சங்கள் இவைதான். அதிலும், இந்த முறைக்குப் பலியானவர்கள் இந்த நாட்டின் பரம ஏழைக் குடிகளைச் சேர்ந்த, அறியாமை மிகுந்த எழுத்து வாசனையில்லாத, சொத்துப் பத்துக்களற்ற மக்கள்—அவர்களை நான் வேறுவிதமாகக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது—என்பதையும், வெளிநாட்டுக் குடியேற்ற ஏஜெண்டுகளின் கைகளில் ஆட்களைக் கொண்டுபோய்ச் சேர்த்தவுடனேயே தமது கடமை தீர்ந்து போகின்ற, தாம் கொண்டுவரும் நபர்களுக்குத் தலைக்கு இவ்வளவு என்ற வீதத்தில் அதிகமான கூலியைப் பெற்றுக் கொண்ட வுடனேயே விலகி விடுகின்ற, சூதும் வாதும் நிறைந்த நபர் களின் அதர்மமான ஆசை வார்த்தைகளால், இத்தகைய ஒப்பத்தங்களுக்கு-உட்பட. சொல்லப் போனால் அவ்வாறு உட்படுமாறு—சிக்கிக் கொண்டவர்களே அந்த மக்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கின்றபோது, எந்தவொரு நியாயபுத்தி படைத்த மனிதரும், இந்த முறை அதனளவி லேயே கொடுமையான, பலாத்காரத்தால் பாதுகாக்கப் பட்ட முறைதான் என்று சொல்லத் தயங்க மாட்டார் என்றே நான் கருதுகிறேன். மேலும் நியாயத்தைப் பற்றிய நவீன கால உணர்ச்சிகளுக்கு முற்றிலும் எதிரானதே இம் முறை என்பதையும், இத்தகைய முறையைச் சகித்துக் கொண்டிருக்கும் எந்தவொரு நாட்டின் நாகரிகத்தின் மீதும், மனிதவர்க்கம் ஒரு படுமோசமான கறையாகத்தான் விளங்கும் என்பதையும் அவர் சொல்லத் தயங்க மாட்டார் என்றே கருதுகிறேன்...

''இன்றைய நிலையில் ஒப்பந்தமுறைக் கூலிகளை வழங் கும் ஒரே நாடு இந்தியாதான். இத்தகைய அவமானத்துக்கு இந்தியா மட்டும் ஏன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்?

துரதிருஷ்டவசமாக நெடுங்காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த எங்கள் நாட்டு மக்களின் மனச்சாட்சி இந்தப் பிரச்சினையின் பிரம்மாண்டத்தைக் கண்டு இப்போது விழித்தெழுகிறது. அது தனது லட்சியத்தை எய்தும் வரையில் ஓய்ந்திருக்கப் போவதில்லை என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை...

"(ஒப்பந்த முறை ஒழிப்புப் பற்றிய) இந்தப் பிரேரேபணைக்கு இந்தச் சபை செவிசாய்க்கா விட்டால், இதனை நாங்கள் ஒரு வெற்றிகரமான விஷயமாக்கும் வரையிலும், மீண்டும் மீண்டும் இதனை இச்சபையின் முன் கொண்டு வருவோம் என்பதை மட்டும் இந்தச் சபை நினைவிற் கொள்ளட்டும்" (C. F. Andrews-By John S. Hoyland, 1940 என்ற நூலில் மேற்கோள் காட்டியபடி).

கோகலே ஆங்கிலேயரின் நல்லெண்ணத்தின் நம்பிக்கை கொண்ட மிதவாதி எனக் கருதப்பட்டவர். அவரே வைஸிராயின் சட்டசபையில் இத்தனை வேகமாகப் பேசினார் என்றால், ஒப்பந்தக் கூலி முறையின் கொடுமை எத்தகையது என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

## ஆண்ட்ரூஸ் ஆற்றிய பணி

இவ்வாறு சட்டசபையிற் பேசிய கோகலே, சட்ட சபைக்கு வெளியிலும் இந்தப் போராட்டத்துக்குப் பல வகையிலும் ஆதரவு தேடினார். தென்னாப்பிரிக்கப் போராட்டத்துக்கு ஆதரவாக நாடெங்கணும் நிதியும் திரட்டியனுப்பினார். இவ்வாறு அவர் பிரசங்கங்கள் புரிந்து நிதியுதவி கோரிய காலத்தில், டில்லி நகரில் நடந்த ஒரு கூட்டத்தில் பிரசன்னமாயிருந்த சி. எப். ஆண்ட்ரூஸ் அந்தப் பிரசங்கத்தைக் கேட்டு மனம் நெகிழ்ந்தார்; கூட்ட முடிவில் தாம் தமது வாழ்நாளில் மிச்சம் பிடித்திருந்த பணம் முழுவதையும் அந்தப் போராட்டத்துக்கு நன்கொடையாக

வழங்கியதோடு, அந்தப் போராட்டத்தில் தாமும் ஈடுபடுவதே தமது முழுமுதற் கடமை என்றும் தீர்மானித்தார்.

ஆண்ட்ரூஸ் இங்கிலாந்திலிருந்து இங்குவந்து பணியாற்றிய ஆங்கிலேயக் கிறிஸ்துவர்; மனிதாபிமானமும் இரக்க சிந்தையும் மிக்கவர். அவர் டில்லி நகரிலுள்ள ஸெயின்ட் ஸ்டீபன்ஸ் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். ஆனால் தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் கலந்து, காந்தியடிகளுக்குத் தம்மாலான ஒத்துழைப்பை நல்குவது எனத் தீர்மானித்தவுடனேயே அவர் தமது பேராசிரியப் பதவியையும் துறந்தார். அன்று முதல் தமது இறுதிக்காலம் (1940) வரையிலும், அவர் இந்திய மக்களின் நண்பராகவும், மனிதாபிமானம் மிகுந்த கர்மவீரராகவும் திகழ்ந்தார். இதனால் மகாத்மா காந்தி அவரை ''தீனபந்து'' (ஏழையர் தோழன்) என்ற திருநாமமிட்டு அழைத்தார்: அதுமுதல் அவர் 'தீனபந்து ஆண்ட்ரூஸ்' என்றே என்றும் இந்திய மக்கள் குறிப்பிடப் பெறும்பெருமையைப் பெற்றார். ஆண்ட்ரூஸ் தமது தீர்மானப்படியே விரைவில் தென்னாப்பிரிக்கா சென்றார்: அவரைப் போலவே கோகலேயின் பேச்சைக் கேட்டு மனம் நெகிழ்ந்த அவரது நண்பரான வில்லியம் பீயர்ஸன் என்பவரும் அவருடன் துணைசென்றார் ஆண்ட்ரூஸின் வரலாற்றை எழுதியுள்ள ஜான் ஹாய்லண்ட் பின்வருமாறு எழுதுகிறார்: ''ஆண்ட்ரூஸ் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றபோது, அங்குள்ள நிலைமையின் பொருளாதார முக்கியத்துவத்தைப் பற்றிய எந்தவொரு நேரடியான கருத்துமில்லாமல், முக்கியமாக இந்தியர்கள் பிரச்சினையின்மீது ஏற்பட்ட அனுதாபத்தின் காரணமாகவே சென்றார். ஆனால் அங்குள்ள கூலிகளின் நிலைமைகளைக் கண்ணால் கண்ட பின்னால், தாம் பெற்ற அனுபவங்களை எண்ணிப் பார்த்த பின்னால், ஒப்பந்தக் கூலிமுறைக்கு எதிராகத் தாம் ஆற்ற வேண்டிய பணி அவருக்குத் தெள்ளத் தெளிவாயிற்று. அதனை உடைத்தெறியவே அவர் இந்த உலகத்தில் பிறந்திருந்தார், அதனை உடைத்தெறியும் வரை

யிலும் அவர் அலுப்புச் சலிப்பின்றிப் பாடுபட்டு முன்னேறினார்.'' (C. F. Andrews: John. S. Hoyland).

தென்னாப்பிரிக்காவிலிருந்து ஆண்ட்ரூஸ் திரும்பி வந்தார். ஆனால் அவரை ஒப்பந்தக்கூலி ஒழிப்புப் போருக்குக் கவர்ந்திழுத்த கோகலே 1915-ம் ஆண்டுத் தொடக்கத்தில் காலமாகி விட்டார். எனினும் ஆண்ட்ரூஸ் மனம் தளர்ந்துவிடாமல் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தேடினார் இதற்கிடையில் கோகலே சட்டசபையில்கொண்டு வந்த தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், 1913ம் ஆண்டில் காலனி நாடுகளிலுள்ள ஒப்பந்தக் கூலிகளின் நிலைமைகளை நேரில் கண்டுவர, மக்நீல் என்ற ஆங்கிலேயரையும், சமன்லால் என்ற இந்தியரையும் அனுப்பி வைத்தது. அவர்கள் கிட்டத்தட்ட ஒரு வருட காலம் பிரிட்டிஷ் கயானா, டிரினிடாட் தீவு, ஜமய்க்கா தீவு, சூரிநாம் (டச்சு கயானா), பிஜித் தீவு முதலிய நாடுகளைச் சுற்றி விட்டுத் திரும்பி வந்தனர். ஆனால் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை ஒப்பந்தக் கூலிமுறையின் நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்த்ததில் நன்மைகளே அதிகம் இருப்பதாகக் கூறியது. மொத்தத்தில் அது ஒரு கண்துடைப்பு அறிக்கையாகவே இருந்தது. எனவே அவ்வறிக்கை இந்திய நாட்டினருக்குத் திருப்தியளிக்கவில்லை. சமன்லால் ஓர் இந்தியராகவிருந்தும், இப்படிப்பட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்க உடந்தையாக இருந்தாரே என்று இந்தியத் தலைவர்கள் ஆத்திரமும் புழுக்கமும் அடைந்தனர். இதனால் அவர்கள் தமது நம்பிக்கைக்குரிய நபர்களை அனுப்பி, உண்மை நிலையைக் கண்டுவரச் செய்யத் தீர்மானித்தனர்.

இந்தத் தீர்மானப்படி ஆண்ட்ரூசும், பீயர்ஸனும் 1915ம் ஆண்டு செப்டம்பர் 15-ம் தேதி பிஜித் தீவுக்குப் புறப்பட்டனர். அவர்களை வழியனுப்பி வைக்கக்கூட அப்போது நிதி வசதி இல்லை. எனினும் இருவரும் தமது தேவைகளை யெல்லாம் பெரிதும் சுருக்கிக்கொண்டு அந்தப் பயணத்தை மேற்கொண்டனர். அவர்களுக்கெதிராக நின்ற

முதலாளித்துவ சக்திகளோ பணபலமும், பலாத்கார பலமும் மிக்கவை. இதனால் கொள்ளை லாபமடிக்கும் தோட்ட முதலாளிகள் செய்யும் கொடுமைகளையும் சுரண்டலையும் அம்பலப்படுத்தப் புறப்பட்ட ஆண்ட்ரூசுக்கும், அவரது நண்பருக்கும் ஏற்பட்ட சிரமங்களும் தொல்லைகளும் பலப்பல. எனினும் அவர்கள் கொண்ட கருமத்தைக் கைவிடாது, அஸ்ஸாம், பிஜித் தீவு, மேற்கிந்தியத் தீவுகள், பிரிட்டிஷ் கயானா, கென்யா முதலிய இடங்களுக்கெல்லாம் சென்றனர். அங்கும் தகவல்களைச் சேகரிப்பதில் பல எதிர்ப்புக்கள்; சிரமங்கள். அங்குள்ள ஒப்பந்தக் கூலிகளே இவர்களை உளவறிய வந்த முதலாளியின் கையாட்களோ என்று சந்தேகித்தார்கள். எனினும் வாழ்வில் நிராசையும் விரக்தியும் மேலோங்கி நடைப்பிணங்களாக மாறிவிட்ட அந்த மக்களோடு, ஆண்ட்ரூஸ் நெருங்கிப் பழகி அவர்களது இதயங்களைத் தொட்டு உலுப்பி, அவர்களின் துன்ப துயரங்களையெல்லாம் கேட்டறிந்தார். இவ்வாறு கேட்டறிந்து சேகரித்த தகவல்களையெல்லாம் அவரும் பியர்ஸனும் உடனுக்குடன் இந்தியாவுக்கு எழுதியனுப்பினார்கள். அவ்வாறு வந்த உள்ளமுருக்கும் செய்திகள் இந்தியாவில் பத்திரிகை வாயிலாகவும், ஒப்பந்தக் கூலிமுறை ஒழிப்புப் போராட்டக் குழுக்களின் வாயிலாகவும் பிரசுரமாயின; இந்திய அரசாங்கத்திற்கும் அவை சமர்ப்பிக்கப்பட்டன. இந்தியாவில் இப் போராட்டம் தீவிரமடைந்ததற்குப் பெருந் துணை செய்தவை ஆண்ட்ரூஸ்—பியர்ஸன் ஆகிய இருவரும் நேரில் கண்டு தெரிவித்த அறிக்கைகளே என்று சொல்லலாம்.

பிஜித் தீவிலிருந்து திரும்பி வந்ததுமே ஆண்ட்ரூசும் பியர்ஸனும் தமது சுற்றுப் பயணத்தில் கண்டறிந்த விஷயங்களை "பிஜியில் ஒப்பந்தக் கூலிமுறை உழைப்பாளர் பற்றிய அறிக்கை: ஒரு தனியார் விசாரணை" (Report on Indentured Labour in Fiji-An independent enquiry) என்ற தலைப்பில் 1916-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளியிட்டார்கள். இந்நூலை அவர்கள் தம்மை இப் போராட்டத்தில் ஈடுபடச்

செய்த கோகலேயின் நினைவுக்கே சமர்ப்பணமும் செய்தார்கள். இந்நூலை அப்போது சென்னையில் 'ஹிந்து' பத்திரிகையின் ஆசிரியர் எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார் தலைமையில் அமைக்கப்பட்டிருந்த 'ஒப்பந்தக் கூலிமுறை ஒழிப்புச் சங்கம்' அதே மாதத்தில் உடனே வெளியிட்டது. ஆண்ட்ரூஸ் சென்ற காலனி நாடுகள் அனைத்திலும் பிஜித் தீவில்தான் ஒப்பந்தக் கூலிகளின் நிலைமை படுமோசமாக இருந்தது. பிஜித் தீவில் நிலவிய நிலைமைகளைப் பற்றி ஆண்ட்ரூசும், பியர்ஸனும் வெளியிட்ட இவ்வறிக்கையைப் படித்தால் எவரது கண்ணும் மனமும் கலங்காமற் போகாது. அந்த அளவுக்கு அங்கு கொடுமைகள் நிலவியிருந்தன. பிஜியிலிருந்த இந்திய மக்களிற் பெரும்பாலோர் ஒப்பந்தக் கூலிமுறை அமலுக்கு வந்த காலம் தொட்டே, அதாவது 1834ம் ஆண்டு தொட்டே அங்கு சென்று குடியேறியவர்கள். அவர்களிலும் தமிழ் மக்களே அதிகம் பேர் இருந்தனர். பிஜியிலுள்ள கரும்புத் தோட்டத்து வெள்ளை முதலாளி களின் வேண்டுகோளின்படி, சென்னையிலிருந்த வெள்ளைக் காரக் கம்பெனியான பாரி கம்பெனிதான் அந்த மக்களை கூலிகளாக ஒப்பந்தம் செய்து அனுப்பி வைத்த தாகத் தெரிகிறது; பாரிக் கம்பெனி சர்க்கரைத் தொழிலில் ஈடுபட்டதற்கும் இந்தத் தொடர்பே காரணம் என்றும் சொல்லப் படுகிறது. ஆண்ட்ரூஸ் சென்ற அத்தனை நாடு களிலும் பிஜித் தீவில்தான் தற்கொலை விகிதம் அதிக அளவுக்கு இருந்தது. "இந்தியாவில் இருபதாயிரம் பேருக்கு ஒருவர்தான் அல்லது ஆண்டுக்குப் பத்து லட்சம் பேருக்கு ஐம்பது பேர்தான் தற்கொலை செய்து கொள்கிறார்கள். பிஜியிலுள்ள ஒப்பந்தக் கூலியான இந்தியர்களில் ஆண்டு தோறும் 950 பேருக்கு ஒருவர் தற்கொலை செய்திருக் கிறார்கள்; இது ஆண்டுக்குப் பத்துலட்சம் பேருக்கு, ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொகையாகும். கடந்த எட்டாண்டுகளில் எடுத்த சராசரிக் கணக்கு இது. வேறு விதமாகச் சொன்னால், இந்தத் தற்கொலை விகிதம் இந்தியாவிலிருப்பதைக் காட்டிலும் இருபது மடங்கு

அதிகமாகும்'' (பக். 34) என்று அவரே தம் அறிக்கையில் குறிப்பிடுகிறார். இதன் மூலம் நாம் அங்கு நிலவிய படு பயங்கரமான நிலையை ஊகித்துக் கொள்ளலாம். இதனால் தான் ''ஒப்பந்தக் கூலிமுறையின் கீழ் நமது நாட்டுத் தொழிலாளர்கள் அனுபவித்த கொடுமைகளுக்கு முக்கிய மாகப் பேர்போனவை பிஜீத் தீவுகளாகும்'' என்று பண்டித ஜவாஹர்லால் நேருவும் தமது 'உலக சரித்திரத்'தில் (Glimpses of World History) குறிப்பிட்டுள்ளார்.

## போராட்டத்தின் வெற்றி

பிஜித் தீவிலிருந்து திரும்பி வந்த ஆண்ட்ரூஸ் இந்தியா வில் நடந்த ஒப்பந்தக் கூலிமுறை ஒழிப்புப் போராட்டத் திலும் தீவிரமாகப் பங்கு கொண்டார். மேலும் கோகலேயின் மரணத்துக்குப் பின்னால் இந்தியாவுக்குத் திரும்பி வந்த காந்தியடிகள் இங்கேயே தங்கி, அப் போராட்டத்தின் தலைமையைத் தாமே தாங்கி அதனைத் தீவிரப்படுத் தினார். அவ்வமயம் சென்னை ராஜதானியில் அதனை அனிபெஸண்ட் அம்மையார் முன்னின்று நடத்தினார். மேலும் 1916ம் ஆண்டில் பண்டித மதன் மோகன் மாளவியா ஒப்பந்தக் கூலி முறை ஒழிப்புப் பற்றிய தீர் மானத்தைச் சட்டசபையில் பிரேரேபித்தார். முன்னர் கோகலே பிரேரேபித்த காலத்தில் அதனை ஏற்க மறுத்த அரசாங்கம் இப்போது அதனை ஏற்றது. எனினும் 1917-ம் ஆண்டில் அம்முறையை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடிக்க அது அனுமதித்தது. எனவே இந்த அனுமதியை முறியடிப்பதற் காகப் போராட்டம் தீவிரப் படுத்தப்பட்டது. மேலும் இப் போராட்டத்தின்போது, பிஜித் தீவில் இந்தியப் பெண்கள் படும் பாட்டை அறிய வந்த இந்திய மாதர்கள் பலரும் பம்பாயைச் சேர்ந்த திருமதி ஜெய்ஜி பெடிட் என்ற பெண்மணியின் தலைமையில் தூது கோஷ்டியாகச் சென்று, வைஸ்ராயைச் சந்தித்து ஒப்பந்த முறையை ஒழிக்க வேண்டி வாதாடினார்கள். இந்தச் சம்பவம் இந்திய தேசிய இயக்க வரலாற்றிலேயே இதற்குமுன் நிகழாத

புதுமையான சம்பவமாகும். இதே சமயத்தில் ஆஸ்திரேலியாவிலுள்ள மாதர்களின் பிரதிநிதியாக மிஸ், கார்ன்ஹாம் என்பவர் தமது நாட்டுக்கருகிலுள்ள பிஜித் தீவுக்கு நேரில் சென்று, அங்குள்ள நிலைமைகளின் கொடுமையை ஆஸ்திரேலிய மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் எடுத்துக் கூறினார். இவ்வாறு பிஜித் தீவிலுள்ள இந்தியப் பெண்களின் துயரைக் களைய, இந்திய நாட்டு மாதரும், ஆஸ்திரேலிய நாட்டு மாதரும் ஒன்றுபட்டு நிற்கும் ஓர் அரிய ஐக்கியம் உருவாயிற்று. ஒப்பந்தக் கூலி முறையைக் கைவிட அரசாங்கம் ஒப்புக்கொண்டும் அதனை அமலுக்குக் கொண்டு வரத் தயங்கியதால், காந்தியடிகள் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தினார். ஆனால் அரசாங்கமோ ''உரிய காலத்தில் அதனை ரத்துச் செய்துவிடுவதாக''க் கூறியது. ஆனால் காந்தியடிகளோ இந்த வரையறையற்ற ''உரிய கால'' வாக்குறுதியை ஒப்புக் கொள்ளவில்லை. 1917ம் ஆண்டு ஜூலை 31ம் தேதிக்குள் அதனை ரத்துச் செய்தாக வேண்டும். இல்லையேல் சத்தியாக்கிரகப் போர் தொடங்கும் என எச்சரித்தார். அதுவரையில் அசையாதிருந்த அரசாங்கம் அந்தப் போராட்டம் சத்தியாக்கிரகப் பாதையில் திரும்புவதற்கு முன்பே, 1917ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் தேதியன்று ஒப்பந்தக் கூலி முறையைச் சட்டபூர்வமாக ஒழித்து, அதனை அறிவித்துவிட்டது.

இவ்வாறாக, 1834ம் ஆண்டில் புகுத்தப்பட்ட ஒப்பந்தக் கூலிமுறை ஏறத்தாழ எண்பதாண்டுகளுக்குப் பின்னர், காந்தியடிகள் நடத்திய இருபதாண்டுக் கால (1891—1917) இடையறாத போராட்டத்தால் ஒழித்துக் கட்டப்பெற்றது. இதுவே ஒப்பந்தக் கூலிமுறை ஒழிப்புப் போராட்டச் சரித்திரம். இந்த முறை ஒழிந்த பின்னரும் இந்தியர்கள் பிழைப்பை நாடி அயல்நாடுகளுக்குச் செல்லத்தான் செய்தார்கள். எனினும் இதன்பின் அவர்கள் 'ஒப்பந்தக் கூலி'களாகச் செல்லவில்லை.

இக் கட்டுரையின் தொடக்கத்தில் நாம் பார்த்த எம். எஸ். சுப்பிரமணிய ஐயரின் குறிப்பில், 'கரும்புத் தோட்டத் திலே' என்ற பாரதியின் கவிதை கவியரசி சரோஜினி தேவி எழுதிய கவிதையின் தமிழாக்கம்தான் எனக் கூறுவது போன்ற தொனி தென்படுகிறது. ஆனால் அவ்வாறு மயக்கம் கொள்வதற்கு அதில் இடமேயில்லை. அந்தக் கவிதை பாரதியின் சொந்தப் படைப்புத்தான். பாரதியுடன் நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்றிருந்த யதுகிரி அம்மாள் தமது 'பாரதி நினைவுகள்' என்ற நூலில், இந்தக் கவிதை பிறந்த விதம் பற்றிக் கூறுகிறார் (அத். 8). இந்த அடிமைகள் பிஜித் தீவில் படும் கஷ்டத்தைப் பற்றி யாரோ ஒருவர் செய்த ஆங்கிலப் பிரசங்கத்தை அடிப்படையாகக் கொண்டு, அந்த அடிமைகளின் நிலையை விளக்கிக் கவிதை அனுப்பும்படி பத்திராதிபர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் பாரதி இக் கவிதையைப் பாடியதாக அந் நூலில் கூறப்படுகிறது. அந்த யாரோ ஒருவர் ஆண்ட்ரூஸாகவும் இருக்கக்கூடும். ஒரு வேளை பாரதி சரோஜினி தேவியின் கவிதையையும் படித் திருக்கலாம். பத்திராதிபரும் அவனிடம் கவிதை கேட்டிருக் கலாம். இவ்வாறு கேட்டிராவிட்டாலும் கூட பாரதி தனது கவிதையைப் பாடியே இருப்பான். ஏனெனில் மனித குலத்தின் மனச் சாட்சியைத் தொட்டுலுப்பும் எந்த விஷயமும் அவனது பார்வையிலிருந்து தப்பவில்லை. அவனே அத்தகைய மனச் சாட்சியின் குரலாகத்தான் இருந்தான். 'நெஞ்சு பொறுக்குதிலையே' என்று பாரத மக்களின் வறுமை யையும் சிறுமையையும் கண்டு, கொதித்துப் பாடிய பாரதிக்கு, பிஜித் தீவிலுள்ள பாரதப் பெண்களின் பரிதாப கரமான நிலையைப் பற்றிப் பாடுவதற்கு வேண்டுகோள் விடுக்க வேண்டியதில்லை. அந்தக் கொடுமையை அறிய நேர்ந்த பின் அவனது உள்ளம் ஊமையாக இருந்திருக்காது. இதனை வலியுறுத்துவது போல், பெ. தூரன் அவர்கள் குறிப்பொன்றும் நமக்குத் துணை செய்கிறது. அவர்

பின்வருமாறு எழுதுகிறார்: ''சுதேசமித்திரனில் வெளியான கட்டுரை, கவிதைகளின் தேதியைக் குறித்து வைத்திருந்தது போலவே, கவிதைகள் சிலவற்றை எழுதக் காரணமான நிகழ்ச்சிகளையும் குறித்து வைத்திருந்தேன். உதாரணமாக பிஜித் தீவிலே 'ஹிந்து ஸ்திரீகள்' என்ற பாடலைப் பாடுவ தற்குத் தீனபந்து பிஜிக்குச் சென்று அங்கு இந்தியப் பெண்களின் நிலைமையை நேரிற் கண்டறிந்து அதுபற்றி 'மாடர்ன் ரெவியூ' பத்திரிகையில் உருக்கமாக எழுதினார். அதைப் படித்த பாரதியார் அப்பாடலை இயற்றினார். இந்த விவரம் அப்பாடல் வெளியான காலத்திலேயே அதனடியில் கொடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு குறித்து வைத்திருந்த காவிய நூல் கைநழுவிப் போய்விட்டதென்று முன்பே குறித்திருக்கிறேன்...'' (பாரதி தமிழ்: முன்னுரை, பக். 15). தூரன் அவர்களின் இக் குறிப்பே பொருத்தமானதாகத் தோன்றுகிறது. ஆண்ட்ரூஸின் அறிக்கை முன்னர் குறிப் பிட்டது போல் 1916-ம் ஆண்டில் இதே காலத்தில் உரு வானதே என்று நாம் தீர்மானிக்க முடியும்.

மேலும், இந்த ஒப்பந்தக் கூலி முறை ஒழிப்புப் போராட்டத்தையும் பாரதி வெகுகாலத்துக்கு முன்பிருந்தே மிகுந்த உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ளான் என்றும் நமக்குப் புலனாகின்றது. காந்தியடிகள் தென்னாப்பிரிக்கா வில் ஒப்பந்தக் கூலிகளின் உரிமைகளுக்காகப் போராடிவந்த காலத்திலேயே, பாரதி அந்தப் போராட்டத்தின் தன்மையை யும், சாராம்சத்தையும், நியாயவேட்கையையும் தெளிவாக உணர்ந்து அதனை வரவேற்றிருக்கிறான். புதுச்சேரியில் அஞ்ஞாத வாசம் புரிந்து வந்த காலத்தில், அவனது ஆசிரியப் பொறுப்பில் சிறிது காலம் வெளிவந்த 'இந்தியா' பத்திரிகை யில், ''காந்திப்பசு'', ''திரான்ஸ்வால் இந்தியர்கள்'', ''தென்னாப்பிரிக்காவில் நம்மவர்கள்'' என்ற தலைப்புகளில் (1909-ம் ஆண்டு டிசம்பர் 18,25 தேதி இதழ்கள்) தென்னாப் பிரிக்கப் போராட்டத்தையும், காந்தியடிகளின் பெருமையை யும் பற்றி உருக்கமாகவும் உயர்வாகவும் எழுதியுள்ளான்

(ஆதாரம்: பாரதி புதையல்: ரா.அ. பத்மனாபன் தொகுப்பு பாகம் 2, பக். 139—145). மேலும் தென்னாப்பிரிக்காவில், நிலவிவந்த நிலைமைகளையும், அங்கு நடந்த போராட்டத்தையும், அதன் விளைவுகளையும் அவன் தொடர்ச்சியாகக் கவனித்து வந்திருக்கிறான் என்பதையும் அவனது கட்டுரைகள் சிலவற்றிலிருந்து அறிகிறோம். 'மாதர்' என்ற தலைப்பில் தொகுக்கப் பெற்றுள்ள பாரதியின் கட்டுரைத் தொகுதியில் 'பெண் விடுதலைக்குத் தமிழ்ப்பெண்கள் செய்யத்தக்கது யாது?' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள அவனது கட்டுரையில், தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியக் கூலிகள் படும் துயரங்களைக் குறித்து, 1896-ம் ஆண்டில் கல்கத்தாவில் கூடிய பன்னிரண்டாம் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ஜி. பரமேஸ்வரன் பிள்ளை என்பவர் பேசிய பேச்சின் ஒரு பகுதியை அவன் மேற்கோள் காட்டுகிறான். இதனால் ஒப்பந்தக் கூலி முறையின் கொடுமைகளைத் தெரிந்து கொள்வதில் அவன் ஆரம்பம் முதலே முழுமையான ஆர்வம் காட்டி வந்திருக்கிறான் என்பது தெளிவு. மேலும் அதே கட்டுரையில், ''தென்னாப்பிரிக்காவில் ஹிந்து தேசத்துக் கூலியாட்களுக்கு ஸ்ரீமான் மோஹனதாஸ் கரம் சந்த் காந்தி எந்த வழியைக் காட்டினாரோ அதுவே நமக்கும் வழி'' என்று சத்தியாக்கிரக மார்க்கத்தைப் பெண் விடுதலைக்கும் உதவும் கருவியாகச் சுட்டிக் காட்டுகிறான் அதே தொகுதியில் தென்னாப்பிரிக்காவிலுள்ள பெண்களுக்கு நகரசபைத் தேர்தலில் ஓட்டுப் போடும் உரிமை கிடைத்ததை வரவேற்று, ''தென் ஆப்பிரிக்காவில் பெண்கள் விடுதலை'' என்ற தலைப்பில் அவன் வேறொரு கட்டுரையும் எழுதியுள்ளான். இவையனைத்தும் தென்னாப்பிரிக்க ஒப்பந்தக் கூலிகளின் போராட்டத்தில் பாரதி எவ்வளவு அக்கறை செலுத்தி வந்தான் என்பதை விளக்கும். அப்போராட்டத்தின்மீது பாரதிக்கு ஏற்பட்ட ஈடுபாடு வெறும் அனுதாபமாகவோ, ஆதரவாகவோ மட்டும் நின்று விடவில்லை.அவன் தனது 'இந்தியா" பத்திரிகையில் 1909-ம் ஆண்டிலேயே (டிசம்பர் 25) தென்னாப்பிரிக்கப் போராட்டத்துக்கு நிதி வசூல் செய்தனுப்ப

முடிவு செய்து, அதில் ஓர் அறிக்கை விடுத்தான். அவ்வறிக்கையில் அங்கு சத்தியாக்கிரகிகள் பட்ட துன்பங்களையெல்லாம் வருணித்து விட்டு, இறுதியாகப் பின்வருமாறு எழுதுகிறான்:

"பண உதவி வேண்டுமென்று நமது வீர ஸகோதரர்களும், ஸகோதரிகளும் தாமே வாய் திறந்து கேட்கத் தொடங்கி விட்டார்கள். பம்பாயிலிருந்து ஆயிரக் கணக்கான தொகை போய்விட்டது. பெங்காளத்திலும் பெருந் தொகை சேர்த்து வருகிறார்கள். சென்னப் பட்டணத்தில் இதன் பொருட்டு வைத்திருக்கும் ஸபையாருக்கு இன்னும் அதிகமாகப் பணம் சேரவில்லை. தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களிலே பெரும்பாலார் தமிழர்கள். அப்படியிருந்தும் நாம் இவ் விஷயத்தில் அசிரத்தையாக இருப்பது கிரமமன்று. ஆகையால் 'இந்தியா பத்திரிகை நிதி' என்பதாக ஒன்று சேர்த்துச் சென்னப் பட்டணத்திலுள்ள சபையின் காரியதரிசிக்கு அனுப்ப உத்தேசித்திருக்கிறது. தமிழர்கள் அனைவரும் உதவி செய்ய வேண்டும்.

**தென் ஆப்பிரிக்கா பாரத சகாய நிதி**

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 'இந்தியா' பத்திராதிபர் | 10 | 0 | 0 |
| கு. சண்முகவேலு செட்டியார் | 10 | 0 | 0 |
| ஸி. சுப்பிரமணிய பாரதி | 5 | 0 | 0 |
| வந்தே மாதரம் | 5 | 0 | 0 |

(பாரதி புதையல். 2ம் பாகம் பக். 145)

இவ்வாறு அறிக்கை விடுத்து, அதன்படி பாரதி தென்னாப்பிரிக்காவுக்குப் பணமும் திரட்டி அனுப்பியிருக்கிறான். பாரதியின் மனைவி செல்லம்மாள் தமது நூலில் "நேட்டாலில் தமிழ் மக்களின் நன்மைக்காக உழைக்கும்

சங்கம் ஒன்றிற்குப் புதுவையிலிருந்தும் அருகிலுள்ள கிராமங்களிலிருந்தும் (பாரதி) பணம் சேகரித்து அனுப்பினார்" (பாரதியார் சரித்திரம், பக். 67) என்று எழுதியுள்ளார். மேலும் 1914 ம் ஆண்டில் பாரதியின் தேசீய கீதங்களும் பிற பாடல்கள் சிலவும் அடங்கிய ஒரு கவிதைத் தொகுதி 'மாதா மணி வாசகம்' என்ற தலைப்பில் தென்னாப்பிரிக்காவிலேயே அங்குள்ள தமிழர்களால் பிரசுரிக்கப் பட்டது. எனவே தென்னாப்பிரிக்காவிலுள்ள தமிழர்களைச் செய்தி வாயிலாக மட்டுமின்றி, கடிதத் தொடர்பின் மூல மாகவும் பாரதி தெரிந்து கொண்டிருந்தான் என்றே நாம் ஊகிக்க முடிகிறது.

இவ்வாறாக, பாரதி ஆரம்பம் முதலே ஒப்பந்தக் கூலி முறை ஒழிப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து கவனித்து வந்ததோடு, அதற்கு தன்னாலான ஆதரவும் உதவியும் அளித்து வந்தான். இந்தியாவில் இந்தப் போராட்டம் வலுப்பெற்று, ஆண்ட்ரூஸ் ஒப்பந்தக் கூலிகள் வசித்து வந்த நாடுகளுக்கெல்லாம் சென்று, அங்குள்ள இந்திய மக்களின் அவல நிலையைக் குறித்து எழுதிய குறிப்புக்களையெல்லாம் கூட அவன் அறிந்து வைத்திருந்தான். 'தமிழச் சாதி' என்ற தலைப்பில் இப்போது வெளிவரும் பதிப்புக்களில் இடம் பெற்றுள்ள, நமக்கு அரைகுறையாகக் கிடைத்துள்ள அவனது பாட்டில் அவன் பின் வருமாறு கூறிச் செல்கிறான்:

ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்,
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்,
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவி, இவ் வெளிய
தமிழச் சாதி தடியுதை யுண்டும்,
காலுதை யுண்டும், கயிற்றடி யுண்டும்,
வருந்திடும் செய்தியும், மாய்ந்திடும் செய்தியும்,
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது,

செத்திடும் செய்தியும், பசியாற் சாதலும்,
பிணிகளாற் சாதலும், பெருந்தொலை உள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினால் சாதலும்,
இஃதெலாம் கேட்டு...

இந்த வரிகளை ஊன்றிப் படித்துப் பார்த்தால், ஒப்பந்தக் கூலிகள் பரவி வாழ்ந்த தென்னாப்பிரிக்கா, கென்யா, பிஜி, ஜமய்க்கா, டிரினிடாட், பிரிட்டிஷ் கயானா முதலிய பல நாடுகளிலும் தீவுகளிலும், அவர்கள் பட்ட பல்வேறு துன்பங் களையும் பாரதி விவரமாகத் தெரிந்து கொண்டிருந்தான் என்பதையும், அவற்றையே இங்கு சுருக்கமாகத் தொகுத் துக் காட்டிச் செல்கிறான் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளலாம். இவற்றை அவன் தெரிந்து கொள்வதற்கு 1916-ம் ஆண்டில் ஆண்ட்ருஸ் பிரசுரித்த அறிக்கைகளே துணையாக இருந்திருக்கும் என்றும் ஊகிக்கலாம். மேலும் முன்னர் நாம் குறிப்பிட்ட யதுகிரி அம்மாளின் நூலில், ஏஜெண்டுகளின் கையாட்கள் எப்படி இந்தியப் பெண் மக்களை ஏமாற்றி அயல்நாடுகளுக்குக் கொண்டு சென்றார் கள் என்பதைக் குறித்தும் பாரதி தனது வாய்மொழியாகக் கூறிய விவரமொன்றையும் காண்கிறோம். பாரதி பின்வரு மாறு கூறினானாம்.

ஏதோ ஒரு பத்திரிகையில் பார்த்தேன். ஒரு கிருஹஸ் தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஆபீசுக்குப் போயிருக் கிறான். அவன் சம்சாரம் வேலைகளை முடித்து விட்டுக் குழந்தையுடன் உட்கார்ந்திருக்கிறாள். அக்கம் பக்கம் யாரு மில்லை. ஓர் ஆள்வந்து சீட்டு ஒன்றைக் கொடுத்தானாம். அதில் ‘உன் புருஷன் சாகுந்தறுவாயில் இருக்கிறான். உடனே வா’ என்று இருக்கிறது. இவள் வீட்டைப் பூட்டிக் கொண்டு முன்பின் யோசனை இல்லாமல் புறப்பட்டாள். அந்த நீசன் ஒரு மணிக்குப் புறப்படும் கப்பல் துறைமுகத்துக்கு அவளை அழைத்துச் சென்றான். ‘கப்பலுக்கு எதற்காக வந்தார்?’ என்று கேட்டாளாம் அவள். ‘ஆபீஸ் அதிகாரி கப்பல்

தலைவனுக்கு ஒரு காகிதம் கொடுத்தனுப்பினார். கப்பலுக்கு வந்து கம்பிப் படிகளில் ஏறும்போது தலைசுற்றி விழுந்து மண்டை உடைந்தது' என்றானாம் அவன். அந்தப் பெண் அதையும் நம்பிக் கப்பலில் ஏறினாளாம். மேல் மாடிக்குப் போவதற்குள் கப்பல் கிளம்பி விட்டது. அங்கே இவளைப் போல் அநேகம் பெண்கள் இருந்தார்களாம். ஏன் என்று இந்தப் பெண் கேட்க, 'நாம் அடிமைகள். பிஜித் தீவிலிருக் கும் அடிமைகளுடைய சுகத்துக்காக நாம் நாசம் செய்யப் பட்டோம்!' என்று கதறினார்களாம். இப்படி எவ்வளவு குடும்பங்கள் நாசம் செய்யப்பட்டனவோ?''

(பாரதி நினைவுகள்:யதுகிரி அம்மாள், அத்.8).

ஆண்ட்ரூஸ் பெருமகன் தமது பிஜித் தீவு பற்றிய அறிக்கையில், பிஜித் தீவிலுள்ள பெண்களிடம் அவர்கள் எவ்வாறு அழைத்து வரப்பட்டார்கள் என்பதைக் கேட்ட றிந்த விவரத்தைக் கூறும்போது ''பொதுவான கூற்று என்னவென்றால், ஆள் சேர்க்கும் ஏஜெண்ட் அவர்களிடம் வந்து, அந்தப் பெண்களை அவர்தம் உறவினரிடம் அழைத் துச் செல்வதாகவோ, அல்லது ஏதாவதொரு புனிதக் கோவிலைக் காட்டுவதாகவோ கூறி ஏமாற்றி அழைத்துச் சென்று அவர்களை ஆள் சேர்க்கும் டிப்போவுக்குக் கூட்டிச் சென்றதாகத்தான் இருந்தது'' (பக். 8) என்று குறிப்பிட்டு, இவ்வாறு ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட பெண்களின் துயரக் கதைகள் சிலவற்றையும் கூறுகிறார். அன்னிய நாடுகளுக்குப் பெண்களை ஏமாற்றி அழைத்துச் செல்வதில் அயோக்கியர்களும் ரௌடிகளும் பணத்துக்காசைப்பட்டு எந்தவொரு மாபாதகத்தையும் செய்யக் கூசவில்லை என்ப தையே ஆண்ட்ரூஸின் அறிக்கை விளக்குகிறது. பாரதி கூறியதாகக் கூறப்படும் கூற்றும் இதற்கோர் உதாரண மாகவே விளங்குகிறது. இத்தகைய துயரங்களையெல்லாம் அறிய நேர்ந்த வேதனையில்தான் அவனது 'கரும்புத் தோட்டத்திலே' என்ற கவிதை பிறந்திருக்கிறது.

இங்கு நாம் இன்னொரு விஷயத்தையும் நினைவூட்டிக் கொள்ள வேண்டும். காந்தியடிகளைப் போலவோ, கோகலே யைப் போலவோ, ஆண்ட்ரூஸைப் போலவோ, ஒப்பந்தக் கூலிகள் அனுபவித்த நரக வேதனையை நேரிற் சென்று காணும் சந்தர்ப்பம் பாரதிக்கு இருக்கவில்லை. கடல் தாண்டி எந்த நாட்டிற்கும் அவன் சென்றதில்லை. சொல்லப் போனால் இந்திய நாட்டுக்குள்ளே கூட இஷ்டம் போல் திரியச் சுதந்திரமின்றி, சின்னஞ் சிறிய பாண்டிச்சேரிப் பகுதி யிலேயே தனது இலக்கிய வாழ்வின் பெரும்பகுதிக் காலத் தைக் கழிக்க நேர்ந்தவன் அவன். பாண்டிச்சேரியே அவனுக்கு விரிந்ததொரு சிறையாகத்தான் இருந்தது. எனினும் அந்தச் சிறை வாழ்க்கையில் காலம் கழித்த பாரதி செய்தித்தாள் களின் மூலமே உலகம் முழுவதையும் கண்டறிந்தான். 1914-18ம் ஆண்டின் மகா யுத்த காலத்தில் ஜெர்மானியரின் அக்கிரமத்தால் வீழ்ந்த பெல்ஜியத்தை அவன் செய்திமூலம் அறிந்து வாழ்த்தினான். அதே காலத்தில் வெற்றி பெற்ற ருஷ்யப் புரட்சியையும் வாழ்த்தினான். தான் எங்கிருந்த போதிலும் மனித குலத்தின் வீழ்ச்சியையும் வெற்றியையும் அவன் காணத் தவறவில்லை. அவ்வாறே அவன் பிஜித் தீவிலிருந்த இந்திய மக்களின் துன்ப துயரங்களையும் மனக் கண்ணால் கண்டுணர்ந்து, அவர்களுக்காகக் கண்ணீர் வடித் தான். பாண்டிச்சேரியில் அடைபட்டுக் கிடந்த பாரதி அங்குள்ள கடற்கரைப் பீயரில் சென்று காற்று வாங்குவது வழக்கம் என்று நாம் படித்திருக்கிறோம் (மகாகவி பாரதியார் சரித்திரம்: வ. ரா). அவ்வாறு காற்று வாங்கும் காலத்தில்தான் 'கரும்புத் தோட்டத்திலே' என்ற கவிதை அவனுக்கு உருவாகி உதயமாகியிருக்க வேண்டும் என நாம் ஊகிக்கலாம். கிழக்குத் திசையிலே எல்லையற்றுப் பரந்து தெரியும் வங்காள விரிகுடாக் கடல், அந்தக் கடலிலிருந்து பொருமிப் பொருமிப் பரபரத்து வீசும் கடற்காற்று ஆகிய வற்றைக் கண்டபோது, அதே கிழக்குத் திக்கில் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் கண்காணாத் தொலைவி லுள்ள பிஜித் தீவில் பாடுபட்டு வரும் இந்திய நாட்டுப்

பெண்களின் நினைவு பாரதிக்கு எழுந்திருக்க வேண்டும். மேலும் அந்தத் திசையிலிருந்து பரபரத்து வீசிவரும் காற்றும், அந்தப் பெண்களின் அழுகுரலையும் பெருமூச்சையும் சுமந்து தானே வந்திருக்கும் என்ற எண்ணமும் பாரதிக்கு எழுந்திருக்க வேண்டும். இந்த நினைவிலும் எண்ணத்திலு மிருந்துதான் அவனது பாட்டு பின்வருமாறு பிறந்ததெனை நாம் கருதலாம்.

நாட்டை நினைப்பாரோ?-எந்த
நாளினிப் போயதைக் காண்பதென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ? அவர்
விம்மி விம்மி விம்மி விம்மி யழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே!—துன்பக்
கேணியிலே எங்கள் பெண்கள் அழுதசொல்
மீட்டும் உரையாயோ?—அவர்
விம்மி யழவும் திறங்கெட்டுப் போயினர்...

இந்த வரிகளில் பாரதியின் மன ஏக்கத்தை—அதாவது, பிழைப்பின் காரணமாக பிஜித்தீவுக்குச் சென்று, அங்கேயே ஆயுள் பரியந்தம் சிறைப்பட்டு, மீண்டுவர இயலாதவாறு பல கொடுமைகளை அனுபவித்து வந்த அடிமைப் பெண்களுக் காக, சுதந்திர தாகத்தின் காரணமாய்ச் சுதந்திரமாகத் திரியும் சுதந்திரத்தைக்கூட இழந்து, பாண்டிச்சேரியிலே பல்லாண்டுக்காலம் அடைபட்டு, துன்பத்திலும் வறுமை யிலும் வாடிப் புழுங்கிய மற்றோர் 'அடிமையின்' மனத்திலே பிறக்கும் ஏக்கத்தை—நாம் காண்கிறோம்.

பாரதியின் 'கரும்புத் தோட்டத்திலே' என்ற கவிதை பிறந்த வரலாறு இதுதான். எனவேதான் இக்கவிதை அன்றும் இன்றும் நமது நெஞ்சை உருக்கும் அமர கவிதை யாக விளங்குகின்றது. மேலும் என்றென்றும் நெஞ்சை உருக்கும் தன்மை கொண்ட இந்தக் கவிதை தமிழில் வேறு சில இலக்கியப் படைப்புக்கள் தோன்றுவதற்கும் மூல காரணமாக இருந்தது என்பதையும் இந்தச் சமயத்தில்

நாம் நினைவூட்டிக் கொள்ளலாம். தமிழகத்தில் சென்ற தலைமுறையின் தேசபக்தி மிகுந்த நாடக நடிகராக விளங்கிய விஸ்வநாத தாஸ் 'கரும்புத் தோட்டத்திலே' என்ற இந்தப் பாடலையும் மேடைகளிற் பாடி வந்தார்; அத்துடன் இலங்கையிலும் மேலைமலைக் காடுகளிலுமுள்ள தேயிலைத் தோட்டங்களில் பாடுபடச் சென்ற தமிழ் மக்களைக் குறித்து, அவர் இதே மெட்டிலும் பாணியிலும் 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற பாட்டை இயற்றிப் பாடிவந்தார் என்றும், அப்பாட்டு அந்தக் காலத்தில் மேடையில் மிகவும் பிரபலமாக இருந்தது என்றும் நாம் அறிய வருகிறோம். மேலும், தமிழில் யதார்த்தவாதச் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடியாக விளங்கிய 'புதுமைப்பித்தன்' இந்த இரு பாடல்களாலும் கவரப் பட்டார் என்பதையும், அவரது 'துன்பக்கேணி' என்ற நெடுங்கதை அந்தக் கவர்ச்சியில் எழுந்த உணர்ச்சிகரமான படைப்புத்தான் என்பதையும் நாம் அறியலாம். பாரதியைப் போல் புதுமைப்பித்தனும் கடல்தாண்டி சென்றவரல்லர். எனினும் திருநெல்வேலிச் சீமையில் வாழ்ந்த அவர், அங்கு இருந்து பஞ்சம் பிழைப்பதற்காக இலங்கைத் தேயிலைத் தோட்டங்களுக்குச் சென்ற மக்களைப் பற்றிய விவரங் களைக் கேள்வி வாயிலாகவே தெரிந்து, தமது அருமையான நெடுங்கதையை உருவாக்கி விட்டார். மேலும் அந்தக் கதைக்கான தலைப்பையும், ''துன்பக் கேணியிலே எங்கள் பெண்கள் அழுங்குரல்'' என்ற பாரதியின் கவிதை வரியில் இருந்தே தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பதிலிருந்து, 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாரதியின் கவிதை புதுமைப் பித்தனின் இதயத்தை எவ்வளவு தூரம் கவர்ந்திருந்தது என்பதை மட்டுமல்லாமல், 'துன்பக் கேணி' என்ற நெடுங் கதையை அவர் எழுதுவதற்கும் அது தூண்டுகோலாய் இருந் திருக்கிறது என்பதையும் நாம் கண்டுணரலாம். 'கரும்புத் தோட்டத்திலே' என்ற கவிதையைப் போலவே, புதுமைப் பித்தனின் 'துன்பக் கேணி' என்ற கதையும் தமிழ் இலக்கியத் துக்குக் கிட்டிய அமர இலக்கியம்தான்.

'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடலின் பிறப்புக்குக் காரணமாக விளங்கிய மேற்கூறிய விவரங்களையெல்லாம் நாம் தெரிந்துணர்ந்து நினைவில் நிறுத்திக் கொண்டால், பாரதியின் இப்பாடலை நன்கு அனுபவிக்க முடியும். அது மட்டுமல்ல,

> கரும்புத் தோட்டத்திலே—ஆ!
> கரும்புத் தோட்டத்திலே!

என்ற தொடக்க வரியிலுள்ள 'ஆ!' என்ற ஒரு சொல், ஓரெழுத்து, நீண்ட நெடுங்காலமாக நெஞ்சை வருத்திக் கொண்டிருந்த ஏக்கத்தையும் வேதனையையும் எவ்வாறு தன்னுள்ளே அர்த்த கர்ப்பத்தோடு சுமந்துநின்று, அவற்றை வெடித்து வெளிப்படுத்துகிறது என்பதையும் நாம் காணலாம். இனி, பாரதியின் 'கரும்புத் தோட்டத்திலே' என்ற கவிதையை முழுவதும் படித்துப் பாருங்கள். இந்த உண்மையை நீங்களே உணர்வீர்கள்.

# "மாயையைப் பழித்தல்": ஒரு விசாரணை

''மாயையைப் பழித்தல்'' என்ற தலைப்பில் மகாகவி பாரதி ஒரு பாடல் பாடியுள்ளான். இந்தப் பாடல் பாரதி பிரசுராலயத்தார் வெளியிட்ட பதிப்புக்களில் 'வேதாந்தப் பாடல்கள்' என்ற தொகுதியிலும், பின்னர் வந்த அரசாங் கப் பதிப்பில் 'தெய்வப் பாடல்கள்' என்ற தொகுதியிலும் இடம் பெற்றுள்ளது. இதனை அனுசரித்தே பின்னர் வந்த பதிப்புக்களும் இப்பாடலை 'வேதாந்தப் பாடல்கள்' அல்லது 'தெய்வப் பாடல்கள்' என்ற பகுதியிலேயே வெளியிட்டு வந்துள்ளன.

இந்தப் பாடல் மாயாவாதத்தைக் கண்டிக்கும் தத்துவப் பாடல் என்ற கருத்தே பொதுவாக நமது மத்தியில் நிலவி வருகிறது. எனவே இந்தப் பாடல் பாரதியின் பாடற் பிரிவுகளில் 'வேதாந்தப் பாடல்கள்' என்ற பகுதியில் இடம் பெற்றது சரிதான் என்ற எண்ணமும் மறுசிந்தனைக்கிட மின்றி நம்மிடையே இருந்து வருகிறது. உண்மையில் இந்தப் பாடல் வேதாந்தப் பாடல்தானா என்பதே இக்கட்டுரையில் எழுப்பப்படும் விசாரணை.

இந்த விசாரணை எப்படிப் பிறந்தது? ஏன் பிறந்தது?

## முதற்பதிப்பு எழுப்பிய கேள்விகள்

இப்பாடல் முதன்முதல் எந்தப் பதிப்பில் காணப்பட்டது என்ற விவரத்தைப் பாரதி பிரசுராலயத்தின் பதிப்பாசிரியக் குறிப்பு எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் பாரதி முதன் முதலில் புத்தக வடிவில் வெளியிட்ட 'ஸ்வதேச கீதங்கள்' என்ற அவனது முதல் பாடல் தொகுதியின் முதற்பதிப்புப் பிரதி எனக்குக் கிட்டியது. இப்பதிப்பு 1908ம் ஆண்டு ஜனுவரி 10 அன்று பாரதி எழுதிய முகவுரையுடன் வெளி வந்ததாகும். இந்தப் பதிப்பிலேயே மேற்குறித்த 'மாயை யைப் பழித்தல்' என்ற பாடல் முதன்முறையாக இடம் பெற்றுள்ளது. இந்தப் பதிப்புக்கு முன்னர் ஒருவேளை இப் பாடல் பாரதியின் 'இந்தியா' பத்திரிகையில் வெளிவந்திருக் கலாம். அது பற்றிய தகவல் நமக்குத் தெரியவில்லை.

மேற்குறித்த 1908ம் ஆண்டு ஜனுவரியில் வெளிவந்த ஸ்வதேச கீதங்கள்' என்ற தொகுப்பில் இடம் பெற்றிருந்த பாடல்களைப் பற்றிப் பாரதி பிரசுராலயப் பதிப்பாசிரியக் குறிப்பு பட்டியல் தருகிறது. எனினும் அந்தப் பட்டியலில் 'மாயையைப் பழித்தல்' பற்றிய பேச்சே இல்லை. பின்னர் வெளிவந்த அரசாங்கப் பதிப்பின் குறிப்பிலும் அப்படியே. அரசாங்கப் பதிப்பு பெரும்பாலும் பாரதி பிரசுராலயக் குறிப்புக்களின் துணை கொண்டே உருவாக்கப்பட்டதால், அதிலும் இப்பாடல் பற்றிய குறிப்பு விடுபட்டுப் போனதில் வியப்பில்லை. திரு. பெ. தூரன் தொகுத்து வெளியிட்டுள்ள 'பாரதி தமிழ்' என்ற நூலிலும் 1908ம் ஆண்டுப் பதிப்பில் இடம் பெற்ற பாடல்கள் பற்றிய பட்டியல் உண்டு. எனினும் அந்தப் பட்டியலிலும் 'மாயையைப் பழித்தல்' பற்றிய பேச்சில்லை. ஒருவேளை தூரன் அவர்களும் முதற்பதிப்பைக் காணும் வாய்ப்பைப் பெறாமலே பாரதி பிரசுராலயம் தந்த பட்டியலின் பலத்தில் தமது பட்டியலைத் தந்திருக்கலாம்.

பாரதி பிரசுராலயத்தார் இந்தப் பாடல் 'ஸ்வதேச தங்கள்' முதற்பதிப்பில் இடம் பெற்றிருந்தது என்பதைக்

குறிப்பிடாதது மட்டுமல்லாமல் இதனை அவர்கள் பாரதியின் வேதாந்தப் பாடல்களில் ஒன்றாகச் சேர்த்தும் விட்டார்கள். இந்தப் பாடல் இந்திய தத்துவ தரிசனத்தில் தென்படும் மாயாவாதத்தைப் பழிப்பதுபோல் தோற்றுவதால், இதனை வேதாந்தப் பாடல்களோடு சேர்ப்பதே பொருத்தம் என்று அவர்கள் கருதியிருக்கலாம். மேலும் இந்தப் பாடல் 'ஸ்வதேச கீதங்க'ளில் இடம் பெற்றிருந்தாலும், இதனைச் சுதேச கீதமாகக் கருதுவதற்கில்லை எனவும், எனவே இது மேற்குறித்த 1908-ம் ஆண்டுப் பதிப்பில் 'தவறிப் போய்' இடம் பெற்று விட்ட பாடல்தான் எனவும் அவர்கள் முடிவு கட்டி இதனைத் தேசிய கீதப் பகுதியிலிருந்து விலக்கியிருக்கலாம். எவ்வாறாயினும் இப்பாடல் முதன் முதலில் வெளிவந்த 1908-ம் ஆண்டுப் பதிப்பில் இடம் பெற்றிருந்த விவரத்தைக் கூட அவர்கள் குறிப்பிடாது போனது பதிப்பாசிரிய தர்மத்துக்குப் பொருந்தாத தவறுதான்.

பாரதியின் இப் பாடலைப் பாரதி பிரசுராலயத்தார் 'வேதாந்தப் பாடல்கள்' என்ற பிரிவிற் சேர்த்ததற்கு மேற்கூறியவாறு நாம் சமாதானம் கண்டாலும் 1908ம் ஆண்டின் 'ஸ்வதேசகீதங்கள்' என்ற பதிப்பும், அதில் இடம் பெற்றுள்ள 'மாயையைப் பழித்தல்' என்ற பாடலும் நம்மில் எழுப்புகின்ற கேள்விகளும் ஐயப்பாடுகளும் பலப்பல. பாரதி தான் வெளியிட்ட முதல் நூலான 'ஸ்வதேச கீதங்க'ளில் தேசிய இயக்கத்தோடு சம்பந்தப்படாத இந்தப் பாடலை இடம் தவறிப் போய் 'பத்தோடு பதினொன்றாக'த் தான் சேர்த்து விட்டானா? அல்லது இந்தப் பாடலை அவன் அத்தொகுதியில் சேர்த்ததில் ஏதேனும் அர்த்தம் உண்டா? உண்டெனில் இப்பாடலில் தேசிய இயக்கம்சம்பந்தமான பிரச்சினை எதுவும் பொதிந்திருக்கிறதா? அவ்வாறாயின் அந்தப் பிரச்சினை என்ன? அத்தகைய பிரச்சினை ஒன்று இப்பாடலில் இருக்குமானால், இதனை எப்படி தத்துவ உலகில் காணப்படும் மாயாவாதத்தைக் கண்டிக்கும் சுத்த சுயம்புவான வேதாந்

தப் பாடலாகக் கருத முடியும்? இப்பாடலில் மாயை என்று பாரதி பழித்துக் கூறும் விஷயம் என்ன? அது தத்துவ சம்பந்தமான மாயையா? அல்லது தேசிய சம்பந்தமான மாயையா?...

'மாயையைப் பழித்தல்' என்ற பாடலை ஊன்றிப் படிக்கப் படிக்க இத்தகைய கேள்விகள் என்னுள் வலுப்பெற்று விடை காணும் வேட்கையைத் தூண்டிக் கொண்டேயிருந்தன. தத்துவ சம்பந்தமான மாயாவாதத்தைப் பழித்து, பாரதி "பொய்யோ? மெய்யோ?" என்ற தலைப்பில் தனியாகவே ஒரு பாடல் எழுதியுள்ளான் என்பதை நாமறிவோம். ஆனால் 'மாயையைப் பழித்தல்' என்ற பாடலில் கூறப் பட்டுள்ள கருத்துக்களைப் பார்க்கும்போது இதில் குறிப்பிட்டுள்ள மாயை, தத்துவ சம்பந்தமான மாயை அல்ல என்று தெளிவாகத் தெரிந்தது. எனினும் அந்த மாயை என்பது என்ன என்ற உண்மை புலப்படாமல் மாயமாகத்தான் இருந்து வந்தது. சிறிது காலத்துக்கு முன்னர் அந்த 'மாயை' விலகி எனக்கு உண்மை தெளிவாயிற்று. அந்த உண்மை என்ன?

## பாலரின் சென்னை வருகை

விபின சந்திர பாலர் (Bepin Chandra Pal) என்பவரைப் பற்றித் தேசிய இயக்கத்தின் சரித்திரம் அறிந்தவர்களும், அதில் அக்கறை கொண்டவர்களும், நன்கறிவார்கள். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய தேசிய இயக்கத்தில் தீவிர வாதம் மேலோங்கிய போது, விபின சந்திர பாலர் அவ்வியக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். லால்-பால்-பால் (Lal-Bal-Pal) என்று பஞ்சாப் மாநிலத்தின் லாலா லஜபதி ராயையும், மகாராஷ்டிரத்தின் பால கங்காதர திலகரையும், வங்காளத்தைச் சேர்ந்த விபின சந்திர பாலரையும் இந்தத் தீவிர வாத தேசிய இயக்கத்

தின் மும்மூர்த்திகளாகச் சரித்திராசிரியர்கள் குறிப்பிடுவார்கள். தீவிர வாதத் தேச பக்தனான பாரதிக்கும் விபின சந்திரபாலரின் மீது மிகுந்த பக்தி இருந்தது. எனவேதான் அவன் தனது 'பாரத தேவியின் அடிமை' என்ற பாட்டில்,

காலர் முன்னிற்பினும் மெய்தவறா எங்கள்
பாலர் தமக்கொத்த அடிமைக்காரன்

(தேசிய கீதங்கள்)

என்று தன்னை அவரது தொண்டனாகவே கூறிக் கொள்கிறான். இவரது பெயரில் அன்று 'வந்தே மாதரம்' என்ற வங்கப் பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. அதன் ஆசிரியப் பொறுப்பைப் பெயர் குறிப்பிடாமல் ஏற்று, அதில் பெரிதும் எழுதி வந்தவர் அரவிந்தரே. எனவே ஆங்கில அரசாங்கம் அரவிந்தரின் மீது வழக்குத் தொடர்ந்து, அதற்குப் போலீஸார் தரப்பில் சாட்சி சொல்ல விபின சந்திர பாலருக்கு சம்மன் அனுப்பியது. ஆனால் பாலரோ போலீஸ் தரப்பில் சாட்சி சொல்ல மறுத்து விட்டார்; இதனால் கோர்ட்டை அவமதித்த குற்றத்துக்காக அவருக்கு அரசாங்கம் ஆறு மாதச் சிறைத் தண்டனை கொடுத்தது. இதனைக் கருத்தில் கொண்டுதான் பாரதி 'காலர் முன்னிற்பினும் மெய்தவறா எங்கள் பாலர்' என்று பாராட்டிப் பேசுகிறான். இவ்வாறு இவர் சிறை சென்று, சிறை மீண்டு வந்த தினத்தைக் கொண்டாட, சிதம்பரம் பிள்ளையும் சுப்ரமணிய சிவாவும் ஏற்பாடு செய்த காலத்தில்தான் இருவரும் கைது செய்யப்பட்டார்கள். இதன் விளைவாகவே நெல்லை மாவட்டத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி, தச்சநல்லூர் ஆகிய ஊர்களில் வெள்ளையருக்கெதிராகப் பெருங் கலகங்கள் வெடித்தன. இதன் பின்னரே சிதம்பரம் பிள்ளையும் சிவாவும் நெடுங்காலச் சிறைத்தண்டனை பெற்றார்கள். தென்னாட்டில் தீவிரவாதத் தேசிய இயக்கம் நெருப்புப்

போல் பற்றி, விரிவும் வேகமும் பெறுவதற்கு, விபின சந்திர பாலரின் சென்னை விஜயமும், அவரது சென்னைப் பிரசங்கங் களும் பெரிதும் உதவின என்பது சரித்திராசிரியர்களின் கருத்து.

விபின சந்திர பாலரைச் சென்னைக்கு அழைத்து வந்து பல சொற்பொழிவுகள் ஆற்ற வைத்த புண்ணியமும் பொறுப்பும் பாரதிக்குத்தான் உண்டு. அன்று சென்னை யிலிருந்து தீவிரவாதத் தேசபக்த இளைஞர்களின் சார்பில் பாரதி ஆந்திர மாநிலத்திலுள்ள ராஜமகேந்திரபுரத்துக்குச் சென்று அங்கு சொற்பொழிவாற்ற வந்திருந்த பாலரைச் சந்தித்து அவரைச் சென்னைக்கு அழைத்து வந்தான். அவ் வாறு சென்னை வந்த பாலர், 1907-ம் ஆண்டு மே மாதத் தொடக்கத்தில் திலகர் கட்டம் எனப்படும் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நாள் தவறாமல் சொற் பொழிவாற்றினார். அவர் ஆறு பிரசங்கங்கள் செய்து முடித்து இறுதியில் 'வந்தேமாதரம்' என்ற தலைப்பில் மே மாதம் 10-ம் தேதி சொற்பொழிவாற்றவிருந்த சமயத்தில் லாலாலஜபதிராய் நாடு கடத்தப்பட்டார் என்ற திடுக்கிடும் செய்தி வந்த காரணத்தால் அவர் தம் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு உடனேயே வங்கத்துக்குத் திரும்பிச் சென்றார். அங்கு சென்ற இடத்தில்தான் அவரும் சிறைத் தண்டனை பெற்றார். விபின சந்திர பாலரின் பிரசித்தி பெற்ற சென்னைப் பிரசங்கங்கள்தான் பாரதி தனது பாட்டில் குறிப்பிடும் 'மாயை' என்பது என்ன என்பதைப் புரிந்து கொள்ள நமக்குத் துணை செய்கின்றன.

## எது மாயை?

அன்று இந்தியாவில் தேசிய இயக்கம் தீவிரமடைந்த தைக் கண்டு ஆத்திரமடைந்த லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை "இங்கிலாந்து இந்தியாவை வாளினாலேயே வென்றது. வாளினாலேயே இந்தியாவை ஆளவும் செய்யும்" என்று ஆணவத்தோடு எழுதியது. விபின சந்திர பாலர் "புதிய

இயக்கம்'' (The New Movement) என்ற தலைப்பில் ஆற்றிய தமது முதற் சொற்பொழிவிலேயே, 'டைம்ஸ்' பத்திரிகையின் கூற்றை மறுத்துப் பின்வருமாறு பேசினார்:

"...இந்த இந்தியப் பிரச்சினை என்பதுதான் என்ன? இது அரசில் பிரசினையா? இல்லை, பொருளாதார பிரச்சினையா? இல்லை, நிர்வாகப் பிரச்சினையா? அவ்வாறெல்லாம் நான் ஏற்க மறுக்கிறேன். இது ஒரு எளிமையான **மனோ தத்துவப் பிரச்சினை.** நான் சொல்வது உங்களுக்குப் புரியவில்லை என்று நினைக்கிறேன். இந்த நாட்டில் எவ்வளவு மக்கள் இருக்கிறார்கள்? முப்பது கோடிக்கும் மேல். இந்த மக்களை ஆளக்கூடியவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? வியாபாரிகள், அதிகாரிகளாயில்லாதோர் ஆகியோரையும் சேர்த்து மூன்று லட்சத்துக்கும் குறைவு. நம்மை ஆள்பவரின் தாயகமான சின்னஞ்சிறு தீவான இங்கிலாந்தில் இருப்பது போல் குறுகிய இடத்தில் குவிக்கப் பட்டிராமல் அந்தத் தீவைக் காட்டிலும் பல மடங்கு பெரியதாய் ஒரு கண்டத்தில் பரவிக் கிடக்கும் நாட்டில் பரவலாக அமைந்து, முப்பதுகோடி மக்களை ஆளும் இந்த அரசாங்கத்தைப் பற்றி நீங்கள் எப்படி விளக்கம் தர முடியும்? இப்போது இந்தப் பிரசினையை, இந்த வலுவான பிரச்சினையை, அதாவது ஒரு பெருங்கண்டத்தின் பகுதியான இந்நாட்டை, நாட்டிலுள்ள முப்பது கோடிக்கும் மேற்பட்ட மக்களை, மூன்று லட்சத்துக்கும் குறைவான அன்னியர்களைக் கொண்டு ஆளும் இந்த அரசாங்கத்தை நீங்களே கண்டறிய முடியுமென்று நினைக்கிறேன். இங்கிலாந்து இந்தியாவை ஆயுத பலத்தால் ஆளவில்லை. அது அசாத்தியம்; முற்றிலும் அசாத்தியம். 'டைம்ஸ்' பத்திரிகை தனது வாளை நம்மிடம் காட்டக்கூடும். அவர்கள் இந்தியா வாளினாலேயே ஆளப்படுமென்றும், வாளினாலேயே கட்டிக் காக்கப்படுமென்றும் பிரகடனப்படுத்தலாம். ஆனால் அது வாளினால் வெல்லப்படவில்லை. பிரிட்டிஷாரின் துப்பாக்கிச் சனியன்கள் இந்தியாவை வெல்லவில்லை. அது வாளினால் வெல்லப்பட்டதென்றால், அதுவும் பிரிட்டிஷாருக்காக

இந்தியாவை வென்று கொடுத்த இந்தியச் சிப்பாயின் வாள்தான். மேலும் வாள் பலத்தாலும் அது அடக்கி வைக்கப்பட்டிருக்கவில்லை.'' (Speeches of Sri. Bepin Chandra Pal (Delivered at Madras) pub: The National Trading Company, 1907, பக். 18-19).

இவ்வாறு கூறிவிட்டு ஆயுத பலத்தால் மட்டும் யாரும் வெற்றி பெற்றுவிட முடியாது என்பதற்கு உதாரணமாக தைத்ரேய உபநிஷத்திலிருந்து ஒரு கதையைக் கூறி விளக்கிய பின் அவர் மேலும் பின்வருமாறு பேசினார்:

''முப்படி கோடி இந்திய மக்களும் தங்கள் பலத்தின் மீதன்றி, தங்கள் மனோவுறுதியின்மீது ஒருமுறை கருத்தைச் செலுத்தினால், அந்த மனோவுறுதியை டில்லி தர்பாருக்கு அருகிற் சென்று காட்டினால், இந்த விசித்திரமான சக்தி எதுவென அவர்கள் கேட்டால், அப்போதுதான் இந்திய நாட்டை வென்ற சக்தி இந்த யக்ஷனின் சக்திதான் என்பதை அவர்கள் அறிவார்கள். இந்தியாவை ஆள்கின்ற சக்தி இந்த யக்ஷனின் சக்திதான். தமக்குள்ள கர்வத்தால், அறியாமையால், பிழையால் அவர்கள் அதைக் காணவில்லை. அவர்களெல்லாம் புராணத்தில் வரும் வடிவத்தைப் போன்று கண்ணிருந்தும் காணாதவர்கள்; காதிருந்தும் கேட்காதவர்கள்; அறிவிருந்தும் அறியாதவர்கள்—அதாவது தம்மைச் சுற்றியுள்ள நிலைமையின் யதார்த்தங்களைக் கண்டுணரத் தெரியாத அறிவற்றவர்கள். இந்தியாவை ஆள்வது யார்? இந்தியாவை நாம்தாம் ஆள்கிறோம்? (எப்படி, எப்படி என்ற குரல்கள்) எந்த ஜில்லாவுக்கும் போய்ப் பாருங்கள். ஒரு ஜில்லாவில் எத்தனை ஆங்கிலேயர்கள் இருக்கிறார்கள்? சில சமயம் இரண்டு, சில சமயம் மூன்று, சில சமயம் நான்கு. எப்படிப் போனாலும் எங்கும் அரை டஜன் பேருக்கு மேல் இருக்க மாட்டார்கள். அங்குள்ள மாஜிஸ்ட்ரேட்டுகள், போலீஸ் சூப்பிரிண்டெண்டுகள், ஜட்ஜ் ஆகியோர் யார் சொற்படி ஆடுகிறார்கள்? போலீஸ் சூப்பரிண்டெண்ட் இன்ஸ்பெக்டரின் சொற்படி நடக்கிறார். இன்ஸ்பெக்டரோ

உங்கள் மனிதர். மாஜிஸ்ட்ரேட், ஹுஸூர் கிரஸ்தார் சொற்படி நடக்கிறார். ஹுஸூர் சிரஸ்தாரோ உங்கள் மனிதர். ஜட்ஜ்தான் வழக்கைத் தீர்க்கிறார். ஆனால் அவரோ பெரும்பாலும் இறக்குமதியான தமது சொந்த அறிவொளியைக் காட்டிலும் உள்நாட்டு அதிகாரிகள் வக்கீல்கள் ஆகியோர் காட்டும் அறிவொளியைக் கொண்டே வழக்குத் தீர்க்கிறார். நான் கேட்கிறேன் நாட்டின் அமைதியை யார் பாதுகாக்கிறார்கள்? அதுவும் எனது போலீஸ்காரன்; எனது சௌக்கிதார்; எனது ஏட்டு; எனது சப் இன்ஸ்பெக்டர்தான். அவர்கள் இந்துக்கள், முஸ்லிம்கள் அல்லது கிறிஸ்தவர்கள். அவர்கள் எல்லாம் கறுப்பாகவோ, பழுப்பாகவோ இருக்கலாம்; எனினும் என்றும் அவர்கள் வெள்ளையர்களல்ல. இவர்களோ உச்சியில் ஏறி யமர்ந்து கொண்டு, கொழுத்த சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக் கிறார்கள். நாமோ மிகவும் தொல்லையான, மிகவும் கடின மான, மிகவும் சிரமமான, சிக்கலான வேலைகளைச் செய்து வருகிறோம். நிர்வாக யந்திரத்திலிருந்து நாம்மட்டும் விலகிக் கொண்டு விட்டால், அந்த யந்திரம் உடனே ஸ்தம் பித்து நின்று விடும்! (**நிச்சயம் நிச்சயம்** என்ற குரல்கள்). அவ்வாறாயின் என் அருமை நண்பர்களே! இதன் ரகசியம் என்ன? இது என்ன மாய வசியமா? மகேந்திர ஜாலமா? மந்திர சக்தியா? இது என்ன? (**வறுமை** என்று ஒரு குரல்). அது முற்றிலும் வேறு விஷயம். **இது மாய வசியம்தான். இது மாயை, மாயை, மாயையேதான்**. ஆங்கி லேயராட்சியின் இந்த மாயத் தன்மையைக் கண்டறிவதில்தான் புதிய இயக்கத்தின் பலம் அடங்கியிருக்கிறது. நாம் வேண்டுவது இதுதான்: இந்த மாயையைப் போக்க, இந்த மயக்கத்தை விலக்க, இந்த மாய வசியத்தை அழிக்கத்தான் விரும்பு கிறோம். நாம் முப்பது கோடியாக இருந்தாலும், நாமெல் லாம் பலவீனமானவர்கள் என்ற நம்பிக்கைக்கு மாயவசியத் தால் இரையாகி விட்டோம். இந்த விஷயமே நம் காதில் உருவேற்றப்பட்டிருக்கிறது; எத்தனை ஆண்டு காலமாய்

உருவேற்றப் பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள்!...'' (அதேநூல், பக். 20-21).

தன் பலம் அறியாத யானை மாவுத்தனுக்கு அடங்கி நடப்பதுபோல், பெரும்பான்மையான மக்கள் தம்மைத் தாமே பலவீனர்களாகக் கருதிக்கொண்டு, சிறுபான்மை யோரின் ஆட்சிக்கு அடங்கிக் கிடக்கும் சிறுமையைத்தான் பாலர் இங்கு நம்மீது படர்ந்திருந்த **மாயை** என்று குறிப் பிடுகிறார். இந்த மாயையைப் பற்றிப் பாலர் குறிப்பிட்டு விட்டு, இந்தியாவை ஆங்கிலேயர்கள் எப்படி வஞ்சனை யாலும், பிரித்தாளும் சூழ்ச்சியாலும், மித்திர பேதத்தாலும் அடிமை கொண்டார்கள் என்பதற்குச் சில உதாரணங்கள் காட்டிய பின், அவர் மேலும் பின்வருமாறு பேசினார்:

''இப்படித்தான் அவர்கள் ஆங்கிலேய சாம்ராஜ்யத்தை நிர்வகிக்கிறார்கள். ஆனால் நாம் அதனை அறியவில்லை... என் அருமை நண்பர்களே! நாம் ஏன் இன்று பலவீனமாய் இருக்கிறோம் என்பதைப் பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பார்த் தால், இந்த பலவீனம் யதார்த்தமானதல்ல, மாயமானதே என்பதைக் காண்போம். நாம் ஒற்றுமையிழந்து இருக்கிறோ மென்றால், அந்த ஒற்றுமையின்மையும் இந்த மாய வசியத் தால் ஏற்பட்டதுதான்!'' (பக். 22)

### 'மெயில்' பத்திரிகைக்குச் சாட்டையடி

விபின சந்திர பாலர் சென்னையில் பேசிய இந்த முதற் பேச்சைக் குறித்து, ஆங்கிலேயச் சார்பான அன்றைய சென்னை 'மெயில்' பத்திரிகை கேலியாக விமர்சனம் செய்து எழுதிற்று. இதனை அறிய வந்த பாலர் ''பகிஷ் காரம்'' (Boycott) என்ற தலைப்பில் ஆற்றிய தமது நான் காவது பிரசங்கத்தின் போதும் பின்வருமாறு பேசினார்:

'முன்னொரு நாள்' இரவில் நான் பேசிய பேச்சில் நாம் தான் நாட்டை ஆள்பவர்கள் என்றும், எனினும் நாட்டின் அரசாங்கத்தில் நமக்கு எவ்விதப் பங்கு இல்லை யென்றும் கூறியதில், ஒரு விசித்திரமான முரண்பாட்டைக்

காண்கிறது உள்ளூர் ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகை. அதன் ஆசிரியருக்குக் கீழ்நாட்டு அறிவுக் கூர்மையின் நுண்மையை உணர்ந்து கொள்ள முடியவில்லை. நான் கூறிய இரண்டு விஷயங்களுமே உண்மையாக இருக்க முடியும் என்பது அவருக்குப் புரியவில்லை. நாம் ஆளவும் செய்யலாம்; அதே சமயம் ஆளாமலும் இருக்கலாம் (சிரிப்பு). அவருக்கு நமது தத்தாத்ரேயத் தத்துவத்தின் மர்மம் தெரியாதென்றே நினைக்கிறேன். மும்மூர்த்திகள் இருக்கிறார்கள்; எனினும் இந்த மூவரும் ஒருவர்தான்...இருந்தாலும் இந்தத் தத்தாத் ரேயத்தத்துவம் முட்டாள் தனமானது என்று எந்த இந்திய னாவது சொல்லியிருக்கிறானா?... நமக்கு இவையெல்லாம் புரிகிறது. ஆனால் 'மெயி' லுக்குப் புரியவில்லை. நாம் எப்படி நம்மை ஆள்கிறோம்! அதே சமயம் எப்படி ஆளாமலும் இருக்கிறோம்? இந்த **எப்படி** என்பது வகுவில் விளங்கக் கூடியதே. நாம் தான் நாட்டை ஆள்கிறோம்; அதே சமயம் நாம்தான் நாட்டை ஆள்கிறோம் என்பதை நாம் அறியவில்லை. **மாயை, மாயை என்பதெல்லாம் இதுதான்; இந்த அறிவின்மைதான் மாயை.** இந்த மாயையை விலக்கு வதால் புதிய தன்மை எதுவும் உண்டாகிவிடப் போவதில்லை. அது பழைய தன்மைக்குப் புதிய அர்த்தம் கொடுக்கிறது. அவ்வளவுதான். ஆனால் நாம்தான் நாட்டை ஆள்கிறோம் என்ற விஷயத்தில் புதிய அர்த்தத்தைக் காண்பதுதான், **சுய** ராஜ்யத்துக்கும், **பர** ராஜ்யத்துக்குமுள்ள வேற்றுமையைக் காட்ட முடியும். இந்தப் பகிஷ்கார இயக்கத்தின் மூலம் நாம் மக்களிடத்தில் ஒரு பக்கம் **பர** ராஜ்யத்தைப் பற்றிய உணர்வையும், மறுபக்கத்தில் **சுய** ராஜ்யத்தைப் பற்றிய வேட்கையையும் உண்டாக்க விரும்புகிறோம். அரசாங்கத் தின் எதேச்சாதிகாரத்துக்கெதிராக, முற்றிலும் சட்டபூர்வ மான வரம்புகளுக்குட்பட்டு, மக்கள் உறுதியோடு நிற்கத் துணிவதை உறுதிப்படுத்துவதன் மூலமே, நம்மீது படர்ந் திருக்கும் **இந்த மாயையைக் கொல்ல** நம்மால் முடியும். அரசியல் ரீதியாக, பகிஷ்காரத்தின் குறிக்கோள் அது தான்...'' (அதே நூல், பக். 99-100).

## பாடலுக்கு வருவோம்

நமக்கு நாமே அடிமைப் புத்திக்கு இரையாகி, அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம் என்ற கதையில், ஆங்கிலேயர்களிடமே அடியாட்களாகப் பணியேற்று, நமது நாட்டை அன்னியனுக்காக நாமே ஆண்ட சிறுமையையும், அந்தச் சிறுமையை உணராதிருந்த அறிவின்மையையும் தான் பாலர் இங்கு மாயை என்று சுட்டிக் காட்டுகிறார். இந்த அறிவின்மையை, இந்த மாயையைக் கொல்லும் துணிவும் உறுதியும் நமக்கு வரவேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டிப் பேசியுள்ளார். மேற்கண்ட பேச்சுப் பகுதிகளைக் கருத்தில் கொண்டு நாம் பாரதியின் 'மாயை யைப் பழித்தல்' என்ற பாடலைப் படித்துப் பார்த்தால்,

உண்மை யறிந்தவர் உன்னைக் கணிப்பரோ
மாயையே!—மனத்
திண்மை யுள்ளாரை நீ செய்வதும்
ஒன்றுண்டோ மாயையே!

என்னைக் கெடுப்பதற்கெண்ண முற்றாய்
கெட்ட மாயையே!—நான்
உன்னைக் கெடுப்ப துறுதி யென்
றேயுணர் மாயையே!—

என்னிச்சை கொண்டுனை யெற்றிவிட
வல்லேன் மாயையே!—இனி
உன்னிச்சை கொண்டெனக் கொன்றும்
வராது காண் மாயையே!

என்ற வரிகளுக்குத் தேசியத் தன்மை கொண்ட புதிய அர்த்த பாவம் புலப்படுவதை நாம் உணரலாம்.

இன்னும் பார்ப்போம்:

மேற்கூறிய பலவீனத்தைப் பற்றி மேலும் பேசுகையில், விபின சந்திர பாலர் தமது முதற் பேச்சிலேயே பின்வருமாறு பேசினார்:

"'நாம் ஒற்றுமையிழந்து கிடப்பதாக நம்மிடம் சொல்லப் பட்டது; நாமும் அதை நம்பினோம். நாம் பலவீனமாயிருப் பதாக நம்மிடம் கூறப்பட்டது; நாமும் அதனை நம்பியிருந் தோம். நாம் அறிவிலிகள் என்றும், நமக்கு அரசியல் புரியாது என்றும் நம்மிடம் கூறப்பட்டது. நாமும் அதனை நம்பிவிட்டோம். இந்த நம்பிக்கைதான் நமது பலவீனத்துக் கெல்லாம் காரணம். இந்தக் காரணம் ஒரு மாய வசியக் காரணம். இது மந்திரத்தால், **மாயையினால்** தூண்டப் பட்டதாகும். இந்தியாவிலுள்ள இன்றைய **அரசாட்சியின் இந்த மாயைத் தன்மையைக்** கண்டுணர்வதில்தான் இந்தப் புதிய இயக்கத்தின் அடிப்படை இருக்கிறது. எனவே இந்தியாவின் விமோசனம் முதன்முதலில் சரியான அறிவு விசாலத்தின் மூலமே வரவேண்டும் என்று இவ்வியக்கம் பிரகடனப்படுத்துகிறது. சுயம்புவான அறிவின் மூலமே—அது வேதாந்தத் துறையாயினும் சரி, **அரசியல் துறையா யினும்** சரி—அத்தகைய அறிவின் மூலமே மாயையை விலக்க முடியும். எனவேதான் நாம் மக்களின் பலத்தை அவர்களுக்கே எடுத்துச் சொல்கிறோம். எனவேதான் நமது லட்சியத்தை நாம் கூரையின்மீது ஏறிக்கொண்டு கூறு கிறோம். எனவேதான் நமது பிரசாரத்தை நாம் ஒன்றும் மூடி மறைக்கவில்லை. ஏனெனில், அகற்றப்பட வேண்டியது இதுதான்; மக்களிடம் தென்படும் அனாதரவான உணர்ச்சி தான். நாம் எதிர்த்துப் போரிட வேண்டியது, இந்தப் பரிதாபம்தான்; தேசத்தில் கொல்லப்பட வேண்டியதும் இந்தப் பரிதாபம்தான். நீங்களும் நானும் இப்போது அறிய வேண்டிய செய்தி, பலம்தான். நீங்களும் நானும் இப்போது அறிய வேண்டியது நமது மனோசங்கற்பங்களைத் தன்னதாக்கக் கூடிய நமது அறிவையும், பண்பாட்டையும், உணர்ச்சிகளையும் விரைவுபடுத்தக் கூடிய அத்தகையதோர்

லட்சியம்தான். அத்தகைய லட்சியம்தான் இந்த **மாயைத் தளையை வெட்டியெறிய** நம்மையெல்லாம் ஒன்றுபட்ட உறுதியோடு வழிநடத்திச் செல்லும்; நம்மிடம் எதிர்காலம் இயல்பாகவே எதிர்பார்க்கக்கூடிய தியாகங்களுக்கும், அத் தகைய லட்சியம்தான் நம்மைத் தயார்ப் படுத்தும்...'' (பக். 23-24).

இவ்வாறு நாட்டு மக்களிடையே நிலவிய ஒற்றுமை யின்மை, பலவீனம் ஆகியவற்றுக்குக் காரணம் நாட்டு மக்களைப் பீடித்திருந்த மாயைதான் என்றும், அந்த மாயைத் தளையை வெட்டியெறிய உயர்ந்த லட்சியமும், உறுதிப்பாடும், தியாகச் சித்தமும் வேண்டும் என்றும் பாலர் வற்புறுத்தி யுள்ளார். இந்தக் கருத்துக்களை மனத்தில் கொண்டு மேற் கூறிய பாரதியின் பாடல் வரிகளையும்.

இருமை அழிந்தபின் எங்கிருப்பாய்
அற்ப மாயையே!-தெளிந்
தொருமை கண்டார் முன்னம் ஓடாது
நிற்பையோ மாயையே!

யார்க்கும் குடியல்லேன் யானென்ப
தோர்ந்தனன் மாயையே!—உன்றன்
போர்க்கஞ்சுவேனோ? பொடியாக்குவேன்
உன்னை மாயையே!

என்ற வரிகளையும் படித்தால், பாரதி அந்த மாயைத் தளையை வெட்டியெறிய ஒற்றுமையை வலியுறுத்துவதோடு லட்சிய உறுதியையும் பெற வேண்டும் என்று எப்படி வற்புறுத்துகிறான் என்பதை நாம் உணரலாம்.

இத்தகைய உறுதியை வலியுறுத்துவதற்கோர் உதாரண மாக, நாடு எப்படிப்பட்ட தியாகங்களை எதிர்நோக்குகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக, விபினசந்திர பாலர் தமது

"சுயராஜ்யம்; அதன் வழி வகைகள்": (Swaraj: Its Ways and Means) என்ற தமது மூன்றாவது பிரசங்கத்தில், ஆங்கிலேயரின் அடக்குமுறையையும் அதனை எதிர்த்து அஸ்வினி குமார தத்தரின் தலைமையில் வங்கத்து இளைஞர்கள் நடத்திய பகிஷ்கார இயக்கத்தையும் பற்றிப் பின்வருமாறு பேசினார்:

"ஆட்சி புரியும் சக்தியின் மூச்சுக் காற்றின் முன்னால் வங்காள மக்கள் எந்த ஒரு மனிதனைச் சார்ந்து நின்றார்களோ, எந்த ஒரு மனிதனை எதிர்நோக்கி நின்றார்களோ, அந்த மனிதன் ஒரு துரும்புக்குச் சமானம் என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியம் சர் ஃபுல்லருக்கு ஏற்பட்டது. அதைத்தான் அவர் காட்ட விரும்பினார். அதனால்தான் சாத்வீகமான மக்களின் மீது கூர்க்காப் படைகள் ஏவி விடப்பட்டன. ...ஆனால் இதன்பின் என்ன நடந்தது? கூர்க்காப் படையின் தடிகளால் பாரிசால் மக்களின் உறுதியைக் குலைக்க அரசாங்கம் எண்ணியது. ஆனால் தேசமோ உறுதி குலையவில்லை. பின்னர் பாரிசாலில் நடந்த மகாநாட்டின் போதும் அவர்கள் இதே கதையை நடத்தினார்கள். வங்காளத் தலைவர்களின் ஏலாத்தன்மையை எடுத்துக் காட்டிவிட வேண்டுமென்று அவர்கள் முயன்றார்கள். ஆனால் என்ன நடந்தது? அவர்கள் ஜனங்களிடத்திலே ஒரு சக்தி இருப்பதைக் கண்டார்கள்; அத்தகைய சக்தியொன்று இருக்கக் கூடும் என்று அவர்கள் என்றும் கனவுகூடக் கண்டதில்லை. நாம் அவர்களைத் திருப்பி யடிக்கவில்லை. அவர்களுக்கு நாம் எந்தத் துன்பமும் தரக் கருதவில்லை. ஆனால் ஒரு மூர்க்க வெறிக்குப் பதிலளிப்பதைக் காட்டிலும், சமயங்களில் அந்த நியாயமற்ற மூர்க்கவெறிக்குப் பதிலுக்குப் பதில் அளிக்க மறுத்து நிற்பதிலேயே அதிகப்படியான சக்தி இருப்பதற்கான அத்தாட்சியைக் காணலாம் என்று நான் கருதுகிறேன்...(பக். 75-76).

இவ்வாறு வங்காளத்தில் அன்று அஸ்வினி குமார தத்தரின் தலைமையின் கீழ் நடந்த பகிஷ்கார

இயக்கத்தையும், அதனால் பாரிசால் என்ற இடத்தில் ஆங்கிலேயர்கள் நடத்திய அடக்குமுறையையும், அந்த அடக்கு முறையைச் சாத்விகமான முறையில் எதிர்த்து நின்ற மக்களின் மனோவுறுதியையும் விபின சந்திர பாலர் விளக்கமாக எடுத்துக் கூறியதுதான்,

ஏத்தனைகோடி படைகொண்டு வந்தாலும்
மாயையே!—நீ
சித்தத் தெளிவென்னும் தீயின்முன்
நிற்பாயோ மாயையே!

சாகத் துணியிற் சமுத்திரம் எம்மட்டு
மாயையே!—இந்தத்
தேகம் பொய் யென்றுணர் தீரரை என்
செய்வாய் மாயையே!

என்ற பாரதியின் வரிகளுக்குப் பிறப்பளித்திருக்கும் என்பதையும், இந்த வரிகளில் ஆணவ வெறிகொண்ட ஆங்கிலேய ராட்சியையே, பாரதி மாயைக்கு உவமித்துப் பாடுகிறான் என்பதையும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

## நல்லரசும் தன்னரசும்

இத்தனைக்கும் மேலாக, பாரதியின் 'மாயைப் பழித்தல்' என்ற பாடலில் அந் நாளில் அவன் சார்ந்து நின்ற தீவிரவாதத் தேசியத்தின் அரசியல் கோரிக்கை பற்றிய குறிப்பும் இடம் பெற்றுள்ளது. அதனையுணர நாம் அந் நாளில் நிலவிய அரசியல் கருத்துக்களையும் சிறிதே தெரிந்து கொள்ள வேண்டும். 1906-ம் ஆண்டின் இறுதியில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தின் போதுதான் இந்திய தேசிய இயக்கத்தில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே பிளவும் நெருக்கடியும் முற்றின. இந்த மகாசபையில் தீவிரவாதிகளின் கை ஓங்கி விடுமோ என்ற

அச்சத்தில்தான் மிதவாதத் தலைவர்கள் பழம்பெரும் தேச பக்தரும், முதுபெருங் கிழவருமான தாதாபாய் நவுரோஜியை மகாசபையின் தலைவராக்கி நிலைமையைச் சமாளித்தார்கள். நவுரோஜி தலைவராவதைத் தீவிரவாதிகளும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் மிதவாதி எனக் கருதப்பட்ட தாதாபாய் நவுரோஜி அந்த மகாசபைக் கூட்டத்தின்போது இந்தியாவுக்குத் தேவையானது சுயராஜ்யமே என்று கூறி விட்டார். **சுயராஜ்யம்** என்ற வார்த்தையே அப்போது தான் அவர் வாயினின்றும் புதிதாகப் பிறந்தது. இந்த வார்த்தைக்குத் தீவிரவாதிகளும், மிதவாதிகளும் தத்தம் நோக்கில் அர்த்தம் கூறத் தொடங்கினார்கள். திலகர், அரவிந்தர், விபின சந்திர பாலர் போன்ற தலைவர்கள் "பூரண சுதந்திரமே சுயராஜ்யம்" என்று வியாக்கியானம் செய்தார்கள். கோகலே போன்ற மிதவாதத் தலைவர்களோ "ஆங்கில ஆட்சிக்குட்பட்ட **நல்லாட்சியே** சுயராஜ்யம்" என்று பேசி வந்தார்கள். "பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குச் செல்லாது வெளியே திரியும் பைத்தியக்காரர்கள்தான் சுதந்திரத்தைப் பற்றி எண்ணவோ, பேசவோ முடியும்!" என்று கூட,கோகலே பூரண சுதந்திரவாதிகளைப் பற்றிப் பேசினார். மேலும், அவர் தமது பேச்சொன்றில் பின்வருமாறும் கூறினார்:

"சுதந்திரம் என்பது காரிய சாத்தியமான லட்சியம் தான் என்று கூடச் சிலர் பேசத் தொடங்கி விட்டார்கள். இத்தகைய பிரசாரத்தை, நாட்டின் நலனைக் கருதி, நாம் எல்லாவிதமான சக்திகளையும் பிரயோகித்துத் தடுத்தாக வேண்டும். இந்தப் போக்கு நிச்சயம் அழிவையே தரும்; அல்லது, எப்படியும் இன்றையத் தேதியில் நமக்குச் சாத்திய மாகவுள்ள, மெதுவான, எனினும் அமைதியான முன்னேற்றத்துக்கான எல்லா வாய்ப்புகளையும் எல்லையற்ற தொலைவுக்குத் தள்ளிச் சென்று விடும். ஆங்கிலேயராட்சிக்கு வேறு மாற்றேயில்லை. இன்று மட்டுமல்ல. இன்னும் நீண்ட நெடுங் காலத்துக்கும் இல்லை. எனவே அதனை மறைமுகமாகவோ,

நேர்முகமாகவோ குலைக்க முயலும் முயற்சிகள் நமது தலைகளின்மீதே கடைசியில் வந்து விடியும்...'' (Gokhale's Speeches— P.1148).

எனவே கோகலே போன்றவர்களெல்லாம் ஆங்கிலேயராட்சியை அகற்றுவதை லட்சியமாகக் கொள்ளாமல், ஆங்கிலேயருக்குட்பட்ட நல்லாட்சியும், அந்த நல்லாட்சியில் இந்தியருக்குப் பங்கும் வேண்டுமென்றே கூறி வந்தனர். எனினும் லாலா லஜபதிராய் கூறியது போல், ''அதுகாறும் **நல்லரசே** காங்கிரஸின் லட்சியமாக இருந்து வந்தது. 1906-ம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த கூட்டத்தில் அதன் லட்சியம் **தன்னரசாக** மாறியது.'' [யுவ பாரதம் (Young India) லஜபதிராய்: 1915]. விபின சந்திர பாலர் போன்ற தலைவர்களெல்லாம் இந்தத் **தன்னரசு லட்சியத்தையே** வற்புறுத்தி வந்தனர்.

எனவே அவர் ''சுயராஜ்யம்'' பற்றிய தமது சென்னைப் பிரசங்கத்தில் மிதவாதத் தலைவர்களை விமர்சனம் செய்து விட்டு, சட்டசபையில் சில இடங்களைப் பெறுவதும், அதன் மூலம் சில சீர்திருத்தங்களைச் செய்வதும்.புரையோடிய புண்ணுக்கு ஒத்தடம் கொடுப்பது போலத்தான் ஆகுமென்றும், எனவே நல்லாட்சிக் கோரிக்கை மக்களின் உணர்வுகளை மழுங்கலடிக்கத்தான் உதவுமென்றும் கூறிவிட்டு, **நல்லரசாட்சிக்** கோரிக்கையைப் பற்றிப் பின்வருமாறு பேசினார்:

''நிர்வாகத்தைச் சுளுவாக்குவதன் மூலம் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஆங்கிலேய நிர்வாகத்தைப் பஞ்சு கொண்டு பொத்தி மூடி மறைப்பதால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அதன் மூலம் அந்த நிர்வாக யந்திரம் மேலும் இறங்கி நம்மைப் பொடிப் பொடியாக்கும்; அந்தப் பஞ்சு உங்கள் வேதனையைக் குறைக்கும். அவ்வளவுதான். நல்லரசாங்கம் என்பது தன்னரசாங்கம் என்பதற்கு எந்த விதத்திலும் மாற்றல்ல என்பது மட்டுமல்ல, நாட்டின் ஆட்சிப் பொறுப்பு ஓர் பொறுப்பற்ற அதிகாரத்தின் கைகளில் இருக்கும்போது

அந்த அரசாங்கம் மிக மிகத் தீமையானதும் ஆகும். எல்லா விதமான எதேச்சாதிகாரத்திலும் ஓர் அனுகூல மான எதேச்சாதிகாரம்தான் மிகவும் மோசமானது; ஏனெனில் அந்த அனுகூலம் அந்த எதேச்சாதிகாரத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளுமாறு செய்து விடுகிறது. எனவே, நீங்களும் நானும் நமக்கு எது தேவை என்பதில் தெள்ளத் தெளிவான திருஷ்டி கொண்டவர்களாயிருக்க வேண்டும். உங்களுக்கு நல்லரசாங்கம் வேண்டுமா? நீங்கள் விரும்பினால் அதனைப் பெற முடியும். நீங்கள் அதைப் பெறுவீர்கள். அதன் மூலம் உங்களுக்கு எல்லாம் சுளுவாகவும் இருக்கும். ஆனால் இன்றைக்கு இந்தியாவிலுள்ள யதார்த்த நிலைமை களின் கீழ், நீங்கள் தன்னரசாங்கத்தை விரும்பினால், நல் லரசாங்கம் என்பது தன்னரசாங்கத்தின் முன்னேற்றத்துக்கு முற்றிலும் எதிர்ப்பானதாகவே இருக்கும். ஏனெனில் நேற்றிரவில் சொல்லியபடி, நமது தொல்லையெல்லாம் நமக்குள்ளேதான் இருக்கின்றன. நமது தொல்லை நமது சொந்த மனத்துக்குள் இருக்கிறது. நமது தொல்லை நமது சொந்த மனோவுணர்ச்சிகளில் இருக்கிறது. நமது மனோபீஷ் டங்களில், நமது சொந்தச் செயலின்மையில்தான் இருக்கிறது. நல்லரசாங்கம் என்பது, **மாயையை** அதிகரிக்கச் செய்யா விட்டாலும், அதனைத் தொடர்ந்து நீடிக்க வைக்கத்தான் உதவும். உலக இன்பங்கள் மனிதர்களின் மீது மாயையின் பிடியை அதிகரிக்கின்றன; எனவே மாயையை விளக்க விரும்பு வோர் வைராக்கியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். புலன டக்கத்தை வளர்க்க வேண்டும் நிஷ்காம்யத் தன்மையை வளர்க்க வேண்டும் என்று கூறப்படுகிறது. நீங்கள் சுய ராஜ்யத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள். இப்போதுள்ள **பர** ராஷ்டிரத்தைப் பற்றிய உணர்வில்லாமல், சுய ராஜ்யத்தைப் பற்றிய அறிவு சிந்திப்பது முற்றிலும் அசாத்தியம். தான் என்பது தானற்ற தன்மையோடு தொடர்பு கொண்டு முரண்படாத வகையில், தன்னைப் பற்றிய அறிவும் சிந்திப்பது அசாத்தியம். எனவே பர ராஷ்டிரம் என்று ஒன்றில்லாமற் போனாலன்றி, சுய

ராஜ்யத்தைப் பற்றிய ஞானமும் சிந்திப்பது முற்றிலும் அசாத்தியம். 'பரம்' என்பது 'சுரம்' என்பதற்கு நேர் எதிரானது...எனவே நாம் நமக்கு என்ன தேவை என்பதில் தெளிவான திருஷ்டி பெற்றிருக்க வேண்டும். சுயராஜ்ய லட்சியம் என்பது நமக்கு மிகவும் சமீபத்தில்தான் எடுத்துக் காட்டப்பட்டது. ஏன்? ஏனென்றால் கடந்த நூற்றாண்டு களுக்கும் மேலாக நாம் இந்தியாவிலிருந்த பிரிட்டீஷ் அரசாங்கத்தை, ஒரு பர ராஷ்டிரமாக, ஓர் அன்னிய அரசாங்கமாக என்றுமே பார்த்ததில்லை...'' (பக் 58-59)

இவ்வாறு நல்லரசாங்கம் என்ற பெயரால் இந்தியர்கள் சட்டசபைகளில் சில இடங்களையும், பெரிய அரசாங்கப் பதவிகளில் சிலவற்றையும் பெறுவதற்கு முனைந்துவிட்டால், சுயராஜ்ய லட்சியமே பாழாகி விடுமென்றும், நமக்கு நாமே சட்டம் செய்ய, நமக்கு நாமே வரிபோட, நமக்கு நாமே ஆண்டுகொள்ளக் கூடிய சுயாட்சி பெற்ற அரசாங் கமே வேண்டுமென்றும் விபின சந்திர பாலர் பேசினார். எனவே நல்லரசாட்சி என்ற பெயரால், நாம் ஆங்கிலேயர் களும் வழங்கக்கூடிய, மிதவாதிகளும் கோரக்கூடிய, ஓராட் சிக்கு இசைந்துவிடக் கூடாது என்றும் அவர் நினைவுபடுத் தினார். நல்லரசாங்கம், தன்னரசாங்கம் ஆகியவை பற்றிய விபின சந்திர பாலரின் இந்தக் கருத்துக்களைத் தெரிந்து கொண்ட பின்னால், பாரதி எழுதியுள்ள,

நீ தரும் இன்பத்தை நேரென்று கொள்வேனோ
மாயையே!—சிங்கம்
நாய் தரக் கொள்ளுமோ நல்லர
சாட்சியை மாயையே!

என்ற வரிகளைப் படித்துப் பார்த்தால், இந்த வரிகளில் பொதிந்துள்ள அரசியல் முழக்கத்தையும், கருத்தையும் நாம் தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இதனை

அறிந்த பின் இந்த வரிகளுக்கே புதிய அர்த்த பாவமும், பொருளும் இருப்பதும் நமக்குப் புலனாகிவிடும்.

இதனை மேலும் உறுதிப்படுத்தும் விதத்தில், 'சுதந்திரப் பெருமை' என்ற தலைப்பில் பாரதி இதே கால கட்டத்தில் எழுதிய தேசியப் பாடலும் அமைந்திருக்கிறது. சொல்லப் போனால், தன்னரசாட்சியையே தேசிய இயக்கம் நாட வேண்டுமே தவிர, ஆங்கிலேயரின் ஆளுகைக்குக் கட்டுப் பட்ட 'நல்லரசாட்சி' அல்ல என்பதை வலியுறுத்தும் விதமாகவே 'சுதந்திரப் பெருமை' என்ற பாடல் அமைந் துள்ளது எனலாம். மேலும், இந்தப் பாடலும் விபின சந்திர பாலரின் சொற்பொழிவில் கூறப்பட்ட விஷயத்தையே கவிதை வடிவில் வடித்துக் கொடுத்துள்ளது என்பதைப் பாடல் முழுவதையும் படித்துப் பார்த்தால் காண முடியும்.

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
　　வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
　　அறிவைச் செலுத்துவாரோ? (பாட்டு—1)

என்று தொடங்கி, சுயராஜ்யப் பெருமையை வலியுறுத்திச் செல்லும் இந்தப் பாடல்,

வந்தே மாதரம் என்று வணங்கியபின்
　　மாயத்தை வணங்குவரோ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
　　என்பதை மறப்பாரோ? (பாட்டு—7)

என்று முடிகிறது. இங்கு மாயை என்ற சொல்லை, பாரதி முழுக்க முழுக்க அரசியல் அர்த்த பாவத்திலேயே கையாள் கிறான் என்பதையும் விபின சந்திர பாலர் மாயை என்ப தற்குக் கொடுத்த அரசியல் அர்த்த பாவத்தையே அவன்

இங்கு பிரதிபலித்துள்ளான் என்பதையும் நாம் கண் கூடாகக் காண முடிகிறது. இல்லையா?

## முடிவுரை

உண்மையில் விபின சந்திர பாலரின் சென்னைப் பிரசங்கங்கள் அனைத்திலும், மாயை என்ற தத்துவச் சொல்லுக்குத் தேசியத்தன்மை கொண்ட புதிய அர்த்த பாவத்தையே அவர் தந்திருப்பதை நாம் காண முடியும். மாயை என்ற சொல்லை மாறி மாறிப் பிரயோகித்து, வெள்ளையராட்சிக்கு எதிராக, நாட்டு மக்களின் கண்களைத் திறக்கவும், அவர்களுக்குச் சுதந்திர வேட்கையையும், ஆவேசத்தையும், தியாக புத்தியையும் உருவேற்றவும்தான் விபின சந்திர பாலர் மறைமுகமாக முயன்றுள்ளார் என்பதை நாம் பார்க்கிறோம். இதனை ஒருவிதமான போர்த் தந்திரம் என்றுதான் சொல்ல வேண்டும். எனவேதான் விபின சந்திரரின் பிரசங்கங்கள் சென்னை மாகாணத்தில் தீவிரவாதத் தேசியத்தை வளர்க்க உதவின.இதனை,பாரதியே "சென்னை வாசிகளின் நிதான மெல்லாம்(அதாவது மிதவாதமெல்லாம்) சந்திர பாலரின் சந்நிதானத்திலே பறந்து காற்றாய் போய் விட்டது" என்று 18 மே, 1907 அன்று சுதேசமித்திரனில் எழுதிய கட்டுரையிலே குறிப்பிடுகின்றான் (பாரதி தமிழ்—தூரன்). இந்த உண்மையை ஆங்கிலேயச் சார்பான சரித்திராசிரியர்களும் கூட ஒப்புக் கொண்டார்கள். உதாரணமாக, 'கேம்பிரிட்ஜ் இந்திய சரித்திரம்' இதனைக் குறித்துப் பின்வருமாறு எழுதுகிறது:

**"பிரிட்டிஷ் நிர்வாகமானது 'மாயை'யின்மேல் சார்ந்து நிற்கிறது** என்று பிரகடனப்படுத்திய மிஸ்டர் விபின சந்திர பாலர் என்ற ஓர் ஊர்சுற்றியான ஆவேசப் பிரசங்கி ஆற்றிய தொடர்ச் சொற்பொழிவுகளுக்குப் பின்பும், உள்ளூர் அரசியல்வாதியான சிதம்பரம்பிள்ளை என்பவரின் நெருப்புப்பொறி பறக்கும் பல பேச்சுக்களுக்குப்

பின்பும், சென்னை மாகாணத்தில் பல கலவரச் சம்பவங்கள் நடைபெற்றன.'' (Cambridge History of India, Ed. H. M. Dodwell, Vol. 6).

மேற்கூறியவற்றிலிருந்து 'மாயை' என்ற வேதாந்த உலகச் சொல்லுக்கு, தேசிய அர்த்த பாவத்தைத்தான் விபின சந்திர பாலர் வழங்கினார் என்பதையும், அதனைத்தான் பாரதியும் தனது பாடலில் பிரதிபலித்தான் என்றும் நாம் எளிதில் உணரலாம். பாரதியின் 'மாயையைப் பழித்தல்' என்ற பாடல் 1908-ம் ஆண்டு ஜனுவரி மாதத் தொடக்கத்தில் வெளிவந்த 'ஸ்வதேச கீதங்கள்' என்ற நூலில்தான் முதன் முறையாக இடம் பெற்றிருப்பதால், அந்தப் பாடலும் 1907-ம் ஆண்டில், அதுவும் விபின சந்திர பாலர் சென்னைக்கு விஜயம் செய்த மே மாதத்தில் எழுதப்பட்டதே என்றும் நாம் முடிவு கட்டலாம். இத்தனைக்கும் பிறகும் அப்பாடல் ஒரு வேதாந்தப் பாடல்தான் என்று எவரேனும் சொன்னால், பாரதி எழுதிய முதல் வேதாந்தப் பாடலே அதுதான் என்றும், அந்த முதற்பாட்டில் இடம் பெற்றுள்ள வேதாந்தமே தேசிய அர்த்த பாவம் கொண்டதுதான் என்றும், எனவே பாரதியின் வேதாந்தமே தேசியத் தேவையையும் தேசிய அர்த்த பாவத்தையும் முதன்மையாகக் கொண்டே வளரத் தொடங்கியிருக்கிறது என்றும் நாம் முடிவு கட்டி விடலாம்.

# தாயின் மணிக்கொடி

"தாயின் மணிக்கொடி பாரீர்!"* என்று தொடங்கும் பாரதியின் கொடி வணக்கப் பாடலை நாமறிவோம். தேசக் கொடியின் முக்கியத்துவம், நாட்டு மக்களின் உள்ளத்தில் அக் கொடி எழுப்பக்கூடிய உணர்ச்சி, பல்வேறு மொழிகள் பேசும் பாரத மக்களும் ஒற்றுமையோடு திரண்டு நின்று அக் கொடியைக் காக்கும் திருக்காட்சி ஆகிய பலவற்றை யும் உணர்ச்சிப் பெருக்கோடு தீட்டிக் காட்டும் ஒப்பற்ற பாடல் அது. அப் பாடலில் பாரதி அக் கொடியைப் பின்வருமாறு வருணிக்கிறான்:

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்—அதன்
உச்சியில் 'வந்தே மாதரம்' என்றே
பாங்கின் எழுதித் திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்!
இந்திரன் வச்சிரம் ஓர்பால்—அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால்
மந்திரம் நடுவுறத் தோன்றும்—அதன்
மாண்பை வருத்திட வல்லவன் யானோ?

இவ்வரிகள் பாரதி கண்ட தேசக்கொடியை நமக்கு இனங் காட்டுகின்றன. அதாவது அந்தக் கொடியில் இந்திரனின் வச்சிராயுதம் ஒரு பக்கமும், இளம்பிறைச் சின்னம் ஒரு பக்கமும், கொடியின் மத்தியில் 'வந்தே மாதரம்' என்று

மந்திரமும் இடம் பெற்றிருந்தன என்று புலனாகின்றது. இப்படிப்பட்ட இந்திய தேசக் கொடி ஒன்றை நாம் கண்டதில்லை. எனவே இந்தப் பாடல் எழுப்பும் கேள்விகள் பல.

இந்தக் கொடி பாரதியின் சொந்தக் கற்பனையில் எழுந்ததுதானா? அல்லது இப்படிப்பட்ட கொடி ஒன்று பாரதி காலத்தில் இருந்ததா! அவன் குறிப்பிடும் இந்திரன் வச்சிராயுதமும், இளம்பிறையும் எந்தக் கொடியில் இடம் பெற்றிருந்தன? பாரதி இந்தப் பாடலை எந்த ஆண்டில் எழுதினான்? அந்த ஆண்டைக் கொண்டு இந்தக் கொடியையும், கொடியைக் கொண்டு பாடல் எழுந்த ஆண்டையும் நிர்ணயிக்க முடியுமா?—என்பவைதாம் அந்தக் கேள்விகள். அவற்றுக்கு விடை காணும் முயற்சியே இந்தக் கட்டுரை.

## நமது கொடியின் வரலாறு

நமது பாரத தேசக் கொடிக்கு ஒரு வரலாறு உண்டு. இன்று பாரதத்தின் தேசியக் கொடியாக விளங்கும் அசோகச் சக்கரத்துடன் கூடிய மூவர்ணக் கொடி, தேச விடுதலைப் போராட்டத்தில் அன்றைய முன்னணி ஸ்தாபனமாகவும், சுதந்திரம் அடைந்த காலத்தில் ஆளும் கட்சியாகவும் விளங்கிய காங்கிரஸ் கட்சியின் மூவர்ணக் கொடியிலிருந்து பிறந்தது என்பதை நமது தலைமுறையினர் யாவரும் அறிவர். காங்கிரஸ் கட்சிக் கொடியிலுள்ள கைராட்டைக்குப் பதிலாக, தேசியக் கொடியில் அசோகச் சக்கரம் இடம் பெற்றிருப்பதொன்றே இரண்டுக்குமுள்ள வித்தியாசம். கைராட்டையுடன் கூடிய மூவர்ணக் கொடி 1921-ம் ஆண்டில் உருவானதாகும். இந்த ஆண்டில்தான் தேசத் தந்தையான மகாத்மா காந்தி இந்திய அரசியலில் முக்கிய பாத்திரம் வகிக்கத் தொடங்கினார். தேசியப் போராட்டத்தை வெகுஜன இயக்கமாக மாற்றினார். இந்தக் காலத்தில்தான் அவர் தேசியக் கொடியின்

அவசியத்தை உணர்ந்தும், உணர்த்தியும் மூவர்ணக் கொடியை உருவாக்கினார்.

காந்தியடிகளின் கருத்துக்கேற்ப இந்தக் கொடியை உருவாக்கித் தந்தவர் ஓர் ஆந்திர இளைஞர் எனக் கூறப்படுகிறது. இந்த மூவர்ணக் கொடியில் மேலே வெள்ளை, நடுவே பச்சை, அடியில் சிவப்பு, நடுவிலுள்ள பச்சை நிறத்தின்மீது நீல வர்ணத்தில் கைராட்டைச் சின்னம்- ஆகியவை இடம் பெற்றிருந்தன. இந்தக் கொடியில், வெள்ளை நிறம் சிறுபான்மையான பல சமூகத்தாரையும், பச்சை நிறம் முஸ்லிம்களையும், சிவப்பு நிறம் இந்துக்களையும் குறிப்பதாகவும் வியாக்கியானம் கூறப்பட்டது. இந்தியாவிலுள்ள பல்வேறு சமூகத்ினரும் இவ்வாறு இந்தக் கொடியின்கீழ் ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்பது காந்தியடிகளின் விளக்கம். ஆனால், சீக்கியர் போன்ற சில சமூகத்தினர் இந்தக் கொடியில் தமக்குப் பிரதிநிதித்துவம் இல்லை என்று குறை கூறினார். இதன் பின்னர் 1931-ம் ஆண்டுக் காங்கிரஸ் மாநாட்டில் இந்தக் கொடி மாற்றியமைக்கப்பட்டது. இந்தப் புதிய கொடியில் மேலே ஆரஞ்சு நிறம், நடுவில் வெள்ளை நிறம், அடியில் பச்சை நிறம், நடுவிலுள்ள வெள்ளை நிறத்தின்மீது நீல நிறத்தில் கைராட்டைச் சின்னம் ஆகியவை இடம் பெற்றன. இந்தப் புதிய கொடிக்கு முன்னைப் போல் மத அடிப்படையில் விளக்கம் கூறாமல், ஆரஞ்சு நிறம் தைரியம், தியாகம் ஆகியவற்றையும், வெள்ளை நிறம் சமாதானத்தையும், சத்தியத்தையும், பச்சை நிறம் தன்னம்பிக்கையையும் ஆண்மையையும் குறிப்பதாக விளக்கம் கூறப்பட்டது. இது முதற்கொண்டு இம் மூவர்ணக்கொடியே காங்கிரஸ் ஸ்தாபனத்தின் அங்கீகாரம் பெற்ற கொடியாக மாறியது.

(இதற்குமுன் அன்னிபெஸண்ட் அம்மையாரின் 'ஹோம்ரூல்' இயக்கம் நடைபெற்ற காலத்திலும் 1917-ல் ஒரு கொடி உருவாக்கப்பட்டது. அதில் சிவப்புப் பட்டைகள் ஐந்தும், பச்சைப் பட்டைகள் நான்கும் இருந்தன. கொடி

யின் மத்தியில் ஏழு நட்சத்திரங்களும் இருந்தன. மேலும் அதன் மேல்பக்க இடது மூலையில் கொடியில் நான்கில் ஒரு பகுதியில் பிரிட்டிஷாரின் 'யூனியன் ஜாக்'கும் இருந்தது. எனவே அந்தக் கொடி எடுபடவில்லை.)

காந்தியடிகள் 1921ம் ஆண்டில் தமது மூவர்ணக் கொடியை உருவாக்கிய காலத்தில், அதற்குச் சிலர் ஆட்சேபம் கிளப்பிய காரணத்தால், அது ஸ்தாபன அங்கீகாரம் பெறவில்லையாயினும், தேசக் கொடியின் முக்கியத்துவத்தை உணர்ந்த மக்களிடையே அதற்கு வெகுஜன ஆதரவும் செல்வாக்கும் கிட்டின. இந்தச் செல்வாக்கும் ஆதரவும் அதிகரிக்க, நம்மையாண்டு வந்த ஆங்கிலேயரும் காரணமாக அமைந்தனர். 1923ம் ஆண்டு மே மாதம் முதல் இந்தக் கொடி தேசிய முக்கியத்துவம் பெற்றது. இந்தக் கொடியைத் தொண்டர்கள் ஏந்திச் செல்லக்கூடாது என்று ஆங்கிலேயர்கள் தடையுத்திரவு பிறப்பித்த காரணத்தால், "கொடியேந்திச் செல்லத்தான் செய்வோம்" என்ற ஒரு போராட்டம் நாகபுரியில் தொடங்கியது. இதற்கே 'நாகபுரிக் கொடி சத்தியாக்கிரகம்' என்று பெயர். "இப் போராட்டத்துக்குக் காங்கிரஸ் காரியக் கமிட்டி ஆசியளித்தது. சேத் ஜம்னாலால் பஜாஜ் கைது செய்யப்பட்டார். அவருக்கு விதித்த அபராதத் தொகையை வசூலிக்க, பஜாஜின் மோட்டார் காரைச் சர்க்கார் பறிமுதல் செய்து ஏலம் போட்டது. ஒருவரும் ஏலம் கேட்காததால், மோட்டாரைக் கத்தியவாருக்குக் கொண்டுபோய் விற்கும்படி நேரிட்டது. நாகபுரி சத்யாக்கிரக இயக்கத்தில் கலந்து கொள்ள, குமரி முதல் இமயம் வரையுள்ள எல்லா மாகாணங்களிலிருந்தும் தொண்டர்கள் திரளாக வந்தனர். இச் சத்தியாக்கிரக இயக்கம் ஓர் அகில இந்திய இயக்கமாகிவிட்டது."

(காங்கிரஸ் மகாசபை சரித்திரம்: பட்டாபி சீதாராமையா)

கொடியேந்திச் செல்லும் உரிமைக்கான போராட்டம் 1923ம் ஆண்டு மே மாதம் தொடங்கி, இரண்டரை மாதக் காலம் நடந்தது. இறுதியில் ஜூலை 18ம் தேதி நடந்த

மாபெரும் போராட்டம் வெற்றி கண்டது. இந்தப் போராட்டத்துக்கு ஆங்கிலேயர்கள் தடைவிதிக்காது பணிந்து விட்டதால், கொடிப் போராட்டம் வெற்றி கண்டுவிட்டது. இது முதலே தேசக் கொடி நம் நாட்டில் வெகுஜன முக்கியத் துவம் பெற்றது. மேலும் இதற்கு முன்னர் தேசியப் போராட்ட வீரர்களுக்குக் கொடியேந்திச் செல்லும் உரிமையும் இருக்கவில்லை என்பதும் வெளிப்படை. எனினும் தேசக் கொடி பற்றிய சிந்தனையும் அதன் உருவாக்கமும் 1917ம் அல்லது 1921ம் ஆண்டில்தான் தோன்றின என்று சொல்வதற்கில்லை. அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே அவை பிறந்து விட்டன என்று சொல்லலாம்.

## காமா அம்மையாரின் கொடி

இந்திய தேசியக் கொடியைப் பற்றிப் பேசும்போது, காமா அம்மையாரே அதன் தாய் என்றும், மூலகர்த்தா என்றும் சரித்திராசிரியர்கள் பொதுவாகச் சொல்வார்கள். இந்த அம்மையார் யார்? இவரைத் தேசக் கொடியின் தாய் என்று கூறக் காரணமென்ன?

மாடம் பிக்காஜி ருஸ்தம் காமா (1861-1935) என்ற இந்தப் பெண்மணி நமது நாட்டுத் தேச பக்த வீராங்கனை களில் முக்கியமானவர். பார்சி வகுப்பினரும் பம்பாய் வாசியுமான ஸோரப்ஜி பிரேம்ஜி படேல் என்ற செல்வந்த ரின் மகள் இவர். ருஸ்தம் காமா என்ற பாரிஸ்டரை இவர் மணந்து கொண்டார். ஆனால் மணவாழ்க்கை மகிழ்ச்சி தரவில்லை. அதனால் கணவரிடமிருந்து பிரிந்தார்; இந்தப் பிரிவினால் இவரது உடல் நலமும் கெட்டது. எனவே வைத் தியம் செய்து கொள்வதற்காக இவர் 1902-ம் ஆண்டில் இங்கிலாந்து சென்றார். இங்கிலாந்து சென்ற இவருக்கு, அந்நாளில் இங்கிலாந்தில் இருந்தவாறே இந்திய சுதந்திரத் துக்காகப் பகிரங்கமாகவும் ரகசியமாகவும் பாடுபட்டு வந்த இந்தியப் புரட்சி வாதிகளான சியாம்ஜி கிருஷ்ணவர்மா, விநாயக தாமோதர சாவர்க்கார் முதலியவர்களின் தொடர்பு ஏற்பட்டது. இவரும் புரட்சிவாதியானார்.

பின்னர் இவர் தமது புரட்சி நடவடிக்கைகளைக் குந்தக மின்றி மேற்கொள்வதற்காகப் பாரீஸ் நகரத்துக்குச் சென்றார். பாரீஸ் நகரத்திலிருந்து இவரும் கிருஷ்ணவர்மா போன்றவர்களும் நடத்தி வந்த "'இந்திய சமுதாயவாதி'" (Indian Socialogist) என்ற பத்திரிகை அன்று இந்தியா விலும் வெளிநாட்டிலும் இருந்த புரட்சிவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் ஊக்கமும் உத்வேகமும் ஊட்டி வந்தது. இந்திய விடுதலைக்காக இவர் ஆற்றிய பணியினால் இவரை 'இந்தியப் புரட்சியின் தாய்' என்று கூடச் சரித்திராசிரி யர்கள் மதிப்பிடுகிறார்கள்.

மாடம் காமா பாரீசில் வசித்து வந்த காலத்தில், 1907-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ம் தேதி முதல் 24 வரை ஜெர்மனியிலுள்ள ஸ்டட்கார்ட் (Stuttgart) என்ற இடத்தில் சர்வதேச சோஷியலிஸ்ட் காங்கிரஸ் (International Socialist Congress) நடந்தது. இந்த மாநாட்டில் ருஷ்யப் புரட்சியின் தலைவரான மாமேதை லெனினும் கலந்து கொண்டார். இந்த மாநாட்டுக்கு இந்தியப் பிரதிநிதிகளாக மாடம் காமாவையும், சர்தார் சிங் ராணா சாகெப் என்ற இந்தியப் புரட்சி வீரரையும் பாரீசிலுள்ள இந்தியப் புரட்சிவாதிகள் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தார்கள். இந்த மாநாட்டின்போதுதான் புரட்சி வீரர் லெனின் இந்தியப் புரட்சி வீரர்களை முதன் முதலில் நேரில் சந்தித்ததாக எம். பாவ்லேவிச் என்ற ருஷ்ய சரித்திராசிரியர் தமது நூலொன்றில் குறிப்பிடுகிறார். இந்த மாநாட்டுக்குச் சென்ற மாடம் காமா 1907 ஆகஸ்டு 22-ம் தேதியன்று இந்திய சுதந்திரம் பற்றி ஓர் ஆவேசமான பிரசங்கம் செய்தார். அத்துடன் இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவான ஒரு தீர்மானத்தையும் அம்மாநாட்டில் பிரேரேபித்தார். மேலும் தமது பேச்சின் முடிவில் தாம் தயாரித்துக் கொண்டு சென்றிருந்த இந்திய தேசியக் கொடியையும் மாநாட்டினர் முன்னால் தூக்கிப் பிடித்துக் கோஷமிட்டார். "உரை நிகழ்த்தி முடிந்ததும் திருமதி காமா அந்த பெருந்திரளான

கூட்டத்தில் பட்டொளி வீசும் இந்திய மூவர்ணக் கொடியை விரித்து ஏற்றி வைத்தார். பிரதிநிதிகள் எழுந்து நின்று நீண்ட நேரம் கையொலி எழுப்பினர்'' என்று எழுதுகிறார் ஜெர்மன் வரலாற்றாசிரியர் டாக்டர் டெதெல்ம் வைடமன். இதைத் தான் இந்திய தேசக்கொடியின் பிறப்பாகச் சரித்திராசிரியர்கள் கருதுகிறார்கள்.

மாடம் காமா முதன் முதலில் பறக்க விட்ட அந்த இந்திய தேசியக் கொடி பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய மூவர்ணங்களையும் கொண்டதாக இருந்தது. (History of the Freedom Movement in India- R. C. Majumdar Vol. 1.) அதன் உச்சியில் எட்டு நட்சத்திரங்களும் மத்தியில் 'வந்தே மாதரம்' என்று தேவநாகரி லிபியில் எழுதப்பட்ட கோஷமும், அடியில் ஒரு கோடியில் சூரியனும், மறுகோடியில் இளம் பிறையும் இடம் பெற்றிருந்தன. இந்தக் கொடியை மாடம் காமா தாங்கிக் கொண்டு நிற்க, அருகில் புரட்சி வீரர் சர்தார் சிங் ராணா நிற்கக் காட்சி தரும் படமொன்று அந்தக் காலத்து சமூக-ஜனநாயகப் (Social Democratic) பத்திரிகையின் சிறப்பிதழ் ஒன்றில் வெளிவந்தது. [இப்படத்தை டில்லியிலிருந்து வெளி வரும் 'நியூ ஏஜ்' (New Age) என்ற ஆங்கிலப் பத்திரிகை 25-4-1965 அன்றைய இதழில் வெளியிட்டு உதவியுள்ளது] இதுதான் காமா அம்மையார் பிறப்பித்த முதல் இந்திய தேசக்கொடியின் வரலாறு.

## பாரதியும் வெளிநாட்டு இந்தியப் புரட்சி ாளர் களும்

இனி, பாரதிக்கு வருவோம். காமா அம்மையாரின் கொடியில் இடம் பெற்ற 'வந்தே மாதர' மந்திரமும், இளம் பிறையும் பாரதி நமக்கு இனங்காட்டும் கொடியிலும் இடம் பெற்றுள்ளன. எனவே 1907 ம் ஆண்டில் மாடம் காமா ஜெர்மனியில் பறக்கவிட்ட இந்திய தேசியக் கொடியைப் பற்றிப் பாரதியும் அறிந்திருந்தான் என்று ஊகிக்க இடமுண்டா? உண்டு என்றே சொல்லலாம். மாடம் காமா

போன்ற புரட்சிவாதிகள் இந்தியாவுக்கு வெளியேயிருந்து புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த அதே காலத்தில் தான், இந்தியாவிலும் தீவிரவாதத் தேசிய இயக்கம் வலுவாக இருந்தது. அந்த இயக்கத்தின் தனிப் பெருங் கவிஞனாகத் திகழ்ந்த பாரதி, அதே 1907ம் ஆண்டில் தான் நடத்தி வந்த 'இந்தியா' பத்திரிகையில் கனல் கக்கும் எழுத்தோவியங் களைத் தீட்டி வந்தான். இந்த ஆண்டு பாரதியின் ஓய்வறி யாத, உத்வேகம் மிகுந்த செயலாற்றலின் தொடக்க ஆண்டெனக் கூறலாம். பாரதி தனது 'இந்தியா' பத்திரி கையை நடத்தி வந்த காலத்தில் அதன் "லண்டன் நிருப" ராக, இங்கிலாந்திலிருந்த இந்தியப் புரட்சிவாதிகளில் ஒருவரும், மாடம் காமா முதலியோரோடு சம்பந்தப்பட்ட வருமான வ.வெ. சுப்பிரமணிய அய்யர் இருந்து வந்தார் என்பதும், 1909ம் ஆண்டில் மதன்லால் திங்கரா என்ற இந்திய இளைஞன், இந்திய மக்களைத் துன்புறுத்திய கர்ஸான் வைலி என்ற ஆங்கிலேயனை லண்டன் நகரத்தில் சுட்டுக் கொன்றது போன்ற செய்திகளையெல்லாம் அவரே 'இந்தியா' பத்திரிகைக்கு எழுதி வந்தார் (பாரதி புதையல்-2ம் பாகம்: ரா.அ. பத்மநாபன்) என்பதும் நாமறிந்ததே.

மேலும் பாரீஸிலிருந்து கிருஷ்ணவர்மா நடத்தி வந்த 'இந்திய சமுதாயவாதி', மாடம் காமா நடத்தி வந்த 'வந்தே மாதரம்' முதலிய பத்திரிகைகள், தமிழ்நாட்டுச் செய்திகள் உட்பட இந்திய நாட்டுத் தேசியப் போராட்டச் செய்திகள் பலவவற்றையும் வெளியிட்டுவரத்தான் செய்தன. எனவே தமிழ்நாட்டுத் தேசியவாதிகளுக்கும், இந்தியாவுக்கு வெளியிலிருந்த இந்தியப் புரட்சிவாதிகளுக்கும் அந்தக் காலத்தில் தொடர்பு இருந்தது என்பதும், அதன் காரண மாக வெளிநாட்டில் நடைபெற்று வந்த நிகழ்ச்சிகளைத் தமிழ்நாட்டுத் தேசியவாதிகளும் தெரிந்து வந்தார்கள் என்பதும் லகுவில் ஊகிக்கக்கூடிய விஷயம். மேலும் வெளி நாட்டில் அச்சிடப்பெற்ற இந்தியப் புரட்சிவாதிகளின் பத்திரிகைகள் இந்தியாவிலிருந்த தீவிரவாதிகளுக்கு அந்

நாளில் முறையாகக் கிடைத்துத்தான் வந்தன. அந்தக் காலத்தில் இந்தியாவுக்கு வந்து, ஆங்கிலேயருக்குச் சார்பாக இந்திய நாட்டின் தேசிய இயக்கத்தைப் பற்றிப் புத்தகம் எழுதிய, 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையைச் சேர்ந்த வாலன்டைன் சிரோல் என்பவன் பின்வருமாறு எழுதுகிறான்.

"இந்தியாவுக்கு வெளியே அமெரிக்காவில் 'சுதந்திர ஹிந்துஸ்தான்', லண்டனிலும் பாரீசிலும் சியாம்ஜீ கிருஷ்ண வர்மாவின் 'இந்திய சமுதாயவாதி' மற்றும் ஐரோப்பாவில் 'தால்வார்' 'வந்தே மாதரம்' ஆகிய பத்திரிகைகளும் வெளி வந்தன. இந்தப் பத்திரிகைகளும் வேறு சில துண்டுப் பிரசுரங்களும் பெரும் பெரும் பார்சல்களாக இந்தியாவுக்குள் கடத்தி வரப்பட்டன; அல்லது குறிப்பிட்ட மாணவர்கள், பள்ளி ஆசிரியர்கள், வக்கீல்கள், சர்க்கார் ஊழியர்கள் ஆகியோரின் பெயருக்கு மூடிய கவரில் தபால் மூலமாகவும் அனுப்பப்பட்டன. இந்தப் பிரசுரங்களெல்லாம் இந்தியாவுக்கு வெளியே புரட்சி நடவடிக்கைகளுக்கான ஒரு பலம் வாய்ந்த தளத்தை உருவாக்க விரும்பின; இவை இந்தியாவுக்குள் ரகசியமாக விநியோகிப்பதற்காக அச்சடிக்கப்பட்டன..." (Indian Unrest-Valentine Chirol)

இந்த ஆங்கிலேய தாசனின் 'சர்டிபிகேட்'டும் அத்தகைய பத்திரிகைகள் இந்தியாவுக்குள் வந்ததை உறுதிப்படுத்துகின்றது. மேலும் 1911ம் ஆண்டு ஜூன் மாதம் 17ம் தேதி மணியாச்சியில் ஆஷ் என்ற வெள்ளைக்காரக் கலெக்டரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, செங்கோட்டை வாஞ்சி அய்யர் தன்னையும் மாய்த்துக் கொண்ட காலத்தில், அந்தத் தியாகியின் சட்டைப் பையில் மாடம் காமாவின் 'வந்தே மாதரம்' என்ற பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை நறுக்கு இருந்ததென்பதும், ஆஷ் சுட்டுக் கொல்லப்பட்ட சில தினங்களுக்குள் வெளிவந்த பாரீஸ் நகரத்து 'வந்தே மாதரம்' பத்திரிகை (ஜூலை இதழ்) வாஞ்சி அய்யருக்கு வாழ்த்துக் கூறி இருந்தது என்பதும் சரித்திர உண்மைகள்.

எனவே 1908 ம் ஆண்டு முதல் தொடர்ந்து நடந்த கொடிய அடக்கு முறைக்கு மத்தியிலும்கூட, வெளிநாட்டில் அச்சான இந்தியப் புரட்சிவாதிகளின் பத்திரிகைகள் தமிழ்நாட்டின் தென்கோடிப் பகுதி வரையிலும் பரவியிருக்கத்தான் செய்தன என்பதை நாம் ஊகிக்கலாம். எனவே ஜெர்மனியில் மாடம் காமா பறக்கவிட்ட இந்திய தேசக்கொடியைப் பற்றி பாரதி மாடம் காமாவின் பத்திரிகை மூலமாகவே தெரிந்திருக்கக் கூடும் என்றும், அக்கொடியைப் பற்றித் தெரிய வந்த பாரதி அதனையே தனது கொடி வணக்கப் பாடலில் பயன்படுத்தினான் என்றும் நாம் ஊகிக்க இடமுண்டு.

ஆனால் இந்த ஊகம் ஓரளவுக்கே உண்மையாகும். ஏனெனில் பாரதி இனம் காட்டுகின்ற தேசக் கொடியில், மாடம் காமாவின் கொடியிலிருந்த வந்தே மாதர கோஷமும் இளம்பிறையும்தான் இடம் பெற்றுள்ளனவே தவிர, அதிலுள்ள நட்சத்திரங்களும் சூரியனும் இடம் பெறவில்லை. இவை இடம் பெறவில்லை என்பது மட்டுமல்ல. இவற்றுக்குப் பதிலாக இந்திரனின் வச்சிராயுதச் சின்னமும் பாரதியின் கொடியில் இடம் பெறுகிறது. அவ்வாறாயின் இந்த இந்திரன் வச்சிரம் பாரதியின் சொந்தக் கற்பனையா? சொந்தச் சேர்க்கையா? அல்லது அதற்கும் ஏதேனும் ஆதாரம் உண்டா? இந்தக் கேள்விகள் நம்மில் எழுவது இயற்கை. இதனை நாம் தேர்ந்து தெளியுமுன் காமா அம்மையாரின் கொடிக்கும் முந்திய சில வரலாற்றுண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவை என்ன?

## நிவேதிதா தேவியின் முன்முயற்சி

இந்திய தேசக் கொடி பற்றிய சிந்தனையும், அதனைச் செயல்படுத்தும் திட்டமும் உண்மையில் மாடம் காமாவுக்கும் முன்னரே இந்திய நாட்டில் தோன்றிவிட்டது. சொல்லப் போனால் இந்தச் சிந்தனை வங்காளப் பிரிவினையையொட்டி யெழுந்த 1905ம் ஆண்டின் இந்தியத் தேசிய எழுச்சியுடனேயே தோன்றிவிட்டது. இந்தச்

சிந்தனையைச் செயல் வடிவாக்க முனைந்த முதல் நபர், அயல் நாட்டிலிருந்து இந்திய நாட்டுக்கு வந்து, இந்திய நாட்டின் தேச விடுதலைப் போரில் பெரும்பங்கு வகித்த சகோதரி நிவேதிதா தேவி என்றே சொல்லலாம். 1905ம் ஆண்டின் தொடக்கத்திலேயே அவர் இந்திய நாட்டுக்கு ஒரு தேசக் கொடி தேவை என்பதைப் பின்வருமாறு விளக்கி எழுதினார்:

"தேசக் கொடி என்பது எடுத்த எடுப்பிலேயே ஓர் ஆசீர்வாதம்: ஓர் எச்சரிக்கை; ஓர் புனித சங்கற்பம்; ஓர் அறைகூவல்; அது ஒரு பலிபீடம். தாக்குதலுக்காயினும் சரி, தற்காப்புக்காயினும் சரி, அதன் காலடியில் மனித உயிர்கள் தாராளமாக அர்ப்பணிக்கப் படுகின்றன. பரம்பரைகள் வரலாம், போகலாம்; புதிய சம்பந்தங்கள் வரலாம்; மறைய லாம். ஆனால் தேசியச் சின்னம் என்பது எதற்காக இருக் கின்றதோ, ஜனம், தேசம், தர்மம் ஆகியவற்றின் எந்த வொரு சொல்லற்கரிய சங்கமத்துக்காக எல்லா மக்களும் போராடுகிறார்களோ, அதுமட்டும் என்றென்றும் நிலவி நிற்கிறது; அதுமட்டும் அதன் எண்ணிறந்த பக்தர்களின் நிலையில்லாத மனத்தில் நிரந்தரத்துவம்போல் எளிதாகவும், உறுதியாகவும் நிலைத்திருக்கிறது." [Sister Nivedita: Pravrajika Atmaprana (of Sister Nivedita's Girls' School Calcutta) 1961 என்ற நூலில் கண்டுள்ளபடி].

இவ்வாறு தேசக் கொடியின் தத்துவத்தையும் தன்மை யையும் கவிதாசக்தி மிகுந்த வார்த்தைகளில் வடித்தெடுத்துக் கூறிய நிவேதிதா தேவி இப்படிப்பட்ட கொடியொன்றையும் 1905ம் ஆண்டிலேயே உருவாக்கி விட்டார். 1905ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ம் தேதியன்று அவர் மிஸ் மக்லியாட் என்ற தோழியொருவருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்: "நாங்கள் ஒரு தேசியக் கொடிக்கான சின்னத்தைத் தேர்ந்தெடுத்துள்ளோம். அந்தச் சின்னம் வச்சிராயுதமாகும். இந்தச் சின்னத்தோடு ஒரு கொடியைத் தயாரித்தும் விட்டோம். நான் சீன நாட்டின் போர்க் கொடியை எனது லட்சியமாகக் கொண்டு, சிவப்புத் துணி

யில் கறுப்புச் சின்னமாக வரைந்தேன். ஆனால் அது இந்தியாவுக்குப் பொருந்தவில்லை. எனவே அடுத்துச் செய்வது சிவப்புத் துணியில் மஞ்சள் நிறச் சின்னமாக இருக்கும்.'' இவ்வாறு எழுதியதோடு நிற்காமல், கல்கத்தாவிலுள்ள தமது மாணவியரின் துணைகொண்டு, அவர் சிவப்புத் துணியில் தமது கொடியையும் உருவாக்கினார். அந்தக் கொடி சிவப்புத் துணியில் பின்னல் தையலால் உருவாக்கப்பட்டது. அதனைச் சுற்றிலும் மஞ்சள் நிறத்தில் நெளிவான விளிம்புக் கட்டமும், மத்தியில் இந்திரனின் வச்சிராயுத வடிவமும், வடிவத்தின் இருபுறமுமாக 'வந்தே மாதரம்' எனத் தேவநாகரி லிபியில் எழுதிய மந்திரமும் மஞ்சள் நிறத்தில் பின்னப்பட்டிருந்தன.

இவ்வாறு பின்னப்பட்ட அந்தத் தேசக் கொடியின் மாதிரியை, அவர் 1906-ம் ஆண்டில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகாசபையில் இடம்பெற்ற கண்காட்சியில் காட்சிப் பொருளாகத் தேசபக்தர்களின் பார்வைக்கும் வைத்து விட்டார். எனவே மாடம் காமாவுக்கும் முன்னரே இந்திய தேசக் கொடியை உருவாக்கிய பெருமை நிவேதிதா தேவியையே சாரும்: அவரையே நமது தேசக் கொடியின் தாய் என்றும் நாம் துணிந்து சொல்லலாம். நிவேதிதா தேவியின் வரலாற்றை எழுதியுள்ள பிரவ்ரஜிகா ஆத்மப் பிராணா, கல்கத்தாக் காங்கிரஸில் இடம்பெற்ற நிவேதிதா தேவியின் தேசக் கொடியைப் பற்றி எழுதும்போது, ''டாக்டர் ஜகதீச சந்திர போஸ் போன்ற பல பிரபல அறிஞர்கள் இந்தச் சின்னத்தை (வச்சிராயுதத்தை) ஏற்றுக் கொண்டதோடு அதனை நடைமுறையிலும் உபயோகிக்கத் தொடங்கினார்கள்'' என்று எழுதுகிறார். ஆயினும் நிவேதிதா தேவியின் இந்தத் தேசக் கொடி பரவலாக வழக்கத்துக்கு வரவில்லை என்றே தெரிகிறது.

## வச்சிராயுதத்தின் உட்பொருள்

என்றாலும் தேசக் கொடியின் தேவையையும் அதன் வடிவத்தையும் பற்றிய பிரச்சினை மீண்டும் எழுந்தது:

1908ம் ஆண்டு வாக்கில் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பத்திரிகைகளில் பகிரங்கமாக விவாதிக்கப்பட்ட போது, நிவேதிதா தேவி தாம் படைத்த கொடிகளின் படங்களையும், அவற்றில் தாம் வச்சிராயுதத்தைச் சின்னமாக பயன்படுத்தத் தீர்மானித்த காரணத்தையும் வங்கத்திலிருந்து வெளிவந்த 'மாடர்ன் ரெவ்யூ' பத்திரிகையில் மீண்டும் வெளியிட்டார். இந்திரனின் வச்சிராயுதத்தை அவர் தேசக் கொடியின் சின்ன மாகத் தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன? இந்திய நாட்டின் பண்டை மரபுப்படி, வச்சிராயுதமானது நேர்மை, புனிதம், சத்தியம், ஞானம், சக்தி ஆகிய அனைத்தையும் பிரதிபலிக் கின்ற சின்னமாகும். வச்சிராயுதமென்பது இந்திரன், ததீசி முனிவரிடமிருந்து பெற்ற போராயுதமாகும். அந்த ஆயுதம் ததீசி முனிவரின் அரும்பெரும் தியாகத்தைச் சுட்டி நிற்பதாகும். எனவேதான் நிவேதிதா தேவி அதனைத் தமது சின்னமாகத் தேர்ந்தெடுத்தார். அதனைக் குறித்து அவரே பின்வருமாறு எழுதியுள்ளார்:

"இந்தச் சின்னத்தின் ரகசியம் வேறொரு விஷயமாகும். தேவர்கள் ஒரு தெய்வாம்சமான ஆயுதத்தை, அதாவது ஈடு இணையற்ற தெய்வாயுதத்தை நேடிக் கொண்டிருந் தனர். ஆனால் எந்தவொரு மனிதன் அந்த ஆயுதத்தைச் சமைப்பதற்காகத் தனது உடம்பின் எலும்புகளையே மன முவந்து தர முன் வருகின்றானோ. அந்த மனிதனை அவர்கள் கண்டுபிடித்தால்தான் அத்தகைய அழிக்க முடியாத பேராயுதத்தை உருவாக்க முடியும் என்ற உண்மை அவர் களுக்குக் கூறப்பட்டது. இதன் பேரில் அவர்கள் எல் லோரும் சேர்ந்து, ததீசி என்ற முனிவரிடம் சென்று அவரது முதுகெலும்பைத் தானம் கேட்டார்கள். இந்த வேண்டுகோள் வெறும் கேலிக்கூத்துப் போலத்தான் ஒலித்தது. ஏனெனில் எந்தவொரு பெரும் லட்சியத்துக்காக என்றாலும், ஒருவன் தனது சர்வத்தையும் கொடுத்தாலும் தனது சொந்த உயிரையே கொடுக்கச் சம்மதிப்பானா? இந்திரனுக்கே ஓராயுதம் வேண்டுமென்றாலும், ஒருவன் தன் உடம்பையே அதற்காக ஒப்புக்கொடுத்து விடுவானா?

ஆனால் ததீசி முனிவருக்கோ இத்தகைய தர்மம் எட்டிப் பிடிக்கமுடியாத தியாகத்தின் எல்லையாகத் தோன்றவில்லை; தேவர்கள் சொன்னதை அவர் புன்னகையுடனேயே கேட்டார். புன்னகையுடனேயே பதில் சொன்னார். மேலும் அந்தக் கணத்திலேயே மனித குலத்தின் நன்மைக்காகக் கோரிய மாபெரும் தியாகத்தைச் செய்யச் சித்தமாகி, தம் உயிரை அர்ப்பணிப்பதற்காக மண்ணில் படுத்து விட்டார். இங்கே தான் நாம் வச்சிராயுதத்தின் அர்த்த பாவத்தைக் காண்கிறோம். தன்னலமே யில்லாத மனிதன்தான் வச்சிராயுதம். நாம் தன்னல மறுப்புக்காகப் பாடுபடுவோம். அதன் மூலம் தெய்வங்களின் கரங்களில் போர்க் கருவியாகத் திகழ்வோம். எப்படித் திகழ்வோம் என்று நாம் கேட்கக் கூடாது. வழிமுறைகளைப்பற்றி நாம் கேட்கக்கூடாது. வழிமுறைகளைப் பற்றி நாம் திட்டமிட வேண்டாம். நம்மைப் பொறுத்தவரையில் பலிபீடத்தினடியில் நம்மை நாமே அர்ப்பணிப்பதொன்றே நமது கடன். மற்றவற்றைக் கடவுளர்கள் செய்வார்கள்; தெய்வங்கள் நம்மை வழி நடத்திச் செல்லும். அழிக்க முடியாதது வச்சிராயுதமல்ல; அதனைச் சுழற்றுகின்ற கரங்கள்தான். தாயே! எங்களிடமிருந்து இந்தத் தன்னலத்தைப் பறித்து விடு! புகழோ, ஆதாயமோ இன்பமோ எம் மீது மேலாட்சி கொள்ளாமல் காத்தருள்! நீயே சூரிய ஒளியாகத் திகழ்ந்திடு! அந்தச் சூரிய ஒளியின் சூட்டிலே கரைந்து மறையும் பனித்துளியாக எம்மையாக்கிடு!...''

ஆம். கீதையின் வழியில் கடமையைச் செய்யும் கர்மயோகியாக, தன்னலம் சிறிதுமில்லாது ததீசியைப் போன்ற தியாகியாக, தாய்நாட்டுக்காகத் தனது எலும்புகளையே அஸ்திவாரக் கற்களாக்கி, சதையையும் ரத்தத்தையும் சாந்தாக்கி, சுதந்திரக் கோயிலை எழுப்பும் சிற்பியாக, உயிரைக் கொடுக்கும் உத்தமனாகப் பாரதத்துத் தேச பக்தன் விளங்க வேண்டும் என்பதற்காகத்தான் நிவேதிதா தேவி வச்சிராயுதத்தை இந்தியத் தேசக் கொடியின் சின்னமாகத் தேர்ந்தெடுத்தார். எனவே,

"நெஞ்சக் குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சகம் அழிக்கும் மாமகம் புரிவம்யாம்"
(சத்ரபதி சிவாஜி)

என்று பாடிய தேசபக்தனான பாரதியை இந்த வச்சிராயுதச் சின்னமும் கவர்ந்ததில் ஆச்சரியம் இல்லையல்லவா?

மேலும் நிவேதிதா தேவிதான் பாரதியின் குருமணி; அவனது உள்ளத்தில் தேசபக்திக் கனலைப் பெருகச் செய்த முதற்பெரும் ஞானகுரு. தனக்குப் "பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பக்தியுபதேசம் புரிந்தருளிய குரு" வென்றும், தனக்கு "ஒரு கடிகையிலே மாதாவின் மெய்த்தொண்டின் தன்மையை சொல்லாமல் உணர்த்திய குருமணி" என்றும் நிவேதிதா தேவியைக் குறிப்பிடுகின்றான் பாரதி. எனவே தனது குருமணி படைத்துத் தந்த வச்சிராயுதத்தில் மனம் ஈடுபட்ட பாரதி தான் கண்ட தேசியக் கொடியில் அதனைப் புகுத்தியத்தில் வியப்பில்லை. மேலும் 1906 ம் ஆண்டில் கல்கத்தாக் காங்கிரசுக்குச் சென்றிருந்த பாரதி அங்குக் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்த நிவேதிதாவின் தேசியக் கொடியையும் பார்த்திருக்கக்கூடும். அதேபோல் அந்தக் கொடி பற்றி நிவேதிதா எழுதி வந்த விளக்கவுரைகளையும் அவன் படித்திருக்கக்கூடும். எனவே வச்சிராயுதம் பற்றிய எண்ணம் அவனுக்கு 1906 ம் ஆண்டிலேயே ஏற்பட்டிருந்தாலும் வியப்பதற்கில்லை.

## பாரதி கண்ட மாற்றம்

எனினும் பாரதி தனது குருமணியின் கொடியை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், அதில் மாடம் காமாவின் கொடியிலுள்ள இளம் பிறையையும் சேர்த்து ஒரு திருத்தம் செய்து, தனது கொடியை உருவாக்குவானேன்? இதற்கு முதலில் பாரதி தனது கொடி வணக்கப் பாடலை எப்போது எழுதினான் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். 1908ம் ஆண்டு ஜனவரியில் வெளி வந்த அவனது முதல் சுதேச கீதத்

தொகுதியில் இப்பாடல் இடம் பெறவில்லை. 1909-ம் ஆண்டில் வெளிவந்த 'ஜன்ம பூமி' என்ற இரண்டாவது சுதேச கீதத் தொகுதியில், இப்பாடல் மாதாவின் 'துவஜம்' என்ற தலைப்பில் இடம் பெற்றிருக்கிறது (பெ. தூரனின் 'பாரதி தமிழ்' குறிப்பு) எனவே பாரதி இப்பாடலை 1908 ஜனவரிக்குப் பின்னால், அதாவது தேசக்கொடியின் தேவை பற்றிப் பத்திரிகைகள் பகிரங்கமாக எழுதி வந்த காலத்தில் எழுதினான் என்று கொள்வதே பொருத்தமாகும். ஆனால் இந்தக் காலத்துக்கு முன்பே நிவேதிதாவின் கொடியும், மாடம் காமாவின் கொடியும் உருவாகிவிட்டன. இந்த இரு கொடிகளிலும் ஓர் ஆழமான வேற்றுமை இருப்பதைப் பாரதி உணர்ந்த காரணத்தாலேயே அவன் வச்சிராயுதத்தையும் இளம்பிறையையும் கொண்டதாகத் தன் கொடியை உருவாக்கினான் என்று சொல்லலாம்.

அந்த வேற்றுமை என்ன? நிவேதிதாதேவியின் வச்சிராயுதச் சின்னம் தன்னலமற்ற தியாகத்தைச் சுட்டிக்காட்டுவதேயாயினும், அது இந்து மதச் சார்பான புராணக்கதையிலிருந்து பிறந்த சின்னம்; எனவே அச்சின்னம் இந்துக்களுக்கே மிகவும் இணக்கமாயிருக்க முடியுமே யொழிய, அந்தச் சின்னம் இந்நாட்டில் இந்துச் சமூகத்தினரை அடுத்திருந்த முஸ்லீம் மக்களின் மனத்தைக் கர்வதாகவோ, அவர்களும் அதனை விரும்பி ஏற்றுக் கொள்வதாகவோ இருக்க முடியாது.ஆனால் மாடம் காமாவின் கொடியிலுள்ள சூரியனும், இளம்பிறையும் முறையே இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இணக்கமாக விளங்கக்கூடிய சின்னங்களாகவும், இந்து முஸ்லிம் ஒற்றுமையை உணர்த்தும் சின்னங்களாகவும் விளங்கின. இந்த வேற்றுமையைக் கண்ட பாரதி தான் படைக்கும் கொடி அத்தகைய ஒற்றுமையை வலியுறுத்துவதாக இருக்க வேண்டும் என்றே தீர்மானித்தான் என நாம் கொள்ளலாம். அதற்கு அவசியமும் இருந்தது. ஏனெனில் அந்தக் காலத்து இந்திய தேசிய விழிப்புக்குக் காரணமாக விளங்கிய வங்காளப் பிரிவினை, வங்காளத்தை

இந்து வங்காளம், முஸ்லிம் வங்காளம் என்று ஆங்கிலேயர்கள் மத அடிப்படையிலே பிரித்த முதல் பிரிவினைச் சதியாகவே இருந்தது. எனினும் இந்தப் பிரிவினையை எதிர்த்துப் போராடிய தேசியத் தலைவர்கள் மதச்சார்பற்ற முறையில் தேசபக்தியை வளர்க்க அந்நாளில் தவறிவிட்டார்கள். தேசிய எழுச்சிக்காக அவர்கள் பவானி பூஜை, கணபதி பூஜை, சிவாஜி திருவிழா முதலியவற்றை நடத்தினார்கள்; இவையெல்லாம் தேசிய அர்த்தபாவத்தோடு நடத்தப்பட்டாலும், இந்து மதச் சார்புடையதாகவே இருந்தன.

இந்தக் குறையை அந்நாளில் கவியரசர் ரவீந்திரநாதர் கூடத் தேசத் தலைவர்களுக்குச் சுட்டிக் காட்டினார். பாரதியும் இந்தக் குறையை உணர்ந்தான். சிவாஜி உற்சவம் கொண்டாடியது, அந்நாளில் இந்திய நாட்டு முஸ்லிம்களுக்குப் பிடிக்கவில்லை. அப்ஸல்கான் என்ற முஸ்லிமைக் கொன்றவன்தானே சிவாஜி என்று குறைப்பட்டார்கள். இதற்கு இந்து சரித்திராசிரியர்களும் சகோதர பாவத்தோடு பதில் கூறாமல் மதத்துவேஷத்தைக் கிளறும் விதத்திலேயே பதிலளித்தார்கள். இவற்றையெல்லாம் கண்ட பாரதி 1906ம் ஆண்டில் சிவாஜி உற்சவம் கொண்டாடுமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்த அதே சமயத்தில், தனது 'இந்தியா' பத்திரிகையில் ''மகமதியர்கள் தங்கள் நாட்டைவிட்டு இதையே சுயநாடாக எப்போது அடைந்தார்களோ அதுமுதல் அவர்களுக்கும் நமக்கும் ஒருவித சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது. நாமும் அவர்கள் பேரில் பூர்வீகக் குற்றங்களை எடுத்துரைத்தல் தப்பிதம். அவர்களும் நம்மை உடன்பிறந்தவர்களெனப் பாவித்து நடக்க வேண்டும். நமக்குள்ளே எவ்வளவு சச்சரவுகள் நேர்ந்த போதிலும் நம்மைப் பிரித்து அரசாள எண்ணங் கொள்ளும் ஐரோப்பியரின் எண்ணத்தைக் குலைப்பதே நமது முதல் கடமை'' என்று எழுதியதோடு இந்து-முஸ்லிம் ஒற்றுமையைக் காரியாம்சத்தில் செய்து காட்டுமாறு

இந்து தலைவர்களையும் மக்களையும் வேண்டும் விதத்தில், "இதை நாமெல்லோரும் நமது மகமதிய சகோதரர்களுக்குக் காரியத்தில் காட்ட அக்பர் போன்ற மகமதிய மகான்களின் உற்சவத்தையும் கொண்டாட வேண்டும். அதனால் தான் அவர்களுக்கு முழு நம்பிக்கை உண்டாகும்" ('இந்தியா' 23 ஜூன் 1906—பாரதி புதையல்: 2-ம் பாகம்) என்றும் எழுதியிருக்கிறான்.

எனவே இந்திய தேசிய இயக்கத்தில் பாரதி பிரவேசித்த அந்த ஆரம்ப காலத்திலேயே அவன் இந்திய நாட்டின் விடுதலைக்கு இந்து—முஸ்லிம் ஒற்றுமை அவசியம் என்பதையும், அதனை எவ்விதத்திலும் புறக்கணிக்கக்கூடாது என்பதையும் உணர்ந்து விட்டான். இதனால் வச்சிராயுதச் சின்னம் பொறித்த கொடியானது தனக்குத் தேசபக்தியூட்டிய குருமணியின் கொடியாக இருந்த போதிலும், அதனை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ள அவன் துணியவில்லை. எனவேதான் நிவேதிதாவின் கொடியில் இடம் பெற்ற (இந்துச் சின்னமான) வச்சிராயுதத்தையும், மாடம் காமாவின் கொடியில் இடம் பெற்ற (இஸ்லாமியச் சின்னமான) இளம்பிறையையும், இருவரது கொடிகளுக்கும் பொதுவாகவிருந்த 'வந்தேமாதரம்' என்ற கோஷத்தையும் கொண்டு ஒரு புதிய கொடியை அவன் உருவாக்கி விட்டான். இந்த மாற்றத்துக்கான அவசியத்தை அவனது பாடலின் வாசகமும் நமக்குச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. நிவேதிதா தேவியின் கொடியிலுள்ள இந்திரன் வச்சிரத்தை,

இந்திரன் வச்சிரம் ஓர் பால்

என்று ஏற்றுக் குறிப்பிடும் பாரதி, அதே மூச்சில்,

—அதில்

எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால்

என்றும் பாடி இளம்பிறையைச் சேர்த்ததற்கான காரணத்தையும் கூறிவிடுகிறான். அதுமட்டுமல்ல. 'எங்கள் துருக்கர்'

என்று உரிமை கொண்டாடிப் பாடுவதன் மூலம் இந்து முஸ்லீம் ஒற்றுமையையும் அழுத்தமாக வலியுறுத்தி விடுகிறான்.

எனவே இந்திய நாட்டில் தேசியக் கொடியின் தேவை பற்றிய கருத்துக்கள் வலுப்பெற்ற காலத்தில் அத்தகைய கொடியின் தேவைக்கும் வடிவத்துக்கும் பாரதி தானும் ஒரு யோசனையை முன்வைத்தான் என்றும், அதுவே அவன் பாடிய 'தாயின் மணிக்கொடி' பற்றிய பாடல் என்றும் நாம் முடிவு கட்டலாம்.

[பின் குறிப்பு: பாரதியின் இரண்டாவது புதல்வி சகுந்தலா பாரதி 'என் தந்தை' என்ற தலைப்பில் சிவாஜி பத்திரிகையில் (1968-69) தொடர்ச்சியாக எழுதி வந்த கட்டுரைகளில், "விபின சந்திர பாலர் 1907 ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களில் திருவல்லிக்கேணி கடற்கரையில் பேசியதை **நான் நேரில்** கேட்டிருக்கிறேன்... கடற்கரைப் பிரசங்க மேடைக்குப் போகும்வரை பெரியதொரு ஊர்வலம். ஸ்ரீசந்திர பாலர் ஏறியிருந்த வண்டியை இளைஞர்கள் தாமே இழுத்துச் சென்றனர். ஊர்வலத்தில், முன்னால் அன்னை பாரத தேவியின் கொடி. அந்த ஊர்வலத்தின் வருணனையைத் 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற பாட்டில் காணலாம்" என்று எழுதியுள்ளார். பாரதியின் சகாக்களாக விருந்த பாரதி வரலாற்றாசிரியர்கள் எவரும் இந்தத் 'தகவலை'க் கூறவில்லை. எனினும் இது பாரதியின் 'தாயின் மணிக்கொடி'யின் பிறப்புக்குக் காரணம் கற்பிக்கும் ஆர்வத்தில் எழுந்த அபாரமான கற்பனைதான். ஏனெனில் விபின சந்திரபாலர் சென்னைக்கு விஜயம் செய்த 1907-ம் ஆண்டின் மே மாதத்தில் சகுந்தலா பாரதி பிறந்திருக்கவே இல்லை. அவர் பிறந்ததே 1908-ம் ஆண்டில்தான்.

பாரதியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்: பாரதி நூல்கள் அரசாங்கப் பதிப்பின் குறிப்பு]

பாரதி அன்பர் ரா. அ. பத்மநாபன், பாரதியின் 'இந்தியா' பத்திரிகையைப் பற்றி எழுதிய ஆங்கிலக் கட்டுரையொன்றில், சென்னையிலுள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள பிரிட்டிஷ் ஆட்சிக்கால அரசாங்கத் தஸ்தாவேஜுகளின் ஆதார பலத்தில், பாரதியின் 'தாயின் மணிக்கொடி' பிரசுரிக்கப்பட்ட தேதியைத் திட்டவட்டமாக உறுதிப் படுத்தியிருக்கிறார். அந்தத் தஸ்தாவேஜுகள் அன்றைய சென்னை அரசாங்கத்தின் சி.ஐ.டி இலாகா, இங்கு வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகைகளில் வெளிவந்த விஷயங்களைக் குறித்து, வாரா வாரம் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்து வந்த "பத்திரிகைகள் பற்றிய வாராந்தர அறிக்கை"களாகும். அத்தகைய அறிக்கையொன்றில் (Weekly News Report 1908, பக். 488) 11-7-1908 அன்று வெளிவந்த 'இந்தியா' பத்திரிகையில், "பாரத மாதாவின் உயரமான கொடிக் கம்பத்தைச் சுற்றிலும் பல்வேறு இந்தியர்கள் சூழ்ந்து நிற்பதாகவும் 'வந்தே மாதரம்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட அந்தக் கொடிக்கு வரக்கூடிய எந்தவோர் ஆபத்தினின்றும் அதனைப் பாதுகாக்க அவர்கள் தமது உயிரையும் கொடுக்கத் தயாராக உள்ளதாகவும்" கூறும் ஒரு பாடல் வெளிவந்ததாகக் கூறப்பட்டுள்ளது. (Bharathis unrivalled 'India' weekly—R.A.P. The Indian Review, Madras, March 1978) அண்மையில் கிட்டிய இந்தத் திட்டவட்டமான சான்று, பாரதியின் 'தாயின் மணிக்கொடி' தோன்றிய கால நிர்ணயம் பற்றிய எனது முடிவையும் உறுதிப்படுத்துகிறது].

# பரிசு பெறத் தவறிய பாடல்

"செந்தமிழ் நாடென்னும்
போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே!"

என்று தொடங்கும் பாரதியின் 'செந்தமிழ் நாடு' என்னும் பாடல் இன்று பள்ளிப் பிள்ளைகள் முதற்கொண்டு, பரந்து கிடக்கும் தமிழ் மக்கள் பலரும் நன்கறிந்த ஒரு பாடலாகும். தமிழ் நாட்டின் வளம், பண்பாடு, வீரம், இலக்கியச் செல்வங்கள், தொன்னெடும் புகழ் எல்லாவற்றையும் எளிய தமிழில், பாடுபவரும் கேட்பவரும் 'நான் தமிழன்' என்று உற்சாகத்தோடு நெஞ்சை நிமிர்த்தி உத்வேகம் கொள்ளும் அளவுக்கு உணர்ச்சியூட்டக்கூடிய முறையில் எழுதப்பட்ட அருமையான பாடல் இது.

என்றாலும், பாரதி உயிர் வாழ்ந்த காலத்தில் நடந்த ஒரு பாடல் போட்டியில், இந்தப் பாடல் பரிசு பெறத் தவறிவிட்டது. இது பரிசுக்குத் தகுதியற்ற பாடல் என அந்தப் போட்டியின் பஞ்சாயத்தாரால் தள்ளுபடி செய்யப் பட்டது என்று சொன்னால் உங்களுக்கு வியப்பாக இருக்கும் இல்லையா?

எனினும் அவ்வாறு நிகழத்தான் செய்தது. இதனை நான் அறிய வந்ததே ஒரு சுவையான கதை.

பாரதியின் கவிதைகள் எழுதப்பட்ட காலம், அவை பிறந்த சூழ்நிலை, பிறப்பதற்கான அவசியம், அவை வெளி வந்த தேதிகள் முதலியவை பற்றிய ஆராய்ச்சியில் பல்லாண்டுகளாகவே கவனம் செலுத்தி வந்த எனக்கு, ''செந்தமிழ் நாடு'' என்ற இந்தப் பாடலின் தோற்றம் பற்றிய விசாரணையின்போது பல 'சுவையான தகவல்கள்' கிட்டின.

முதலாவதாக பாரதியின் திருவாக்கினாலேயே, ''கும்ப முனி எனத்தோன்றும் சாமிநாதப் புலவன்'' எனப் புகழ்ந்து பாடப்பெற்ற தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதை யர் தமது ''நினைவு மஞ்சரி''யில் பாரதி பற்றி எழுதியுள்ள பகுதியில் பின்வரும் விவரத்தைக் கண்டேன்:

''சென்னையில் இவர் (பாரதி) இருந்த காலத்தில் நான் இவரோடு பல முறை பழகியிருக்கிறேன். பிரஸிடென்சி காலேஜில் வாரந்தோறும் நடைபெறும் தமிழ்ச் சங்கக் கூட்டத்துக்கு வருவார்; பேசுவார்; புதிய பாட்டுக்களைப் பாடுவார். வருஷப் பூர்த்தி கொண்டாட்டங்களில் ஒரு முறை வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைமையில் சங்கக் கூட்டம் நடந்து. கிருஷ்ணசாமி ஐயருடைய தமிழபிமானமும், தமிழ் வித்வான்களை ஆதரிக்கும் இயல்பும் தெரியாத பலர், 'இவருக்குத் தமிழ் பாஷையில் பழக்கம் இல்லையே. தமிழில். என்ன பேசப் போகிறார்' என்று நினைத்தனர். அவரோ 'தமிழைப் பற்றி அதிகமாகப் பேசுவானேன்? உலகத்திலுள்ள பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு விளங்கும் திருக்குறளைத் திருவள்ளுவர் இயற்றிய பாஷை இந்த பாஷை. நவரசமும் பொருந்திய இராமாயணத்தைக் கம்பர் செய்த பாஷை இது. எல்லோருடைய மனத்தையும் கரைத்து உருக்கித் தெய்வ பக்தியை உண்டாக்கும் தேவாரத்தை நாயன்மார்கள் இயற்றியது இந்த பாஷை. ஆழ்வார்கள் திவ்விய பிரபந்தத்தைப் பாடிய பாஷை இது என்று உத்ஸாகத்தோடு பிரசங்கம் செய்தார். கேட்ட யாவரும் ஆச்சரியமுற்றார்கள். அந்தக் கூட்டத்துக்கு வந்

திருந்த பாரதியார் அந்தப் பிரசங்கத்தில் மிகவும் ஈடுபட்டார். இந்தக் கருத்துக்களே பாரதியார் 'கம்பர் பிறந்த தமிழ்நாடு' போன்ற பகுதிகளை அமைத்துப் பாடுவதற்குக் காரணமாக இருந்தன."

(நினைவு மஞ்சரி: பாகம்-2)

## உ. வே. சா. கூற்று உண்மையா?

பாரதி முதன் முதலாகச் சென்னையில் தங்கியிருந்த காலம் 1904 நவம்பர் முதல் 1908 செப்டம்பர் வரையிலும் தான். இந்தக் காலத்தில் பாரதி பிரஸிடென்சிக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்ச்சங்கக் கூட்டங்களுக்குச் சென்றதுண்டு. அங்கு தானும் பட்டினத்தார் போன்ற தமிழ்க் கவிஞர்களைப் பற்றி உரையாற்றியதும் உண்டு என்பதற்கான சான்றுகள் உள்ளன. மேலும், உ.வே.சா. சிறந்த ஆராய்ச்சியாளர்; கால வெள்ளத்தில் சிதிலமடைந்து அழிந்து போயிருக்கக் கூடிய அருந்தமிழ் இலக்கியச் செல்வங்கள் பலவற்றையும் அரும் பாடுபட்டு தேடிப்பிடித்து, அவற்றைத் தக்க முறையில் பதிப்பித்து தமிழுலகத்துக்கு வழங்கிச் சென்ற வள்ளல் அவர். எனவே உ.வே.சா. கூறியுள்ளது போல், 'செந்தமிழ் நாடு' என்ற பாடலைப் பாரதி பாடுவதற்கு ஒரு வேளை வி.கிருஷ்ணசாமி ஐயர் ஆற்றிய சொற்பொழிவு ஒரு தூண்டுகோலாய் இருந்திருக்குமோ என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது.

இதனை உறுதிப்படுத்துவது போல் எனக்கு இன்னொரு 'சான்றும்' கிடைத்தது. பாரதி புதுவையிலிருந்து திரும்பி வந்து, தனது வாழ்நாளின் கடைசி ஈராண்டுக் காலத்தில் 'சுதேசமித்திர'னில் மீண்டும் பணியாற்றியபோது அவனோடு அப்பத்திரிகையில் உதவியாசிரியர்களில் ஒருவராக இருந்த காலஞ்சென்ற தேசபக்தர் எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் பல ஆண்டுகளுக்கு முன்னால் எழுதிய ஒரு கட்டுரை என் கண்ணில் பட்டது. 'பாரதியின் பண்பாடு' என்ற தலைப்பில் அமைந்த அந்தக் கட்டுரையில் அவர் இவ்வாறு எழுதியிருந்தார்:

"பல்லாண்டுகளுக்கு முன் சென்னை அரசினர் (பிரஸிடென்ஸி) கல்லூரித் தமிழ் மாணவர் சங்கத்தார் ஒரு சமயம் ஸ்ரீ வி.கிருஷ்ணசுவாமி ஐயர் என்பாரை—வேங்கடரமணா வைத்தியசாலையை ஸ்தாபித்தவர்; சென்னை அரசிலே நிர்வாக சபை அங்கத்தினராக இருந்தவர்—தமிழ் பற்றிப் பேச அழைத்தனர். கிருஷ்ண சுவாமி ஐயர் பெரிய படிப்பாளி. தமிழில் அவர் பேசியதே கிடையாது. அவர் மிதவாதி. தமிழ் பற்றி அவர் என்ன பேசப் போகிறார் என்றறிய நமது பாரதியாருக்கு ஆவல் உதித்தது. ஆச்சரியமும் கூட. அரசியலிலே பாரதியார் ஒரு தீவிரவாதி. அவருக்கு நேர் மாறானவர் வி.கிருஷ்ணசாமி ஐயர். தமிழிலே தமிழ் பற்றி பேசப்போகிறார் என்று கேள்விப்பட்டதும், பலர் அதிசயங் கொண்டு கூட்டத்துக்கு வந்திருந்தனர். பாரதியாரும் பிரசன்னமாயிருந்தார். பேசத்தொடங்கினார். கிருஷ்ண சுவாமி ஐயர். எல்லோரும் அண்ணாந்து நின்றனர். 'தமிழ் மொழி தொன்மையான மொழி. இனிய மொழியுமாம். தமிழ் வழங்கும் நாடு தமிழ்நாடு. தமிழ் நாட்டின் வளமோ விளம்பும் தரமன்று. தமிழில் உள்ள நூல்களிலே திருக்குறள் தலை சிறந்தது. தமிழகத்தில்தான் கம்பன் பிறந்தான். வள்ளுவர் தோன்றினார். இவ்விதமாகப் பொருள்படும் வண்ணம் பிரமாதமாகப் பேசினார். பாரதியார் பரவசம் கொண்டு கிடந்தார், பிரசங்கம் முடியும் வரையில். வீடு திரும்பியதுதான் தாமதம், 'செந்தமிழ் நாடு' என்னும் பாடலை இரவிலேயே பாடி முடித்தார் நமது கவிஞர்."

(தினமணி: பாரதி தினமலர், 12—9—1959)

இதனையும் படித்த பின்னால் 'செந்தமிழ் நாடு' என்ற பாடலைப் பாரதி பாடுவதற்கு, வி. கிருஷ்ணசாமி ஐயரின் சொற்பொழிவும் ஒரு காரணமாக இருந்திருக்கக்கூடும் என்றும், அவ்வாறாயின் இந்தப் பாடலைப் பாரதி தனது முதல் சென்னை வாச காலத்தின் போதே (அதாவது 1904 நவம்பருக்கும் 1908 செப்டம்பருக்கும் இடைப்பட்ட காலத்தில்) எழுதியிருக்கக்கூடும் என்றும்தான் எனக்குத் தோன்றி

யது. ஆனால் இந்தக் காலவரையறையில் 'சுதேசமித்திரன்' அல்லது பாரதியின் ஆசிரியப் பொறுப்பில் வெளிவந்த 'இந்தியா' அல்லது வேறு பத்திரிகை எதிலும் இந்தப் பாடல் வெளிவந்ததற்கான தடையமே கிட்டவில்லை. மேலும்,

—1908 ஜனவரியில் பாரதியே வெளியிட்ட 'ஸ்வதேச கீதங்கள்'

—1910 ஆம் ஆண்டில் 'ஜென்ம பூமி' என்ற தலைப்பில் வெளி வந்த 'ஸ்வதேச கீதங்'களின் இரண்டாம் பாகம்

—1910 நவம்பரில் வெளிவந்த 'மாதாவாசகம்'

—1914ல் தென்னாப்பிரிக்காவில் வெளியிடப்பட்ட 'மாதா மணிவாசகம்'

ஆகிய பாரதியின் கவிதைத் தொகுதிகளில் இடம் பெற்றிருந்த பாடல்களின் பட்டியல் வரிசை எதிலும் இந்தப் பாடல் இடம் பெறவில்லை என்பதும் தெரியவந்தது. இறுதியாக, 1919 ஜூன் மாதத்தில் பரலி சு. நெல்லையப்பர் 'நாட்டுப் பாட்டு' என்ற தலைப்பில் பாரதியின் புதிய பாடல்கள் சிலவற்றையும் சேர்த்து இரண்டாம் பதிப்பாக வெளியிட்ட பாரதியின் கவிதைத் தொகுப்பிலேயே 'செந்தமிழ் நாடு' என்னும் பாடல் இடம் பெற்றிருந்த விவரம் தெரிய வந்தது. இதனால் 1914 ஆம் ஆண்டு வெளிவந்த பாரதியின் 'மாதா மணிவாசகம்' என்ற தொகுதிக்கும், 1919 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'நாட்டுப் பாட்டு' என்ற தொகுதிக்கும் இடைப்பட்ட காலத்தில்தான் 'செந்தமிழ் நாடு' என்ற பாடல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற உண்மை புலனாயிற்று. அதே சமயம் 'செந்தமிழ் நாடு' என்ற பாட்டின் தோற்றக் காரணம் பற்றி உ. வே. சா.வும், எம். எஸ். சுப்பிரமணிய ஐயரும் தெரிவித்துள்ள விவரம் ஒன்றாக இருப்பினும், அது உண்மையான தகவல் அல்ல என்பது தெளிவாயிற்று.

டாக்டர் உ. வே. சா. சிறந்த தமிழறிஞர்தான். ஆராய்ச்சியாளர்தான்; பண்டைத் தமிழ் இலக்கியங்களையும் அவை பற்றித் தாம் அறிய வந்த உண்மைகளையும் திரிக்காமல் மறைக்காமல் உள்ளவாறே நமக்களித்த நேர்மையாளர்தான். என்றாலும் அவர் பழைய இலக்கியங்களில் பெருங்கவனம் செலுத்தியவரேயன்றி, தமது காலத்தில் தோன்றிய இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களிலோ இலக்கிய கர்த்தாக்களிடமோ அத்தனை அக்கறை காட்டியவர் அல்ல. அவருக்கு 'மகாமகோபாத்தியாயர்' என்ற பட்டம் வழங்கப்பட்ட சமயத்தில், பாரதி அமரத் தன்மை வாய்ந்த மூன்று அருமையான பாக்களினால் அவரை வாழ்த்திப் பாடியிருக்கிறான். என்றாலும் பாரதி உயிர் வாழ்ந்த காலத்தில் பாரதியின் பெருமைகளையோ, அவனது கவிதையின் சிறப்புக்களையோ ஐயரவர்கள் உணர்ந்தறிந்து போற்றினார் என்பதற்கான ஆதாரங்களே இல்லை. மேலும் அவ்வாறே உணர்ந்திருந்தாலும்கூட, அரசாங்கக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வந்த அவருக்கு, அன்று அரசியலில் தீவிரவாதியாக இருந்து 'அபாயகரமான' கருத்துக்களைத் தெரிவித்து வந்த பாரதியை பாராட்டுவது ஆபத்தாகக் கூடத் தோன்றியிருக்கும். எனவே பாரதியின் மறைவுக்குப் பின், அவனது பெருமையையும் அருமையையும் தமிழுலகம் அறிந்துணரத் தலைப்பட்ட காலத்தில்தான், அதுவும் உ.வே.சா அவர்கள் அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் தாம் எழுதிய 'நினைவு மஞ்சரி' என்ற நினைவுக் குறிப்புகளில் தான் பாரதியைப் பாராட்டிச் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். என்றாலும் பாரதியை பாராட்ட வந்த இடத்தில் அவர் எழுதியுள்ளது உண்மைக்கு மாறானது என்பதோடு மட்டுமின்றி, பாரதிக்குப் பெருமை செய்வதாகவும் இல்லை.

உ.வே.சா. சென்னை பிரசிடென்சிக் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் வி. கிருஷ்ணசாமி ஐயர் தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றி உரையாற்றிய கூட்டத்துக்குப்

பாரதியும் சென்றிருக்கலாம். கிருஷ்ணசாமி ஐயரின் உரையும் சிறப்பாகவே இருந்திருக்கலாம். ஆனால் அந்த உரைதான் பாரதியின் 'செந்தமிழ் நாடு' என்ற பாடலுக்குத் தோற்றக் காரணமாக விளங்கியது என ஐயரவர்கள் கூறுவதானது, கிருஷ்ணசாமி ஐயரின் பேச்சாற்றலும் தமிழ்ப் புலமையும் பாரதி போன்ற ஒரு கவிஞனுக்குக்கூட ஒரு பாடலை எழுத அடியெடுத்துக் கொடுக்கும் அளவுக்கு, அத்தனை உயர்வாக இருந்தன என்று சுட்டிக்காட்டி, கிருஷ்ணசாமி ஐயருக்குப் புகழ் சேர்ப்பதாக உள்ளதே தவிர, பாரதிக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை என்பது தெளிவு.

கிருஷ்ணசாமி ஐயர் தமிழில் புலமையும் அறிவும் மிக்கவராகவே இருந்திருக்கலாம். அவர் அரசியலில் மிதவாதியாக இருந்த போதிலும், தீவிரவாதியான பாரதியின் பாடல்களை அவர் ரசித்துப் போற்றினார். அந்தக் காலத்தில் தேசிய இயக்கம் சார்ந்த வாழ்க்கை வரலாறுகள், அறிக்கைகள் முதலியவற்றைப் புத்தகங்களாக அச்சிட்டுப் பெரும் பணியாற்றிய ஜி.ஏ. நடேசன், தீவிரவாதியான பாரதியை மிதவாதியான கிருஷ்ணசாமி ஐயரிடம் 1907-ம் ஆண்டில் ஒரு நாள் அழைத்துச் சென்று, பாரதி இயற்றியிருந்த தேசிய கீதங்கள் சிலவற்றைப் பாரதியையே பாட வைத்தார் என்பதும், அந்தப் பாடல்களைக் கேட்டுப் பரவசமடைந்த கிருஷ்ணசாமி ஐயர் பாரதி பாடிய பாடல்களைச் சிறு துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் என்பதும் சரித்திரம். 'வந்தே மாதரம் என்போம்!' 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே', 'மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்ற முதலடிகளைக் கொண்ட பாரதியின் மூன்று பாடல்களும், இதன் பயனாக ஒரு துண்டுப் பிரசுர நூலாக வெளி வந்தன. தனி நூல் வடிவில் வந்த பாரதியின் முதல் கவிதைத் தொகுப்பே இந்தக் குட்டிப் பிரசுரம்தான்.

என்றாலும், பள்ளிப் பருவத்திலேயே காளமேகம்போல் கவிபாடும் திறமை பெற்றுவிட்ட பாரதிக்கு, பதினோரு வயதி

லேயே தமிழ்ப் புலவர்களின் வாயால் 'பாரதி' எனப் பட்டம் பெற்று விட்ட பாரதிக்கு, பாலியத்திலேயே தமிழில் நல்ல புலமை பெற்று விட்ட பாரதிக்கு, சென்னைக்கு வந்து பத்திரிகைத் துறையில் பணியாற்றுவதற்கு முன்பே மதுரையில் தமிழாசிரியனாகச் சில காலம் பணியாற்றிவிட்டு வந்த பாரதிக்கு, உ.வே.சா. குறிப்பிடும் சென்னை பிரசிடென்சிக் கல்லூரியில் கிருஷ்ணசாமி ஐயரைப் போலவே தானும் தமிழ்க் கவிஞர்களைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றி வந்த பாரதிக்கு, தேசியப் போராட்டத்தில் பார்வையாளனாக இல்லாமல் அதில் தீவிரமான பங்கெடுப்பாளனாகவே மாறி விட்ட பாரதிக்கு, எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டுப் பற்றினால் உந்தப்பட்டு 'எந்தையும் தாயும்' போன்ற அமரத்துவம் வாய்ந்த, ஈடிணையற்ற அருமையான கவிதைகளை ஏற்கெனவே பாடத் தொடங்கிவிட்ட பாரதிக்கு, அந்தப் பாடலில் 'எங்கள் அன்னையர் தோன்றி மதலைகள் கூறி அறிந்ததும் இந்நாடே' என்று உள்ளத்தைத் தொடும் விதத்தில் நாட்டுப் பற்றை உணர்த்தி விட்ட பாரதிக்கு, கிருஷ்ணசாமி ஐயர் தமிழின், தமிழ்நாட்டின் பெருமையைக் குறித்துப் பேசிய பேச்சுத்தான் 'செந்தமிழ்நாடு' என்ற பாட்டைப் பாடுவதற்கு அடியெடுத்துக் கொடுக்கும் தூண்டுகோலாக விளங்கியது என்று உ. வே. சா. கூற முனைந்தது நகைப்புக்கிடமான கூற்றாகவே உள்ளது. இதேபோல் எம். எஸ். சுப்பிரமணிய ஐயரும் பாரதியோடு ஈராண்டுக் காலம் ஒன்றாகப் பத்திரிகைப் பணியாற்றியவர் என்ற போதிலும், பாரதி உயிர் வாழ்ந்த காலத்தில் பாரதியின் வாயிலாகவே இந்தப் பாடலின் தோற்றக் காலத்தையும் காரணத்தையும் தெரிந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தைத் தவற விட்டுவிட்டு, உ.வே.சா. நினைவு மஞ்சரியில் எழுதியதையே ஆதாரமாகக் கொண்டு, உ. வே. சா. கூறிய விஷயத்துக்கே கண்ணும் மூக்கும் வைத்து, சற்றே கற்பனையையும் கலந்து, தமக்கே உரிய நாடக பாணி நடையில் கிருஷ்ணசாமி ஐயரின் பேச்சைக் கேட்ட அன்றிரவே பாரதியின் 'செந்தமிழ் நாடு' என்ற பாட்டு பிறந்தது என்று கூறியிருக்கிறார் என்பதும் தெளிவாகிறது.

இங்கு இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட வேண்டும். பாரதி தேசியப் பாடல்களை எழுதத் தொடங்கிய காலத்தில் தன்னைப் போல் பிறரும் தேசியப் பாடல்களை எழுத வேண்டும் என்று விரும்பினான். எனவே 1906 பிப்ரவரி 13ம் தேதியன்றே அவன் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் பின்வரும் விளம்பரத்தை வெளியிட்டான்:

"எமது தாய் நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்தில் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதியிருக்கின்றேனாதலின், பண்டைத் தமிழ் நூல்களில் பாரத நாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்களாயின், அவர் மாட்டு மிக்க கடப்பாடுடையவனாவேன். தமிழ்ப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் நாட்டுப்படலங்களில் நிடதம் கோசலம் முதலிய பகுதிகளைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்பட மாட்டா. தற்காலத்தே தமிழ்ப் புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேசபக்தி'ப்பாக்கள் புனைந்தனுப்புவாராயின் அவையும் நன்றியறிவுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

இங்ஙனம்
**சி. சுப்ரமணியபாரதி**

—(பாரதி தமிழ்: தூரன், பக்கம் 100)

இதன் மூலம் தேசியப்பாடல்கள் என்றால் அவை எப்படி இருக்கவேண்டும் என்று பாரதி ஏனைய புலவர்களுக்குக் கோடி காட்டி உணர்த்தியதோடு மட்டுமின்றி, அவர்களை அத்தகைய புதிய தேசியப் பாடல்களைப் புனையுமாறு தூண்டவும் செய்தான் என்பது தெரிய வருகிறது. இவ்வாறு பிறரும் பாட்டெழுதத் தூண்டுகோலாக விளங்கிய பாரதிக்கு, கிருஷ்ணசாமி ஐயரின் பேச்சே தனது தாய்

நாட்டைப் பற்றிப் பாடுவதற்குத் தூண்டுகோலாக இருந்தது என்று கூறுவது உண்மைக்கு மாறானது என்பது தெளிவு.

## எப்போது பிறந்தது?

சரி. 'செந்தமிழ்நாடு' என்ற பாடலைப் பாரதி எப்போது தான் எழுதினான்? 1919ல் இரண்டாம் பதிப்பாகப் பரலி நெல்லையப்பர் வெளியிட்ட 'நாட்டுப் பாட்டு' என்ற பாடல் தொகுதியில் இந்தப் பாடல் இடம் பெற்றிருந்தது என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். எனவே 1919க்கு முன்பே இந்தப் பாடல் எழுதப்பட்டிருக்க வேண்டும். எனினும் இந்தப் பாடல் முதன் முதலில் எப்போது வெளியாயிற்று? இது பற்றிய விசாரணையின் போது எனக்குப் பரலி சு. நெல்லையப்பர் பல ஆண்டுகளுக்கு முன் யதுகிரி அம்மாள் எழுதியுள்ள "பாரதி நினைவுகள்" என்ற நூலுக்கு எழுதியுள்ள ஒரு மதிப்புரை காணக் கிடைத்தது. அதில் அவர் பாரதியின் 'செந்தமிழ் நாடு' என்னும் பாடல் தாம் பணியாற்றி வந்த 'பாரதி' என்ற பத்திரிகையில் 1915-ம் ஆண்டில் வெளிவந்தது என்றும், பின்னர் அது தாம் வெளியிட்ட 'நாட்டுப்பாட்டு' என்ற பாரதியின் பாடல் தொகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டதென்றும் தெரிவித்திருந்தார். (தினமணி: 9-12-1954)

'பாரதி' என்பது மதுரைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரான பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் தமையனார் சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர் அந்நாளில் நடத்தி வந்த பத்திரிகையாகும். அதில் துணையாசிரியராகப் பணியாற்றி வந்த நெல்லையப்பர், பாரதியின் பாடல்கள் சிலவற்றை அதில் வெளியிட்டு வந்தார். அவற்றில் ஒன்றே 'செந்தமிழ்நாடு'. இந்த விவரம் பரலி நெல்லையப்பரின் வாழ்நாள் காலத்தில் அவரது வாய்மொழியாகவே அவற்றைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்து 'பாரதியாரின் தம்பி' என்ற பெயரில் பரலி

நெல்லையப்பரைப் பற்றி எதிரொலி விசுவநாதன் எழுதியுள்ள நூலின் மூலமும் உறுதிப்படுகின்றது ('பாரதியாரின் தம்பி— திருவாரூர் சு. விசுவநாதன், 1969).

எனவே பாரதியின் 'செந்தமிழ் நாடு' என்ற பாடல் 1915-ம் ஆண்டு வாக்கில் எழுதப்பட்டு வெளிவந்த பாடலே என்பது உறுதியாகின்றது. எனினும் இந்தப்பாடலைப் பாரதி இயல்பாகவே எழுதினானா அல்லது அவ்வாறு எழுதுவதற்கான சந்தர்ப்பம் ஏதேனும் வாய்த்ததா என்பதை ஆராயும் போது கவிஞர் பாரதிதாசன் பாடியுள்ள ஒரு பாட்டு என் பார்வைக்குக் கிட்டியது. "ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்" என்ற பெயரில் அவர் நடத்தி வந்த கவிதை மாசிகையின் பாரதி சிறப்பு மலரில், "செந்தமிழ் நாடென்னும் போதினிலே" (என்ற பாடல் உற்பத்திக்குக் காரணம்) என்ற தலைப்பில் பின்வரும் பாடலை எழுதி வெளியிட்டிருந்தார்:

'தமிழ்நாட்டைப் பற்றித்
தமிழ்க்கவிகள் தந்தால்
அமைவான பாட்டுக்கு
அளிப்போம் பரிசென்று
சான்ற மதுரைத்தமிழ்ச்
சங்கத்தார் உரைத்தார்.
தேன்போற் கவிஒன்று
செப்புக நீர்' என்று
பலநண்பர் வந்து
பாரதி யாரை
நலமாகக் கேட்டார்;
அதற்கு நமதுஐயர்

'என்கவிதான் நன்றாய்
இருந்திடினும் சங்கத்தார்
புன்கவி என்றே சொல்லிப்
போட்டியிடுவார். போட்டால்தான்
சங்கத்தில் சர்க்கார்
தயவிருக்கும். ஆதலினால்
உங்கட்கு வேண்டுமெனில்
ஓதுகின்றேன்' என்றுரைத்தார்.
'அந்தவிதம் ஆகட்டும்'
என்றார்கள் நண்பரெலாம்.
'செந்தமிழ் நாடென்னும்
போதினிலேயின்பத்
தேன்வந்து பாயுது
காதினிலே' என்று
அழகுத் தமிழ்நாட்டை
அப்படியே நெஞ்சால்
எழுதி முடித்தார்!
இசையோடு பாடினார்!
காதினிக்கும், நல்ல
கருத்தினிக்கும் பாட்டிந்நாள்
மேதினியிற் சோதி
விளக்கு!

(ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், புத்தகம் 1, வெளியீடு 6, யுவ, ஆவணி, 1935, புதுச்சேரி)

இதன் மூலம் மதுரைத் தமிழ்ச்சங்கம் தமிழ்நாடு பற்றிய பாடற்போட்டி ஒன்றை நடத்தியதாகவும், அந்தச் சந்தர்ப் பத்தில் பாரதியின் நண்பர்கள் அவரை அணுகி அவரைத்

தமிழ்நாடு பற்றி ஒரு பாடல் பாடியனுப்புமாறு கேட்டுக் கொண்டதாயும், எனினும் பாரதி தாம் போட்டிக்குப் பாட்டு எழுதியனுப்பினாலும், அரசாங்க விரோதியான தமக்குப் பரிசளிக்கமாட்டார்கள் என்று கூறியதாகவும், எனினும் நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அவர்களுக்காகச் 'செந்தமிழ் நாடு' என்ற பாட்டை எழுதியதாகவும் நாம் அறிய முடிகிறது. எனினும் நண்பர்களின் வேண்டுகோளுக்காக எழுதப்பட்ட பாடல் குறிப்பிட்ட போட்டிக்கு அனுப்பப்பட்டதா என்ற விவரம் பாரதிதாசனின் பாடலில் இல்லை. பாடல் போட்டி அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தையொட்டி நண்பர்களின் வேண்டுகோளுக்காகவே எழுதப்பட்டது என்ற குறிப்பு மட்டுமே காணக் கிடைத்தது.

இதன்பின் எனக்கு வேறொரு விவரமும் கிட்டியது. தேசபக்தர் வ.உ. சிதம்பரனாரின் நினைவாக, டில்லி தமிழ்ச் சங்கம் வெளியிட்ட "சுடர்: வ.உ.சி. மலர்" என்ற வெளியீட்டில், முதுபெரும் எழுத்தாளர் பெ.நா. அப்புசாமி "காலம் காலம் தாழ்த்திப் புகழ்பெற்ற அறிஞர்" என்ற தலைப்பில் வ.உ.சி.யைப் பற்றி எழுதியிருந்த கட்டுரையே அந்த விவரத்தை வழங்கியது. வ.உ.சி. சம்பந்தப்பட்ட தொடக்க கால நினைவுகளை நினைவு கூரும் கட்டுரையாசிரியர், அந்நாளில் தூத்துக்குடியில் வழக்கறிஞர்களாகவிருந்த வ.உ.சி.யின் நண்பர்கள் சிலரை நினைவு கூர்கிறார். "இவர்களுள் எஸ்.வி. விசுவநாத ஐயரைப் பற்றிச் சிறிது சொல்ல விரும்புகிறேன்" என்ற பீடிகையோடு பெ.நா. அப்புசாமி பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

"அவர் பின்னர் மற்றொரு வகையாகவும் தேசத் தொண்டு புரிய விரும்பினார். அவரது தொண்டைப்பற்றி எனது சிறிய தகப்பனாரான அ. மாதவையர், தாம் இயற்றிய 'பொதுதர்மசத்கீத மஞ்சரி' என்னும்சிறிய பாடல்-தொகுதியின் முன்னுரையில் 1914ல், (அதாவது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்) பின்வருமாறு கூறியிருக்கிறார்:

'சாதாரண ஜனங்கள் பாடும் நாடோடிப் பாடல்களை உண்டு பண்ணும் சுதந்திரம் மட்டும் ஒருவனுக்கு ஏற்பட்டு விட்டால், அந் நாட்டுச் சட்டதிட்டங்களை நியமிப்பவர் யாரென்று அவன் கவனிக்க வேண்டியதில்லை என்பது ஆங்கிலேய மேதாவி ஒருவர் வாக்கு. அவ்விதப் பாட்டுக்கள் ஜனங்களின் மனப்போக்கு நடவடிக்கைகளை மேலாடி வசீகரித்துத் தம் கருத்தின் வழிப்படுத்தவல்லன என்பது அவர் குறிப்பு. சிங்கார ரசமும் பக்தி ரசமும் செறிந்துள்ள பாட்டுக்கள், தமிழராகிய நமக்குள் அமோகமாயுள; நாடு நகர மடாலய ஜன சமூக தர்மங்களைக் கூறும் கீதங்களோ நரிக்கொம்பே. பொது நன்மைக்காக உழைத்துவரும் எனது நண்பர் ப்ரும்மஸ்ரீ. எஸ். வி. விசுவநாதையர், இக் குறையை நீக்கக் கருதி, இந்தியாவின் அருமை பெருமைகளையும், சாமானியக் கல்வியும், கைத்தொழில்களாகிய தற்கால நாகரீகங்களும் தழைத்து நாம் அபிவிருத்தியடைவதற்கான சாதனங்களையும பற்றி எளிய நடையில், யாவர்க்கும் பயன்படும் வண்ணம் இயற்றப்படும் தமிழ்ப் பாட்டுகளுக்கு, இரானடே, கோக்கலே என்னும் தேசாபிமானிகள் பேரில் ரூ. 200 வரைப் பரிசுகள் கொடுப்பதாகப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்தார். அவ் விளம்பரப்படி வந்த கீதங்களில், இப் புத்தகத்திலுள்ள இந்தியக் கும்மி தக்க மத்தியஸ்தர்களால் இரானடே தலைப்பரிசு அளிக்கப்பட்டது.'

"இப்பரிசுப் போட்டியில் (சி. சுப்பிரமணிய) பாரதியும கலந்து கொண்டார். அவர் அனுப்பிய பாட்டு பரிசு பெறவில்லை. மாதவையர் எழுதிய பாட்டு அதனினும் மேலாகக் கருதப்பட்டு பரிசளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இம்முடிவை வாசகர்கள் ஒப்பலாம் அல்லது மறுக்கலாம் ஆனால் இது உண்மை."

(சுடர் : வ.உ. சி. மலர் புதுடில்லி, 1964)

தேசபக்தர் வ.உ.சி.யைப் பற்றி எழுதவந்த கட்டுரையில் பெ.நா. அப்புசாமி தமது சிறிய தகப்பனாரான அ. மாத

வையாவின் பெருமையை அனாவசியமாக ''நிலை நாட்ட'' முயன்றிருக்கிறார் என்பது வெளிப்படை. என்றாலும் மாதவையா எழுதியதையே மேற்கோள் காட்டி எழுதியுள்ள இந்தக் குறிப்பானது, சில விஷயங்களை நமக்கு உணர்த்துகிறது. நாட்டுக்குத் தேவையான நல்ல பாடல்களை இயற்றுவோருக்கு ரானடே பெயரில் பரிசுகள் வழங்குவதாக தூத்துக்குடியைச் சேர்ந்த வக்கீல் விசுவநாதையர் என்பவர் பத்திரிகையில் அறிவித்தார். இந்தப் போட்டியில் மாதவையா, பாரதி போன்றவர்கள் பலரும் கலந்து கொண்டனர். எனினும் போட்டியில் மாதவையாவுக்கே முதல் பரிசு கிடைத்தது. பாரதிக்கு அப் பரிசு கிடைக்கவில்லை. இந்தப் போட்டி 1914ஆம் ஆண்டு வாக்கில் நடைபெற்றிருக்க வேண்டும்—என்பனவே நமக்குக் கிட்டும் விஷயங்கள்.

பாரதிதாசன் பாடல் இத்தகைய போட்டி ஒன்றை மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தியதாகக் கூறுகிறது; மாதவையாவின் முன்னுரை போட்டியை விசுவநாதையர் என்பவர் நடத்தினார் எனக் கூறுகிறது. என்றாலும் அந் நாளில் தூத்துக்குடியில் வழக்கறிஞர்களாக இருந்த வ. உ. சிதம்பரம் பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதி முதலியோர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்கள். இவர்களைப்போல் எஸ். வி. விசுவநாதையரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு கொண்டவராகவும், குறிப்பிட்ட கால கட்டத்தில் அதன் முக்கியஸ்தர்களில் ஒருவராகவும் இருந்திருக்கக் கூடும். அவ்வாறாயின் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் விசுவநாதையர் பரிசுப் போட்டி பற்றிய அறிவிப்பைச் செய்திருக்கக் கூடும். இது ஆராயப்பட வேண்டிய விஷயம்.

இரண்டாவதாக, பாரதிதாசனின் பாடல், போட்டி அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கியே பாரதி 'செந்தமிழ் நாடு' என்ற பாடலைப் பாடினார் என்றும், போட்டியில் பாரதி கலந்து கொள்ள விரும்பவில்லை என்றும் தெரிவிக்கும் குறிப்பையே

கொண்டுள்ளது. அப்புசாமியின் கட்டுரையோ, போட்டிக்குப் பாரதியின் பாடலும் வந்தது. எனினும் அது பரிசு பெறவில்லை என்று தெரிவிக்கிறது. ஒருவேளை போட்டியில் பாரதியின் பாடலுக்குப் பரிசு கிடைத்தால், வறுமையில் வாடிக்கொண்டிருந்த பாரதிக்கு, அப்பரிசு பெருத்த உபகாரமாயிருக்குமே என்ற எண்ணத்தின் பேரில், பாரதியின் நண்பர்களில் எவரேனும் பாரதியின் பாடலைப் பாரதிக்குத் தெரியாமலேயே போட்டிக்கு அனுப்பி வைத்தார்களோ என்னவோ?

எவ்வாறிருப்பினும், மேற்கூறிவந்த விவரங்களிலிருந்து பின்வரும் விஷயங்கள் நமக்குத் தெளிவாகின்றன:

—பாரதியின் 'செந்தமிழ் நாடு' என்னும் பாட்டு 1914 வாக்கில் நடத்தப்பட்ட ஒரு பாடல் பரிசுப் போட்டியை ஒட்டியே எழுதப்பட்டது.

—அந்தப் பாடல் எப்படியோ போட்டியின் முடிவைத் தீர்மானிக்கும் மத்தியஸ்தர் குழுவுக்கும் போய்ச் சேர்ந்தது.

—ஆயினும் போட்டியில் பாரதியின் பாடலுக்குப் பரிசு கிடைக்கவில்லை. மாறாக, மாதவையா எழுதிய பாடலுக்கே பரிசு கிட்டியது.

அதே சமயம் இவை என்னுள் பின்வரும் கேள்விகளை எழுப்பின. 'தேசத்தொண்டு' நோக்கம் மிக்கவரென்றும், வ. உ. சி. யின் நண்பரென்றும், ஜனங்களின் மனப் போக்கை வசீகரித்துத் தம் கருத்தின்படி வழிப்படுத்த வல்லனவான நாட்டுப் பாடல்கள் இல்லாத "குறை"யை நீக்கிக் கருதியவரென்றும் கூறப்படுகின்ற விசுவநாதையருக்கு, அவர் வாழ்ந்த காலத்திலேயே, வெள்ளை அரசாங்கம் அஞ்சி நடுங்கும் அளவுக்கு அருமையான தேசபக்திப் பாடல்களை எழுதி, குறைந்த பட்சம் தேசபக்தர்கள் மத்தியிலேனும் புகழ் படைத்தவராக அன்று விளங்கிய பாரதியின் பாடல்கள்

எதுவும் கண்ணுக்குப்பட்டதில்லையா? பாரதியின் பாடல் போட்டிக்கு வந்த பின்பும், அதற்குப் பரிசு அளிப்பதன் மூலம் அவரைக் கௌரவிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டதில்லையா? இதற்குரிய பதிலாக இத்தகைய "நடிப்புச் சுதேசி"களின் தன்மை குறித்து போட்டி அறிவிப்பு வந்த சமயத்திலேயே பாரதி தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறான். "சங்கம் என் பாடலுக்குப் பரிசளிக்காது; பரிசளிக்காவிட்டால்தான் சர்க்கார் தயவு சங்கத்துக்கு இருக்கும்" என்று தெளிவாகவே உணர்த்தியிருக்கிறான். எனவே பாரதியின் பாடல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்படாததில் வியப்பேதும் இல்லை. மேலும் மாதவையாவே விசுவநாதையரைத் தமது 'நண்பர்' என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே மாதவையாவுக்குப் பரிசை வழங்கி, விசுவநாதையர் தமது 'நட்புக் கடனை' உணர்த்திக் கொண்டதிலும் வியப்பில்லை. எனினும், இந்தப் போட்டி விவரத்தை நினைவூட்ட வந்த பெ. நா. அப்புசாமி, பரிசு பெற்ற மாதவையாவின் பாட்டையும் சேர்த்து எழுதியிருந்தால், நன்றாயிருந்திருக்கும்!

மாதவையா சிறந்த எழுத்தாளர்தான். பாரதி தேசிய கவியாக மலர்வதற்கு முன்பே 'பத்மாவதி சரித்திரம்' என்ற நாவலை எழுதித் தமிழ் இலக்கிய வரலாற்றில் தமக்கு ஓர் இடத்தைத் தேடிக்கொண்டவர்தான். என்றாலும், கவிதை, பாடல்கள் என்ற பெயரால் தாம் எழுதியவற்றின் மூலம் அவர் எதையும் சாதித்து விடவில்லை. விசுவநாதையர் நடத்திய போட்டியில் முதல் பரிசு பெற்ற மாதவையாவின் 'இந்தியக் கும்மி' என்ற பாடலைப் படித்துப் பார்க்கும் 'பாக்கியம்' எனக்குக் கிட்டவில்லையாயினும், அவரது பாடல்கள் சிலவற்றை நான் படித்துப் பார்த்திருக்கிறேன். சொல்லப் போனால், பாரதியின் வழியைப் 'பின்பற்றி' மாதவையாவும்கூடத் தமது காலத்தில் சில தேசிய கீதங்களை இயற்றியிருக்கிறார். எடுத்துக்காட்டாக, அவர் பாடிய தேசாபிமானக் கண்ணிகளில் சில வரிகளை இங்கு வழங்குகிறேன்.

## தேசாபிமானக் கண்ணிகள்

(வர்ணமெட்டு 'மார்கழி மாதம் திருவாதிரை நாள்')

### பல்லவி

'வந்தே மாதரம்!' என்றே பாடுவம்
மகிழ்வாய் உனை, அம்மே-எம்
சிந்தையில் நாவினில்
செய்கையில் உன்புகழ்
தேடு மினி, அம்மே!

### கண்ணிகள்

இந்தியர்க்குள் ஜாதி, மத கர்ம
பேதங்கள் ஏதுமிலாதம்மே!
தந்தை தாய் தெய்வம் நீயே,
உனையல்லால் ஏதுமிலாதம்மே!
மேதினி யெங்கும், அஞ்ஞானமே
ஆதியில் மேவின போதம்மே!
வேத வேதாந்த சித் தாந்தம்
விசாரித்த வித்தகர் யார் அம்மே!
ஆயிரங்கால்களில் ஓடி வளம்தரும்
ஆறுகள் உண்டம்மே!
தாயெனும் தன்மையில் உணர்வுகள் தரும் நிலப்
பேறுகள் உண்டம்மே!...

பாடல் இன்னும் நீண்டுகொண்டே செல்கிறது. இந்தப் பாடலைப் பார்க்கும்போது பாரதியைப் போல் தாமும் பாடவேண்டும் என்று மாதவையா பாட முனைந்த

ஆர்வத்தையும், அவருக்கும் தேசபக்தி இருந்ததையும் நாம் உணர முடிகிறதே ஒழிய, கவிதைச் சுவையை நாம் இதில் கடுகளவேனும் காண முடியவில்லை.

பாரதியின் 'செந்தமிழ் நாடு' என்ற பாடலுக்குக் கிட்டிய மேற்கூறிய அனுபவம் முழுவதும் நமக்குப் 'புதுமைப்பித்தன்' கூறிய வாசகங்களையே நினைவூட்டு கிறது: "பரமார்த்த குரு சீடர்கள் எத்தனை பேர் சுமந்து வந்தாலும் பரங்கிக்காய் குதிரை முட்டை ஆகிவிடாது. அதேபோல் நந்திகள் ஆயிரம் தான் வழிமறித்துக் கிடந்தாலும் அவை நல்ல இலக்கியத்தின் ஸ்தானத்தைத் தடுத்து நிறுத்திவிட முடியாது."

# புதிய ருஷ்யாவும் பாரதியும்

1917 ஆம் ஆண்டில் மாமேதையான லெனினின் தலைமையில் ருஷ்ய நாட்டில் அக்டோபர் புரட்சி வெற்றி பெற்றது. அந்தப் புரட்சி வெற்றி பெற்ற காலத்தில் வாழ்ந்தவன் பாரதி. முப்பத்தெட்டு ஆண்டுக் காலம் வாழ்ந்த பாரதி 1904ஆம் ஆண்டில் தனது 22ஆம் வயதில் பத்திரிகைத் தொழிலில் புகுந்து, உலகப் போக்குகளை உடனுக்குடன் உன்னிப்பாகக் கவனிக்கும் வாய்ப்பைப் பெற்று, இந்திய தேச விடுதலை இயக்கத்தோடு நெருங்கிய, நேரடியான தொடர்பு கொண்டு, தேசியக் கவியாக மலரத் தொடங்கினான். இந்தத் தருணத்தில்தான் 1905 ஆம் ஆண்டில் ருஷ்ய நாட்டில் ஒரு புரட்சி நிகழ்ந்தது. இதன் பின்னர் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், பாரதி காலமாவதற்கு நான்காண்டுகளுக்கு முன்னால், அதே ருஷ்ய நாட்டில் 1917 ஆம் ஆண்டில் அக்டோபர் புரட்சி நிகழ்ந்தது. வெற்றி கண்டது. எனவே லெனின் கூறிய மாதிரி பின்னால் வரவிருந்த (1917ஆம் ஆண்டின்) பெரும் புரட்சிக்குப் "பொது ஒத்திகையாக"த் திகழ்ந்த 1905 ஆம் ஆண்டின் புரட்சிக்கும்,1917 ஆம் ஆண்டின் அக்டோபர் புரட்சிக்கும்; அதன் பின்னர் ஐந்து ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் தான் பாரதியின் செம்பாகமான இலக்கிய வாழ்க்கைக் காலம் என்று கொள்ள வேண்டும். அதாவது தொடங்கித் தோற்றுப்போன (1905) முதல் புரட்சியும், தொட்டதை முடித்து வெற்றி கண்ட (1917 அக்டோபர்) இறுதிப் புரட்சியும் நிகழ்ந்த கால கட்டத்தில் வாழ்ந்தவன், வளர்ந்தவன் பாரதி.

## ருஷ்யப் புரட்சி வழங்கிய புது நம்பிக்கை

இவ்வாறு கணிப்பதற்கும் காரணம் உண்டு. ஏனெனில் ருஷ்யப் புரட்சிகளுக்கும், இந்திய தேசிய இயக்கத்துக்கும் சம்பந்தம் உண்டு. 1904 ஆம் ஆண்டில் ருஷ்ய-ஜப்பானிய யுத்தம் நிகழ்ந்தது. இந்த யுத்தத்தில் ஜார் அரசாங்கத்தின் கையாலாகாத்தனம் வெளியாயிற்று; யுத்தத்தில் ருஷ்யா தோற்றது. இந்தத் தோல்வியைக் குறித்து, ருஷ்யாவின் புரட்சித் தலைவரான லெனின் "போர்ட் ஆர்தரின் வீழ்ச்சி எதேச்சாதிகாரத்தின் வீழ்ச்சிக்கு அங்குரார்ப் பணம்!" என்று எழுதினார். இந்தத் தோல்வியைத் தொடர்ந்து, ருஷ்ய நாட்டில் 1905ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முதல் ருஷ்யப் புரட்சி நிகழ்ந்தது. இந்தப் புரட்சி தோல்வி கண்டது. எனினும் இந்த இரு நிகழ்ச்சிகளும் ஆசிய மக்களுக்குப் புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்தன. சின்னஞ்சிறு ஆசிய நாடான ஜப்பான், மாபெரும் ஏகாதிபத்தியமான ருஷ்யாவைப் போரில் வெற்றி கண்டதால், ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களை எதிர்த்து, ஆசிய நாட்டினர் வெற்றி பெற முடியும், விடுதலை காணமுடியும் என்ற நம்பிக்கையை ருஷ்ய-ஜப்பானிய யுத்தம் வழங்கியது. அடுத்து, எவ்வளவு பெரிய ஏகாதிபத்தியமானாலும், ராணுவ பலமும் அதிகார பலமும் பெற்ற எதேச்சாதிகாரமேயானாலும், அதனையும் எதிர்த்து மக்களால் போராட முடியும் என்ற நம்பிக்கையை 1905 ஆம் ஆண்டின் ருஷ்யப் புரட்சி வழங்கியது. அதாவது இந்தப் புரட்சி தோற்று விட்ட போதிலும்கூட, வாயில்லாப் பூச்சிகளாக வாழும் மக்களும் கூடக் கோடிக்கால் பூதமாக மாறி, கொடுங்கோலாட்சிக்கெதிராகப் போர்க் கொடி உயர்த்த முடியும் என்ற உண்மை இதனால் ஒளி பெற்றுத் துலங்கியது. இந்த ஒளியில் ஆசியா தனது சோம்பலை முறித்து விழிப்புற்றெழுந்தது; வீறு கொண்டது. எனவே இந்தப் புரட்சியைத் தொடர்ந்து, சீனா, பாரசீகம், துருக்கி முதலிய தேசங்களில் பல்வேறு புரட்சிகள் தோன்றின, இவற்றின் தன்மைகள் எதுவாயினும்

இவை ஆசிய நாட்டில் ஏற்பட்ட புதிய விழிப்பைப் பிரதிபலிப்பதாக இருந்தன. இந்தப் பிரதிபலிப்புக்கு ஆசியப் பெருநாடுகளில் ஒன்றான இந்திய நாடும் விதிவிலக்கல்ல.

## இந்திய நிலைபற்றி லெனின்

இந்தக் காலகட்டத்தில் இந்தியாவில் லார்ட் கர்ஸானின் ஆட்சியைக் கண்டு மிதவாதிகளே கொதித்தெழும் நிலைமை ஏற்பட்டது. அதே சமயம் கர்ஸான் வங்காளத்தை இரு கூறாகப் பிரித்தான். இந்தப் பிரிவினையை எதிர்த்து 2000 கூட்டங்கள் நடந்தன. வங்கத்திலிருந்து 70,000 மக்கள் கையொப்பங்களிட்ட விண்ணப்பங்கள் பறந்தன. தேசிய இயக்கம் புதிய விழிப்பைப் பெற்றது. பங்கிம் சந்திரரின் 'வந்தே மாதர கீதம்' தேசிய கீதமாயிற்று. சுதேசிய இயக்கம் பலமடைந்தது; தீவிர வாதத் திசைவழியில் திரும்பியது. 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என்ற கோஷத்தைக் கிளப்பினார் பாலகங்காதர திலகர். கோபால கிருஷ்ண கோகலே போன்றவர்களின் மிதவாதம் சரியத் தொடங்கியது. 'சுயராஜ்ய' கோஷம் விண்ணைப் பிளந்தது. 1906ஆம் ஆண்டில் கல்கத்தாவிலும், 1907 ஆம் ஆண்டில் சூரத்திலும் நடந்த காங்கிரஸ் மகா சபைகளில் இந்தப் புதிய சக்திகள் வெற்றி பெற்றன. இந்தப் புதிய விழிப்போடு ஒட்டி வளர்ந்த பாரதி தேசியக் கவியாக மலர்ந்தான்; இந்த இரு மகா சபைகளிலும் நேரிலேயே சென்று கலந்து கொண்டான். இந்தச் சந்தர்ப்பத்தில் பாரதியின் தேசிய ஆர்வம் எவ்வாறு விகசித்து வளர்ந்தோங்கியது என்பதை நாம் பாரதியின் தேசியப் பாடல்களின் மூலம் மிக நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

இந்திய நாட்டின் புதிய விழிப்பைக் கண்டு அன்னிய அரசாங்கம் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டார்; திலகருக்கு 6 வருடச் சிறைத்தண்டனை கிட்டியது. திலகருக்கு விதித்த தண்டனை

யைக் கண்டு, பம்பாய் நகரமே கொதித்தெழுந்தது. பம்பாயில் ஆறு நாட்கள் வேலை நிறுத்தமும், ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. இந்தச் சூழ்நிலையைப் பற்றி ருஷ்யப் புரட்சித் தலைவரான லெனின் 1908-ம் ஆண்டில் பின்வருவருமாறு எழுதினார்: "இந்திய மக்கள் தமது அரசியல் தலைவர்களையும், எழுத்தாளர்களையும் பாதுகாப்பதற்காக தெருக்களில் இறங்கத் தொடங்கி விட்டார்கள். ஆங்கிலேய ஓநாய்கள் இந்திய ஜனநாயக வாதியான திலகரின் மீது விதித்துள்ள அருவருக்கத்தக்க தண்டனை, பண மூட்டைகளின் பாதுகாவலர்கள் ஒரு ஜனநாயகவாதியின் மீது பழி தீர்த்துக் கொண்ட இந்தச் செயல் பம்பாயில் வேலை நிறுத்தத்தையும், மாபெரும் ஆர்ப்பாட்டங்களையும் தோற்றுவித்து உள்ளது. இந்தியத் தொழிலாளர் வர்க்கமும் வர்க்க போதம் கொண்ட வெகுஜன அரசியல் போராட்டத்தைத் தொடங்குமளவுக்குப் போதிய பக்குவம் பெற்று வருகிறது. இத்தகைய நிலைமையில் ஆங்கிலேய-ருஷ்ய அரசியல் தந்திரங்கள் எதுவும் இந்திய நாட்டில் செல்லுபடியாகாது. ஐரோப்பாவிலுள்ள வர்க்க போதம் பெற்ற தொழிலாளிகளுக்கு ஆசியத் தோழர்களும் கிடைத்து விட்டார்கள். அந்தத் தோழர்களின் எண்ணிக்கை அபரிதமாகப் பெருகி வளரத்தான் செய்யும்!" ('உலக அரசியல் பற்றி எரியும் விஷயங்கள்' ஆகஸ்ட் 1908 Selected Works, Vol. iv).

## ரகசிய இயக்கங்கள்

இத்தகைய எழுச்சியிலும், அடக்குமுறையிலும் தென்னாட்டிலும் சுதந்திர தாகமும் வேகமும் அதிகரித்தன. வ.உ.சி. தென்னாட்டுத் திலகராகத் தோன்றினார். பயங்கர இயக்கங்களும் வெடித்தன; மக்களைச் சுட்டுக் கொன்ற ஆஷ் துரை மணியாச்சி ஸ்டேஷனில் வாஞ்சி அய்யரால் சுட்டுக் கொல்லப்பட்டான்; வ.உ.சி. சிறை சென்றார். தேச பக்தர்கள் தலைமறைவானார்கள். புதுச்சேரி போன்ற இடங்களில் புகலிடம் தேடி அஞ்ஞாதவாசம் புரிந்தார்கள். ரகசிய இயக்கங்கள் தோன்றின. கிருஷ்ணவர்மா போன்ற

அதிதீவிரவாதிகள் அயல்நாடுகளுக்குச் சென்றார்கள். இந்தியாவில் அன்று நிலவிய அரசியல் கொந்தளிப்பு மாக்சிம் கார்க்கி போன்ற ருஷ்ய நாட்டு எழுத்தாளர்களின் கவனத்தையும் கவர்ந்தது. கார்க்கி 1912-ம் ஆண்டில் இந்திய நிலைமையைக் குறித்தும், சாவார்காருக்கு 48 ஆண்டு சிறைவாசம் விதித்தது பற்றியும், கிருஷ்ண வர்மாவைப் பற்றியும் கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரையில், "சீனா மட்டுமல்ல, ஆசியாக் கண்டம் முழுவதுமே 'வெள்ளை பயங்கர' த்தை உணரத் தொடங்கிவிட்டது. பிரிட்டனின் முரட்டுத்தனமான ஆதிபத்தியம் பரவுவதை எதிர்த்து, தேசிய விடுதலைக்காக இந்திய மக்கள் நடத்தும் போராட்டம் எவ்வளவு விரைவாக வளர்ந்து வருகிறது பாருங்கள்!" என்று வியந்து பாராட்டினார். (From the Foreign Chronicle: Articles and Pamphlets) இத்தகைய தொரு சூழ்நிலையில்தான் பாரதியும் 1908-ம் ஆண்டில் புதுச்சேரி சென்றான். பாரதி சென்னையில் பத்திரிகைத் தொழிலிலே வாழ்ந்த காலம் 1904முதல் 1908 வரையிலும் ஆகும். இந்த நாலைந்தாண்டுக் காலத்திலும் அவன் இந்திய தேசிய இயக்கத்தின் முற்போக்குச் சக்திகளோடு தோள் சேர்ந்து நின்றான். அவனது தேசிய இயக்கப் பாடல்கள் அனைத்தும் இந்த எழுச்சிக் கட்டத்தின் ஒவ்வோர் அம்சத்தின் நாடித்துடிப்பையும் துல்லியமாகப் பிரதிபலித்துள்ளன. வலிவும் வைராக்கியமும் மிக்க வாலிப உள்ளத்தின் லட்சியக் குரலாக, சுதந்திர தாகமாக அவை ஒலிக்கின்றன.

## இயக்கத்தோடு வளர்ந்தவன் பாரதி

இவ்வாறு 1905-ஆம் ஆண்டின் ருஷ்யப் புரட்சியின் பின் விளைவாக இந்திய நாட்டில் எழுந்த தீவிரவாதத் தேசிய இயக்கத்தோடு இரண்டறக் கலந்து வளர்ந்த பாரதி புரட்சிக் கவிஞனாகவே வாழ்ந்தான். எனவேதான் அவன் தான் 1906 ஆம் ஆண்டில் தொடங்கிய 'இந்தியா' பத்திரிகையின் தலைப்பில் பிரெஞ்சுப் புரட்சியின் முப்பெரும் லட்சியக் கோஷமான 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்

துவம்' என்ற வாசகத்தையே தனது பத்திரிகையின் லட்சிய மாகப் பொறித்து வைத்தான். மேலும் அவன் புதுச்சேரி சென்ற பின்னரும், 1906 ஆம் ஆண்டில் துருக்கியில் முடியரசை ஒழித்து நிகழ்ந்த புரட்சியை வரவேற்று,

தொல்லையெலாம் தவிர்த் தெங்கள் கண்காண
நொடிப் பொழுதில் துருக்கி மாந்தர்
நல்ல பெரும்பதம் காணப் புரிந்திட்டாய்!

என்று சுதந்திர தேவியிடம் முறையிடும் விதமாகப் பாடினான். அத்தகைய புரட்சி தனது நாட்டிலும் தோன்ற வேண்டும் என்று வேட்கை கொண்டான்.

(பாரதி புதையல்—1).

## தொழிலாளிகளே சிருஷ்டி கர்த்தாக்கள்

இவ்வாறு புரட்சிக் கவிஞனாக உருவாகி வந்த பாரதி அரசியல் விடுதலையை மட்டுமின்றி, சகலவிதமான அடிமைத் தனங்களிலிருந்தும் இந்திய மக்கள் விடுதலை பெற வேண்டும் என்று ஆரம்ப முதலே விரும்பியவன்; இந்த விருப்பத்தையும் வேட்கையையும் நாம் அவனது பாடல்களிலும் பிற படைப்புக்களிலும் பரக்கக் காண முடியும். அது மட்டுமல்லாமல், பாரதி தொழிலாளி மக்களையே சமுதாயத்தின் சிருஷ்டி கர்த்தாக்களாகக் கண்டான். இரும்பினைக் காய்ச்சி உருக்குவோரையும், கரும்பைச் சாறு பிழிபவரையும், கடலில் மூழ்கி முத்தெடுப்பவரையும், இயந்திரங்கள் வகுப்பவரையும், மற்றும் இவ்வாறான ஆயிரமாயிரம் தொழில் செய்பவர்களையும்,

பெரும்புகழ் நுமக்கே இசைக்கின்றேன்;
பிரமதேவன் கலை இங்கு நீரே!

என்றும்,

தேட்டமின்றி விழியெதிர் காணும்
தெய்வமாக விளங்குவீர் நீரே!

என்றும் விதந்தோதிப் பாடினான். எனவே இத்தகைய தொழிலாளிப் பெருமக்களின் பேரறப்போர் ருஷ்ய நாட்டில் வெற்றி பெற்ற போது அதனை வாழ்த்தி வரவேற்றுப்பாட அவன் தவறவில்லை; தயங்கவில்லை.

## பராசக்தியின் கடைக்கண்

பாரதி தனது, 'சித்தக் கடல்' என்ற நாட்குறிப்பில் பராசக்தியிடம் தனது படுமோசமான வறுமை நிலையைக் கூறி, அவளது கடைக்கண் பார்வைக்காகப் பின் வருமாறு ஏங்குகிறான்: "தாயே! என்னைக் கடன்காரர் ஓயாமல் வேதனைப்படுத்திக் கொண்டிருந்தால், நான் அரிசிக்கும் உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால், உன்னை எப்படிப் பாடுவேன்?"

ஆனால் இவ்வாறு ஏங்கிய அதே பாரதி, தனது வீட்டின் மீது பாயாத பராசக்தியின் கடைக்கண் ஒரு பெரிய நாட்டின் மீது, உலகின் ஆறிலொரு பங்கு பூமிப் பரப்பைக் கொண்ட ருஷ்ய நாட்டின் மீது பாய்ந்து, அங்கு வறுமையற்ற ஒரு புதிய சமுதாயத்துக்குத் தொடக்க விழா நடத்தி விட்டதை, ருஷ்யப் புரட்சியின் வெற்றியில் கண்டான். எனவே தான்

மாகாளி பராசக்தி உருசிய நாட்டில்
கடைக்கண் வைத்தாள்! அங்கே
ஆகா! என்றெழுந்தது பார் யுகப்புரட்சி!
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்!

என்று 1917 ஆம் ஆண்டின் அக்டோபர் புரட்சியின் வெற்றியைத் தனது 'புதிய ருஷ்யா' என்ற பாடலில் வாழ்த்தத் தொடங்கி, அமர கீதமான கவிதையொன்றை ஆக்கித் தந்தான். அந்நிகழ்ச்சியை அவன் கலியுகம் மாறி, கிருதயுகம்

தோன்றும் யுக சந்தியாகக் கண்டான் எனவே அவன் அதனை 'யுகப்புரட்சி' என்று குறிப்பிட்டான். இந்த யுக சந்தியை அவன் 'புரட்சி' என்று குறிப்பிட்டான். இந்த யுக சந்தியை அவன் 'புரட்சி' என்ற புதியதொரு திருவாக்கால் தெரிவித்தான். ஆம், பாரதிக்கு முன்னர் தமிழில் 'புரட்சி' என்ற சொல்லே இருந்ததாகத் தெரியவில்லை. 'Revolution' என்ற ஆங்கிலப் பதத்துக்கு நேரான இந்தப் புதிய சொல்லை அவன் நமக்கு ஆக்கித் தந்தான். அது மட்டுமல்ல, அகிலத்தையே குலுக்கிய அக்டோபர் புரட்சியை, மாநிலத்துக்கெல்லாம் மார்க்க விளக்கமாகத் திகழ்ந்த அந்த மாபெரும் நிகழ்ச்சியை ருஷ்யநாட்டுக்கு வெளியேயிருந்து விதந்தோதிப் பாடிய முன்னோடி உலகக் கவிஞனாகவும் பாரதியே விளங்கினான். அந்தப் பெருமை அவனுக்கே உரியது. எனவேதான் அவன் தனது கவிதையில், ''வையகத்தீர்! புதுமை காணீர்!'' என்று அறைகூவல் விடுத்து, உலகமக்களையெல்லாம் அந்தப் புரட்சியை, புதுமையை ஏறெடுத்துப் பார்க்குமாறு வேண்டினான். இவ்வாறாக, வெற்றி கண்ட உருசியத்துக்கும், விழிப்புற்ற பாரதத்துக்கும் தனது கவிதைகளின் மூலம் நட்புறவுப் பாலமிட்டுத் தந்த முதற் பெரும் இந்தியக் கவிஞனும் பாரதி தான், (பாரதியின் 'புதிய ருஷ்யா' என்ற இந்தக் கவிதை ருஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. 'ஆசியக் கவிஞர்கள்' என்று மகுடமிட்ட ஒரு கவிதைத் தொகுதியில் இந்தக் கவிதை இடம் பெற்றுள்ளது. இந்தத் தொகுதியை ருஷ்ய நாட்டிலுள்ள தாஷ்கண்ட் நகரில் 1958-ம் ஆண்டில் பிரசுரித்தார்கள். இந்தச் செய்தியை மாஸ்கோ சர்வகலாசாலையில் மொழி ஆராய்ச்சித்துறையில் பணியாற்றி வந்த திரு. மைக்கேல் ஆந்திரனோவ் என்ற நண்பர் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றில் முதன் முதலில் குறிப்பிட்டு எழுதினார். இருநாட்டு மக்களும் பெருமைப்படக் கூடிய செய்தி இது). 'புதிய ருஷ்யா' என்ற பாடல் தமிழ் மக்களிடையே மிகவும் பிரபலமானது. எனவே அந்தப் பாடலைப் பற்றிய விமர்சனம் இங்கு தேவையில்லை. ஆனால் பாரதி அந்தப்

பாடலை அந்தப் புரட்சியின் சாராம்சத்தையே உணர்ந்து கொள்ளாமல், ஏதோ ஓர் உணர்ச்சி வேகத்தில் அபரிமிதமாகப் புகழ்ந்து பாடி விட்டானா? அல்லது அதன் சாராம்சத்தை சரிவர உணர்ந்து, அந்த அறிவு பூர்வமான ஆனந்தத்தில் ஏற்பட்ட உணர்ச்சிப் பரவசத்தால் பாடினானா? அவ்வாறாயின் அவன் ருஷ்யப் புரட்சியைப் பற்றித் தெரிந்து கொண்டதற்கான வேறு குறிப்புக்கள் உண்டா? காலத்தோடு ஒட்டி வளர்ந்த கவிஞனான அவன், சகாப்த மாற்றத்தையே உருவாக்கிய இந்தச் சரித்திரக் காலத்தை உன்னிப்பாகக் கவனித்து வந்தானா? என்றெல்லாம் கேள்விகள் எழலாம். இக்கேள்விகளுக்கெல்லாம் அவனிடம் நமக்கு விடை கிடைக்கத்தான் செய்கிறது. இந்த விடைக்கான குறிப்புகளெல்லாம் இங்குமங்குமாகச் சிதறிக் கிடக்கும் பாரதியின் வசனங்களில்தான் இலை மறை காய் மறையாகத் தென்படுகின்றன. இவற்றைப் பெரும்பாலான வாசகர்கள் அறிய மாட்டார்கள். எனவே அந்தக் குறிப்புகளில் சிலவற்றைத் தொகுத்துக் காண்பதின் மூலம் பாரதி 'புதிய ருஷ்யா'வை எப்படிப் புரிந்து கொண்டான், தெரிந்து கொண்டான் என்பதை முதன் முறையாக இனம் காணும் முயற்சியே இந்தச் சிறு கட்டுரை.

## பாரதிகாலத்துப் பத்திரிகை உலகம்

இந்தக் குறிப்புகளைத் தெரிவிப்பதற்கு முன்னால், பாரதி காலத்துப் பத்திரிகை உலகச் சூழ்நிலையையும் நாம் சிறிதே தெரிந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் நாம் பாரதியின் பெருமையையும், திறமையையும் தெரிந்து போற்ற முடியும். அன்று இந்தியா அடிமை நாடு. இந்த அடிமை நாட்டில் தேசிய விழிப்பு ஏற்பட்டு இயக்கங்கள் வெடித்த போது, அன்றைய ஆங்கிலேய அரசாங்கம் பேச்சு, எழுத்து சுதந்திரங்களையெல்லாம் பெருமளவுக்கு முடக்கியது. பல அரசியல் தலைவர்கள் ராஜத்துவேஷமாக எழுதிய குற்றத்துக்காகச் சிறைத் தண்டனை பெற்றுவந்த

காலம் அது. அரவிந்தர் போன்றவர்கள் புதுச்சேரி போன்ற இடங்களில் புகலிடம் தேடி, அடக்கு முறைக்குச் சிக்காது வாழ்ந்த காலம் அது. இவ்வாறு தேசிய விழிப்பும், அடக்கு முறையும், மேலோங்கி நின்ற காலத்தில் 1910-ம் ஆண்டில் வைஸ்ராயின் சபையில் ஸர். ஹெர்பர்ட் ரிஸ்லே என்பவன் படுமோசமான பத்திரிகைச் சட்டம் ஒன்றை அறிமுகப் படுத்தினான். அதனைப் புகுத்திய காலத்தில், அதன் அவசியத்தைக் குறித்துப் பின்வருமாறு பேசினான்:

"அன்னியராட்சியிலிருந்து விடுபடுவதுதான், எந்தவொரு ரூபத்திலுமுள்ள பலாத்காரத்தின் மூலம், இளைஞர்கள் புரியும் வீரச் செய்கைகள், தன்னல மறுப்பு, உயிர்த்தியாகம் ஆகியவற்றால் பெறப்படும் விடுதலைதான், இந்தியாவின் தீமைகளுக்கெல்லாம் ஒரே பரிகாரம் என்று நாள்தோறும் பத்திரிகைகள் பகிரங்கமாகவோ, மறைமுகமாகவோ, சூசகமாகவோ பிரகடனப்படுத்தி வருகின்றன. இந்துப் புராணக் கதைகள், பழங்கால, நவீன காலச் சரித்திரம், அதிலும் மிகவும் முக்கியமாக ஐரோப்பியப் புரட்சி இலக்கியங்கள் ஆகியவற்றிலிருந்து, கலகத்தை நியாயப் படுத்துவதற்கும், அதன் தவிர்க்க முடியாத வெற்றியைப் பிரகடனப்படுத்துவதற்கும் உதாரணங்கள் தேடிப் பிடித்துக் கூறப்படுகின்றன. செர்க்காசியா, ஸ்பெயின், தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் கையாளப்பட்ட கொரில்லா யுத்த முறைகள், அரசியல் கொலையைப் பற்றிய மாஜினியின் உபதேசம், கோகூத்தின் மிகவும் மூர்க்கமான கோட்பாடுகள், ருஷ்யப் பயங்கரவாதிகளின் செய்கைகள், மார்க்விஸ் இட்டோவின் கொலை, உணர்ச்சிவசமான கிறிஸ்தவர்களுக்கு 'கிறிஸ்துவின் வழியில்' (Imitation of Christ) என்ற நூல் எவ்வாறு தோன்றுகிறதோ அதுபோல் இந்துக்களுக்குத் தோன்றும் ஒரு நூலான கீதையிலுள்ள கிருஷ்ண—அர்ஜுன சம்வாதம்—இவையனைத்தும் உணர்ச்சி வசப்படும் உள்ளங்களில் ஆவேசக்கனலை உருவேற்றும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன..."

இத்தகைய 'குற்றச் சாட்டுக்களை'க் காரணமாகக் கொண்டுதான் அன்று பத்திரிகைச் சட்டம் கொண்டு வரப் பட்டது. இந்தக் 'குற்றச்சாட்டுகளுக்கு'ப் பாரதியும் ஆளா னவன்தான் என்பதை அவனது மாஜினியின் சப்தம், குரு கோவிந்தர், சத்ரபதி சிவாஜி, ஆரிய தரிசனம் முதலிய கவிதைகளின் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம். இதனா லேயே பாரதி நடத்தி வந்த 'இந்தியா' பத்திரிகை அரசாங் கத்தின் கழுகுப் பார்வைக்கு இரையாயிற்று. பாரதியும் புதுச்சேரிக்குச் செல்ல நேர்ந்தது. புதுச்சேரியிலிருந்து 'இந்தியா' மீண்டும் வெளிவரத் தொடங்கினாலும், பத்திரி கைச் சட்டம் அதன் கருத்துச் சுதந்திரத்துக்கு ஒரு தடை யாகவே இருந்தது. இதனை 1910 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் 5-ம் தேதியன்று பாரதி 'இந்தியா' பத்திரிகையில் எழுதிய ஒரு குறிப்பின் மூலம் நாம் அறியலாம். அந்த இதழில் பாரதி 'சிற்பமும் கவிதையும்' என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதினான். அந்தத் தலையங்கத்தை, "இதைக் குறித்து எழுதினால் பத்திரிகைச் சட்டம் நம்மை அண்டாது. ஆகையால் இதையாவது நம் ஜனங்களுக்குச் சொல் வோம்..." என்று தொடங்கியுள்ளான் ("பாரதி தமிழ்"— தூரன்). இந்தக் குறிப்பே அன்றைய பத்திரிகைச் சட்டத் தின் பயங்கரத்தை நாம் புரிந்து கொள்ளப் போதுமானது. பாரதி இவ்வாறு 'சிற்பமும் கவிதையும்' பற்றிய விஷயங்களை எழுதி வந்த போதிலும் கூட, அதே ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கம் 'இந்தியா' பத்திரிகையை இந்தியப் பிரதேசத் துக்குள் நுழைய விடாதபடி தடை செய்துவிட்டது. அத்துடன் 'இந்தியா' பத்திரிகையும் நின்று போய் விட்டது.

## யுத்தகால தணிக்கை முறையின் கோரம்

மேற்கண்ட ஹெர்பர்ட் ரிஸ்லேயின் கூற்றில், ருஷ்ய நாட்டுப் பயங்கரவாதிகளின் காரியங்களையும், கருத்துக் களையும் இந்திய தேசியவாதிகள் பத்திரிகைகளின் மூலம்

பரப்புவதை ஒரு காரணமாகக் கூறி, பத்திரிகைச் சட்டத்தை அவன் கொண்டு வந்தான் என்பதைப் பார்த்தோம். எனவே 1917 ஆம் ஆண்டில் அக்டோபர் புரட்சிக்குப் பல ஆண்டு களுக்கு முன்னரே, ருஷ்ய நாட்டுச் செய்திகளை இந்திய நாட் டில் பரவ விடாமல் தடுப்பதில் ஆங்கிலேய அரசாங்கம் கவனமும், கவலையும் காட்டியது என்பது சொல்லாமலே விளங்கும். மேலும், அக்டோபர் புரட்சி நடந்த காலமோ 1914-18 ஆம் ஆண்டுகளில் மகாயுத்தம் நடந்துகொண் டிருந்த காலம். இந்தக் காலத்திலோ பத்திரிகைச் சட்டமும், தணிக்கை முறையும் இன்னும் பயங்கரமாயின. இந்த யுத்த காலத் தணிக்கை முறையைப் பற்றி, பண்டித ஜவகர்லால் நேரு தமது 'உலக சரித்திரம்' என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"அரசாங்கங்கள் யாரையும் அடக்குவதற்கும், தம் இஷ்டம் போல் எதையும் செய்வதற்கும் யுத்த காலத்தைப் போதிய சாக்காக எப்போதுமே கருதி வந்திருக்கின்றன. யுத்தகாலத்தில் யாருக்காவது லைசென்ஸ் உண்டென்றால், அது அரசாங்கங்களுக்குத்தான் யுத்த காலம் என்றால் உடனே தணிக்கை முறை அமலுக்கு வந்துவிடுகிறது; அது உண்மையை மறைத்து விடுகிறது. பெரும்பாலும் பொய்யைப் பரப்புகிறது. நல்லது, கெட்டது சொல்வதைத் தடை செய்து விடுகிறது. எல்லாவிதமான காரியங்களையும் கட்டுப்படுத்தக் கூடிய விசேடச் சட்டங்கள் இயற்றப் படுகின்றன. யுத்தத்தில் ஈடுபட்ட எல்லா நாடுகளிலும் இது நிகழ்ந்தது. இந்தியாவி லும் 'இந்தியப் பாதுகாப்புச் சட்டம்' என ஒன்று இயற்றப் பட்டது. பொது மக்கள் யுத்தத்தைப் பற்றியோ, அன்றி யுத்தம் சம்பந்தப்பட்ட வேறு எதைப் பற்றியோ, குற்றம் குறை கூறிவிட முடியாதபடி அது தடுத்துவிட்டது...யுத்த காலத்தில் நிகழ்ந்த எல்லாவற்றையும் தெரிந்து கொள்வது கடினம். தணிக்கை முறை காரணமாகப் பலவகைச் செய்தி கள் வெளியாவதற்கில்லை. வதந்திகள் தாராளமாக உலா வின..."

(உலக சரித்திரம்-அத்தியாயம்: 154)

## அன்றைய செய்திகளின் தன்மை

எனவே இத்தகைய சூழ்நிலையில் இந்திய நாட்டுக்கு எப்படிப்பட்ட செய்திகள் வந்திருக்க முடியும் என்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம். எனினும் இந்தச் சூழ்நிலையிலும் ருஷ்ய நாட்டைப் பற்றிய செய்திகள் இந்திய நாட்டுள் ஓரளவு எட்டவே செய்தன. ஆனால், அன்னிய நாட்டு, உள்நாட்டு முதலாளித்துவப் பத்திரிகைகளும், செய்தி ஸ்தாபனங்களும் வடிகட்டியும், தணிக்கை செய்தும், திரித்தும், மறைத்தும் தெரிவித்து வந்த செய்திகள்தான் இங்குக் கிட்டின. அன்றைய பத்திரிகைகளில் ருஷ்யாவில் நடைபெற்று வந்த நிகழ்ச்சிகளைப் பற்றி, எத்தகைய செய்திகள் வந்தன என்பதைப் பற்றியும்,அவற்றின் தன்மை பற்றியும் பாரதியே சில குறிப்புகளில் எழுதியுள்ளான். 'தமிழ் நாட்டின் விழிப்பு' என்ற தலைப்பில் அவன் பின்வருமாறு எழுதுகிறான்.

''எனக்கு நாலைந்து முக்கியமான தமிழ்ப் பத்திரிகைகள் வருகின்றன. அவற்றுள் ஒன்று வாரப் பத்திரிகை. அது பழுத்த சுதேசியக் கட்சியைச் சேர்ந்தது, ஆனால் தக்க பயிற்சியில்லாதவர்களால் நடத்தப் படுகிறது. சில தினங்களுக்கு முன்பு அப்பத்திரிகையில் யுத்த சம்பந்தமான தலையங்கம் ஒன்று எழுதப்பட்டு இருந்தது. அதில் ருஷியாவில் 'போல்ஷெவிக்' என்ற ஒரு மனுஷ்யன் இருப்பதாகவும், அவன் கஷி ஏற்படுத்தி, நமது நேசக் கட்சிக்கு விரோதம் செய்வதாகவும் சொல்லியிருந்தது! அஃது அந்நாட்டின் ராஜ்யப் புரட்சிக் கூட்டங்களில் ஒன்றாகிய மார்க்சிஸ்ட் கட்சிக்கு மற்றொரு பெயரென்றும், ஒரு மனுஷ்யனுடைய பெயர் அல்லவென்றும் அந்த பத்திராதிபர் தெரிந்து கொள்ளவில்லை...'' ('பத்திரிகைகளின் நிலைமை'—கட்டுரைகள்—கலைகள்)

## வேடிக்கைக் கதைகள்

'பழுத்த சுதேசியக் கட்சி'யைச் சேர்ந்த பத்திரிகையின் நிலைமையே இதுவென்றால், பத்திரிகை ஆசிரியருக்கே

உண்மை சரிவரப் புரியாதிருந்தது என்றால், அன்றைய பத்திரிகை உலகின் நிலைமையைச் சொல்லவா வேண்டும்? ஆம். போல்ஷ்விக் என்பது லெனின் தலைமையில் இயங்கிக் கொண்டு வந்த கம்யூனிஸ்ட் கட்சியின் பெயர் என்று கூடத் தெரிந்து கொள்ளாத அளவுக்குப் பத்திரிகை உலகம் அன்று இருந்துள்ளது. இத்தகைய அஞ்ஞானத்துக்கு மத்தியில் மேன் மேலும் குழப்பமும் நம்ப முடியாத பொய்களும் நிறைந்த செய்திகளும் அன்றைய ருஷ்யாவைப் பற்றி வெளிவந்தன என்பதையும் நாம் பாரதி வாயிலாகத் தெரிய முடிகிறது. பாரதி எழுதியுள்ள 'காக்காய் பார்லிமெண்ட்' என்ற கதையில் அந்தப் பார்லிமெண்டின் ராஜாவான கிழக் காக்கை பின்வருமாறு பேசுகிறது:

"...போன மாசம் நான் பட்டணத்துக்குப் போயிருந் தேன். அங்கே ருஷியா தேசத்துக் கொக்கு ஒன்று வந்திருந் தது. அங்கே சண்டை துமால் படுகிறதாம். ஜார் சக்கர வர்த்தி கட்சி ஒன்று. அவர் அயோக்கியர். அவரைத்தள்ளி விட வேண்டுமென்பது இரண்டாவது கட்சி. இரண்டு கட்சி யாரும் அயோக்கியர்களாதலால், இரண்டையும் தொலைத்து விட வேண்டுமென்று மூன்றாவது கட்சி. மேற்படி மூன்று கட்சி யாரையும் திருடரென்று நாலாவது கட்சி. இந்த நாலு கட்சியாரையும் பொங்கலிட்டு விட்டுப் பிறகுதான் ஏசு கிறிஸ்து நாதரைத் தொழ வேண்டுமென்று ஐந்தாவது கட்சி. இப்படியே நூற்றிருபது கட்சிகள் அந்தத் தேசத்தில் இருக் கின்றனவாம்..." (சில வேடிக்கைக் கதைகள்)

இந்தக் கூற்று வினோதார்த்தமாக இருந்தாலும், அன்று ருஷ்ய நாட்டில் நடைபெற்று வந்த நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்வதில், அன்றைய செய்தி ஸ்தாபனங்கள் எத்தகைய குழப்பங்களையும் இடர்ப்பாடுகளையும் ஏற்படுத்தி வந்தன என்பதை இதன் மூலம் நாம் ஊகித்துக் கொள்ளலாம். மேலும் ருஷ்யாவில் நிகழ்ந்து வந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் அன்றைய பத்திரிகைகள் எப்படிப்பட்ட செய்திகளை

வழங்கி வந்தன என்பதையும் நாம் பாரதியின் மற்றொரு கவிதையிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. 'பேய்க் கூட்டம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள கதையில் அவன் பின்வருமாறு கூறுகிறான்:

"...காலையில் நான் கண்ணை விழிக்கு முன்பாகவே என் பத்தினி சுதேசமித்திரன் பத்திரிகையைத் தலையணைக்கருகே கொண்டு போட்டிருந்தாள். திறந்து பார்த்தேன். முதலாவது என் கண்ணில் 'ருஷ்யாவின் உள்நாட்டுக் கலகம்; சச்சரவு அதிகரித்திருக்கின்றது' என்ற பகுதி தென்பட்டது. இதென்னடா விசேஷம் என்று வாசித்துப் பார்த்தேன், இரவில் தூக்கமில்லாது படுத்துக் கொண்டிருக்கும் போது, காலையில் படித்த விஷயங்களெல்லாம் மற்றொரு முறை மன வீதியிலே உலாவி வரலாயின. மாஸ்கோ நகரத்தில் கலகம்—ஸ்திரீகளும் குழந்தைகளும் உட்பட இருநூறு பேர் கொலையுண்டனர்...துப்பாக்கிப் பிரயோகங்கள் அமிதவாதிகளும் மிதவாதிகளும் பரஸ்பரம் செய்து கொண்டனர்.

"ஒதெஸ்ஸா நகரத்தில் செல்வரிடமிருந்து பொருளையெல்லாம் பிடுங்கி, ஏழை ஜனங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொடுக்க ஒரு கமிட்டி! முதலிய பல செய்திகள். ருஷ்யா விஷயம் எக்கேடு கெட்டாலென்ன என்று தூங்க முயற்சி செய்தால், மனம் இணங்கவில்லை. தூக்கம் வரப்போகிற—அல்லது வராமல் இருக்கிற—பாதி இரவு நேரத்தில் மனம் புத்தி சொன்னபடி கேட்கவே கேட்காது. எப்போதும் மனதைக் கட்டியாள்வதும் சிரமம், படுக்கையிலே படுத்துக் கொண்டு மனதைக் கட்ட விசுவாமித்திரராலே கூட முடியாது. பிறகு எனக்கு ருஷ்யக் குடியரசின் தலைவனாகிய லெனின் என்பவனுடைய ஞாபகம் வந்தது. உரலுக்கு ஒரு பக்கம் இடி: மத்தளத்திற்கு இரு பக்கம் இடி. லெனினுக்கு லட்சம் பக்கத்திலே!

"தள்ளடா! லெனினுமாயிற்று. வெங்காயமுமாயிற்று. தூங்குவோம் என்று நினைத்தால், கொசு வந்து 'ஙொய்'

என்று ரீங்காரம் பண்ணுகிறது...'' (சில வேடிக்கைக் கதைகள்).

லெனின் தலைமையில் அக்டோபர் புரட்சி வெற்றி கண்ட பின்னர், அந்தப் புரட்சியைக் குலைத்து சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்க்க எதிர்ப் புரட்சியாளர்கள் பலர் கலகம் விளைவித்ததும், பல்வேறு சிரமங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் அந்தக் கலகத்தை லெனின் தோற்கடித்து வெற்றி கண்டதும் சரித்திரப் பிரசித்தம். அந்தக் கலகம் நடந்த காலத்தில் ஏகாதிபத்தியச் செய்தி ஸ்தாபனங்கள் போல்ஷ்விக் ஆட்சியைப் பற்றிப் பொய்யும் புலையுமான செய்திகளை வெளியிட்டு வந்ததும் உலகம் அறிந்ததே. இந்த உள்நாட்டுக் கலகம் நிகழ்ந்து வந்த காலத்தில்தான் பாரதி மேற்கண்ட வரிகளை எழுதியிருக்கிறான். இந்த வரிகளைப் படிக்கும் போது, லெனினுக்கு ஏற்பட்ட பல்வேறு சிரமங்களைப் பற்றியும் பாரதியிடத்திலெழுந்த அனுதாப உணர்ச்சி நமக்குப் புலப்படுகிறது என்பதை மாத்திரமல்ல, ருஷ்யப் புரட்சியின் வெற்றியையும் விளைவுகளையும் பாரதி மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வந்தான் என்பதையும், ருஷ்யாவைப் பற்றிய செய்திகள் அவனது சிந்தனையை இரவும் பகலும் ஆக்கிரமித்து, அவனைத் தூங்கக்கூட விடாமல் சிந்திக்கச் செய்தன என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

யுத்த காலத் தணிக்கை முறை, பத்திரிகைச் சட்டம், திரித்தும் மறைத்தும் வெளி வந்த செய்திகள் முதலிய இத்தகைய பல்வேறுபட்ட இடர்ப்பாடான சூழ்நிலைக்கு மத்தியிலும், ருஷ்யப் புரட்சியின் சாராம்சத்தையும் சரித்திர மகத்துவத்தையும் பாரதி உணர்வு பூர்வமாகக் கண்டறிந்துரைக்கத் தவறவில்லை என்பதையே அவனது 'புதிய ருஷ்யா' என்ற பாடல் நமக்குத் தெரிவிக்கின்றது. இத்தகைய சூழ்நிலையிலும்கூட, அவன் ருஷ்யப் புரட்சியின் விளைவுகளையும் வெற்றிகளையும் காணத் தவறவில்லை. ஆம். முதலாளித்துவச் செய்தி ஸ்தாபனங்கள் சிருஷ்டித்திருந்த இரும்புத்

திரையையும் கிழித்துக் கொண்டு அவனது தீக்ஷண்யமான திருஷ்டி அதன் உண்மையைக் கண்டறியத்தான் செய்தது. இதற்கு அவனது பல்வேறு வாசகங்களே சான்று பகரும்.

## பாரதி பாடிய புரட்சி

1917 ஆம் ஆண்டு முதல் தான் காலமான 1921 ஆம் ஆண்டு வரையிலும் பாரதி "சுதேசமித்திரனில்" எழுதிவந்த அரசியல் குறிப்புக்கள், நடப்புச் செய்திகள், கதைகள் முதலிய பலவற்றின் மூலமும், ருஷ்யப் புரட்சி பற்றிய பல குறிப்புக்களைப் பரக்கத் தந்துள்ளான். பரவலாகக் காணப் படும் அந்தக் குறிப்புக்களைப் பார்த்தாலே நமக்கு அவனது ஆர்வமும் ஆசையும் புலப்பட்டு விடும். மேலும் ருஷ்யப் புரட்சியை அவன் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து, அதனை அறிந்து, உணர்வு பூர்வமாக அதனை உள்ளத்தில் ஏற்ற ஒரு நிலையில்தான் அவனது 'புதிய ருஷ்யா' என்ற கவிதை பிறந்தது என்ற உண்மையையும் அதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

'பொழுது போக்கு' என்ற தலைப்பில் ஓர் உரையாடல் பகுதி. சந்தோஷ ராயர் என்ற நண்பரொருவர் பாரதியிடம் வந்து ருஷ்யாவில் நடக்கும் செய்திகளைப் பற்றிப் பேசி விட்டு, "அடுத்த மாதம் வால் நட்சத்திரம் எரி நட்சத் திரத்தை வாலில் கவ்விக் கொண்டு, பூமியில் மோதிப் பூமி யைத் தூள் தூளாக நொறுக்கப் போகிறது என்று ஜோதிடர்கள் சொல்கிறார்களே. வாஸ்தவமா?" என்று கேட்கிறார் சமீப காலத்தில் நாம் கண்ட அஷ்டக் கிரகச் சேர்க்கை பற்றிய பீதியை ஒத்ததுதான் இதுவும். ருஷ்யாவில் நிகழ்ந்து வந்த மாற்றங்களால் உலகமே அழிந்துபடப் போகிறது என்று கதைகட்டி விட்டுக் கொண்டிருந்த காலம் அது. ஆனால், சந்தோஷராயரின் இந்தக் கேள்விக்குக் 'காளிதாஸன்' என்ற புனை பெயரில் மறைந்து நிற்கும் பாரதி பின்வருமாறு பதில் கூறுகிறான்:

"இந்தப் பூமியில் இன்னும் நாமே நெடுநாளிருந்து பலவித நியாயங்கள் நடந்து நிறைவேறுவதைப் பார்க்கப் போகிறோம். பூமியில் நல்ல யுகம் தோன்றப் போகிறது. மனித ஜாதி முழுமைக்கும் விடுதலை உண்டாகப் போகிறது. நீர் சொல்லிய ருஷ்ய ராஜ்யப் புரட்சியானது இனி வரப் போகின்ற நற்காலத்தின் முன்னடையாளங்களில் ஒன்று. பூமி தூளாகாது. மனிதர் ஒவ்வொருவர் செய்யும் அநீதி தூளாகும்." ('பாரதி தமிழ்'-பெ.தூரன்)

பாரதி இந்தக் குறிப்பை 28-3-1917 ஆம் தேதியன்று எழுதியுள்ளான். அதாவது 1917 ஆம் ஆண்டின் பிப்ரவரிப் புரட்சி நடந்த சந்தர்ப்பத்தில் கூறியுள்ளான். இதிலேயே அவன் வரப்போகும் புதிய யுகத்துக்கான சூசகத்தைக் கண்டு விட்டான். இதன் பின்னர் இந்தச் சூசகம் வெற்றி கண்டு, புதிய யுகம் பிறந்ததைத்தான் அவன் அக்டோபர் புரட்சியில் கண்டான். அதனை வாழ்த்தி வரவேற்று 'புதிய ருஷ்யா' என்ற பாடலைப் பாடினான்.

## 'கசப்பான' உண்மை

ஆனாலும், பாரதியின்பால் பேரன்பு கொண்டவரும் பாரதியின் படைப்புக்களையும் அவனைப் பற்றிய செய்தி களையும் தேனீப் போல் திரட்டிச் சேகரித்து உதவியவருமான அன்பர் திரு. ரா. அ. பத்மனாபன் பாரதியின் 'புதிய ருஷ்யா' என்ற கவிதையைப் பற்றி வேண்டாததோர் விவாதக் கருத்தைத் தெரிவித்துள்ளார். 1958 ஆம் ஆண்டில் கல்கத்தா பாரதி தமிழ் சங்கத்தார் ஆங்கிலத்தில் வெளி யிட்டுள்ள "பாரதி பற்றிய கட்டுரைகள்" என்ற நூலில் தாம் எழுதியுள்ள கட்டுரையில், பாரதி தனது 'புதிய ருஷ்யா' என்ற கவிதையில் பிப்ரவரிப் புரட்சியைத்தான் வாழ்த்தி வரவேற்றுப் பாடினானே தவிர, அக்டோபர் புரட்சியையல்ல என்ற கருத்தில் பின்வருமாறு எழுதி

யுள்ளார்: "நம் தோழர்களில் பெரும்பாலோர் வருணிக்க விரும்புவது போல், இந்தக் கவிதை பொதுவுடைமையைப் போற்றிப் புகழ்வதல்ல. ஜார் மன்னனின் ஆட்சியை விலக்கி அதிகாரமேற்ற கெரன்ஸ்கி அரசாங்கம் இருந்த காலத்தில் தான் இது எழுதப் பெற்றது." இந்தக் கூற்றின் மூலம் அன்பர் பத்மனாபன் பாரதி பொதுவுடைமையைப் போற்றிப் புகழவில்லை, எனவே அவன் அக்டோபர் புரட்சியை வாழ்த்திப் பாடவில்லை என்று வலியுறுத்த முனைகிறார். ஆனால் 'முப்பது கோடி ஜனங்கள் சங்க முழுமைக்கும் பொதுவுடைமை' என்று முதன் முதலில் கோஷித்த புரட்சிப் புலவன் பாரதியை, பொதுவுடைமையைப் போற்றிப் புகழாதவன் என்று கூறத் துணிவது பாரதியை இனங்காட்டும் அரிய பணியை மேற்கொண்ட அன்பருக்கு இழுக்கேயாகும். அன்பர் பத்மனாபனுக்குப் பொதுவுடைமையோ, அதன் முதல் வெற்றியான அக்டோபர் புரட்சியோ பிடிக்காதிருக்கலாம்; அதனைப் பாரதி பாடியது அவருக்கு மென்று விழுங்கமாட்டாத கசப்பான உண்மையாகக்கூட இருக்கலாம். ஆனால் தமது சொந்த விருப்பு வெறுப்பின் காரணமாக அவர் பாரதியைப் பற்றிய உண்மையைத் திரித்துக் கூற முனைந்தது உண்மையில் வேதனைக்குரிய செய்திதான்.

## அக்டோபர் புரட்சி பற்றிய சரித்திரம்

ஆனால் உண்மை என்ன? பாரதி அக்டோபர் புரட்சியையே வாழ்த்தி வரவேற்றுப் பாடினான் என்று முடிவுகட்ட நமக்கு ஆதாரங்கள் உண்டா? ஆம். அவை பாரதியிடமிருந்தே நாம் பெறும் ஆதாரங்கள்தான். இந்த ஆதாரங்களைக் காணுமுன்னர் பிப்ரவரிப் புரட்சியையும் அக்டோபர் புரட்சியையும் பற்றி நாம் சில உண்மைகளைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ருஷ்ய நாட்டில் நடந்த மூன்று புரட்சிகளிலும் லெனினது போல்ஷ்விக் கட்சி பங்கெடுக்கவே செய்தது. 1905 ஆம்

ஆண்டிலேயே முதல் புரட்சி நடந்தது; ஆனால் அது தோற்கடிக்கப்பட்டது. பின்னர் 1917 ஆம் ஆண்டில் நடந்த பிப்ரவரிப் புரட்சிக்கும் லெனினது போல்ஷ்விக் கட்சியே தலைமை தாங்கியது. இந்தப் புரட்சி வெற்றி பெற்றது. எனினும் இந்தப் புரட்சியின்போது எழுப்பிய கோஷங்களை, புரட்சிக்குப் பின்னர் அரசாங்கத் தலைமை ஏற்க சேர்ந்த கெரென்ஸ்கியின் கோஷ்டி நிறைவேற்ற மறுத்தது. உலக யுத்தத்திலிருந்து ருஷ்யா விலகிக் கொள்வது, உழுபவனுக்கே நிலம் சொந்தமாவது, தொழிற்சாலைகளைத் தேசிய மயமாக்குவது, தேசிய இனங்களுக்குச் சுய நிர்ணய உரிமை வழங்குவது, இவற்றை நிறைவேற்ற ஜாராட்சியை ஒழித்து ஓர் அரசியல் நிர்ணய சபையைத் தோற்றுவிப்பது முதலியனவே அந்தக் கோஷங்கள். ஆனால் கெரென்ஸ்கியின் அரசாங்கம் இவற்றை நிறைவேற்றவில்லை. நிராகரித்தது. யுத்தத்திலிருந்து வாபஸாகவில்லை. அரசியல் நிர்ணய சபையைத் தேர்ந்தெடுக்க முயலவில்லை. சொல்லப்போனால் கெரென்ஸ்கியின் தலைமை ஜாராட்சியை மீண்டும் கொண்டு வருவதற்கான பாதையிலேயே சென்றது. முடி துறந்த ஜார் கூட, "ருஷ்யா அழிந்து விடாமல் காப்பாற்றக் கூடியவர் கெரென்ஸ்கி ஒருவர்தான்" என்று தனது டைரியில் எழுதி வைத்துக் கொள்ளுமளவுக்கு, கெரென்ஸ்கியின் ராஜ விசுவாசம் இருந்தது. இந்தச் சூழ்நிலையில் புரட்சியின் கோஷங்களை நிறைவேற்றாத கெரென்ஸ்கியின் அரசாங்கத்தை எதிர்த்து, மக்கள் கலகம் செய்தார்கள்; ஆனால் 1917ம் ஆண்டு ஜுலை மாதம் நடந்த இந்தக் கலகத்தில் பங்கெடுத்த மக்களைக் கெரென்ஸ்கியின் அரசாங்கம் ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது. ராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தது. புரட்சித் தலைவனான லெனினை ஜெர்மானிய ஒற்றனென்றுக் கூறி அவரைக் கைது செய்ய உத்தரவிட்டது. இந்தச் சூழ்நிலையில்தான், கெரென்ஸ்கியின் அரசாங்கத்தைக் கவிழ்த்து, புதிய தொழிலாளி வர்க்க அரசாங்கத்தைக் கொண்டு வருதற்காக, அக்டோபர் புரட்சி மாமேதை லெனினின் தலைமையில் நடைபெற்றது. வெற்றி

கண்டது. இதுதான் சரித்திரம். பொதுவுடைமையையும் புரட்சியையும் மறுப்பவர்கள் கூட ஏற்றுக் கொள்ளும் சரித்திரம்.

பாரதி இந்த இரு புரட்சிகளுக்குமுள்ள தொடர்பையும், சாராம்சத்தையும் உணர்ந்திருந்தான் என்பதை அவனது வாசகங்களே புலப்படுத்துகின்றன. 'நவீன ருஷ்யாவில் விவாக விதிகள்' (கட்டுரைகள்—மாதர்) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் தொடக்கத்திலேயே பாரதி பின் வருமாறு எழுதுகிறான்:

''ருஷ்யாவில் ஜார் சக்ரவர்த்தியின் ஆட்சி பெரும்பாலும் சமத்துவக் கட்சியார் அதாவது போல்ஷிவிஸ்ட் கட்சியாரின் பலத்தாலே அழிக்கப்பட்டது, எனினும் ஜார் வீழ்ச்சி யடைந்த மாத்திரத்திலே அதிகாரம் போல்ஷ்விஸ்ட்களின் கைக்கு வந்துவிடவில்லை. அப்பால் சிறிது காலம், முதலாளிக் கூட்டத்தார் கெரென்ஸ்கி என்பவரைத் தலைவராக நிறுத்தி, ஒருவிதமாக குடியரசு நடத்தத் தொடங்கினார்கள். ஆனால், கெரென்ஸ்கியின் ஆட்சி நீடித்து நடக்கவில்லை. இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய தேச ராஜ்யங்களிடமிருந்து பல வகைகளில் உதவி பெற்ற போதிலும், புதிய கிளர்ச்சிகளின் வெள்ளத்திடையே கெரென்ஸ்கியால் தலைதூக்கி நிற்க முடியவில்லை. சில மாதங்களுக்குள்ளே கெரென்ஸ்கி தன் உயிரைத் தப்புவித்துக் கொள்ளும் பொருட்டாக, ருஷ்யாவினின்றும் ஓடிப்போய் நேச வல்லரசுகளின் நாடுகளில் தஞ்சம் புக நேரிட்டது.''

## கெரென்ஸ்கி பற்றி பாரதி

மேற்கண்ட பகுதியிலிருந்து கெரென்ஸ்கி முதலாளித்துவக் கூட்டத்தால் நிறுத்தப்பட்ட தலைவர் என்பதைப் பாரதி நன்கு தெரிந்திருந்தான் என்பது வெளிப்படை. மேலும் கெரென்ஸ்கியைப்பற்றி அவன் எத்தகைய கருத்தைக் கொண்டிருந்தான் என்பதை அவன் பிற்காலத்தில் எழுதிய

ஒரு குறிப்பும் வெளிப்படுத்துகின்றது. 30-11-1920-ம் தேதியன்று அவன் ''விநோதக் கொத்து; வெனிஜிலாஸின் கதி'' என்ற தலைப்பில், 'சுதேசமித்திர'னில் எழுதிய அரசியல் குறிப்பொன்றில் பின்வருமாறு எழுதுகிறான்: இந்த வெனிஜிலாஸ் மந்திரியைப் போலவே, ருஷ்யாவை நேசக் கக்ஷிக்கு வாலாக்கிவிட முயற்சி செய்த கெரென்ஸ்கி என்ற ருஷ்ய மந்திரியை 'மித்திரன்' நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஒரு காலத்தில் கெரென்ஸ்கியை ருஷ்ய தேசத்து நெப்போலியன் என்று சில ஆங்கிலேயப் பத்திராதிபர் முதலியோர் சொல்லி வந்தனர். இன்று அந்தக் கெரென்ஸ்கியின் பெயரையே உலகத்தார் மறந்துவிடக்கூடிய நிலைமை வந்துவிட்டது...''

(பாரதி தமிழ்—தூரன்)

இவ்வாறு கெரென்ஸ்கியைப் பற்றிக் கருத்துக் கொண்டிருந்த பாரதி, உண்மையில் அக்டோபர் புரட்சியைத்தான் வரவேற்றுப் பாடினான் என்று கொள்வதற்கு அவனது கவிதையே நமக்கு ஆதாரமாக விளங்குகின்றது எனலாம். எப்படி?

## அக்டோபர் புரட்சி பற்றி

1. பிப்ரவரிப் புரட்சி வெற்றி கண்ட போதிலும்கூட, 'கரையான் புற்றெடுக்க, கருநாகம் குடியிருக்க' என்ற பழமொழியைப்போல், அதிகாரம் முதலாளிகளின் கைப்பாவையான கெரென்ஸ்கியின் கையிலேயே போய்ச் சேர்ந்தது. அந்தக் கெரென்ஸ்கியை வீழ்ச்சியுறச் செய்து அக்டோபர் புரட்சி வெற்றி பெற்ற பின்னர்தான் ''எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே'' என்ற போல்ஷ்விக் கட்சியின் கோஷம் நடைமுறை சாத்தியமாயிற்று. அக்டோபர் புரட்சி நடந்த அன்றைய தினமே கூடிய அகில ருஷ்ய சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ் எல்லா

அதிகாரமும் சோவியத்துக்களின் உரிமையாக மாற்றப்பட்டு விட்டதைக் குறித்து, பிரகடனம் விடுத்தது.

குடிமக்கள் சொன்னபடி குடி வாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றில் எழுந்தது பார்; குடியரசென்று
உலகறியக் கூறிவிட்டார்!
அடிமைக்குத் தளையில்லை! யாருமிப்போது
அடிமையில்லை! அறிக! என்றார்!

என்று பாரதி பாடியுள்ள வரிகள் 1917 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ஆம் தேதியன்று அதாவது புரட்சி நடந்த தினத்தன்று ''ருஷ்யாவின் பிரஜைகளுக்கு'' என்ற தலைப்பின் கீழ் போல்ஷ்விக்கர்கள் அதிகாரம் அனைத்தையும் மக்களுக்கு உரிமையாக்கி விடுத்த பிரகடனத்தை மனத்தில் கொண்டு பாடப்பட்ட வரிகளே என்று நாம் லகுவில் உணரலாம்.

2. அடுத்து, பிப்ரவரிப் புரட்சி சர்வதேசிய மாதர்கள் தினத்தன்று, அதாவது 1917 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதியன்று தொடங்கியது என்றே சொல்ல வேண்டும். அன்று தொழிலாளிப் பெண்கள் பட்டினியையும், வறுமையையும், யுத்தத்தையும், ஜாராட்சியையும் எதிர்த்து, தெருக்களில் ஆர்ப்பாட்டம் தொடங்கினார்கள். அதனைத் தொடர்ந்து பிப்ரவரி 23 முதல் 27 ஆம் தேதி வரையிலும் ஐந்து நாட்கள் அலை மேல் அலையாக வேலை நிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும், கைகலப்புகளும், போராட்டங்களும், அடக்குமுறைகளும் தோன்றின. ஆயுதம் தாங்கிய போராட்டங்களும் வெடித்தன. இந்தப் புரட்சி போராட்டத்தின் விளைவாக, பிப்ரவரிப் புரட்சி வெற்றிபெற்றது. அதாவது பிப்ரவரிப் புரட்சி கிட்டத்தட்ட ஒருவார காலம் நடந்தது. ஆனால் அக்டோபர் புரட்சி அவ்வாறு நடைபெறவில்லை. அக்டோபர் 7 ஆம் தேதியன்று லெனின் பின்லாந்திலிருந்து

பெட்கிராடுக்கு ரகசியமாக வந்து சேர்ந்தார். அக்டோபர் மாதம் 10 ஆம் தேதியன்று கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி கூடியது. அந்தக் கூட்டத்தில்தான் அக்டோபர் புரட்சிக்கான திட்டத்தை லெனின் வகுத்தார்.

அந்தத் திட்டப்படி அக்டோபர் மாதம் 25 ஆம் தேதி புதிய காலண்டரின்படி (நவம்பர்-7) புரட்சி நடந்தது. இந்தப் புரட்சியைக் குறித்து ரஜனி பாமி தத் பின்வருமாறு எழுதுகிறார்:

"நவம்பர் 6 ஆம் தேதி இரவிலும், நவம்பர் 7 ஆம் தேதி காலையிலும் அதிகாரத்தைக் கைப்பற்றும் காரியம் முற்றிலும் திட்டமிட்ட ஒழுங்கோடு நிறைவேற்றப்பட்டது; தற்காலிக அரசாங்கம் எந்தவொரு எதிர்ப்பையும் காட்டு மளவுக்கு, எந்த முனையிலிருந்தும் எந்த ஆதரவையும் பெற்றிருக்கவில்லை. பிப்ரவரிப் புரட்சிக்கு மாறாக, போல்ஷ்விக் புரட்சியானது கிட்டத்தட்ட ரத்தம் சிந்தாத, சரித்திரத்திலேயே சிறிதும் ரத்தம் சிந்தாத புரட்சியாக இருந்தது. இறுதியான மாற்றமானது அத்தனை வேகமாக வும், தெள்ளத் தெளிவான சுளுவோடும், எதிர்ப்பே இல்லாத நிலையிலும் நிறைவேறியது ஏன் என்பதைப் புரிந்துகொள்ள, போல்ஷ்விக் புரட்சிக்கிருந்த அமோகமான வெகுஜன ஆதரவைப் புரிந்து கொள்வது அத்தியாவசியம். அந்த இறுதி மாற்றம் ஒரு நீண்ட நெடும் வளர்ச்சிப் போக்கின் முடிவே யாகும்" (Lenin : Life and Teachings) லெனினின் வாழ்க் கையும்—போதனைகளும்— ரஜனி பாமி தத்.

இதிலிருந்து அக்டோபர் புரட்சியானது பிப்ரவரிப் புரட் சியைப் போல் நாட்கணக்கில் நடக்காமல், ஒரே நாளில், சில மணி நேரத்தில் விரைவாகவும், சுளுவாகவும் நடந் தேறிய ஒன்றாகும் என்பது சரித்திர உண்மையாகும். இதனைக் கண்டறிந்த காரணத்தால்தான் பாரதி அந்தப் புரட்சியை,

"கடியொன்றில் எழுந்தது பார்!" என்று பாடுகிறான். அதாவது ஒரு கடிகையில்—ஒரு நாழிகையில்—வெற்றி கண்ட

புரட்சி எனக் காண்கிறான். இதனாலேயே அந்தப் புரட்சியை "மாகாளி பராசக்தியின் கடைக்கண்" வீச்சில் வெற்றி கண்ட அதிசயமாகவும் அவன் காண்கிறான்.

3. கெரென்ஸ்கியைப் பற்றி பாரதி கொண்டிருந்த கருத்துக்களை நாம் மேலே கண்டோம். அக்டோபர் புரட்சியின் விளைவாக ஜாராட்சிக்கு முற்றிலும் முடிவு கட்டிய தோடு அல்லாமல், கெரென்ஸ்கி போன்ற ராஜ விசுவாசிகளும் வீழ்ச்சியுற நேர்ந்த காட்சியைத்தான்,

இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்து விட்டான்
ஜாரரசன்; இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்
புயற்காற்றுச் சூறை தன்னில்
திமு திமென மரம் விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே!

என்ற பாடுகிறான் என்பதையும் நாம் ஊகிக்கலாம். பிப்ரவரிப் புரட்சியின் கோஷங்களை நிராகரித்து "அறங்கொன்று சதிகள் செய்த சுமட" ராகவே பாரதி கெரென்ஸ்கியையும் அவனது கோஷ்டியாரையும் பார்த்தான் என்பதையும், அவர்களின் வீழ்ச்சி எதிர்பாராத திடும் பிரவேசமாகவுள்ள வீழ்ச்சியாக இருந்ததையும் அவன் பார்த்தான் என்பதையும் கவனத்தில் நிறுத்தினால், இந்த வரிகள் கெரென்ஸ்கிக் கோஷ்டியின் வீழ்ச்சியையே குறிக்கின்றன என்பதையும் நாம் உணரலாம்.

## 'பூமியில் நல்ல யுகம்'

4. இறுதியாக, பாரதி 28-3-1917-ம் தேதியன்று, அதாவது பிப்ரவரிப் புரட்சி நடந்து முடிந்த புதிதில் எழுதிய சில வரிகளை முன்னர் பார்த்தோம். அந்த வரிகளில் "பூமியில்

நல்ல யுகம் தோன்றப் போகிறது. ''ருஷ்யப் புரட்சியானது இனி வரப் போகின்ற நற்காலத்தின் முன்னடையாளங்களில் ஒன்று'' என்று பாரதி கூறுகிறான். பிப்ரவரிப் புரட்சி அது வெற்றியடைந்த புதிதில் பாரதிக்கு அத்தகைய நம்பிக்கையைக் கொடுத்தது. ஆனால், தொடர்ந்து வந்த மாதங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அந்த நம்பிக்கைக்கு ஊறு விளைவிப்பனவாகவே இருந்தன. அக்டோபர் புரட்சி வெற்றி பெற்று, அதிகாரங்களெல்லாம் உண்மையிலேயே மக்கள் கைக்கு வந்த பின்னர்தான் அந்த நம்பிக்கை பாரதியின் மனதில் திட்டவட்டமாக உறுதி பெற்றது. எனவேதான் பிப்ரவரிப் புரட்சி நடந்து முடிந்த சமயத்தில் ''பூமியில் நல்ல யுகப் புரட்சி தோன்றப் போகிறது'' என்று எழுதிய பாரதி, அக்டோபர் புரட்சி வெற்றி கண்ட பின்னர் அந்தப் புரட்சியை '**யுகப் புரட்சி**' என்று—அதாவது யுக மாற்றத்தைக் கொண்டு வந்துவிட்ட புரட்சியென்றே—வருணித்தான். மேலும் தனது கவிதையின் இறுதி வரிகளில்,

இடிபட்ட சுவர்போலே கலி விழுந்தான்;
கிருதயுகம் எழுக மாதோ!

என்று அந்தப் புரட்சியை, கலியுகத்தை முற்றிலும் வீழ்த்தி, கிருத யுகத்தைத் தோற்றுவித்துவிட்ட புரட்சியென்றே உறுதியோடும் நிர்ணயிப்போடும் உவந்து போற்றுகின்றான்.

இத்தகைய காரணங்களால் பாரதி அக்டோபர் புரட்சியையே தனது, ''புதிய ருஷ்யா'' என்ற பாடலில் வாழ்த்தி வரவேற்றான் என்பதை நாம் நன்கு தெரிந்து கொள்ளலாம், இதில் ஐயப்பாட்டுக்கே இடமில்லை.

மேலும், கெரென்ஸ்கியை 'முதலாளிக் கூட்டத்தார் நிறுத்திய தலைவ'ராகப் பார்த்த பாரதி, லெனினை எவ்வாறு பார்த்தான் என்பதைத் தெரிவதன் மூலமும் அக்டோபர்

புரட்சியைப் பற்றிய அவனது கருத்தை நாம் தெரிந்து கொள்ள வாய்ப்புண்டு. 'சுதேசமித்திர'னில் 'செல்வம்—2' (கட்டுரைகள்—சமூகம்) என்ற கட்டுரையில் அவன் பின்வருமாறு எழுதுகிறான்.

## சோஷலிசக் கொள்கை

"ஒரு தேசத்தில் பிறந்த மக்கள் அனைவருக்கும் அந்தத் தேசத்தின் இயற்கைச் செல்வம் முழுவதையும் பொதுவுடைமையாக்கி விட வேண்டுமென்ற கொள்கைக்கு இங்கிலீஷில் 'சோசியலிஸ்ட்' கொள்கை என்று பெயர். இந்தக் கொள்கை ஐரோப்பாவில் தோன்றிய போது, இதை அங்கு முதலாளிகளும், மற்றப்படி பொதுஜனங்களும் மிக ஆத்திரத்துடனும், ஆக்ரோஷத்துடனும் எதிர்த்து வந்தார்கள். நாளடைவில் இக்கொள்கையின் நல்லியல்பு அந்தக் கண்டத்தாருக்கு மேன் மேலும் தெளிவுபட்டு வரலாயிற்று. எனவே இதன் மீது ஜனங்கள் கொண்டு இருக்கும் விரோதம் குறைவுபட்டுக் கொண்டு வரவே, இக் கொள்கை மேன்மேலும் பலமடைந்து வருகிறது. ஏற்கெனவே ருஷ்யாவில் ஸ்ரீமான் லெனின், ஸ்ரீமான் (மின்)த்ரோத்ஸ்கி முதலியவர்களின் அதிகாரத்தின் கீழ் ஏற்பட்டுள்ள குடியரசில் தேசத்து விளை நிலமும், பிற செல்வங்களும் தேசத்தில் பிறந்த அத்தனை ஜனங்களுக்கும் பொதுவுடைமையாகி விட்டது."

இவ்வித சோஷலிசக் கொள்கையின் நல்லியல்பை உணர்ந்து, அதனைக் காரிய சாத்தியமாக்கிய லெனினைப் பாராட்டுகின்ற பாரதி, ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் மனக் குறை கொண்டான். அதாவது, சோஷலிச லட்சியத்தை ஏற்கும் அவன் அதனை நிலைநிறுத்த, பலாத்காரமான நடைமுறையை மேற்கொள்வதை மட்டும் வெறுத்தான். இதனை அவன் அதே கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

"ஆனால், இந்த முறைமை போர், கொலை, பலாத்காரங்களின் மூலமாக உலகத்தில் பரவி வருவது எனக்குச் சம்ம

தமில்லை. எந்தக் காரணத்தைக் குறித்தும் மனிதருக்குள்ளே சண்டைகளும், கொலைகளும் நடக்கக் கூடாதென்பது என்னுடைய கருத்து. அப்படியிருக்க சமத்துவம், சகோதரத்துவம் என்ற தெய்வீக தர்மங்களைக் கொண்டோர் அவற்றைக் குத்து, வெட்டு, பீரங்கி, துப்பாக்கிகளால் பரவச் செய்யும்படி முயற்சி செய்தல் மிகவும் பொருந்தாத செய்கை என்று நான் நினைக்கிறேன்.''

இவ்வாறு கூறுகின்ற பாரதி ருஷ்ய நாட்டில் நடந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரையினும், தொடர்ந்து பின் வரும் சமாதானத்தையும் கூறுகிறான்:

''பலாத்காரமாக முதலாளிகளின் உடைமைகளையும், நிலஸ்வான்களின் பூமியையும் பிடுங்கி, தேசத்திற்குப் பொதுவாகச் செய்ய வேண்டும் என்ற கொள்கை ருஷ்யாவில் வெற்றி பெற்றதற்குப் பல **பூர்வ காரணங்கள்** இருக்கின்றன. நெடுங்காலமாகவே, ருஷ்ய தேசத்தில் ஆட்சி புரிவோரின் நிகரற்ற கொடுங்கோன்மையாலும் அநீதங்களாலும், செல்வர்களின் குரூரத் தன்மையாலும் பல ராஜாங்கப் புரட்சிகள் நடந்து வந்திருக்கின்றபடியால் இந்த மாறுதல் அங்கு அமைப்பது சுலபமாயிற்று...''

பாரதி இவ்வாறு கூறிய போதிலும், அவன் பலாத்காரத்தை எவ்விதத்திலும் ஆதரிக்கவில்லை. எனவே சமாதான பூர்வமாகவே அத்தகையதொரு மாற்றத்தை ஏற்படுத்துவது நல்லது என்றும் கருதுகிறான்; எனினும் இங்கு நாம் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நினைவூட்டிக் கொள்ள வேண்டும். ருஷ்யாவில் நிகழ்ந்த அக்டோபர் புரட்சி ரத்தம் சிந்தாத புரட்சியாகவே வெற்றி பெற்றது என்பதை நாம் கண்டோம். ஆனால், அந்தப் புரட்சியைச் சீர்குலைக்க, உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் முதலாளிகளும், நிலப்பிரபுக்களும், ஏகாதிபத்திய வாதிகளும் ஆயுதம் தாங்கிய தாக்குதல் தொடுக்க முனைந்த காரணத்தால்தான், லெனினது அரசாங்கமும் அந்த எதிர்ப் புரட்சி நடவடிக்கையை முறியடிக்க ஆயுதம் தாங்கிப் போராட நேர்ந்தது என்பதையும் நாம்

மறப்பதற்கில்லை. அந்தச் சூழ்நிலையில் ஆயுதம் தாங்கிப் போராடுவதுதான் தர்ம நெறியாகும் என்றே சொல்லலாம்.

## கெட்டிக்காரன் புளுகு...

இவ்வாறு ருஷ்ய நாட்டில் லெனின் தலைமையில் பொதுவுடைமை ஏற்பட்ட பின்னால், அதைப் பற்றி முதலாளித்துவ நாடுகள் பல்வேறு அவதூறுகளைக் கிளப்பி விட்டு வந்தன என்பது சரித்திரம் கண்ட உண்மை. எனினும் அவர்களால் உண்மையை முழுதும் மூடி மறைத்து விட முடியவில்லை. 'மான்செஸ்டர் கார்டியன்' என்ற ஆங்கில நாட்டுப் பத்திரிகையில் புதிய ருஷ்யாவில் இயற்றப்பட்ட திருமணச் சட்டம் பற்றிய செய்தி வெளி வந்துள்ளதைக் கண்டான் பாரதி. உடனே அவன் ''நவீன ருஷ்யாவின் விவாக விதிகள்'' (கட்டுரைகள்—மாதர்) என்ற தலைப்பில் நீண்டதொரு கட்டுரை எழுதினான். அந்தக் கட்டுரையில்:

''போல்ஷ்விக் ஆட்சி ஏற்பட்ட காலத்தில் அதற்குப் பல வகைகளிலும் தோஷங்கள் கற்பிப்பதையே தம் உடைமையாகக் கருதியவர்களிலே சிலர், அதன் மீது ராஜரீக நெறிகளிலே குற்றம் சுமத்தியது போதாதென்று, போல்ஷ்விஸ்ட் கட்சியார் ஸ்திரீகளையும் பொதுவாகக் கொண்டு, ஒருத்தியைப் பலர் அனுபவிக்கிறார்களென்று அபாண்டமான பழி சுமத்தப்பட்டது. ஆனால் 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு!' ஒன்பதாம் நாள் உண்மை எப்படியேனும் வெளிப்பட்டு விடும். ஒரு பெரிய ராஜ்யத்தைப் பற்றி எத்தனை காலம் பொய்யைப் பரப்பிக் கொண்டிருக்க முடியும்?'' என்று எழுதத் தொடங்கி ருஷ்ய நாட்டின் திருமண விதிகளைப் பாரதி விளக்குகிறான். அது மட்டுமல்ல. அந்தக் கட்டுரையின் இறுதியிலே அத்தகையதோர் ஆண், பெண் சமத்துவம் நமது நாட்டுக்கும் தேவை என்பதையும் அவன் உணர்கிறான். எனவே, அவன் ''ஆண்களுக்கும் பெண்களுக்கும் எவ்விதத்திலும் வேற்றுமை கிடையாது. இரு பாலரும் சமானமாகவே

கருதப்படுவார்கள் என்று ருஷ்யச் சட்டம் கூறுமிடத்திலே, நாம் ஐரோப்பிய நாகரீகத்தின் கருத்தை அனுசரித்தல் மிக, மிக, மிக, மிக அவசரம்'' என்று துடிதுடிப்போடு கூறி, அந்தக் கட்டுரையை முத்தாய்ப்பு வைத்து முடிக்கிறான்.

இவ்வாறு பாரதி தன் வாழ்நாட் காலத்தில் ருஷ்ய நாட்டின் ஒவ்வொரு வளர்ச்சியையும் நிகழ்ச்சியையும் மிகவும் உன்னிப்பாகவும், உற்சாகமாகவும் கவனித்து வந்திருக்கிறான். 1920 ஆம் ஆண்டில் அவன் சென்னைக்கு வந்து மீண்டும் ''சுதேசமித்திர''னில் உதவி ஆசிரியராக நேரடிப் பொறுப்பேற்ற காலத்தில் உலகத்து நிகழ்ச்சிகளை உடனுக்குடன் கவனிக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிட்டியது. 2-10-1920 ஆம் தேதியன்று ஒரு 'ராய்ட்டர்' தந்தி அவனது கவனத்துக்கு வந்தது. அந்தத் தந்தி பிரான்ஸ் தேசம் சோவியத் யூனியனுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ள முடிவு செய்திருப்பதைத் கூறியது. இந்தச் செய்தியை வரவேற்று பாரதி தனது அருமையான விமர்சனத்தை, சக வாழ்வுக் கொள்கையின் அவசியத்தை விரிவாக எழுதியிருக்கிறான். அந்தப் பொன்னான வரிகள் பின்வருமாறு:

''ருஷ்யாவுடன் ஆங்கிலேயர் வியாபாரம் செய்யலாகாதென்று வற்புறுத்துவதில் லண்டன் 'டைம்ஸ்' பத்திராதிபர் முதலிய ஆங்கிலத் தலைவர் பலர் மிதமிஞ்சிய காகிதமும், மையும், நேரமும் செலவிட்டிருக்கிறார்கள். காலக்கிரமத்தில் நடந்து தீர வேண்டிய காரியமொன்றை மேற்படி 'டைம்ஸ்' பத்திராதிபர் முதலானோர் வீணாகக் கடத்திக் கொண்டு போக முயற்சி புரிந்தனர். இன்றைக்கில்லாவிட்டால் நாளை, அல்லது மறுநாள் அல்லது அதற்கடுத்த நாள் ருஷ்யாவுடன் வியாபாரம் தொடங்குதல் இன்றியமையாததாகி விடும். ருஷ்யா சிறிய தேசமா? ஐரோப்பாவில் மூக்காற் பங்கு ருஷியா. அந்தத் தேசத்தை எத்தனை காலம் ஜாதிப் பிரஷ்டம் பண்ணி வைக்க முடியும்? அவர்களுடைய ராஜாங்கக் கொள்கைகள் இங்கிலாந்தில் பரவுவதற்கு வியாபார சம்பந்தங்கள் சாதனமாகக் கூடுமென்று இங்கிலாந்திலுள்ள பழங்

கட்சியார் அஞ்சுகிறார்கள். என்ன செய்யலாம்? லண்டன் 'டைம்ஸ்' பத்திராதிபருக்குச் சம்மதமில்லாத கொள்கைகள் இங்கிலாந்தில் புகாதபடி தடுப்பதற்காக, பிரிட்டிஷ் ஜனங்கள் ஒரு மகத்தான தேசத்துடன் வியாபாரம் செய்வதால் நேரும் சௌகரியங்களை எத்தனை காலம் நிறுத்தி வைக்க உடன்படுவார்கள்? ஆங்கிலேய கவர்மெண்டார் ருஷியாவுடன் வியாபார சம்பந்தங்கள் தொடங்கும்படி ஆங்கிலேய ஜனங்களுக்கு அனுமதி கொடுத்தவுடனேயே, நம்முடைய இந்தியா கவர்மெண்டாரும் இங்குள்ள வியாபாரிகளுக்கு அதே அனுமதி கொடுப்பார்களென்று நம்புகிறேன். அதன் மூலமாக ருஷியக் கொள்கைகள் இந்தியாவில் பரவிடக் கூடுமென்று அஞ்சுவோர் யாரேனுமிருப்பாராயின் அந்த அச்சம் அநாவசியமென்றும், ஆதலால் அதனை விட்டொழித்து விடவேண்டுமென்றும் அவர்களுக்கு நான் விண்ணப்பம் செய்து கொள்கிறேன்...'' (விநோத விஷயங்கள்: பிரான்ஸ் தேசத்தின் குட்டிக்கரணம்—பாரதி தமிழ்).

ஆம். வேறுபட்ட சமுதாய அமைப்புக்களைக் கொண்ட நாடுகள் சக வாழ்வு வாழ முடியும் என்பதை உணர்ந்து அதனை அன்றே வரவேற்றவன் பாரதி. அது மட்டுமல்ல. இந்திய நாட்டுக்கும் புதிய ருஷ்யாவுக்கும் வர்த்தக உறவுகள் ஏற்பட வேண்டுமென்றும் அன்றே கனவு கண்டவன் அவன் என்றும் நாம் இதன் மூலம் அறிகிறோம்.

## கடலைக் கட்டுப்படுத்தவா?

இவ்வாறெல்லாம் நாடுகளுக்குள்ளே வர்த்தக உறவையும் சக வாழ்க்கையையும் வற்புறுத்தி எழுதிய பாரதி அக்டோபர் புரட்சியின் தர்மத்தையும், தன்மையையும் நன்கு உணர்ந்திருந்தான். முதலாளித்துவம் வீழ்ச்சியடைந்து சோஷலிச சமுதாயம் மலர்வது தவிர்க்க முடியாத சரித்திர நியதி என்பதையும் அவன் உணர்ந்திருந்தான். அதனை எந்தவொரு சக்தியும் தடுத்து நிறுத்த இயலாது என்பதையும் அவன் அறிந்திருந்தான். இந்த உண்மையை அவன் தான் காலமாவதற்

குச் சரியாக ஆறு மாத காலத்துக்கு முன்னால் எழுதிய அரசியல் குறிப்பொன்றில் தெளிவுபடுத்தியுள்ளான். பெல்ஜிய நாட்டிலே நடந்த ஒரு தொழிலாளர் போராட்டம் பற்றிய செய்தியொன்றை, 15-3-1921 ஆம் தேதியன்று "காலக் கண்ணாடி: தொழிலாளர் கிளர்ச்சி" என்ற பகுதியில் பின்வருமாறு விமர்சனம் செய்கிறான்.

"சில தினங்களுக்கு முன்பு பெல்ஜியத்தில் ஒரு தொழிற்சாலையைத் தொழிலாளிகள் கைப்பற்றிக் கொண்டார்களென்று ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. எனவே பொதுவுடைமைக் கட்சி என்ற காட்டுத் தீ ஐரோப்பா என்ற மனுஷ்ய வனத்தில் ருஷியா முழுவதையும் சூழ்ந்து கொண்டது மட்டுமன்றி, மற்ற இடங்களிலும் ஆங்காங்கே திடீர் திடீரென்று வெடித்துத் தழல் வீசி வருவதைக் காண்கிறோம். போல்ஷெவிஸ்ட் கொள்கையை மத்திய ஆசியாவில் பரவிடக் கூடாதென்றெண்ணும் ஆங்கிலேய மந்திரிகள் இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்த்ரியா, துருக்கி, பிரான்ஸ் முதலிய நாடுகளில் மிகுதியாகவும், இங்கிலாந்து, நார்வே, ஸ்வீடன், பெல்ஜியம், டென்மார்க் முதலிய தேசங்களில் சற்றே மட்டமாகவும் அக் கொள்கை வியாபித்து வருவதை எங்ஙனம் சகிக்கிறார்களென்பது புலப்படவில்லை. என்ன செய்யலாம்? ஆங்கிலேயப் பழங்கதையொன்றிலே சொல்லப்பட்டது போல, கான்யூட் ராஜா சொல்லுக்குக் கடல் கீழ்ப்படிந்து நடக்குமா?..." (பாரதி தமிழ்) ருஷ்ய நாட்டைப் பற்றியும் அதன் தத்துவம் பற்றியும் பாரதி எழுதியவற்றில் இறுதியாக வரைந்த வரிகளாக நமக்குக் கிட்டியுள்ளவை இவைதான் என்று சொல்லலாம். இதன் பின்னர் அவன் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆந் தேதி அமரனாகிவிட்டான்.

'காலக்கண்ணாடி' என்று தலைப்பிட்டு பாரதி எழுதியுள்ளதைப் போலவே அவனும் தான் வாழ்ந்த காலத்தின் கண்ணாடியாகவே திகழ்ந்தான் என்பதையே புதிய ருஷ்யாவைப் பற்றி அவன் தெரிவித்துள்ள, நாம் மேலே கண்டு வந்த கருத்துக்கள் தெரிவிக்கின்றன. அவன் வாழ்ந்த காலத்தில்

நிகழ்ந்த மகத்தான சரித்திர சம்பவமான ருஷ்ய நாட்டின் அக்டோபர் புரட்சியையும், அதன் பாதையையும், சாராம் சத்தையும், அவற்றால் மலர்ந்துவந்த புதிய ருஷ்யாவையும் அந்தக் காலக் கண்ணாடி பிரதிபலிக்கத் தவறவில்லை. மேலும் பாரதி அக்டோபர் புரட்சியைக் கலியுகத்தின் வீழ்ச் சியாகவும், கிருதயுகத்தின் எழுச்சியாகவும் கண்டான் என்று முன்னர் பார்த்தோம். அந்தப் புரட்சி அவன் மனத் திலே அத்தனை நம்பிக்கையையும் உறுதியையும் ஊட்டியது. எனவேதான் அவன் தனது ''இனி'' என்ற கட்டுரையில் பின்வருமாறு எழுதினான்:

''ஒருவன் கலியை உடைத்து நொறுக்கினால் அவனைப் பார்த்து பத்துப்பேர் உடனே நொறுக்கி விடுவார்கள். இங்ஙனம் ஒன்று, பத்து, நூறு ஆயிரம், லட்சம், கோடியாக மனித ஜாதியில் சத்ய யுகம் பரவுதலடையும் காலம் ஏற் கெனவே ஆரம்பமாய் விட்டது. இதில் சந்தேகம் இல்லை'' (கட்டுரைகள்—தத்துவம்).

இவ்வாறு சந்தேகமற்ற நம்பிக்கை பாரதிக்கு இருந்த காரணத்தால்தான் அவன் பாரத சமுதாயத்தை வாழ்த்த வந்த காலத்தில்,

முப்பதுகோடி ஜனங்களின் ஸங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை

என்று இந்திய நாட்டுக்கும் பொதுவுடைமை லட்சியத்தை வகுத்துரைத்து, தமிழகத்தின் முதற்பெரும் பொதுவுடை மைக் கவிஞனாகவும், புரட்சிக் கவிஞனாகவும் அவன் திகழ் கின்றான். இவ்வாறு புரட்சியையும் பொதுவுடைமையையும் தமிழகத்தில் முதல் முறையாகப் புகுத்திய பாரதிக்கு ஆதர்ச மாக விளங்கியது. அகிலத்தைக் குலுக்கிய அக்டோபர் புரட்சியும் அதனால் மலர்ந்த புதிய ருஷ்யாவும்தான் என்ப தையும் நாம் அறிந்து கொள்கிறோம்.

# "கிருத யுகம்"

இடிபட்ட சுவர்போலே கலி விழுந்தான்;
கிருதயுகம் எழுக மாதோ!

என்று பாரதி 1917 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் நிகழ்ந்த அக்டோபர் புரட்சியை வாழ்த்தி வரவேற்றுப் பாடியிருக்கிறான் என்பதை நாம் அறிவோம்.

அந்தப் புரட்சியைக் கலியுகம் முடிந்து கிருத யுகம் தொடங்கிய யுக மாற்றமாகப் பாரதி கண்டது வெறும் கற்பனை நயம்தானா? கவிதா உருவகம்தானா?

இல்லை. உண்மையில் பாரதியின் ''கிருத யுகம்'' பற்றிய இந்தக் கருத்துக்கு ஒரு தர்க்கரீதியான பரிணாம வளர்ச்சியே இருந்திருக்கிறது என்பதைப் பாரதியை ஊன்றிப் படித்தால் உணர்ந்து கொள்ளலாம்.

கலியுகம் என்பது என்ன?

இந்தியப் பௌராணிகர்கள் உலக வரலாற்றைச் சக்கர வட்டமாக வரும் திரேதாயுகம், துவாபரயுகம், கிருத யுகம் என்ற நான்கு காலவரையறையாகப் பிரித்தார்கள். இவற்றில் கலியுகம் என்பது துவாபர யுகத்துக்குப் பிற்பட்டது. இது கிருஷ்ணன், பாண்டவர்கள் முதலியோரின் ஆட்சி முடிவோடு தொடங்கியது. இந்தக் கலியுகத்தில் பொய்யும் புலையும் சூதும் வாதும் மோசடியும் முழுப்புரட்டும் பஞ்சமா பாதகங்

களும் மலிந்திருக்கும். பௌராணிகர்களின் கூற்றுப்படி நாம் இப்போது வாழ்ந்து வருவது இந்தக் கலி யுகம்தான். சரி இந்தக் கலி யுகம் எப்போது முற்றுப் பெறும்?

''எப்போதெப்போது தர்மத்தின் கை தளர்ந்து அதர் மத்தின் கை ஓங்குகிறதோ அப்போதெல்லாம் நான் பூமியில் அவதரித்து அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டு வேன்'' என்று கீதோபதேசம் செய்த பரந்தாமன்தான், தனது அவதாரங்களில் பாக்கியாகவுள்ள கல்கி அவதாரத்தை கலி யுக முடிவில் எடுத்து, உலகில் துஷ்டர்களைச் சங்காரம் செய்து தருமத்தை நிலைநாட்டுவான். அதன் பின் சகல தருமங்களும் தழைத்தோங்கும். ''கிருத யுகம்'' தொடங்கும். இதுதான் பௌராணிகர்களின் கணிப்பு.

இந்தக் கலியுகம் எவ்வளவு காலம்நீடிக்கும்? பௌராணி கர்களின் கணக்குப்படி, இந்தக் கலி யுகத்தின் மொத்தக் கால அளவு 4 லட்சத்து 32 ஆயிரம் ஆண்டுகள். பஞ்சாங்கக் கணக்குப்படி இப்போது நடப்பது கலி யுகத்தின் 5083 ஆண்டுதான். எனவே பௌராணிகர்களின் கூற்றுப் படி, இந்தக் கலியுகம் முடிவதற்கு நாம் இன்னும் 4 லட்சத்து 26 ஆயிரத்துச் சொச்சம் ஆண்டுகள்வரை காத்திருக்க வேண்டும்!

என்றாலும், அதர்மமும் அநியாயமும் கோலோச்சும் கலி யுகம் விரைவில் முடிந்து, தருமமும் நீதியும் தழைக்கும் கிருத யுகம் சீக்கிரமே தழைக்க வேண்டும் என்ற வேட்கை ஞானிகளிடமும், தத்துவாசிரியர்களிடமும் மேலோங்கியே இருந்து வந்துள்ளது. உதாரணமாக. ஆழ்வாராதியர்களில் சிறந்த தத்துவஞானியாக மதிக்கப்பட்ட நம்மாழ்வார்,

கலியும் கெடும்; கண்டு கொள் மின்!

என்றும்,

ஒக்கத் தொழுகிற் றிராகில்
கலியுகம் ஒன்றும் இல்லையே!

என்றும் ''திருவாய்மொழியில்'' பாடியுள்ளார். எனினும் இவர்கள் உலகமெல்லாம் நாராயணனைத் தொழுது வழுத்தினால் நாராயணனின் அருளினால் கலியுகம் அற்றுப் போய்விடும் என்றே கருதினர்.

என்றாலும், கலி யுகம் அழிந்து கிருத யுகம் தோன்றும் காலமானது, அரசியல், பொருளாதார, சமுதாய, கலாசார, ஆன்ம விடுதலைகள் அனைத்தையும் உத்திரவாதம் செய்யக் கூடிய பொதுவுடைமை மலரும் காலம்தான் என்ற அரசியல் கருத்தாகப் பாரதியிடம் மலர்ச்சியும் புதுமையான அர்த்தபாவமும் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம்.

இந்த மலர்ச்சி பாரதியிடம் எப்படி ஏற்பட்டது?

பாரதி ஆங்கிலக் கவிஞன் ஷெல்லியிடம் பெரிதும் ஈடுபாடு கொண்டவன்; ஷெல்லியின் செல்வாக்குக்குப் பெரிதும் ஆட்பட்டவன்; தன்னையே இளமைக்காலத்தில் 'ஷெல்லிதாசன்' என்று கூறிக்கொண்டவன். எனவே ஷெல்லி எழுதிய நெடுங் கவிதையான ராணி மாபில் (Queen Mab), அவன் வருங்காலத்தில் மனிதகுலம் அடையப்போகும் விடுதலையையும், அதன் தன்மையையும், குறித்து கற்பனை செய்து எழுதிய ''பொற்கால''க் (Golden Age) கனவும் பாரதியைக் கவர்ந்திருந்தது என்பது வெளிப்படை. என்றாலும், அத்தகைய ''பொற்கால''த்தைக் ''கிருத யுக''த்தோடு பொருத்தி, அதனை நமது நாட்டு மக்களுக்கு உணர்த்தப் பாரதிக்கு அடியெடுத்துக் கொடுத்த விஷயம் எது?

கலி யுகம் மாறி கிருத யுகம் தோன்றும் என்ற கருத்து பாரதியிடம் 1907 ஆம் ஆண்டில்தான் புதுமையான அர்த்த பாவத்தோடு மலர்ச்சி பெற்றது.

1907 ஆம் ஆண்டில் விவேகானந்தரின் தம்பியும், வங்க நாட்டில் தோன்றிய தீவிரமான தேசபக்தரும், புரட்சிவாதியுமான பூபேந்திரநாத தத்தர், ராஜத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறைத் தண்டனை பெற்றார். அவ்வாறு

அவர் சிறைதண்டனை பெற்ற காலத்தில், அவரைக் குறித்துத் தான் பாடிய பாட்டில் பாரதி பின்வருமாறு பாடினான்:

வீழ்த்தல் பெறத் தருமமெலாம், மறமனைத்தும்
    கிளைத்துவர, மேலோர் தம்மைத்
தாழ்த்ததமர் முன்னோங்க, நிலைபுரண்டு
    பாதகமே ததும்பி நிற்கும்
பாழ்த்த கலியுகம் சென்று, மற்றோர் யுகம்
    அருகில் வரும் பான்மை தோன்றக்
காழ்த்த மன வீரமுடன் யுகாந்தரத்தின்
    நிலை இனிது காட்டி நின்றான்!

மேலோட்டமாகப் பார்த்தால், பூபேந்திரநாத தத்தர் தேச விடுதலைக்குப் போராடியதன் மூலம், கலியுகம் தொலைந்து கிருத யுகம் தோன்றக்கூடிய யுக சந்தி நிலையைக் காட்டி நின்றார் என்றே இப்பாடலில் நாம் பொருள் கொள்ளத் தோன்றும். ஆனால் இந்தப் பூபேந்திர நாதர் ''யுகாந்தர்'' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார். அந்தப் பத்திரிகையில் அவர் எழுதிய ஆவேச மிக்க அக்கினிப்பொறி பறக்கும் எழுத்துக்களின் காரண மாகவே அவரை அன்றைய ஆங்கில அரசாங்கம் சிறைப் படுத்தியது. ''யுகாந்தர்'' (யுகாந்தரம்) என்ற சொல்லுக்கு யுக முடிவு அல்லது யுக சந்தி என்று பொருள். இப்போது பாரதியின் பாடலை மீண்டும் பார்த்தால் ''யுகாந்தரத் தின் நிலை இனிது காட்டி நின்றான்'' என்ற வரியில், பூபேந் திரநாதரின் ''யுகாந்தர்'' என்ற பத்திரிகையின் பெயரைக் கருத்தில் கொண்டுதான், அவர் கலியுகம் மறைந்து கிருத யுகம் தோன்றக்கூடிய யுக சந்தியைக் காட்டி நின்றார் என்று பாரதி விளக்கம் கூறியுள்ளான் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். எனவே தேச விடுதலைப் போரானது கலியுகம் மறைந்து கிருதயுகம் அருகில் வருவதற்கான ஒரு சூசகம்

என்று பொருள் கொண்டு, கிருதயுதம் பற்றிய பௌராணிகக் கருத்தை அரசியல் கருத்தாக இவ்வாறு முதன் முதலில் பாரதி மாற்றினான் என்று நாம் கொள்ள இடமுண்டு.

ஆயினும், பூபேந்திரநாதர் தமது பத்திரிகைக்கு 'யுகாந்தர்' என்று பெயர் வைத்ததற்கும்கூட ஒரு பின்னணி உண்டு. அதனைத் தெரிந்துகொள்ள நாம் அவரைக் குறித்தும், அவர் சார்ந்திருந்த இயக்கம் குறித்தும் சில விஷயங்களை நினைவூட்டிக் கொள்ள வேண்டும்.

இந்திய நாட்டின் தீவிரத் தேசவிடுதலை இயக்கத்துக்கும், ஏன், ஆயுதந் தாங்கிப் போராடும் பயங்கரவாதத் தேசிய இயக்கம், புரட்சி இயக்கம் ஆகியவற்றுக்கும்கூட, சுவாமி விவேகானந்தரே முதற்பெரும் தூண்டுகோலாக, தோன்றாத் துணையாக விளங்கினார் என்றே சொல்லலாம். அவரது தம்பியான பூபேந்திரநாதரும் ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் தாங்கிப் போராட வேண்டும் என்று கருதிய இளைஞர்களில் ஒருவராகவே இருந்தார். எனவே அவர் 1902ஆம் ஆண்டில் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டிருந்த "அனுசீலன் சமிதி' என்ற ரகசிய இயக்கத்தில் சேர்ந்தார். இந்த இயக்கத்தில் சேர்ந்த காலத்தில், அவர் இதற்குப் பின்பலமாக விருந்த அரவிந்தர், மற்றும் விவேகானந்தரின் சிஷ்ய ரத்தினமும் பாரதியின் குருமணியுமான சகோதரி நிவேதிதா முதலியோருடனும் தொடர்பு கொண்டார். 1906-ல்தான் இவர் தமது 'யுகாந்தர்' என்ற வாரப் பத்திரிகையைத் தொடங்கினார். இந்தப் பத்திரிகையோடு சம்பந்தப்பட்டிருந்த இளைஞர்கள் எல்லோருமே தீவிரவாதிகள்; பயங்கரவாதிகள். புரட்சி மனப்பான்மை கொண்ட இந்த இளைஞர்கள் தம்மை 'யுகாந்தர் குழு'வைச் சேர்ந்த புரட்சிவாதிகள் என்றே கூறிக்கொண்டனர். 'யுகாந்தர்' பத்திரிகை இந்தக் குழுவின் குரலாகவே ஒலித்தது.

ஓராண்டுச் சிறைவாசம் முடிந்து வெளிவந்த பூபேந்திரநாதர் பின்னர் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் சென்று

அங்குள்ள இந்தியப் புரட்சிவாதிகளோடு சேர்ந்து கொண்டார். 1921-ல் இவர் மூன்றாவது கோமின்டர்ன் காங்கிரஸ் நடப்பதற்குமுன் மாஸ்கோவுக்கும் சென்று, அங்கு இந்தியா பற்றிய ஆய்வுரை ஒன்றை லெனினிடம் கொடுத்தார். 1921-ல் இந்தியா திரும்பிய அவர் 1929-ல் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1936 முதல் இவர் வங்க மாகாணத்தின் கிசான் சபாத் தலைவர்களில் ஒருவராக இருந்தார். இருமுறை அகில இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசின் (AITUC) தலைவராகவும் இருந்தார். இவர் பல நூல்கள் எழுதி யுள்ளார். அவற்றில் 'இந்திய நிலப் பொருளாதாரத்தின் இயக்குவியல்', வங்காளியில் இவர் மொழி பெயர்த்த ஏங்கெல்ஸின் 'சோஷலிசம்' முதலியவையும் அடங்கும். இவர் 1955-ல் காலமானார்.

இங்கு பாரதி ஆசிரியராகவிருந்த 'இந்தியா' பத்திரிகையின் நிர்வாகியாகப் பணியாற்றிய எம். பி. டி. ஆச்சார்யா என்ற இளைஞரும் பாரதியுடன் புதுவை சென்று, பின்னர் அங்கிருந்து ஐரோப்பாவுக்குப் போய், அங்குள்ள இந்தியப் புரட்சிவாதிகளோடு சேர்ந்து கொண்டார் என்பதும், பின்னர் அவர் சோவியத் நாட்டுக்கும் சென்று, 1921-ல் தாஷ்கெண்டில் வெளிநாட்டிலுள்ள இந்தியப் புரட்சி வாதிகள் நிறுவிய இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் தலைவராக இருந்தார் என்பதும் நினைவுகூரத்தக்கது.

அதாவது ஆரம்பத்தில் ஆயுதம் தாங்கிப் போராடும் பயங்கரவாதத்தில் ஆர்வம் கொண்ட இந்தியத் தேசபக்த இளைஞர்களில் பலர், இறுதியில் அது சரியான வழியல்ல, பயன் அளிக்கும் மார்க்கமல்ல என்று தேர்ந்து தெளிந்து, மக்கள் சக்தியில் நம்பிக்கையுள்ள கம்யூனிச இயக்கத்தில் வந்து சேர்ந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பூபேந்திரநாதர் தமது பத்திரிகைக்கு 'யுகாந்தர்' என்று பெயர் வைத்ததற்கும் ஒரு காரணம் உண்டு. இந்த

நூற்றாண்டின் தொடக்கத்தில், 1905 ஆம் ஆண்டின் ருஷ்யப் புரட்சியால் உத்வேகம் பெற்று, அன்றைய வெள்ளை அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராட வேண்டும்—தனி நபர் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதோடுகூட, ராணுவத்துக்குள்ளும் புரட்சியைத் தூண்டிவிட வேண்டும், மக்கள் மத்தியிலும் ஆயுதம் தாங்கிய புரட்சிக்குப் படை திரட்ட வேண்டும்—என்றெல்லாம் கருதியவர்கள், இவ்வாறு செய்தால், **ஒருசில** ஆண்டுகளிலேயே வெள்ளையர் ஆதிக்கத்தை ஒழித்து விட முடியும் என்று நினைத்தார்கள். இவ்வாறு வெள்ளையர் ஆதிக்கம் ஒரு ''மகாப் பிரளயத்தால்''—புரட்சியால்—ஒழிக்கப்படும், அதன் மூலம் கலி யுகம் மறைந்து கிருத யுகம் தோன்றி விடும் என்றும் கருதினார்கள்; எனவேதான் பூபேந்திரநாதர் தமது பத்திரிகைக்கு 'யுகாந்தர்' (யுக சந்தி) என்று பெயரிட்டார்.

உதாரணமாக, புதுச்சேரியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த பாரதியின் 'இந்தியா' பத்திரிகையில் 1909 செப்டம்பர் 18 அன்று கல்கத்தாவில், 'இந்தியா'வின் பிரதிநிதி ஒருவர், அரவிந்தரைப் பேட்டி கண்ட விவரம் வெளிவந்தது, அந்தப் பேட்டியில் பாரத நாட்டுத் தற்காலச் சூழ்நிலைபற்றிக் கேட்ட கேள்விகளுக்குப் பின்வருமாறு அரவிந்தர் பதிலளித்ததாக 'இந்தியா' வெளியிட்டிருந்தது:

''ஒரு பிரளயம் வருகின்றது. அப்பிரளயம் வருவதற்கான முன் அடையாளங்கள் எல்லாம் தென்படுகின்றன. 1908 ஆம் வருஷத்துடன் கலி யுகத்தில் 5000 வருடங்கள் ஆகிவிட்டன. 1907 ஆம் வருஷ முதல் ஓர் புதிய காலம் தொடங்கியிருக்கிறது. இஃது பலத்திலும் அளவிலும் மிகுதி பெற்றுக் கொண்டே வருகின்றது. இன்னும் **நான்கு** வருஷங்களில் இப்பிரளயம் எல்லோர் கண்ணுக்கும் தெரியும்படி நன்றாக விருத்தியடைந்திருக்கும், அதற்கடுத்த 4 அல்லது 5 வருஷங்களில் இது பரிபூரணமாகி விடும்.

'கேள்வி. இப்பிரளயம் எப்படிப்பட்டது?'

''மறுமொழி; மஹாப் பிரளயம்; மாறுதல்; புரட்சி; மகாக் கிராந்தி. உயர்ந்தோர் தாழ்தல்; தாழ்ந்தோர் உயர்தல்; மாறுதல்; மாறுதல் எங்கு பார்த்தாலும் மாறுதல். அரசாட்சியிலே மாறுதல்; நமது ஜனங்களிடம் மாறுதல், புதிய பிரச்சினைகள்; புதிய சிந்தனைகள்; எல்லாச் செயல்களிலும் புதிய வழிகள்.''

அரவிந்தர் கூறியதன் விளக்கம் இதுதான்: 1907-ல் தொடங்கிய தீவிரவாதத் தேசிய இயக்கம் விரைவில் வலுவடைந்து, ஒரு சில ஆண்டுகளில், **ஏழெட்டு ஆண்டுகளில்**, வெற்றி கண்டு வெள்ளையராட்சியை ஒழித்து, இந்தியாவில் சுதந்திரத்தை நிலைநாட்டிவிடும் என்பதுதான்.

இந்தியாவிலிருந்த தீவிரத் தேசியவாதிகளான அரவிந்தர் போன்றோர் மட்டுமின்றி வெளிநாட்டிலிருந்து இந்திய சுதந்திரத்துக்குப் பாடுபட்டுவந்த தீவிரத் தேசியவாதிகளான கிருஷ்ண வர்மா போன்றவர்களும் இந்தியாவுக்கு ஒரு சில ஆண்டுகளில் சுதந்திரம் கிட்டிவிடும் என்று அன்று நம்பினர். பாரதியே தனது 'ஞானரதத்'தில் சில வாய்ப் பேச்சு வீரர்களைப் பற்றி எழுதும்போது, பின்வருமாறு எழுதியுள்ளான்:

''மற்றொருவன், 'சியாம்ஜி கிருஷ்ணவர்மா ஸ்வராஜ்யம் கிடைக்கப் பத்து வருஷம் ஆகுமென்று கணக்குப் போட்டிருக்கிறார். ஆறு வருஷத்தில் கிடைத்துவிடுமென்று எனக்குத் தோன்றுகிறது' என்பான்...மூன்றாமவன் 'ஆறு மாதமென்று சொல்லடா' என்று திருத்திக் கொடுப்பான்.''

(ஞானரதம்—மண்ணுலகம்)

இவ்வாறு இந்தியாவுக்கு விரைவில் வந்துவிடும் என்று கருதிய சுயராஜ்யத்தையே, தீவிரத் தேசியவாதிகள் பலரும் கலி யுகம் நீங்கிக் கிருத யுகம் தோன்றும் மாற்றமாகக் கருதி வந்தனர்.

தீவிரவாதத் தேசிய இயக்கத்தின் கவிஞனாகத் திகழ்ந்தவன்தான் பாரதி. என்றாலும் பாரதியின் சுதந்திர லட்சியம், தீவிரவாதத் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் பலரது லட்சியத்தைப் போல், அரசியல் சுதந்திரம், அதாவது அன்னியரிடமிருந்து பெறும் விடுதலை என்ற எல்லைக்குள் மட்டும் அடங்கி நிற்கவில்லை. பொருளாதார விடுதலையும் சமுதாய விடுதலையும் கிட்டும்போதுதான் அரசியல் விடுதலையே பூரணத்துவம் பெறும், பொருள் படைத்ததாக இருக்கும் என்பதே பாரதியின் கணிப்பு. இதற்கு எடுத்துக்காட்டு 1907 ஆம் ஆண்டிலேயே பாரதி எழுதிய 'சுதந்திரப் பள்ளுப்' பாடலாகும். பெறுகின்ற சுதந்திரம் 'அரசியல் சுதந்திர'மாக மட்டுமல்லாது 'ஆனந்த சுதந்திர'மாகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, அந்தப் பாடலில்,

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்; வீணில்
உண்டு களித் திருப்போரை
நிந்தனை செய்வோம்.
விழலுக்கு நீர் பாய்ச்சி
மாய மாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம்
ஓய மாட்டோம்

என்றும்,

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு; நாம்
எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு

என்றும் அவன் பாடியுள்ளதை நாம் அறிவோம். எனவே பாரதி எதிர்பார்த்த 'கிருத யுகம்' அரவிந்தர் போன்றோர் எதிர்பார்த்திருந்த 'அரசியல் சுதந்திரம்' மட்டும் அல்ல

என்பது தெளிவு. எனவேதான் பாரதி தான் கருத்தில் கொண்டிருந்த கிருத யுகம் அரவிந்தரைப் போல் ஏழெட்டு ஆண்டுகளில் தோன்றிவிடும் என்று கருதவில்லை. அரசியல் சுதந்திரம் அடைந்த சில பல ஆண்டுகளுக்குப் பிறகே அது தோன்ற முடியும் என்றே அவன் கருதினான். எனவேதான் பாரதி 1910 பிப்ரவரியில் வெளியிட்ட தனது 'ஞானரத'த்தில் 'தர்ம லோகம்' பற்றிய பகுதியில் கண்வாசாரியாரின் வாய்மொழியாக ''பாரத நாட்டில் இப்போது கலி யுகம். ஆனால் இன்னும், இரண்டு மூன்று தலைமுறைகளில் கலி யுகம் நீங்கிக் கிருதயுகம் பிறக்கப் போகின்றது'' என்று எழுதினான்.

மேலும் அரவிந்தரும் அவரைச் சார்ந்து நின்ற தீவிரத் தேசியவாதிகளும் புரட்சிவாதிகளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததுபோல், அந்த 'மகாப் பிரளயம்' ஏழெட்டு ஆண்டுகளில் இங்கு ஏற்படவில்லை. மாறாக, அரவிந்தர் குறிப்பிட்ட அதற்கான முன் அடையாளங்களும்கூட மறையத் தொடங்கின. மகாப் பிரளயம் பற்றி — யுக மாற்றம் பற்றி — அரவிந்தர் குறிப்பிட்ட 1909 ஆம் ஆண்டுக்குப் பின் ஒன்றிரண்டு ஆண்டுகளிலேயே தீவிரவாதத் தேசிய இயக்கம் வலிமை குன்றிவிட்டது; ஆயுதந் தாங்கிய பயங்கரவாதத்தில் நம்பிக்கை வைத்திருந்த ஆரம்ப காலத் தீவிரவாத இளைஞர்கள் பலரும் தமது இயக்கம் பலனளிக்காது என்றும் கண்டு கொண்டனர். அரவிந்தரும்கூட 1910 ஆம் ஆண்டிலேயே அரசியல் சந்நியாசம் பூண்டு புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்துவிட்டார். இதனால் அவரும் பிறரும் கனவு மண்ட மகாப் பிரளயமும் யுக மாற்றமும் கண்ணுக்கெட்டாத தொலைவுக்குத் தள்ளிப்போய் விட்டன

பாரதியும் தீவிரவாதத் தேசிய இயக்கத்தைச் சேர்ந்தவன்தான். எனவே அந்த மகாப் பிரளயம் — யுக மாற்றம் — புரட்சி, அதாவது இந்தியாவின் அரசியல் விடுதலை, விரைவில் வந்தே தீரும் என்ற நம்பிக்கை

ஆரம்பத்தில் அவனுக்கும் இருந்திருக்கலாம். ஆனால் தீவிர வாதத் தேசிய இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பிறகு அந்த நம்பிக்கை பாதிக்கும் தள்ளிப் போய்விட்டது.

...இன்று

கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்;
காலம் மாறும்;

என்று 1912ல் பாரதி தனது 'பாஞ்சாலி சபத'த்தில் அர்ஜுனனின் வாய்மொழியாகக் கூறிய கூற்று, பாரதியின் கூற்றென்றே சொல்லலாம்.

என்றாலும், கலி யுகம் மறைந்து கிருத யுகம் தோன்றும் என்ற நம்பிக்கை அவனுக்கு அறவே அற்றுப்போய்விட வில்லை, காலம் கடந்ததென்றாலும் அது நிகழ்ந்தே தீரும் என்று அவன் நம்பிக்கை கொண்டிருந்தான். அந்த உறுதிப் பாட்டில்தான், புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் தான் எழுதிய 'விநாயகர் நான்மணி மாலை'யில்

''பொய்க்கும் கலியை நான் கொன்று
பூலோகத்தார் கண்முன்னே
மொய்க்கும் கிருத யுகத்தினையே
கொணர்வேன், தெய்வ விதி இஃதே''

என்றும்,

''பாரிடை மக்களே!

கிருத யுகத்தைக் கேடின்றி நிறுத்த
விரதம் நான் கொண்டனன்''

என்றும் அவன் பாரத மக்களின் பிரதிநிதியாக நின்று, மனித குலத்தின் குரலாக ஒலித்துச் சபதம் எடுத்துக் கொண்டான்.

மேலும் தான் கருதிய 'கிருதயுகம்' இந்தியாவுக்கு அரசியல் சுதந்திரம் கிட்டுவதோடு தோன்றிவிடும் என்றும் அவன் கருதிவிடவில்லை. இதனை அவனே தான் 1915 ல் எழுதிய "Coming Age" (வரவிருக்கும் யுகம்) என்ற ஆங்கிலக் கட்டுரையில் தெளிவுபடுத்தி விடுகிறான். அந்த நாளில் ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் மேலோங்கி வந்த சோஷலிசக் கருத்துக்கள், இயக்கங்கள், முதலியவற்றைப் பற்றி அறியவந்த பாரதி, மேற்கூறிய கட்டுரையில் பின்வருமாறு எழுதினான்.

"சோஷலிசம் என்று மேலை நாட்டினர் குறிப்பிடுவது என்னவென்று இங்கு தெளிவாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. என்றாலும் மேலை நாட்டுக்கும் சரி, கீழை நாட்டுக்கும் சரி, கௌரவமான வாழ்க்கை நடத்துவதற்கு ஒரே ஒரு மார்க்கம்தான் உள்ளது. உலகைப் பொதுவுடைமையாக்கி, அதில் சக-தொழிலாளர்களாகவும் கூட்டுப் பங்காளிகளாகவும் வாழ்வதே அந்த மார்க்கமாகும். கிருதயுகத்தில் மனிதர்கள் இம்மாதிரியே இந்த நாட்டில் வாழ்ந்தனர் என்று கூறும் மரபு நமக்குண்டு. அது உண்மையாகவும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். ஆயினும் எல்லா நாடுகளிலும், அதுவும் விரைவிலேயே, கிருதயுகத்தைக் கொண்டு வருவதில் மானிட வைராக்கியம் இனி வெற்றிபெறும். மனிதனின் மிக உயர்ந்த வைராக்கியம் இதுவரையில் ஏதோ காரணத்தினால் முடக்கப்பட்டிருந்தது. அது தனது சக்தியின் தலையாய அம்சத்தை நமது சமுதாயப் புன்மைகள் அனைத்தின் வேரையும் களையும் பணியில் செலுத்த முடியாமல் இருந்தது. மனித சமுதாயத்தின் உருவாக்கத்திலேயே நீதியை வெற்றி பெறச் செய்தாக வேண்டும். பின் நீதி எல்லா மானிட விவகாரங்களிலும் உறவுகளிலும் இயல்பாகவே வெற்றி பெற்று விடும். மனிதக் கூட்டுறவுகளின் கட்டுக்கோப்பில் போட்டிக் கோட்பாடு கொடிகட்டிப் பறக்கிற வரையிலும், நிலமும் நீரும் மனிதர்கள் எல்லோருக்கும் பொதுவான சொத்தாக

இல்லாத வரையிலும், எந்த விதத்திலும் மனிதர்கள் தமது 'பொருளாதார' உறவுகளில் மிருகங்களை விடவும் மோசமாகவே நடந்து கொள்வர்...இந்த உண்மையைப் பெரும்பான்மையான மனிதர்கள் பூரணமாக உணரும்போது, நாம் நமது ஏறுமுகமான பரிணாமத்தில் அடுத்த அடியை எடுத்து வைத்து விடுவோம்'' ('Bharathi's Essays and other Prose Fragments').

எனவே பாரதி சோஷலிசத்தையே கிருத யுகத்தைக் கொண்டு வரக்கூடிய மகாப் பிரளயமாக 1915 ஆம் ஆண்டிலேயே கருதினான் என்பது தெளிவு. இத்தகைய மகாப் பிரளயத்துக்காக, புரட்சிக்காக, யுக மாற்றத்துக்காக ஏங்கிக் கிடந்த பாரதி, 1917 ஆம் ஆண்டில் ரஷ்ய நாட்டில் புரட்சி வெற்றி பெற்று, அங்கே கொடுங்கோன்மை மறைந்ததோடு, உண்மையான குடியாட்சி மலர்ந்ததைக் கண்டு, தான் எதிர்பார்த்திருந்த யுக மாற்றம் அங்கு நிகழ்ந்தது என்பதை உணர்ந்து ஆரவாரித்தான். எனவேதான் தனது தாயகமான பாரதத்தின்மீது பாயாத பராசக்தியின் கடைக்கண் கடாட்சம் ரஷ்யாவின்மீது பாய்ந்ததைக் கண்டு,

மாகாளி பராசக்தி உருசிய நாட்டினில்
கடைக்கண் வைத்தாள்; அங்கே
ஆகா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி!

என்று எடுத்த எடுப்பில் அதனை வரவேற்றுப் பாடினான்.

ஆம். 1907 ஆம் ஆண்டில் தேசவிடுதலை இயக்கத்தைப் 'பாழ்த்த கலி யுகம் சென்று மற்றோர் யுகம் அருகில் வரும் பான்மை தோன்ற'ச் செய்யும் சுப சூசகமாகக் கருதிய பாரதி, அதே 1907 ஆம் ஆண்டில் 'ஆனந்த சுதந்திரத்துக்கும்' விளக்கம் கொடுத்து, அரசியல், பொருளாதார, சமூக விடுதலையை ஒட்டு மொத்தமாகப் பெறுவதே ஆனந்த

சுதந்திரமாகும் என்று 'சுதந்திரப் பள்ளுப்' பாட்டையும் பாடிய பாரதி சரியாக பத்தாண்டுக்குப் பின்னால் 1917 ஆம் ஆண்டு அக்டோபரில் 'குடி மக்கள் சொன்ன படி, குடி வாழ்வு மேன்மையுறக் குடிமை நீதி'யை நிலைநாட்டிய ரஷ்ய மக்கள், தான் கனவு கண்ட ஆனந்த சுதந்திரத்தைப் பெற்று விட்டதைக் கண்டு, அதனையே தான் நெடுங்கால மாய்க் காண்பதற்குத் தவமிருந்த யுக மாற்றமாக, கலி யுகம் தொலைந்து கிருத யுகம் தோன்றிய நிகழ்ச்சியாக வருணித்தான்; வாழ்த்தினான்; வரவேற்றான்.

# பாரதியும் தாகூரும்

ரவீந்திரநாத தாகூரும் சுப்ரமண்ய பாரதியும் இந்த நூற்றாண்டின் இருபெரும் தேசியக் கவிஞர்கள். தாகூர் வங்கத்திலும் பாரதி தமிழகத்திலும் தோன்றிய போதிலும் இருவரும் பாரதம் முழுமைக்கும் பொதுவானர்கள்; ஏன், உலகத்துக்கே பொதுவானர்கள். இருவரையும் ஒப்புநோக்கி விரிவாகவும் நுணுக்கமாகவும் ஆராய வேண்டியது அவசியம். எனினும் வங்க மொழியிலும் தமிழ் மொழியிலும் நிறைந்த பாண்டித்யம் பெற்றவர்கள்தான் இதனை முழுமையாகச் செய்ய முடியும். ஏனெனில் தாகூரின் எழுத்துக்கள் பலவும் தமிழில் வெளிவரவில்லை; ஆங்கிலத்திலும் வெளி வராதவை அநேகம் உண்டு. எனவே இப்போதைக்கு இருப்பதைக் கொண்டுதான் ஆராயவேண்டும். பிரபல இலங்கை எழுத்தாளரான நண்பர் திரு. க. கைலாசபதி ''மகாகவி கண்ட மகாகவி'' என்ற தலைப்பில் சமீபத்தில் சில கட்டுரை களை எழுதி வெளியிட்டுள்ளார். இந்தத் துறையிலே அவர் முன்னோடியாக விளங்கியுள்ளார். அவரது முயற்சியும் பாராட்டுக்குரியது. எனினும் இவ்விஷயம் மேலும் விரிவாக வும் ஆழமாகவும் ஆராயப்படவேண்டும். இந்தச் சிறு கட்டுரையில் அதற்கு நிச்சயமாக இடமில்லை.

தாகூரையும் பாரதியையும் மேலோட்டமாகப் பார்க்கிற போது அவர்கள் இவரது வாழ்விலும் சாதனையிலும் காணும் ஒற்றுமைகளைவிட வேற்றுமைகளே சட்டென்று நம் நினை வில் எழும். தாகூர் 1861ல் தோன்றி 1941ல் அமரரானார்.

கிட்டத்தட்ட நிறைவாழ்வு வாழ்ந்தவர் அவர். பாரதியோ தாகூருக்குப் பின்னர் 1882-ல் தோன்றி 1921-ல் அற்பாயுளில் நம்மை விட்டுப் பிரிந்தவர். இருவரும் எழுதியுள்ளவற்றைக் கவனித்தாலோ, தாகூரின் எழுத்துக் கள் மகா சமுத்திரம் போல் அளவில் விரிந்து பரந்தவை. உலக மகாகவிகள் கூட இந்த அளவுக்கு எழுதவில்லை என்ற தாகூரின் விமர்சகரான எட்வர்ட் தாம்ஸன் குறிப்பிடுகிறார். பாரதியின் எழுத்துக்கள் தாகூருடன் ஒப்பிடும்போது அளவில் குறைந்தவை. என்றாலும் நாம் பாரதியின் குறுகிய ஆயுட் காலத்தையும் மறந்து விடுவதற்கில்லை. இருவருடைய வாழ்க்கை வசதிகளைப் பார்த்தாலோ, தாகூர் வசதியான பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர். அவரே ஒரு குட்டி ஜமீன்தார் இந்தியக் கலாசார மந்திரியும் எழுத்தாளருமான ஹுமாயூன் கபீர் சொல்லுவதுபோல், ''அந்தக் காலத்தி லிருந்த ஏனைய பிராமண ஜமீன்தார்களிடமிருந்து எந்த விதத்திலும் மாறுபடாத ஜமீன்தார்'' அவர். பாரதியோ ஜமீன்தாரிடம் குறைந்த ஊதியத்துக்கு ஊழியம் செய்து, பின்னர் அதனை உதறியெறிந்து விட்டு விலகியவர். வறுமை யின் கொடுமையை வாழ்வில் நேரடியாக அனுபவியாதவர் தாகூர். வாழ்வின் இறுதிவரையிலும் வறுமையுடன் போராடி உடலும் சமயங்களில் உள்ளமும் கூடச் சலித்தவர் பாரதி. மேலும் தாகூரின் குடும்பச் சூழ்நிலையே அவரது முற்போக் கான கருத்துக்களுக்கு இளமையிலேயே வித்திட்டது. தாகூரின் தாத்தாவும் தந்தையும் பிரமசமாஜிகள். அந்தக் காலத்தில் பிரம சமாஜம் சமுதாயச் சீர்த்திருத்தத்துக் காகப் பாடுபட்டது; மூடப்பழக்க வழக்கங்களை எதிர்த் தது. பாரதி தமது இளமைக் காலத்தில் வாழ்ந்த சூழ்நிலையோ ஜமீன்தாருக்கு லாலி பாடிய ஆஸ்தானப் புலவர்களின் சூழ்நிலை. 'சின்னச் சங்கரன் கதை'யில் வருணிக்கப்படும் பிற்போக்கான நிலப்பிரபுத்துவத்தின் அகழி முதலைச் சூழ்நிலை. இந்தச் சூழ்நிலையிலிருந்து தம்மைத் தாமே அறுத்துக்கொண்டு தேசத்தின் சூழ்நிலை யோடும் எழுச்சியோடும் தம்மை ஐக்கியப்படுத்தி வளர்ந்து

பரிணமித்தவர் பாரதி. தாகூரோ தமது ஆயுட் காலத்தில் உலகமெல்லாம் சுற்றிப் பார்த்தவர். பலமுறை வெளிநாடு சென்றவர். ஆனால் பாரதியோ சாகும் வரையிலும் இந்தியா வின் எல்லையைத் தாண்டி அறியாதவர்; தாண்ட வழியற்றுப் போனவர்; தமது இலக்கிய வாழ்வின் செம்பாதியை அஞ்ஞாத வாசத்திலே கழித்தவர். தாகூருக்குத் தமது ஆயுட் காலத்திலேயே உலகப் புகழ் கிட்டியது; நோபல் பரிசு கிடைத்தது. பாரதிக்கோ தாயகத்திலேகூட அவரது ஆயுட் காலத்தில் போதிய புகழும் செல்வாக்கும் கிட்டவில்லை. அவர் இறந்து பல ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் தமிழகம் அவரது பெருமையை நன்குணரத் தொடங்கியது. இத் தனைக்கும் மேலாக, பாரதி தாகூரை நன்கறிந்தவர்; தாகூரு டைய கட்டுரைகள், கதைகள், கவிதை முதலியவற்றைத் தமிழாக்கியவர்; தாகூரைப் பற்றிப் பாராட்டி எழுதியவர். ஆனால் பாரதியின் பெயரைகூட, தாகூர் அறிந்திருந்ததாக நமக்குத் தெரியவில்லை.

ஃ ஃ ஃ

இவ்வாறு இந்த இருபெருங் கவிஞர்களின் வாழ்க்கை யிலே தென்படும் வேற்றுமைகள் நம் மனத்தில் எழுவது இயல்புதான்; என்றாலும் இருவரது சாதனையிலும் கண்ணோட்டத்திலும் வேற்றுமையைவிட, ஒருமைப்பாடே மேலோங்கியிருப்பதை நாம் காணமுடியும். பாரதியைத் தாகூர் அறியவில்லை; ஆனால் பாரதி தாகூரை அறிந்திருந் தார். எனவே தாகூரின் சிருஷ்டிகள் பாரதியைக் கவர்ந்திழுக் கவும், பாரதியின் சிருஷ்டிகளில் அதன் சாயல்கள் பிரதிபலித் திருக்கவும் வாய்ப்புகள் உண்டு என்று நாம் எதிர்பார்ப்பது இயற்கை. பாரதி தாகூரை மொழி பெயர்த்தார்; பல இடங் களில் தாகூரை மேற்கொள் காட்டுகிறார்; அவரது கருத்தை ஒப்புக்கொள்கிறார். என்றாலும் தாகூரின் சாயல்கள் பாரதி யிடம் படிந்திருந்தன என்று நம்மால் சொல்ல இயலவில்லை அதற்கான மேலோட்டமான சான்றுகள்கூட நம் கண்ணுக்

குத் தென்படவில்லை. சமாலத்தில் வாழ்ந்த இருபெருங் கவிஞர்கள் ஒரே மாதிரியாகச் சிந்திப்பது இயற்கை; மேலும் எந்தவொரு கவிஞனும் சமுதாயச் சூழ்நிலையிலிருந்து தப்பித்துக் கொண்டுவிட முடியாது. இருவரையும் உருவாக்கி வளர்த்ததே அன்று நிலவிய சமுதாயக் சூழ்நிலைதான் என்றே சொல்ல வேண்டும். எனவே ஒத்த கருத்துக்கள் (கற்பனைகள் அல்ல) இருவரிடமும் தோன்றியுள்ளதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை.

சொல்லப்போனால் இவர்கள் இருவரும் வங்கத்திலே தோன்றி பின்னர் நாடு முழுவதும் பரவிய இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தின் தேசிய எழுச்சியாலும் தேசிய மறுமலர்ச்சியாலும் ஆகர்ஷிக்கப்பட்டுத் தேசியக் கவிஞர்களாக மலர்ந்தவர்கள். தாகூர் இதற்கு முன்பே தேசிய இயக்கத்தைப் பற்றி எழுதியிருந்த போதிலும் 1905 ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினை நடந்தபோது, வங்கத்தின் ஐக்கியத்தைக் குலைக்கும் அந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கொதித்துக் குமுறினார்; வங்கப் பிரிவினைக்கு எதிரான போராட்டத்துக்கும் தலைமை தாங்கினார்; பல பாடல்களைப் பாடினார். ''சட்டம் அமுலுக்கு வந்தாலும் வராவிட்டாலும், இங்கிலாந்து மக்கள் நமது பரிதாபக் குரல்களைக் கேட்டாலும் கேட்காவிட்டாலும், நமது நாடு என்றென்றும் நமக்கே உரியது; நமது மூதாதையர்களின், நமது மக்களின், நமது சந்ததியார்களின் நாடு இது. நமக்கு உயிரும் உரமும் நன்மையும் தரும் நாடு இது!'' என்று தாகூர் அன்று எழுதினார். ''நாம் வங்காளிகள்: நாம் ஒன்று பட்டவர்கள்'' என்று கோஷித்தார். பாரதியாரும் இதே சந்தர்ப்பத்தில்தான் தீவிரமான அரசியல் கவிஞராக உருமாறினார். சுதேசமித்திரனில் அவர் முதன் முதல் எழுதிய கவிதையே (15-9-1905) 'வங்க வாழ்த்துக் கவிகள்' என்பதே. அது மட்டுமல்ல. வங்கத்தின் 'வந்தே மாதர' கோஷமும் அவரைக் கவர்ந்தது.

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி?"

என்றும்,

"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு"

என்றும் அவர் தமது வந்தேமாதர கீதத்தில் முழங்கினார். இதன் பின்னர் பாரதி தேசிய இயக்கத்தோடு ஒட்டி நின்று வளர்ந்து இந்திய நாட்டில் தலைசிறந்த அரசியல் கவிஞராகப் பரிணமித்தார். ஆனால் தாகூர் எந்தக் காலத்திலும் அரசியலில் தீவிரமாக இறங்கி விடவில்லை. எனினும் தேசிய இயக்கத்தைக் குறித்துத் தமது முற்போக்கான கருத்துக்களை மட்டும் அவர் எடுத்துக் கூறத் தவறவில்லை. தேசிய இயக்கம் நாடு முழுவதிலும் காட்டுத் தீப்போல் பரவி வந்த காலத்தில் தாகூர் ஈடுபாடு கொள்ளாமல், தமது சாந்தி நிகேதனுக்குள்ளேயே ஒடுங்கியிருந்ததும் உண்டு. எனினும்கூட, தாகூருடைய தேசபக்தியையும், சுதந்திர வேட்கையையும் நாம் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. மனிதாபிமான வேட்கையின் மூலமாகத் தாகூர் தேசம் முழுவதையும் அரவணைத்தார்; பாரதியோ தேசபக்தியின் மூலமாக மனிதாபிமான உணர்ச்சியை வளர்த்துக்கொண்டு விட்டார்.

ஃ ஃ ஃ

எனினும் இந்த இரு கவிஞர்களின் மனிதாபிமானத் தன்மை கொண்ட தத்துவ தரிசனத்தை உருவாக்கிய சக்திகள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவை என்றே சொல்லலாம். இந்திய நாட்டின் பழம் பெரும் தத்துவமான வேதாந்தம், உபநிஷத்தின் பிரம்ம ஞானம், இந்திய நாட்டின் பக்தி இலக்கியங்கள், இந்து மதத்தோடு சேர்ந்து வளர்ந்த பண்டைப் பெருநூல்கள், வங்காள மறுமலர்ச்சியின் போது தோன்றிய வங்க இலக்கிய கர்த்தாக்கள், ஷெல்லி, பைரன்,

கீட்ஸ் போன்ற ஆங்கிலக் கவிஞர்கள் எல்லாம் இவர்கள் இருவருக்கும் ஊட்டமளித்த சக்திகள். இரண்டு பேரும் உலகு தழுவிய மனிதாபிமானத்தை வெளியிட்ட போதிலும், அந்த மனிதாபிமானத்தைப் பண்டை இந்திய தத்துவங்கள் இலக்கியங்களிலிருந்தே உருவாக்கிக் கொண்டார்கள். இதன் காரணமாக, அவர்கள் பழமையின் பிடிப்பிலிருந்து பூரணமாக விடுதலை பெறாமல் பல்வேறு பண்டைத் தத்து வங்களின் முரண்பாடுகளையும் அங்கீகரித்துக் கொண்டு, அதன் அஸ்திவாரத்திலேயே தங்கள் மனிதாபிமானத்தைக் கட்டி வளர்த்தார்கள். இதனால் விவேகானந்தரைப் போல் இவர்களும் இந்திய நாட்டின் பண்டைக் கலாச்சாரத்தின் பாரம்பரியமே உலகுக்கெல்லாம் வழிகாட்டும் என்று நம்பி னார்கள். இதனைத் தாகூர் அமெரிக்காவில் செய்த பிரசங்கங் களிலும் நாம் காண முடிகிறது. ''நாங்கள் இப்போது புழுதி யோடு வீழ்ந்து கிடந்தாலும் எங்கள் பூமி புண்ணிய பூமி. எங்களுடைய செல்வத்தின் மீது தெய்வ சாபம் இருக்கிறது'' என்று அவர் பேசினார். இதனைப் பாரதியும் எழுதினார். ''இந்து தர்மத்தை அனுசரித்து உலகம் முழுவதிலும் எல்லாத் தேசத்தாரும் உடன்பிறப்பென்றும் சமானமென்றும் தெரிந்து கொண்டு, பரஸ்பரம் அன்பு செலுத்தினால் பிழைக்கலாம்'' என்று தாகூர் கருதுவதாகப் பாரதியார் குறிப்பிட்டார். இதே கருத்தோட்டத்தை நாம் பாரதியின் பல்வேறு எழுத் துக்களிலும் காண முடியும். எனவேதான் பாரதி தமது 'பாரத சமுதாயம்' என்ற பாட்டில்,

''எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்
என்றுரைத்தான் கண்ண பெருமான்.
எல்லாரும் அமர நிலை எய்து நன்முறையை
இந்தியா உலகிற்களிக்கும்—ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்; ஆம்
இந்தியா உலகிற்களிக்கும்!''

என்று ஆணித்தரமாகப் பாடுகிறார். எனினும் இவ்விரு கவிஞர்களின் உலகு தழுவிய மனிதாபிமானக் கண்ணோட்டத்தின் தோற்றத்தில் ஒரு வித்தியாசம் உண்டு. தாகூர் உலகமெல்லாம் சுற்றிய கவிஞர். உலக மக்களை நேரே கண்டவர். பாரதி இந்திய மக்களை மட்டுமே கண்டவர். எனவே தாகூரின் மனிதாபிமானக் கொள்கையோ அறிவுபூர்வமாகவே உருவாயிற்று. பாரதியின் மனிதாபிமானக் கொள்கை உணர்வுபூர்வமாகவே உருவாயிற்று. இவ்வாறு உருவாவதற்கு இரு பெரும் புலவர்களும் வாழ்ந்த காலச் சூழ்நிலையே காரணம் என்று நாம் கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

பாரதியும் தாகூரும் இந்திய நாட்டின் பண்டைத் தத்துவங்களிலும், மத இலக்கியங்களிலும் ஈடுபாடு கொண்டு அவற்றிலே காலூன்றி நின்ற போதிலும், இருவரும் பண்டைய தத்துவங்களில் இடம் பெற்றிருக்கும் மாயாவாதத்திலும் அநித்தியக் கோட்பாட்டிலும் சிக்கிக் கொள்ளவில்லை. அதேபோல் இருவரும் எந்த ரூபமான துறவறத்தையும் அங்கீகரிக்கவில்லை "துறவிலே எனக்கு விமோசனம் இல்லை; விடுதலை இல்லை. இன்பத் தளைகள் ஆயிரக்கணக்கில் என்னைப் பிணிப்பதில்தான் விடுதலை என்னைத் தழுவுவதாக நான் உணர்கிறேன்" என்று பாடியவர் தாகூர் இதனால்தான் கௌதம புத்தரின் மனிதாபிமானத்திலும். பௌத்தக் கதைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்த தாகூர் புத்தர் மனைவி மக்களைத் துறந்து துறவறம் நாடுவதையோ, துறவறத்தை வற்புறுத்துவதையோ ஆதரிக்கவில்லை. அவர் தமது 'தோட்டக்காரன்' (மாலி) என்ற கவிதைத் தொகுதியில் இதனை வெளியிடுகிறார். கவிதையின் சாரம் வருமாறு:

நடு ராத்திரியில் ஒரு கிரகஸ்தன் தன் மனைவி மக்களையும், வீட்டையும் துறந்து துறவறம் பூண எண்ணுகிறான்: 'வீட்டைத் துறந்து விட வேண்டும். இதுதான் நேரம். என்னை இந்தச் சம்சார மாயையில் யார் பூட்டி வைத்தது?' என்று என்

ணுகிறான். உடனே கடவுள் 'நான்தான்' என்கிறார். அது அவன் காதில் விழவில்லை. குழந்தை மனைவியின்மீது படுத்துத் தூங்குகிறது. 'இதுவரை என்னை ஏமாற்றியது யார்? நீங்கள் ஏன் என்னை ஏமாற்றினீர்கள்?' என்று கேட்கிறான். 'அதுவும் நான்தான்' என்கிறார் கடவுள். ஆனாலும் அவன் காதில் அந்தக் குரல் விழவில்லை. பிறகு குழந்தை கனவு கண்டு அழுகிறது. தாயை அணைத்துக் கொள்கிறது. எனினும் அவன் அதையெல்லாம் கவனிக்காமல் மனைவியையும், குழந்தையையும் விட்டு வெளியேற முனைகிறான்; அப்போதும் கடவுள் பேசுகிறார். 'முட்டாளே! போகாதே!' என்கிறார். அவனோ அதனைக் கேட்காமல் வீட்டை விட்டு வெளியேறுகிறான். உடனே கடவுள் பின்வருமாறு சொல்கிறார்; 'முட்டாள். நான் இங்குதான் இருக்கிறேன், இவன் என்னைத் தேடிக்கொண்டு எங்கோ போகிறானே!'

இதே கண்ணோட்டத்தை நாம் பாரதியிடமும் பரக்கக் காணலாம். பாரதியின் 'பொய்யோ-மெய்யோ?' என்ற பாடலிலும், அதற்கு அவர் எழுதிய முன்னுரையிலும் பாரதி இந்தக் கருத்தை அழுத்தமாகக் கூறுவதை நாம் பார்க்கிறோம். பாரதி எழுதுகிறார்:

''இந்த உலகமே பொய்'' என்று நமது தேசத்தில் ஒரு சாஸ்திரம் வழங்கி வருகிறது. சந்நியாசிகள் இதை ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கட்டும். அதைப் பற்றி இந்த நிமிஷம் எனக்கு வருத்தமில்லை. குடும்பத்திலிருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? நடுவீட்டில் உச்சரிக்கலாமா? அவச்சொல்லன்றோ? நமக்குத் தந்தை வைத்து விட்டுப் போன வீடும் வயலும் பொய்யா? தங்கச் சிலை போல் நிற்கிறாள் மனைவி. நமது துயருக்கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள். நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள். நமது குழந்தைகளை வளர்த்தாள். அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானா? பெற்றவரிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில்

வைத்துக் கும்பிடும் குலதெய்வம் பொய்யா? வீடுகட்டிக் குடித்தனம் பண்ணுவோருக்கு மேற்படி சாஸ்திரம் பயன் படாது.

பாரதி இவ்வாறு கருதியதால்தான் அவர் ''கவலை துறந்து இங்கு வாழ்வதே வீடு'' என்றார். ''ஊருக்குழைத் திடல் யோகம்-நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்'' என் றும், ''ஒன்று பரம்பொருள்; நாமதன் மக்கள்; உலகு இன் பக் கேணி'' என்றும் பாடினார். இதே போன்றுதான் தாகூ ரும் ''எவனொருவன் மனிதனுக்குச் சிறந்த சேவை செய் கிறானோ, அவனே கடவுளுக்குச் சிறந்த சேவை செய்து வரு கிறான்'' என்று கூறினார். அதுமட்டுமல்லாமல், தமது 'நினைவுக் குறிப்புக்'களில் ''இந்த உலகம் இனியது. நான் மாள விரும்ப விரும்பவில்லை. என்றென்றும் நிரந்தரமான மானுட வாழ்வையே நான் வாழ விரும்புகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

இவ்வாறு உலகத்தையும் உலக வாழ்வையும் மக்களையும் இருவரும் நேசித்த காரணத்தாலேயே, இருவரும் தெய்வ பக்தியையும், மனிதாபிமானத்தையும் இணைத்ததாலேயே, அவர்கள் உலக மக்களிடத்தில், ஆண்டவனின் திருவுருவைக் கண்டார்கள். தாகூர் தமது கீதாஞ்சலியில் பின் வருமாறு பாடுகிறார்:

''தாளிட்ட, அடைபட்ட கோயிலின் இருண்ட மூலையில் நீ யாரைப் பூசிக்கின்றாய்? கண்ணைத் திறந்து உன் கடவுள் உன் முன்னிலையில் இல்லை என்பதை அறிந்து கொள். கடினமான தரையில் ஏர் கட்டி வாழ்வாரிடமும், சாலை அமைக்கச் சரளைக்கல் அமைப்பாரிடமும் அவன் மழையில் நனைகிறான். வெய்யிலில் காய்கிறான்!''

பாரதியாரும் கடவுளின் திருவுருவை உழைப்பவர்களின் உருவத்தில் காணத்தான் செய்கிறார்:

இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே!
எந்திரங்கள் வகுத்திடுவீரே!
கரும்பைச் சாறு பிழிந்தெடுப்பீரே!
கடலில் மூழ்கி நன் முத்தெடுப்பீரே!
அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!
பெரும்புகழ் நுமக்கே இசைக்கின்றேன்
பிரம்மதேவன் கலை இங்கு நீரே!

ஆனால், உழைப்பவர்களின் உருவில் ஆண்டவனைக் காணும் போக்கில் இருவேறு புலவர்களுக்கும் வேறுபாடு உண்டு. தாகூர் ஆண்டவனைக் காணும் தன்மை மனிதாபிமானத்தின் காரணமாக எழுந்தது. பாரதி அப்படியல்ல. பாரதி அவர்களைச் சிருஷ்டிகர்த்தாக்களாகப் பார்க்கிறார். எனவே அவர்களை ஆண்டவனுக்குச் சமதையாக மதிக்கிறார். ''தேட்டமின்றி விழிஎதிர் காணும் தெய்வமாக''க் காண்கிறார்.

இந்தப் பார்வை வேறுபாட்டுக்குக் காரணம் உண்டு. பாரதி இந்திய நாட்டிலே எந்திர வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்று விரும்பியவர். ''ஆயுதம் செய்வோம்! நல்ல காகிதம் செய்வோம்! ஆலைகள் வைப்போம்! கல்விச் சாலைகள் வைப்போம்!'' என்றெல்லாம் நமக்கு ஆணையிட்டவர். ஆனால், தாகூரோ எந்திர வளர்ச்சியில் நாட்டம் செலுத்தவில்லை. தாகூர் தமது அமெரிக்கச் சொற்பொழிவொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''இன்று உலகில் காணப்படும் பெரிய கைத்தொழில் ஸ்தாபனங்களில் எனக்கு நம்பிக்கையில்லை. அவை குரூபமாக இருப்பதே சிருஷ்டி அமைப்புக்கு முரணாக இருக்கின்றன என்பதைக் காட்டுகிறது. இயற்கையின் மகத்தான சக்தியானது பயங்கரத்தில் தோற்றமளிப்பதில்லை. அழகிலேயே காட்சி தருகிறது. எந்திர நாகரிகமானது இன்பத்தைப் பலியிட்டு பணத்தைத்

திரட்டுகிறது. மனித உணர்ச்சிகள் எந்திரங்களை லகுவில் ஏற்க மறுப்பதால், எந்திரங்களின் பாதையை மறிப்பதால், அந்த நல்லுணர்ச்சிகளை ஏளனம் பண்ணுகிறான் மனிதன்.''

இதைப் படிக்கும் போது உண்மையிலேயே தாகூரின் உணர்ச்சிகளே எந்திரங்களை ஏற்க மறுப்பதை நாம் காண்கிறோம். எந்திர வளர்ச்சியை நிராகரிக்கும் அளவுக்கு அவரிடம் நிலப்பிரபுத்துவத்தின் பிடிப்பு இருந்தது என்பதை நாம் உணர்கின்றோம். அந்தப் பிடிப்பு அவரை விட்டுக் கழன்று போவதற்கு வெகு காலம் ஆயிற்று என்பதையும் கூட நாம் அவரது வாய் மொழியாகவே காணலாம் (அதனைப் பின்னர் பார்க்கலாம்).ஆனால் பாரதியோ எந்திர வளர்ச்சியை விரும்பினார். நாடு எந்திரமயமாக வேண்டும் என்று வேட்கைப் பட்டார். எந்திர வளர்ச்சியினால் அழகுணர்ச்சி கெட்டு விடும் என்று அவர் நினைக்கவில்லை. பூமாதேவியின் பொலிவு அதனால் மாறிவிடும் என்று அவர் கருதவில்லை. பாரதி பெல்ஜியக் கவிஞர் ஒருவரைப் பற்றி எழுதியுள்ள கட்டுரையொன்றிலே பின்வருமாறு எழுதுகிறார்:

'வலிமை ஓர் அழகு. அழகு ஒரு வலிமை. எந்திர ஆலை, நீராவி வண்டி, நீராவிக் கப்பல், வானத் தேர், பெரிய பீரங்கி எல்லாம் அழகுதான். உயர்ந்த கவிகள் வலிமையுடைய பொருள்களை அவ்வக்காலத்தில் வழங்கிய வரையிலே வர்ணனை செய்துதான் இருக்கிறார்கள். இதிலே புதுமை ஒன்றுமில்லை. வலிமையே அழகு. ஒரு பொருளின் வெளியுருவத்தைப் பார்த்து அது அழகா இல்லையா என்று தீர்மானம் செய்யலாகாது. எந்திரங்களிலே வலிமை நிகழ்கின்றது. ஆதலால் அவை அழகுடையன. அவற்றைக் கவி புகழ்ச்சி செய்தல் வேண்டும்.''

இந்த விஷயத்தில் பாரதி தாகூரிடமிருந்து துலாம்பரமாக மாறுபடுகிறார் என்பதை நாம் காண்கிறோம் இதற்குக் காரணம் பாரதி நிலப்பிரபுத்துவத் தளையை முறித்துக்

கொண்டு, அசுர வீச்சில் முன்னேறத் துடித்தவர். ஆனால் தாகூரோ நிலப்பிரபுத்துவத் தளையில் ஓரளவு சுகம் கண்டு அதிலிருந்து விடுபடத் தயங்கியவர். எனவேதான் அவர் எந்திர வளர்ச்சியின் எழிலைக் காணத் தவறுகிறார்.

ஃ ஃ ஃ

இந்த வேறுபாட்டை நாம் புரிந்து கொள்வதற்கு சோவியத் புரட்சியைப்பற்றி இரு கவிஞர்களும் என்ன கூறினார்கள் என்பதைக் கண்டு தெளிந்து கொள்ளலாம். 1917ஆம் ஆண்டில் சோவியத் புரட்சி நடந்து ருஷ்ய நாட்டில் புதியதொரு சமுதாயம் மலர்ந்தபோது பாரதி அதனை ஆகாகாரமிட்டு வரவேற்றுப் பாடினார்.

> ''இடிபட்ட சுவர்போல கலி விழுந்தான்;
> கிருத யுகம் எழுக மாதோ!''

என்று கோஷமிட்டார்.

> ''மாகாளி பராசக்தி உருசிய நாட்டினில்
> கடைக்கண் வைத்தாள்! அங்கே
> ஆகா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி!
> கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்!
> வாகான தோள் புடைத்தார் வானமரர்!
> பேய்களெல்லாம் வருந்திக் கண்ணீர்
> போகாமல் கண்புகைந்து மடிந்தனவாம்
> வையகத்தீர்! புதுமை காணீர்!''

என்று அந்தப் புதுமையைக் காணும்படி வையத்தாரை யெல்லாம் வருந்தி அழைத்தார். இவ்வளவுக்கும் பாரதி அந்தப் புரட்சியை இந்திய நாட்டிலிருந்து மானசீகமாகவே கண்டார்; அதன் சாராம்சத்தை எடுத்த எடுப்பில் உணர்வு

பூர்வமாகக் கண்டறியும் திறமையும் பக்குவமும் அவரிடம் இருந்தது. ஆனால் தாகூரின் உணர்ச்சியை அந்தப் புரட்சி அப்போது தொடவில்லை. இவ்வளவுக்கும் அவர் புரட்சிக்கு முன்பேமேல் நாடுகளுக்குச் சென்று வந்தவர்; ஏகாதிபத்தியக் கொடுமையை அதன் ஆட்சிபீடத்திலேயே நேரில் கண்டவர், என்றாலும் கூட, அவர் சோவியத் புரட்சியின் சாராம்சத்தை உடனடியாகப் புரிந்து கொள்ளவில்லை; அதைப் பற்றி அவர் அப்போது ஒரு வார்த்தையும் பேசவில்லை. இதனால்தான் பின்னொரு சமயம் அவர் இத்தாலியப் பாஸிஸ்டான முஸோலினியின் ஆட்சியைக் கூடத் தீர ஆலோசித்துத் தெரிந்து கொள்ளாமல் போற்றிப் புகழ்ந்து விட்டார்; பின்னர் மற்றவர்களின் மூலம் உண்மை தெரிந்து, அந்தத் தவற்றைத் திருத்திக் கொண்டு விட்டார். எனினும் தாகூர் சோவியத் புரட்சியைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலே போய்விடவில்லை. அவர் 1930ஆம் ஆண்டில், தமது அந்திம காலத்தில், சோவியத் யூனியனுக்கு நேரடியாக விஜயம் செய்தார். அங்கு நடந்துள்ள புதுமைகளைக் கண்ணால் கண்டு பாராட்டினார். அது சமயம் அவர் எழுதிய கடிதங்கள் எல்லாம் நமக்கு இப்போதுதான் முழுமையாகக் கிடைத்துள்ளன.

ருஷ்ய விஜயத்துக்குப் பின்னர் அவர் தமது மகன் ரதீந்திரநாத தாகூருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பின் வருமாறு எழுதினார்: ''ஜமீன்தார் அமைப்பு முறை குறித்துப் பெரிதும் வெட்கப்படுகிறேன். இன்று எனது மனம் மேலிடத்தை விட்டிறங்கி, கீழே ஓர் இடம் பிடித்துள்ளது. எனது குழந்தைப் பருவத்திலிருந்து ஒரு புல்லுருவியாக நான் வளர்க்கப் பட்டிருக்கிறேன் என்று எண்ணும்போது நான் பெருங் கவலையடைகிறேன்.'' இந்தக் கடிதத்தின் பகுதி எவ்வாறு தாகூர் நிலப்பிரபுத்துவத் தளையில் சிக்கியிருந் தார் என்பதையும், எதனால் அவர் எந்திர நாகரிகத்தை எதிர்த்தார் என்பதையும், எதனால் 1917-லேயே சோவியத் புரட்சியைப் பற்றிப் பாடத் தவறினார் என்பதையும் நமக்குப் புலப்படுத்தும்.

பாரதியும் தாகூரும் நமது மதிப்புக்குரிய தேசியக் கவிகள்தான் என்றாலும், நாம் இவர்கள் வாழ்விலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடம் ஒன்று உண்டு. பாரதி தனது காலமெல்லாம் நாட்டு மக்களோடு ஒன்றி நின்றவர்; அவர்களது துன்ப துயரங்களில் உணர்வு பூர்வமாகப் பங்கு கொண்டவர். **''இல்லையென்ற சொல்லை இல்லையாக வைப்பேன்''** என்றும் **''மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ?''** என்றும் முழங்கியவர்; **''பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட வேண்டும்''** என்று விரதம் பூண்டவர். பாரதியின் மனிதாபிமானம் உணர்வு பூர்வமானது. ஆனால் தாகூரின் மனிதாபிமானமோ அறிவு பூர்வமானது. அவரும் மனிதனை நேசித்தார். அவர் தமது கீதாஞ்சலியில் ''ஏழைப்பட்டவர் தாழ்த்தப்பட்டவர், திக்கற்றவர்களிடையேதான்'' ஆண்டவன் கந்தல் உடுத்தித் திரிவதாகப் பாடினார். எனினும் அதே பாடலில் அவர் ''தீனர், திக்கற்றோர், தாழ்ந்தோரிடையே நாதியற்றவர்க்கு நாதியாய், ஏழை பங்காளனாய் திரிந்து உலவும் இடத்தைச் சேர்வதற்கு எது வழி என்று தெரியாமல் என் இதயம் இடர்ப்படுகின்றது'' என்றும் எழுதினார். ''உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? ஆண்டவனைக் காணப் புழுதியில் இறங்கிவா'' என்று எழுதிய அவர் மட்டும் புழுதியில் இறங்கத் துணியவில்லை. அவர் பாரதியைப் போல் மனிதர்களோடு பூமிப் புழுதியில் இறங்கி உணர்வு பூர்வமாக ஒட்டி நிற்கவில்லை. எனவேதான் அவர் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்வதற்கு முன் உழைத்து வாழும் வர்க்கமும் ஒய்வு வசதியுள்ள வர்க்கமும் உலகத்தில் இருப்பதை ஆதரித்தார். இறுதிக் காலத்தில் தான் அவரது இந்தக் கருத்தும் மனப்பான்மையும் மாறின. சாதாரணப் பொது மக்களுடன் இணைந்து பிணைந்து பூரணமாக நிற்கத் தவறியதுபற்றி அவர் பிற்காலத்தில் வருத்தம் தெரிவித்தார். எனவேதான் அவர் தமது அந்திம காலத்தில் எழுதிய கவிதையொன்றில் பின்வருமாறு எழுதினார்:

"என் கவிதை எங்கெங்கே குறைபாடு கொண்டுள்ளது என்பதை—நான் அதில் எங்கு தவறியுள்ளேன் என்பதை—நான் அறிகிறேன். எத்தனையெத்தனையோ திசைவழியாக அவை திரிந்திருந்தாலும், அவை எல்லா மக்களையும் போய் எட்டத் தவறிவிட்டன என்பதை நான் காண்கிறேன். எனவே நான் இங்கே பூமிப் புழுதியிலேயிருந்து தோன்றும் கவிஞனின் செய்தியை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன். விவசாயியின் கவிஞனை, அவனது தோழனை, உண்மையான ஒருமைப்பாட்டை உருவாக்கும் சொல்லையும் செயலையும் கொண்ட கவிஞனை, எதிர்நோக்கி நிற்கிறேன். அவனது வாசகங்கள் மானுட உறவை வெளிப்படுத்தட்டும்! அவனது கவிதை கண்ணை மட்டும் மயக்குவதாக இராமல் விளங்கட்டும்! ஏமாற்றும் மூடு மந்திரமும் இல்லாத கவிதையாக இருக்கட்டும்! என்னிடம் இல்லாத திறமையை அவன் வழங்கட்டும்! அவன் பாசாங்கிலிருந்தும், பசப்பிலிருந்தும் ஆடம்பரத்திலிருந்தும், தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளட்டும்! அவன் உழைப்பாளி மக்களுக்குத் தன் இதயாபிமானத்தை வழங்கட்டும்... எண்ணற்ற மக்களின் கவியான அந்தப் புதுமைக் கவியே! நீ வருக! உன் வரவு நல்வரவாகுக! நீ அனாமதேயமான சாதாரண மனிதனின் பாடல்களைப் பாடு! அவனது ஊமையான வாய் திறவாத இதயத்தில் ஒளி பாய்ச்சு!..."

ஆம், தாகூர் நமக்கு விடுத்துள்ள அழைப்பு இது. பாரதியும் தாகூரும் நமக்குக் கற்றுத்தரும் பாடம் இது. இல்லையா?

# வீடும் வெளியும்

ஆங்கிலேயர்கள் நம்மை அடிமை கொண்ட காலத்தில் அன்னியராட்சியை எதிர்த்த வீரபாண்டியக் கட்டபொம் மனைத் தூக்கிலிட்டுக் கொன்றார்கள்; பாஞ்சாலங்குறிச்சி யையே இடித்துத் தரைமட்டமாக்கினார்கள்; அந்த ஊரின் பெயரையே சர்க்கார் ஏடுகளிலிருந்து அகற்றினார்கள்;இதன் மூலம் அந்த வீரப் போராட்டச் சரித்திரத்தையே குழி தோண்டிப் புதைத்துவிட விரும்பினார்கள். அதேபோல் தமக்கு உதவியாக இருந்த எட்டயபுரம் மன்னனை ஜமீன் தாராக வாழவைத்தார்கள்; அத்தகைய அடிவருடிகளின் ஆதரவில் தமது ஆட்சியை நீடிக்க விரும்பினார்கள். ஆனால் தேசபக்தி என்பது எந்தவொரு சக்தியாலும் சூழ்ச்சியாலும் தூர்த்துத் துடைக்க முடியாதது என்பதைச் சரித்திரம் நிருபித்துவிட்டது. எந்தப் பாஞ்சாலங்குறிச்சியை அழித் தொழித்தார்களோ அதன் அருகிலேயே ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சி. அவதரித்தார். எந்த எட்டயபுரத்தை 'வாழவைக்க' விரும்பினார்களோ,அந்த எட்டயபுர ஜமீன் இன்று இல்லை; ஆனால் அந்த எட்டயபுர சமஸ்தானத்தில் ஒரு புலவனாக இருந்த சுப்பையா அதனை உதறித் தள்ளி, தேசபக்திக் கவிஞனான சுப்ரமண்ய பாரதியாக மாறினான்! ஆம். இரணியனுக்குப் பிரகலாதன் பிறந்த மாதிரி பாரதி பிறந்தான். இன்று எட்டயபுரம் ஜமீன் இல்லை; ஆனால் அந்த மண்ணில் பாரதியின் மணிமண்டபம் தலைநிமிர்ந்து நிற்கிறது. சரித்திரம் கற்பிக்கும் பாடம் இது. பாரதி

எப்படி தேசபக்திக் கவிஞனாக மலர்ந்தான்? நாட்டு மக்களின் மனத்தில் அவன் தேசபக்தியை எவ்வாறு உருவேற்றினான்?

அன்று வங்காளத்திலே எழுந்த 'வந்தேமாதர' கோஷம் பாரத தேசமெங்கும் எதிரொலித்தது. தமிழ்நாட்டில் பாரதி தனது கவிதையின் மூலம் அதனை எதிரொலித்தான். 'வந்தே மாதரம்' என்றால், 'தாயை வணங்குவோம்' என்றுதான் அர்த்தம்; அதாவது பாரதமாதாவுக்குச் செலுத்தும் வணக்கத்துக்குரிய கோஷமாக அது விளங்கியது. எனவே பாரதி,

வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்!

என்று அந்த கோஷத்தையும் அதன் அர்த்தத்தையும் இணைத்துத் தனது தேசிய கீதத்தைப் பாடினான். ஆனால், அன்று நாட்டு மக்கள் இருந்த நிலையில் அவர்கள் மனத்திலே இந்தக் கோஷத்தைப் புரிய வைப்பதும் அவர்கள் மனத்திலே தேச பக்தியை உருவேற்றுவதும் பெருஞ்சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். ஏன்? அன்று நாடிருந்த நிலை என்ன? இதனைப் பாரதியே பின்வருமாறு பாடுகிறான்:

சிப்பாயைக் கண்டு அஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல் கண்டுமனம் பதைப்பார்;
துப்பாக்கி கொண்டு ஒருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டில் ஒளிப்பார்;
அப்பால் எவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டு பயந்து எழுந்து நிற்பார்;
எப்போதும் கை கட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள் போல் ஏங்கி நடப்பார்.

இவ்வாறுதான் நாட்டு மக்கள் இருந்தார்கள். எனவே தான் பாரதி 'நெஞ்சு பொறுக்குதிலையே! இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்!' என்று நெஞ்சு குமுறினான். இவ்வாறு 'பாமரராய் விலங்குகளாய்' வாழ்ந்த மக்களிடத்திலே தேசபக்தியை எப்படி ஊட்டுவது? சிப்பாயைக் கண்டஞ்சும் மக்களின் மனத்தில் பெரியதொரு ஏகாதிபத்தியத்துக்கு எதிரான உணர்ச்சியை எப்படி உண்டாக்குவது?வங்காளம் என்று சொன்னால் 'அது என்ன மதுரைக்கும் வடக்கேயா?'' என்று கேட்கக்கூடிய அளவுக்கு நாட்டு மக்கள் கிணற்றுத் தவளைகளாய், அகழியில் விழுந்த முதலைகளாய் வாழ்ந்தார்கள் அன்று. அவர்கள் நரம்பிலே எப்படி தேச பக்தியை முறுக்கேற்றுவது? இது பாரதிக்கு எழுந்த பிரச்சினை.

எனவே பாரதி தேசபக்தியை முதலில் வீட்டிலிருந்தே தொடங்க எண்ணினான். ஆம். தான் பிறந்த வீட்டையும் பிறந்த ஊரையும் நேசிக்கக் கற்றுக் கொண்டவன்தான் நாட்டையும் நேசிக்கக் முடியும். எனவே பாரதி நாட்டு மக்களுக்குத் தேசபக்தியைக் கற்றுக் கொடுக்க முனைந்தான். எப்படி?

''இதோ இந்த பூமி இருக்கிறதே, இதில்தான் எங்கள் மூதாதையர்கள் தோன்றினார்கள். எனது தாயும்தந்தையும் இந்த மண்ணில் தான் காதலர்களாக வாழ்ந்தார்கள். எங்கள் தாய்மார்கள் எங்களைப் பெற்றெடுத்ததும் இந்த மண்ணில்தான்; எங்கள் தாய்மார்களும் குழந்தைகளாக இருந்து புழுதியில் அளைந்ததும் இந்தப் புனித மண்தான். அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி, நிலாக்காலத்திலே கண்ணாம்பூச்சி ஆடியதும் இந்த நிலம்தான். அவர்கள் குளித்துவிட்டுக் குடத்தை ஏந்தி, திருப்பாதம் பூமியில் பதிய நடந்து வந்ததும் இந்தத் திருநிலம்தான்; அவர்கள் மாண்டு மடிந்ததும், அவரது பொன்னுடலின் சாம்பல் கலந்து மறைந்ததும் இந்தப் பூமியிலே தான். எனவே இந்தப் பூமியை—என்னையும் என் தாயையும் மூதாதையரையும்

பெற்றெடுத்த இந்தப் பூமியை—நான் 'தாயை வணங்குகிறேன்' என்று சொல்லி வாழ்த்தக் கூடாதா? என்று கேட்கிற பாவனையில் பாரதி பாடினான்:

இன்னுயிர் தந்து, எமை ஈன்று வளர்த்து அருள்
ஈந்ததும் இந்நாடே!—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே!—அவர்
கன்னியராகி நிலவினில் ஆடிக்
களித்ததும் இந்நாடே!—தங்கள்
பொன்னுடல் இன்புற நீர் விளையாடி, இல்
போந்ததும் இந்நாடே!—இதை
'வந்தே மாதரம் வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?

இவ்வாறு பாரதி தேசபக்தியுணர்ச்சியை வீட்டிலிருந்தே தொடங்கினான்; எனினும் அவன் வீட்டுடனேயே நிறுத்தி விடவில்லை. தன் வீடு, தன் நகரம், தனது தொகுதி முதலியவற்றை மட்டும் நேசித்தால் போதாது. தனது நாட்டையும் ஒருவன் நேசிக்க வேண்டும். தனது நாடு என்பது முதற்படியாக எதுவாக விளங்க முடியும்? அவனவன் பேசுகின்ற தாய்மொழி, பாலுடன் சேர்த்துத் தனது தாய் ஊட்டிய மொழி, அந்தமொழி வழங்குகின்ற பிரதேசம்தான் அவனது தாய்நாடு. அதிலே ஒருவன் பெருமை கொள்ள வேண்டும். எனவே வீட்டிலிருந்து தொடங்கிய தேசபக்தியைப் பாரதி நாட்டுக்கு கொண்டு செல்கின்றான். எப்படி?

செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே!

என்று பாடத் தொடங்குகிறான். தேன் வந்து பாய் வதற்கும் சக்தி பிறப்பதற்கும் காரணம் உண்டு. தமிழ் நாட்டின் நதிவளம், கலைவளம், மக்கள் வளம், எல்லாம் புகழ் வாய்ந்தவை. கம்பனும் வள்ளுவனும் பிறந்த நாடு இது; காவிரியும் வையையும் பாயும் பூமியிது; செல்வ வளம் பெருத்த நாடு இது. எனவே பாரதிக்குச் சக்தி பிறக்கிறது. அந்தச் சக்தியை அவன் தனது பாடல்களின் மூலம் நாட்டு மக்களுக்கும் உருவேற்றினான். அதன் மூலம்,

நீலதிரைக் கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம் செய் குமரி எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு

பற்றி அவன் கவிமழை பொழியத் தொடங்குகின்றான், ஆனால், வீட்டையும் நாட்டையும் நேசிக்கக் கற்றுக் கொண்டால் மட்டும் போதுமா? பாரதி காட்டிய தேசபக்தி வீட்டோடு நிற்காததுபோல், நாட்டோடும் நிற்கவில்லை. அவனது தேசபக்தி வேங்கடத்துடனும் விந்தியத்துடனும் மட்டும் நின்று விடவில்லை. அதற்கு அப்பாலும் அந்த உணர்ச்சி சென்றது. இமயக் கொடுமுடி வரையிலும், பாரத தேசம் முழுமைக்கும் பரந்து சென்றது. எனவே வீட்டையும் நாட்டையும் வாழ்த்திய பாரதி தேசத்தையும் வாழ்த்தினான்.

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு!

என்று பெருமை கொண்டான்.

மன்னும் இமயமலை எங்கள்மலையே;
மாநிலம் மீது இதுபோல் பிறிதிலையே!

இன்னறு நீர்க்கங்கை யாறு எங்கள் ஆறே!
இங்கிதன் மாண்பிற்கு எதிர் எது வேறே?

என்று விம்மிதத்தோடு கேட்டான்.

இத்தகைய ஒரு நாட்டில் பல்வேறு மொழிகள் பயிலப் பட்டாலும், இந்த நாட்டின் இதயம் ஒன்றுதான் என்பதையும் அவன் உணர்ந்தான். தத்தமக்கே உரிய கலாசாரத்தோடு, பல்வேறு தேசிய இனங்கள் இருந்த போதிலும், இந்தத் தேசத்தின் ஒட்டு மொத்தமான பாரம்பரியமும் தலைவிதியும் இதயப் பண்பும் ஒன்றுதான் என்பதையும் அவன் தெரிந்துரைத்தான். எனவே அவன் பாரதத் தாயை வாழ்த்துகின்ற காலத்தில்,

முப்பது கோடி முகம் உடையாள்; உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்; இவள்
செப்பு மொழி பதினெட்டு உடையாள்—எனில்
சிந்தனை ஒன்றுடையாள்!

என்று போற்றிப் புகழ்ந்தான்.

பாரதியின் தேசபக்தி எப்படி வீட்டுடனும் வேங்கடத்துடனும் விந்தியத்துடனும் நிற்கவில்லையோ, அதேபோல் இமயத்துடனும் நிற்கவில்லை. தமிழ் நாட்டைவிட்டுக் கப்பலேறி அக்கரைச் சீமைகளுக்குச் சென்ற தமிழ் மக்களையும் அவன் எண்ணிப் பார்த்தான். எனவே அவன் பிஜித் தீவின் கரும்புத் தோட்டங்களிலே பாடுபட்ட தமிழ்ப் பெண்களின் அவல நிலையை எண்ணிக் கண்ணீர் வடித்தான்.

நாட்டை நினைப்பாரோ?—எந்த
நாளினிப்போயதைக் காண்பதென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ?—அவர்

விம்மி விம்மி விம்மி விம்மி யழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே!

என்று புதுச்சேரிக் கடற்கரையிலே நின்றுகொண்டு அவன் உருகிப் புலம்பினான். அதேபோல்,

'ஆப்பிரிக்கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென் முனையடுத்த தீவுகள் பலவினும்
பூமிப்பந்தின் கீழ்ப்புறத்துள்ள
பற்பல தீவினும் பரவி, இவ் எளிய
தமிழச் சாதி தடி உதையுண்டும்
காலுதை யுண்டும், கயிற்றடி யுண்டும்
வருந்திடும் செய்தியும் மாய்ந்திடும் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடும் செய்தியும்'

அவனது கவனத்தைக் கவர்ந்தன. ஆப்பிரிக்கா, பிஜித் தீவுகள், பிரிட்டிஷ் கயானா, இலங்கை, மலேயா முதலிய நாடுகளிலேயுள்ள தேயிலை, ரப்பர், கரும்புத் தோட்டங்களிலும் சுரங்கங்களிலும் தமிழ் மக்களும் இந்திய மக்களும் பட்ட பாடுகளைப்பற்றியும் அவன் பாடினான். என்றாலும், பாரதியின் தேசபக்தியும் தேசமக்களின்பாலுள்ள அன்பும் எப்படி வீட்டுடனும், வேங்கடத்துடனும், இமயத்துடனும் நிற்கவில்லையோ, அதேபோல் இந்திய மக்களும், தமிழ், மக்களும் வாழ்ந்த பிற நாடுகளைப் பற்றிய அக்கறையோடும் நின்றுவிடவில்லை. ஏனெனில் உண்மையான எந்த ஒரு கவிஞனும் தனது மனிதாபிமானத்திற்கும் சுதந்திர வேட்கைக்கும் குறுகிய எல்லைகளை வகுத்துக் கொள்ள மாட்டான். தனது நாட்டின் சுதந்திரத்தை மதிக்கத் தெரிந்தவன் பிற நாட்டின் சுதந்திரத்தையும் மதிக்கத் தெரிந்திருப்பான், தனது நாட்டின் சுபிட்சத்தை விரும்பும் ஒரு கவிஞன் பிற நாட்டின் சுபீட்சத்தைக் கண்டு பொறாமை

கொள்ள மாட்டான். இந்தத் தன்மையையும் நாம் பாரதியிடம் காண முடிகிறது. எனவே தான் 1914-18 ஆம் ஆண்டின் மகாயுத்தத்தின்போது சின்னஞ்சிறு பெல்ஜியநாடு தனது நாட்டை ஏகாதிபத்தியப் படைகள் செல்வதற்கான நடை பாவாடையாக்க அனுமதிக்க மறுத்து, அந்த அறப் போரில் வீழ்ச்சியடைந்தபோது, பாரதி அந்த வீழ்ச்சியை அறத்தின் வீழ்ச்சியாகக் கருதிப் பாடினான்.

முறத்தினால் புலியைக் காக்கும்
மொய்வரைக் குறப்பெண்போலத்
திறத்தினால் எளியை யாகிச்
செய்கையால் உயர்ந்து நின்றாய்!

என்று பெல்ஜியத்தை வாழ்த்தினான்; 'உருளுக தலைகள்; மானம் ஓங்குக!' என்று நிமிர்ந்து நின்ற பெல்ஜியத்தை அவன் பல பாக்களால் வியந்து பாடினான்.

இவ்வாறு பெல்ஜியத்தை வாழ்த்திய புலவன், அறத்தின் வீழ்ச்சியைக் கண்டு குமுறிய கவிஞன், 1917ஆம் ஆண்டில் ருஷ்ய நாட்டில் அறத்தின் வெற்றி நிகழ்ந்தபோது, அங்கு ஒரு புரட்சி நடந்து புதிய சமுதாயம் பூத்தபோது, அதனையும் வரவேற்றுப் பாடினான்.

மாகாளி பராசக்தி உருசிய நாட்டினில்
கடைக்கண் வைத்தாள்; அங்கே
ஆகா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி!
கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்!

என்று ருஷ்யப் புரட்சிக்கு வாழி பாடினான்.

இவ்வாறு பாரதியின் தேசபக்தி வீட்டிலே தொடங்கி, நாட்டிலே பரவி, தேசத்திலே வியாபித்து வளர்ந்ததோடு நின்றுவிடாமல், உலகமனைத்தையும் தழுவி நிற்கக்கூடிய மனிதாபிமானமாகவும், சர்வதேசியமாகவும் வளர்ந்தோங்கி,

நிற்பதை நாம் காண முடியும். ஆனால் பாரதியைப் பற்றிப் பேசுகின்ற சிலர் ''பாரதி இந்த நாட்டையும் இந்த உலகத்தையும் மட்டும் நேசிக்கவில்லை. இந்த நாட்டுக்கும் உலகத்துக்கும் அப்பாற்பட்ட மறுஉலகத்தையும், அந்த வீட்டுப் பெரும்பேற்றையும் நேசித்தான்; அதனால் அவன் பெரியதொரு வேதாந்தக் கவியாகத் திகழ்ந்தான்'' என்று சொல்லி பாரதியைத் திரித்துக் கூற முனைகிறார்கள். இத்தகையோருக்குப் பாரதியே சவுக்கடி கொடுப்பதுபோல் பின்வருமாறு பதிலளிக்கிறான்:

செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாம் என்றே எண்ணியிருப்பார்
பித்த மனிதர்; அவர் சொலும் சாத்திரம்
பேயுரையாம் என்றிங்கு ஊதடா சங்கம்!

எனவே பாரதியின் கவலையும் கருத்தோட்டமும் இந்த உலகத்தின் எல்லையைத் தாண்டி அப்பால் செல்லவில்லை.

இந்திரனார் உலகினிலே நல்லின்பம்
இருக்குதென்பார்; அதனை இங்கே கொண்டெய்தி

வாழவேண்டும் என்றுதான் அவன் விரும்பினான். எனவே தான்,

மண் பயனுற வேண்டும்
வானகம் இங்கு தென்பட வேண்டும்

என்று அவன் வேட்கை கொண்டான். அந்த வேட்கையின் காரணமாகத்தான் அவன் 'பாட்டுத் திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திட' விரும்பினான்; அதற்காகவே அவன் பராசக்தியிடம் 'இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்' கான வல்லமையை விரும்பிக் கேட்டான். அதன் காரண மாகவே அவன் நமது மதிப்புக்கும் புகழுக்கும் கௌரவத் துக்கும் உரிய கவிஞனாக விளங்குகிறான்.

# பாரதியும்
# தேசிய ஒருமைப்பாடும்

மகாகவி பாரதி இந்த நூற்றாண்டின் தலை சிறந்த கவிஞன் மட்டுமல்ல; இந்திய நாட்டின் தேசிய இயக்கம் பெற்றெடுத்துத் தந்த பெரும் தேசியக் கவிஞனும் புரட்சிக் கவிஞனும் ஆவான். எனவேதான் அவனது எழுத்துக்கள் தேசிய உணர்ச்சிகளைத் தெரிந்து, தேசியத் தேவைகளை உணர்ந்து, தீர்க்க தரிசனத்தோடு எழுதப்பட்டவையாகத் திகழ்கின்றன. இந்தத் தேவைகளில் ஒன்றான இந்திய நாட்டின் ஐக்கியத்தையும், தேசிய ஒருமைப்பாட்டையும் பற்றி அவனுக்குத் தெள்ளத் தெளிவான, தீர்க்கமான கருத்துக்கள் பலவிருந்தன. இந்தக் கருத்துக்களை, அவன் தன் கவிதைகளில் பலபடக் குறிப்பிட்டிருக்கிறான் என்பதை பெரும்பாலான பாரதி நேயர்கள் அறிவார்கள்.

செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

என்று தமிழ்நாட்டை "எங்கள் தந்தையர் நாடு" எனப் பாடுகின்ற அதே பாரதி,

பாருக்குள்ளே நல்லநாடு—எங்கள்
பாரத நாடு

எனப் பாரதத்தையும் "எங்கள் பாரத நாடு" என்று உரிமை கொண்டாடிப் பாடுகிறான். இது போன்று,

காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி—என
மேவிய ஆறுபலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு

என்று தமிழ்நாட்டின் நதி வளத்தையும், மற்றும் மலை வளம், நிலவளம் முதலியவற்றையும் புகழ்ந்து பாடுகின்ற அதே பாரதி,

மன்னும் இமயமலை எங்கள் மலையே!
மாநில மீதிது போற்பிறி திலையே!
இன்னரு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே!
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே!

என்று இமயத்தையும் கங்கையையும் முறையே 'எங்கள் மலை' 'எங்கள் ஆறு' என்று உரிமை கொண்டாடிப் பாடுகிறான்.

இவ்வாறு மொழிவழியாகத் தமிழ்நாட்டையும், நில வழியாகப் பாரதம் முழுமையையும் அவன் தனது தாய் நாடாகக் கொள்கிறான். இந்திய நாடு பல்வேறு மொழி களைக் கொண்டிருந்தபோதிலும், அந்த மொழிகள் பேசும் கருத்தெல்லாம் ஒன்றுதான் என்பதையும் அவன் கண்டான். எனவேதான் அவன் பாரதத் தாயை,

முப்பது கோடி முகமுடையாள்—உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்—இவள்

செப்புமொழி பதினெட்டுடையாள்—எனில்
சிந்தனை ஒன்றுடையாள்

என்று வருணித்தான். இத்தகைய பாரதத் தாயை இந்திய மக்கள் பல்வேறு மொழிகளின் மூலம் பாடிப் பரவுவதையும் அவன் கண்டான்.

விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதும் காணாய்!
இதமுற வந்தெமை ஆண்டருள் செய்வாய்
ஈன்றவளே பள்ளி எழுந்தருளாயே!

என்று பாரதத் தாய்க்குத் திருப்பள்ளியெழுச்சி பாடினான்.

உணர்ச்சி மயமான இத்தகைய கவிதைகளில் மட்டும் தான் அவன் இந்த ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் உணர்த்தினான் என்பதில்லை. அறிவுமயமான அவனது பல்வேறு வசனப் பகுதிகளிலும் அவன் இதனை வற்புறுத்தத் தவறவில்லை. சொல்லப் போனால் அவனது வாழ்நாட் காலத்தில் நிகழ்ந்த எந்தவொரு நிகழ்ச்சியும், எழுந்த உணர்ச்சியும், ஏன் தேச விரோதமான போக்குகளும்கூட, அவனது தீட்சண்யமான திருஷ்டியிலிருந்து தப்பவில்லை என்பதையும் காணலாம். அவன் அவற்றின் சாதக பாதங் களை நன்குணர்ந்து, அவற்றைக் குறித்து நமக்கு நல்லுரை கள் பல கூறியுள்ளான்; பாதகங்களைத் தீர்க்க தரிசனத் தோடு சுட்டிக்காட்டி நமக்கு எச்சரிக்கையும் விடுத்தான். பாரதியின் இத்தகைய கருத்துக்கள் பலவும் இன்னும் சரிவரத் தொகுக்கப் பெறாமல் திக்குக்கொன்றாய் சிதறிக் கிடக்கின்றன. இலைமறை காய்மறைவாகவுள்ள அந்தக் கருத்துக்களின் மூலம் அவன் இந்திய தேசிய ஒருமைப் பாட்டை எவ்வாறு வலியுறுத்திக் கூறியுள்ளான் என்பதையும் பாரதி மறைந்து ஐம்பதாண்டுகளுக்கு மேலாகியும் அவன் தன் வாழ்நாட் காலத்தில் கூறிய கருத்துக்கள் இன்றும் நமக்கு எத்தகைய தீர்க்கதரிசனமாகவும் மார்க்கபந்து

வாகவும் விளங்குகின்றன என்பதையும் சுருக்கமாகச் சுட்டிக் காட்டுவதே இந்தச் சிறு கட்டுரையின் நோக்கம்.

பாரத மக்கள், பாரத சமூதாயம், பாரத சம்பத்து முதலியவை பற்றி அவனது கருத்தென்ன? 'புனர்ஜென்மம்' (புனர்ஜென்மம்-1 கட்டுரைகள்: தத்துவம்) என்ற தலைப்பில் அவன் எழுதிய கட்டுரைத் தொடரின் தொடக்கத்திலேயே அவன் அவற்றை விளக்க முனைகிறான். அவனது அந்தப் பொன்னான வரிகள் பின்வருமாறு:

"கங்கையில் வந்து சேரும் வாய்க்கால்களெல்லாம் கங்கையாகவே மாறிவிடும். பாரத தேசத்தில் வந்து குடியேறித் தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்பவர்களெல்லாம் நமது ஜனக் கூட்டத்தைச் சேர்ந்தவராகின்றனர். கிறிஸ்தவர்களாயினும், பார்ஸிகளாயினும், மகம்மதியராயினும் எங்கிருந்து வந்து, எந்த இஷ்ட தெய்வத்தைக் கொண்டாடிய போதிலும், பாரத பூமியிலே பிறந்து வளர்ந்து இதையே சரணாகக் கொண்ட மனிதர்களையெல்லாம் பாரத ஜாதியிலே சேர்த்துக் கணக்கிட வேண்டும். இது ஒரே ஜாதி. பிரிக்க முடியாதது; அழிவில்லாதது. இதற்கு ஆதாரமும் மூலபலமுமாவது யாதெனில் ஆரிய சம்பத்து."

ஆம். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் குடியேறிவிட்ட "ஆரியர்கள்" நமக்கு அன்னியர்கள் என்று, அதற்கு முன்பே குடியேறிவிட்ட "திராவிடர்கள்" கூறுவதில் அர்த்தமில்லை என்பது பாரதியின் இந்தக் கூற்றிலிருந்து புலனாகின்றது. பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக, இந்த நாட்டிலேயே வாழ்ந்து பல்வேறு கலைச்செல்வங்களையெல்லாம் படைத்துத் தந்த மக்கள்தான் பாரத சமுதாயம் என்பது பாரதியின் கருத்து. அந்த மக்களை இன பேதத்தாலோ, மத பேதத்தாலோ பிரித்துக் காண முடியாது என்றும் அவன் கருதுகிறான். அந்த மக்கள் படைத்துத் தந்த சம்பத்தை—செல்வத்தைப் பற்றியும் அவன் அதே கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்;

"நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது சங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறைகள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள்— இவை அனைத்துக்கும் பொதுப் பெயர் ஆர்ய சம்பத்து. காளிதாசன் செய்த சாகுந்தல நாடகம், ஹிந்தி பாஷையிலே துளசிதாசர் செய்திருக்கும் ராமாயணம், கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி— இவை யனைத்துக்கும் பொதுப் பெயராவது ஆர்ய சம்பத்து. தஞ்சாவூர்க் கோயில், திருமலை நாயக்கர் மஹால், தியாகையர் கீர்த்தனங்கள், எல்லோராவிலுள்ள குகைக் கோயில், ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால், சரப சாஸ்திரியின் புல்லாங் குழல்—இவையனைத்துக்கும் பொதுப்பெயர் ஆர்ய சம் பத்து. எனவே, ஆர்ய சம்பத்தாவது ஹிந்துஸ்தானத்தின் நாகரீகம்."

"ஆர்ய" என்ற வார்த்தைக்குச் சமீப காலத்தில் ஏற் பட்ட விகற்பமான, கொச்சையான, வெறிபிடித்த வியாக் கியானத்தைக் கொண்டு பாரதியின் இந்தக் கூற்றை அர்த் தப்படுத்தக் கூடாது; அர்த்தப்படுத்த முடியாது. இமயம் முதல் குமரி வரையில் விளைந்துள்ள பல்வேறு கலாசாரப் படைப்புக்களும் பாரத சமுதாயம் முழுமைக்குமே சொந்த மான சொத்து என்பதுதான் பாரதியின் கருத்தாகும். இவ் வாறு கருதுகின்ற பாரதி இந்தச் சம்பத்துக்கு—செல் வத்துக்கு ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாது என்பதையும் எச்சரிக்க மறக்கவில்லை. எனவே அவன் இறுதியில் பின்வரு மாறு எழுதுகிறான்:

"இந்தச் சம்பத்தைப் பாதுகாக்கும் வரையில் இந்த ஜாதிக்கு (அதாவது பாரத ஜாதிக்கு) உயிருண்டு. இந்தச் சம்பத்திலே துருப்பிடிக்க இடம் கொடுத்தால் இந்த ஜாதி யைச் செல் அரித்துவிடும்."

பாரதி இவ்வாறு எச்சரிப்பதற்குக் காரணம் என்ன? திராவிட இயக்கத்தின் மூலபிதாக்கள், பாரதி வாழ்ந்த

காலத்திலேயே, அதாவது ஐம்பதாண்டுகளுக்கு முன்பே முளைத்து விட்டார்கள். அந்தக் காலத்தில் ஆங்கிலேய மந்திரி மாண்டேகு சென்னைக்கு வந்திருந்த சமயத்தில் பாரதி இவர்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதினான்:

''திராவிடக் கட்சியார் என்றும்,இஸ்லாமியக் கட்சியார் என்றும் யாரோ சிலர் செய்யும் பொய் மேளக் கச்சேரியை நாம் இகழ்ந்து, நகைத்து, காங்கிரஸ் முஸ்லீம் சங்கங்களே தேசத்துக்குப் பொது என்பதை ஒரே வார்த்தையாக எங்கும் நிலைநிறுத்த வேண்டும். காங்கிரஸ் முஸ்லீம் சபைகளை எதிர்த்து, நமக்கு சுயராஜ்யம் வேண்டாம் என்று சொல்லும் ஸ்வதேச விரோதிகளை அடக்கிவிட்டு, நாம் இப்போதே சுயராஜ்யம் கேட்கும்படி நம் பிரதிநிதிகளாகிய காங்கிரஸ் முஸ்லீம் சபையாரைத் தூண்டவேண்டும்.''

(லோக குரு; கட்டுரை-கட்டுரைகள்: தத்துவம்)

பாரதி முஸ்லீம் மக்களுக்கு விரோதியல்ல. 'அல்லா, அல்லா, அல்லா' என்று அல்லாவின் பெருமையைப் புகழ்ந்து பாடியவன்தான் அவன். கடையத்துக்கு அருகிலுள்ள பொட்டல் புதூரில் 20-6-1920ஆம் தேதியன்று அவன் அல்லாவைப் பற்றிய தனது பாட்டையும் பாடி, 'இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை'யைப் பற்றிப் பிரசங்கமும் புரிந்தவன் தான். (கட்டுரை-தத்துவம்). எனினும் அவன் மேற்கண்ட வரிகளை 1914-18ஆம் ஆண்டில் மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் எழுதினான். இதற்குக் காரணம் என்ன? மதத்தின் பேராலும், இனத்தின் பேராலும் அரசியல் கட்சிகள் தலைதூக்குவது தேசத்துக்கும் தேச ஐக்கியத்துக்கும் விரோதமானது என்பதை அவன் அன்றே உணர்ந்தான். எனவேதான் மதத்தின் பேரால் தோன்றிய இஸ்லாமியக் கட்சியைப் 'பொய் மேளம்' என்று குற்றம் சாட்டினான்; அதே சமயம் தேசிய உணர்வு கொண்டு விளங்கிய தேசிய முஸ்லீம்களை அவன் ஆதரிக்கத்தான் செய்தான். மதத்தின் பேரால் தோன்றிய இஸ்லாமியக்கட்சியைக் கண்டித்ததைத் போலவே, இனத்தின் பேரால் தோன்

றிய திராவிடக் கட்சியையும் அவன் கண்டித்தான். உதாரண மாக, போதனாமொழி அவரவர் தாய்மொழியாகவே இருக்க வேண்டுமென்பது பாரதி அன்றே வகுத்த கொள்கையாகும். அந்தக் கொள்கையை வலியுறுத்தி அவன் 'தேசியக் கல்வி' என்று ஒரு கட்டுரை எழுதினான். (கட்டுரைகள்: சமூகம்) அந்தக் கட்டுரையில் அவன் பின்வருமாறு எழுதினான்.

''தேச பாஷையே ப்ரதானம் என்பது தேசியக் கல்வி யின் ஆதாரக்கொள்கை. இதை மறந்துவிடக் கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப் படுகிற இந்த முயற்சிக்கு நம் தமிழ்நாட்டிலிருந்து பரிபூரண சகாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானால், இந்த முயற்சிக்கு தமிழ் பாஷையே முதற் கருவியாக ஏற்படுத்தப்படும் என்ப தைத் தம்பட்டம் அறைவிக்க வேண்டும். இங்ஙனம் தமிழ் ப்ரதானம் என்று நான் சொல்வதால், டாக்டர் நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடக் கட்சியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகளுக்கு நான் சார் பாகி, ஆர்யா பாஷா விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்து விடலாகாது.''

ஆம். தமிழைக் காப்பதாகச் சொல்லிக்கொண்டு, வட இந்திய மொழிகளின் மீதெல்லாம் துவேஷத்தை வளர்க்கும் திராவிட இயக்கத்தாரின் மூதாதையர்கள் அன்றும் அதைத் தான் செய்தார்கள். மேலும் பாரதி குறிப்பிடுகின்ற ''போலிப் பெயர் புனைந்த தேச விரோதி''களில் ஒருவரான டாக்டர் நாயரை, திராவிட இயக்கத்தவர் தமது கழக வர லாற்றில் போற்றிப் புகழ்ந்திருப்பதையும் நாம் காணலாம். எனவே தமிழ் நாட்டில் தமிழ் மொழியில்தான் பாட போதனை நடைபெற வேண்டும் என்று அன்றே வற்புறுத் திய பாரதி, தனது தமிழ்ப் பற்றின் காரணமாக, தன்னை இன வெறியர்களோடும் மொழிப் பகைவர்களோடும் தவறாகச் சேர்த்து எண்ணிவிடக் கூடாது என்றும் எச்சரிக்க நேர்ந்தது.

ஆரிய திராவிடர் பிரச்சினைக்கான வித்துக்கள் பாரதியின் காலத்திலேயே முளைவிடத் தொடங்கிவிட்டன. அவன் அவற்றை முளையிலேயே கண்டறிந்தான். அவற்றின் நச்சுத் தன்மையையும், மாய்மாலத்தையும் அம்பலப்படுத்தவும் முனைந்தான். மேலும் பிராமணரல்லாதார் "கிளர்ச்சி" என்ற பெயரால் அன்றைய திராவிடக் கட்சியினர் நாட்டில் நிலவிய ஜாதி பேதத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆதாயம் காண முயன்றார்கள். அவர்களது போக்கு எவ்வாறு தேச விரோதமாகப் பயன்படுத்தப் பட்டது என்பதையும், அந்தக் "கிளர்ச்சி"யில் பங்கெடுத்தவர்களின் யோக்கியதாம்சங்கள் என்ன என்பதையும் பாரதி அம்பலப்படுத்தினான். "ஜாதி பேத விநோதங்கள்" (கட்டுரைகள்: சமூகம்) என்ற தலைப்பில் 1-12-1920 ஆம் தேதியன்று அவன் எழுதிய கட்டுரையில் பின் வருமாறு எழுதுகிறான்:

"இந்தியாவின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் நமது சென்னை மாகாணத்தில்தான் ஜாதி பேதத்தைப் பற்றிய மனஸ்தாபங்கள் ராஜரீக விவகாரங்களிலும் கூடப் புகுந்து, தேச விடுதலையாகிய பரம தர்மத்துக்கே ஓர் இடுக்கண்ணாகக் கூடிய நிலைமை இம்மாகாணத்தில் மாத்திரமே காணப்படுவதினின்றும் நன்கு விளங்கும். இந்தப் 'பிராமணரல்லாதார் கிளர்ச்சி' காலகதியில் தானே மங்கி அழிந்துவிடுமென்று நிச்சயிப்பதற்கும் போதிய காரணங்கள் இருக்கின்றன. முதலாவது இதில் உண்மையில்லை. இந்தியாவில் ஜாதி பேதங்கள் இல்லாமல் செய்துவிட வேண்டுமென்ற ஐக்கிய புத்தியுடையோரில் மிகச் சிலரே இந்தக் கிளர்ச்சியில் சேர்ந்திருக்கிறார்கள். பெரும்பாலும் சர்க்கார் அதிகாரங்களையும், ஜில்லா போர்டு, தாலுகா போர்டு, முனிசிபாலிடி, சட்ட சபை முதலியவற்றில் கௌரவ ஸ்தானங்களையும் தாமே அடைய வேண்டுமென்ற ஆவலுடையவர்களே இக்கிளர்ச்சியின் தலைவராக வேலை செய்து வருகிறார்கள். திருஷ்டாந்தமாக, பிராமணர்களுக்கு அநேகமாக அடுத்தபடி தென்னிந்தியாவில் பல இடங்களில் சைவ வேளாளர் என்ற வகுப்பினருக்குத்

தலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த வகுப்புக்குக் கீழே 'பஞ்சமர்' வரை சுமார் இரண்டாயிரம் ஜாதி வகுப்புக்கள் இருக்கின்றன. அவர்களுக்கு மேலே பிராமணராகிய ஒரு வகுப்பினரே இருக்கிறார்கள். இந்த நிலையில் நம்முடைய சைவ வேளாளருக்குள்ளே'அல்லாதார்' கிளர்ச்சியைச் சேர்ந் திருப்பவரும் கூட, தமக்கு மேற்படியிலுள்ள பிராமணர் பிரிவுக் குணமுடையோரென்றும், மற்ற வகுப்பினருடன் சேர்ந்துண்டு மணம் புரிந்து வாழ மறுக்கிறாரென்றும் நிந்திக்கிறார்களே யல்லாது தமக்குக் கீழேயுள்ள இரண்டா யிரத்துச் சில்லறை ஜாதியார்களுடன் தாமும் சேர்ந்துண்டு மணம் புரிந்து வாழுமாறு யாதொரு பிரயத்தனமும் செய்யாதிருக்கிறார்கள். 'பிராமணரல்லாதார்' என்றொரு வகுப்பு இந்தியாவில் கிடையவே கிடையாது. ஒன்றோ டொன்று சம்பந்தம், பந்தி போஜனம் செய்துகொள்ள வழக்கப்படுத்தாத ஆயிரக்கணக்கான வகுப்புக்கள் இந்துக் களுக்குள்ளேயே நெடுங்காலமாக இருந்து வருகின்றன. இவற்றுள் பிராமணர் ஒரு வகுப்பினர். இங்ஙனம் வகுப்புக் களாகப் பிரிந்திருத்தல் குற்றமாயின், அக்குற்றம் பிராமணரை மாத்திரம் சார்ந்ததாகாது. எல்லா வகுப் பினரையும் சாரும்.''

பாரதி பார்ப்பனக் குலத்தில் பிறத்தவன்தான். இதன் காரணமாக, திராவிட இயக்கத்தினர் அவனைப் பார்ப்பனக் கவிஞன் என்றும், எனவே அவனை எப்போதும் பார்ப் பனர்களுக்கு ஆதரவாகவே பேசியவன் என்றும் கூறிவந்த துண்டு. ஆனால் பாரதியோ,

சூத்திரனுக்கு ஒரு நீதி—தண்டச்
　　சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின்—அது
　　சாத்திரம் அன்று; சதியென்று கண்டோம்!

என்று பாடிய ''பார்ப்பனக் கவிஞன்'' என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. இந்த அளவுக்குப் பார்ப்பனீயத்தை எதிர்த்து, எந்தவொரு ''திராவிடப் புரட்சிக் கவிஞ'ருங்கூட.

முதற் குரல் எழுப்பவில்லை என்பது சரித்திர உண்மை. எனவே, பாரதி 'பிராமணர் அல்லாதார் கிளர்ச்சி' என்ற பெயரால் அன்று நடந்த திராவிடக் கட்சியாரின் செயல்களைப் பற்றிக் கூறியுள்ள வரிகளை நாம் மிகவும் உன்னிப்பாகப் படிக்க வேண்டும். பிராமணர் அல்லாதார் என்றவொரு வகுப்பே இல்லை என்று பாரதி நிரூபிப்பதை நாம் மேலே பார்த்தோம். அவன் இவ்வாறு கருதியதால், அதே கட்டுரையின் இறுதியில் பின்வருமாறு எழுதி முடிக்கிறான்:

''எனவே, இந்தக் கிளர்ச்சியின் மூலமே பொய்யாக இருப்பது கொண்டு, இதனை உண்மையில்லாத கிளர்ச்சி என்கிறேன். உண்மையாகவே இந்தியாவில் ஜாதி பேதங்கள் இல்லாமல் சமத்துவக் கொள்கை வெற்றியடைய வேண்டுமென்றால், அதற்கு ஸ்வராஜ்ய ஸ்தாபனமே சரியான உபாயம்...இதை விட்டு, பொய்யும் புலையுமாக, திராவிடர்களென்றும், ஆரியர்களென்றும் உள்ள பழைய சொற்களுக்குப் புதிய அபாண்டமான அர்த்தங்கள் கற்பித்துக் கொண்டு வீண் சண்டைகள் வளர்ப்பதினால் ஹிந்து சமூகத்துக்கே கெடுதி விளையக்கூடும். எந்த வகுப்புக்கும் அனுகூலம் ஏற்படாது.''

திராவிட இயக்கத்தைப் பற்றி, ஐம்பதாண்டுகளுக்கு முன்பே பாரதி கணித்த கணிப்பு இது.

## மொழி வழி ராஜ்யம்

பாரதி இவ்வாறு பாரதநாடு முழுமையையும் ஒன்றாகப் பார்த்ததாலும் திராவிடக் கட்சியாரைக் கண்டித்ததாலும், அவன் இந்தியாவிலுள்ள பல்வேறு மொழி பேசும் பிரதேசங்களெல்லாம் மொழிவழி ராஜ்யங்களாக அமையாமல் இருக்க வேண்டுமென்று விரும்பினானா என்றும் ஒரு கேள்வி பிறக்க வழியுண்டு. ஆனால் இந்தக் கேள்விக்கும் பாரதி அன்றே தனது விடையைக் கூறி விட்டான். 1-6-1917 ஆம் தேதியன்று சென்னையிலிருந்த ஆந்திர மகா சபை, தேசபக்த

ரான கொண்டா வெங்கட சுப்பையா என்பவரின் தலைமையில் கூடியது. அந்தக் கூட்டத்தில் தெலுங்கு மொழி பேசப்படும் பிரதேசங்கள் அனைத்தையும் இணைத்து, அதனைத் தனி மாகாணமாக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. இந்தத் தீர்மானத்தைக் குறித்து, பாரதி அதே ஆண்டில் ''ஒரே நாடு'' என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதினான்:

''மேற்படி சபையில் ஸ்ரீ வெங்கட சுப்பையா சபாநாயகராகப் பேசிய வார்த்தைகளின் சாரம் பின்வருமாறு:

1. தெலுங்கு தேசத்தைத் தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டும்.

2. இந்தியாவுக்குத் தன்னாட்சி கொடுக்க வேண்டும்.

3. இயன்ற வரையிலும் இந்தியா முழுதையும் பாஷைகளுக்குத் தக்கபடி வெவ்வேறு மாகாணமாக்க வேண்டும். அதாவது மதராஸ், பம்பாய், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பஞ்சாப், வங்காளம் என்ற பிரிவுகளை மாற்றி, தமிழ்நாடு, தெலுங்கு நாடு, மராட்டிய நாடு, கன்னட நாடு, இந்துஸ்தானம், வங்க நாடு என்று பாஷைக் கிரமப்படி பிரிக்க வேண்டும்.

4. ஸ்வபாஷைகளில் கல்விப் பயிற்சி செய்விக்க வேண்டும். ராஜ்ய காரியங்களும் இயன்ற வரையில் ஸ்வபாஷையில் நடக்க வேண்டும்.

''மேற்படி நாலு அம்சங்களில் முதலாவது, மூன்றாவது, நாலாவது இம்மூன்றும் ஒரு பகுதி. இரண்டாவது மற்றொரு பகுதி. இரண்டாவது தாய்ப் பகுதி. மற்றவை கிளைப் பகுதிகளாகும்.

''என்னுடைய அபிப்பிராயத்தில் மேற்கண்ட கொள்கையெல்லாம் நியாயமென்றே தோன்றுகிறது. ஆனால் இந்தச் சமயத்தில் ஆந்திரத்தைத் தனிப் பிரிவாக ருஜுப்படுத்துவதைக் காட்டிலும் ஆஸேது ஹிமாசல பரியந்தம் உள்ள

ஹிந்துக்களெல்லாம் ஒன்று என்ற மூல மந்திரத்தை நிலை நாட்டுவதே அவசியம் என்று என் புத்திக்குத்தோன்றுகிறது. ஹிந்துக்களெல்லாம் ஒரே கூட்டம். வேதத்தை நம்பு வோரெல்லாம் ஸகோதரர். பாரத பூமியின் மக்கள் எல்லாம் ஒரே தாய் வயிற்றுக் குழந்தைகள். நமக்குள் மதபேதம் ஜாதிபேதம், குலபேதம், பாஷாபேதம் ஒன்றுமே இல்லை. இந்தக் கொள்கைதான் இந்தக் காலத்துக்கு யுக்தமானது. ஹிந்து மதத்தை உண்மையாக நம்புவோரெல்லாம் ஒரே ஆத்மா, ஒரே உயிர், ஒரே ரத்தம், ஒரே குடல்; ஒன்று'' (பாரதி புதையல்—2ஆம் பாகம்)

பாரதியின் மேற்கண்ட கூற்றிலிருந்து அவன் இந்திய நாட்டில் மொழிவழி ராஜ்யங்கள் அமைய வேண்டும் என்ற கொள்கையை ஆதரித்தான் என்பது வெளிப்படை. ஆனால் பாரத தேசத்திலிருந்து அவை துண்டு பட்டுப் பிரிந்து போக வேண்டுமென்று அவன் விரும்பவில்லை. மேலும் சுதந்திரப் போராட்ட காலத்தில் மொழிவழி ராஜ்யக் கொள்கையை அங்கீகரித்த போதிலும், இந்தியா ஒரே நாடு என்ற உணர்வை நாம் இழந்துவிடக்கூடாது என்று அவன் அன்று எச்சரித்திருக்கிறான். இமாசலம் முதல் சேதுக்கரை வரை யிலும் எல்லோரும் ஒன்று என்ற உணர்வே மேலோங்க வேண்டும் என்பதே அவனது உபதேசம்.

இனக் கொள்கையையும் பிரிவினைக் கொள்கையையும் ஏற்காதவன் பாரதி. 'திராவிடர்கள்தான் தென்னாட்டின் பூர்வகுடிகள். எனவே தென்னாடு தனியே பிரிய வேண்டும்' என்று சிலர் கூறி வந்தார்களல்லவா? இவ்வாறு பூர்வீக காலத்து உரிமைகளை வைத்து நாடு கோருவது பற்றியும் பாரதிக்கு ஒரு கருத்து இருந்தது என்றும் நமக்குத் தெரிய வருகிறது. பாரதியின் தோழர்களில் ஒருவரான காலஞ் சென்ற மதுரை ரா. ஸ்ரீனிவாசவரதன் 1920 ஆம் ஆண்டில் பாரதியைக் கடையத்தில் சந்தித்த காலத்தில் நிகழ்ந்த ஓர் உரையாடலைக் குறித்துத் தமது கட்டுரையொன்றில் பின் வருமாறு எழுதியுள்ளார்;

"பாரதியார் வழக்கம் போல் திண்ணையில் உட்கார்ந்து காலை வரும் 'மித்திரன்' பத்திரிகையைப் பார்த்தார். அவ்வமயம் பாரதியிடம் அவ்வூர் அன்பர்கள் சிலர் வந்தனர். நடந்த சம்பாஷணையிலிருந்து அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று தோன்றிற்று. பாரதி அவர்களிடம் 'அன்பர்களே! ஆரியர்களுக்கு முன்னால் திராவிடர்கள். அவர்களுக்கு முன்னால் ஆதிதிராவிடர்கள். அதற்கும் முன் இருந்தது மிருகங்கள்; ஜீவராசிகள். அவர்கள் வாழ்ந்த இடத்தை வெட்டித் திருத்தி, வீடுகட்டி, பயிர் செய்து நாம் வாழ்கின்றோம். அவைகள் உரிமை கொண்டாடினால், பிறகு நாம் அனைவரும் அவைகளிடம் விட்டு விட்டுப் போக வேண்டியது தான்' என்று ஹாஸ்யத்துடன் சொன்னார்." ('பாரதியுடன் ஒரு நாள்': கட்டுரை—! தினமணி பாரதி தினமலர் 1959).

## இந்தியா ஒன்று

இவ்வாறெல்லாம் பாரதி இனக்கொள்கை, பிரிவினைக் கொள்கை, மொழி வெறி முதலியவற்றை வெறுத்ததன் காரணமாக, அவன் இந்திய நாட்டாரின் மனத்திலே இந்திய ஒருமைப்பாட்டுணர்ச்சியை உருவேற்றவே பாடுபட்டு வந்திருக்கிறான். சுவாமி விவேகானந்தரின் பிரசங்கம் ஒன்றைப் பற்றி அவன் "இந்தியனாகப் பிறப்பதே பெரிய பாக்கியம்" என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதுகிறான்:

"நான் இந்தியன். இந்தியன் ஒவ்வொருவனும் என் சகோதரன். மூதறிவுடைய இந்தியனும் என் சகோதரன்; லக்ஷாதிபதியான இந்தியனும் என் சகோதரன்; பிக்ஷாதிபதியான இந்தியனும் என் சகோதரன் மூதற் சாதியான பிராமணனும் என் சகோதரன் என்று அதிக கௌரவத்துடன் எல்லோருடனும் சொல்லிக் கொள். கட்டும் துணி கந்தையானாலும் சரி. அதற்காக மன வருத்தப் படாதே. இந்தியனாகப் பிறக்கக் கிடைத்திருக்கும்பாக்கியமே

பெரிய பாக்கியம். 'இந்தியர்கள் எல்லோரும் என் சகோத ரர்கள். இந்தியர் வணங்கும் தெய்வங்களே என் குலதெய்வம். நான் பிறந்ததும் வளர்ந்ததும் இந்தியாவுக்குள்ளே தான். வாழ்ந்ததும் அந்தத் திருகூட்டத்திலேயே. கடைசிக் காலத் தில் காட்டிற்குச் சென்று இறக்க ஆசை கொள்ளுவதும் அம் மகாஜன சமூத்திரத்திலேயே என்று அபரிதமாக உரக்கக் கூவு...

''சகோதரனே! இந்திய பூமியே நித்திய சொர்க்கம்; இந்தியாவின் க்ஷேமமே எனக்குப் பிரமாநந்தம் என்று சொல்...

''இவ்வாறு இப்போது நடைபெறும் நவீன உணர்ச்சியின் மூல புருஷரான ஸத்குரு ஸ்ரீவிவேகானந்த ஸ்வாமி... நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

''இதற்கு ஒத்த கருத்துள்ள திருத்தாண்டகம் ஒன்று சைவ சமயாசாரியார் திருநாவுக்கரசு நாயனார் பாடியுள் ளார். அதனைச் சிறிது மட்டும் மாற்றிக் கீழே எழுதுவோம்:

''சங்க நிதி பதும நிதி இரண்டும் தந்து
தரணியொடு வான் ஆளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்;
மாதாவுக்கே காந்தர் அல்லர் ஆகில்
அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனும்
கங்கைபாய் வளநாட்டிற்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.
''வந்தே மாதரம்...''

(பாரதி புதையல்—2 ஆம் பாகம்)

விவேகானந்தரின் கட்டளையைச் சிரமேல் தாங்கி வாழ்ந்தவன் பாரதி எனவே அவன் தான் எழுதிய 'ஆறில்

ஒரு பங்கு' என்ற கதையின் முன்னுரையையே இந்திய ஒற்றுமையைக் குறிக்கும் பின்வரும் பொன்னான வரிகளுடன் தான் தொடங்குகிறான்:

''ஒரு ஜாதி ஒரு உயிர். பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம்; பிறவி மாத்திரத்தாலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மதபேதங்கள் இருக்கலாம்; மதவிரோதங்கள் இருத்தலாகாது. இவ்வுணர்வே நமக்குச் சுதந்திரமும் அமரத் தன்மையும் கொடுக்கும்.'' (கட்டுரைகள்—சமூகம்).

இவ்வாறெல்லாம் பாரதி இந்திய நாட்டின் ஐக்கியத்தை யும் ஒருமைப்பாட்டையும் வற்புறுத்திய காரணத்தால்தான் அவன் ''தாயின் மணிக்கொடி''யைப் பற்றிப் பாடுகின்ற காலத்தில் அந்த மணிக்கொடியைக் காத்து நிற்கும் பாரத மக்களைப்பற்றிப் பின்வருமாறு பாடுகிறான்:

செந்தமிழ் நாட்டுப் பொருநர்—கொடுந்
    தீக்கண் மறவர்கள் சேரன்தன் வீரர்,
சிந்தை துணிந்த தெலுங்கர்—தாயின்
    சேவடிக்கே பணிசெய்திடும் துளுவர்
கன்னடர் ஒட்டியரோடு—போரில்
    காலனும் அஞ்சக் கலக்கு மராட்டர்
பொன்னகர்த் தேவர்களொப்ப—நிற்கும்
    பொற்புடையார் இந்துஸ்தானத்துமல்லர்
பூதலம் முற்றிடும் வரையும்—அறப்
    போர்விறல் யாவும் மறுப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
    மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ரவீரர்

பஞ்ச நதத்துப் பிறந்தோர்—முன்னைப்
பார்த்தன்முதற் பலர் வாழ்ந்த நன்னாட்டார்
துஞ்சும் பொழுதினும் தாயின்—பதத்
தொண்டு நினைத்திடும் வங்கத்தினோரும்

அந்தக் கொடியைச் "சேர்ந்து" காப்பதாகப் பாடுகிறான். ஆம், இந்திய நாட்டின் பல்வேறு மொழிபேசும் மாநிலத்து வீரர்களும் ஒன்றுபட்ட உணர்ச்சியோடு அந்தக் கொடியைக் காத்து நிற்பதாகக் கூறுகிறான் அவன். இவ்வாறு ஒற்றுமை கண்ட வீரர்களைப் பற்றிக் கூறும்போது,

நம்பற் குரியர் அவ்வீரர்—தங்கள்
நல்லுயி ரீந்தும் கொடியினைக் காப்பார்

என்றும் அவன் உறுதி கூறுகிறான். பல்வேறு மொழி பேசும் பகுதியினரான இந்திய மக்களையெல்லாம் அவன் நம்பிக் கைக்குரிய வீரர்களாக மதிக்கிறான். அந்தக் கொடிக்கு, இந்திய ஒற்றுமை என்னும் வெற்றிப் பதாகைக்கு, ஆபத்து வருமேயானால் அந்த வீரர்கள் தமது உயிரையும் ஈந்து, அந்தக் கொடியைக் காப்பாற்றுவார்கள் என்றும் பாரதி தன்னம்பிக்கையோடு உறுதி கூறுகிறான்.

இவ்வாறாக, பாரதியின் படைப்புக்களில் இன்றைக்கு நாம் அக்கறையும் ஆர்வமும் காட்டும் தேசிய ஒருமைப் பாட்டுப் பிரச்சினையின் பல்வேறு அம்சங்களையும் பற்றிய தெள்ளத் தெளிவான கருத்துக்களைக் காண முடிகிறது.

# பாரதி பரம்பரை

சூரிய ஒளியைச் சுளகைக்கொண்டு மூடி மறைக்க முடியாது. அதுபோலவே சமுதாய வளர்ச்சிக்கோர் உதய சூரியனாக விளங்கும் எந்த எழுத்தாளனையும் கவிஞனையும் அறிஞனையும் ஆனானப்பட்ட ராட்சஸக் கரங்களாலும் மூடி மறைக்க முடியாது. வண்டிமறிச்சம்மன்கள் மாதிரி எத்தனை முட்டுக் கட்டைகள் வழிமறித்துக் கிடந்தாலும், அந்தக் கவிஞனின் லட்சிய கோஷத்தை, லட்சியப் பாதையை, அவனது கவிதா பாரம்பரியத்தை, அவன் அடிச்சுவட்டில் அக்குரோணி வெள்ளம்போல் அணிதிரண்டு வரும் மக்கள் சேனையைத் தடுத்து நிறுத்த முடியாது; திசைமாற்றித் திருப்பிவிட முடியாது.

இந்த உண்மையை உணராத சிலர், நமது சுதந்திரத்தின் சொல்லோவியமாகத் திகழ்ந்த மகாகவி பாரதியை அன்றும் ஏற்றுக்கொள்ள மறுத்ததுண்டு. ''பாரதிக்கு வெறும் பண்டாரப் பாட்டுக்கள்தானே பாடத் தெரியும். இலக்கண சுத்தமாகப் பாடத் தெரியுமா?'' என்று எகத்தாளமாகப் பேசினார்கள் இலக்கணப் பண்டிதர்கள். ''கஞ்சா போதையிலே உளறிய தெல்லாம் கவியாகிவிடுமா?'' என்று கசந்து கொண்டார்கள் மெத்தப்படித்த மேதாவிகள். ''சமுதாயக் கட்டுப்பாடுகளையே எதிர்த்த அராஜக வாதியல்லவா அவன்?'' என்று குமுறிப் புடைத்தார்கள் சனாதனிகள். ஆனால், பாரதியைக் கவிஞனென்று ஏற்றுக்கொள்ளவே நாக் கூசியவர்களெல்லாம் இன்று வாயடைத்து மூச்சடைத்துப் போய்விட்டார்கள். பாரதி ஒரு தலைசிறந்த கவிஞன்தான்

என்ற உண்மையை, ''கசப்பான'' உண்மையை, மென்று விழுங்கித் தின்று தீர்க்க வேண்டிய நிர்ப்பந்த சங்கடத்துக்கு இலக்கியப் பண்டிதர்களும், சனாதனிகளும்கூட ஆளாகி விட்டார்கள். எவராலும் எந்தச் சக்தியாலும் அலட்சியப் படுத்த முடியாதபடி பாரதியின் திருநாமமும், அவனது லட்சியங்களும் அறிவுரைகளும் அறைகூவல்களும் மக்கள் மனத்திலே உரம்பெற்று உருவேறிவிட்டன; அவனது கவிதா பாரம்பரியம் காட்டிய பாதையிலே இன்று மக்கள் ஏறுநடை போட்டுச் செல்ல முனைந்து விட்டார்கள்.

## பாரதியைத் திரிக்கும் திருக்கூட்டம்

எனவே மக்களின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் நாசகாலர் களாகவுள்ள வர்க்கப்பிரதிநிதிகள் இன்று பாரதியைத் திரை யிட்டுமூட முனைந்திருக்கிறார்கள்; அவனது பாரம்பரியத் தைத் திரித்துக்கூற முனைந்திருக்கிறார்கள்; என்றென்றும் மக்களின் தோழனாய், தொண்டனாய், நண்பனாய், நல்லா சிரியனாய் விளங்கிவரும் பாரதியை மக்களிடமிருந்து பிரித்து வைக்க, சகுனிச் சதிகள் பல செய்கிறார்கள். அன்று பாரதியின் ஆவேசமான கவிதா பேரிகை முழக்கத்துக்குச் செவிசாய்த்து, பாரதியின் கவிதாவேசத்தால் தூண்டப் பெற்று, மக்கள் எப்படி தேசியப் போராட்டத்தில் அணி திரண்டு போராடினார்களோ, அதே போன்று இன்று மக்கள் தமது பரிபூர்ண சுதந்திரத்துக்காகவும், சுபிட்சத்துக் காகவும், நல்வாழ்வுக்காகவும் இன்றைய ஆட்சியாளர்களை யும் ஆட்சி முறைமையையும், உளுத்துக் கலகலத்துப்போன சமுதாயக் கட்டுப்பாடுகளையும் எதிர்த்துப் போராடத் துணிந்து விடக்கூடாதே என்று பிற்போக்குக் கும்பல் அஞ்சி நடுங்குகிறது. எனவேதான் பாரதி மிகச் சிறந்த தேசியகவி என்று அன்று புகழ்ந்து பேசிய அதே நாவால், இன்று பாரதியை வேதாந்தி என்றும், சமயவாதி என்றும், சனாதனவாதி என்றும் திரித்துக்கூற முனைந்திருக்கிறார்கள்,

வேறு சிலர் 'பாரதி ஒரு சிறந்த கவிஞன்தான்; எனினும் அவனது அமரத்தன்மை எல்லாம் அவனது தேசியப் பாடல்களில் இல்லை. ஏனெனில் அவன் அவற்றில் நிரந்தரமான நித்தியமான உண்மைகளைப் பற்றிப் பாடவில்லை. எனவே அவை மறைந்துவிடும்; நித்தியமான உண்மையைப் பற்றிப் பாடிய தெய்வப் பாடல்களில்தான் பாரதியின் சிரஞ்சீவித் தன்மை குடிகொண்டிருக்கிறது' என்று கூறி, பாரதியை மிகவும் சாமர்த்தியமாகத் திரையிட்டுமூட முனைகிறார்கள். இவர்களைப் போலவே பகுத்தறிவு என்று கூறிக் கொண்டு, பிறப்பிலேயே பேதம் காணும் திராவிட இயக்கத்தவரும் பாரதியைப் 'பார்ப்பனன்' என்றும், 'திராவிடத் துவேஷி' என்றும் 'ஆரிய அடிவருடி' என்றும் நாக்கில் நரம்பின்றி ''நாமாவளி'' பாடி வருகிறார்கள்.

எனவே பாரதியின் கவிதா சந்நிதானத்தை, பாரம்பரியத்தை வழிமறைத்துப் படுத்துக்கொள்ள முனையும் இந்த நந்திகளின் மாய்மாலத்தை அம்பலப்படுத்தி, இவர்களை அப்புறப்படுத்தி, உண்மையான பாரதியை, மக்களின் பாரதியை, அவனது பாரம்பரியத்தை, மக்களுக்கு உணர்த்த வேண்டியது சகல முற்போக்காளர்களின் கடமையாகும்.

## பாரதி வேதாந்திதானா?

பாரதியை வேதாந்தியாகச் சித்திரிக்கின்ற புண்ணியாத்துமாக்கள் பாரதியைப் பழைய வேதாந்த பரம்பரையோடு இணைக்க முயல்கிறார்கள். அதாவது உலகம் மாறுதலற்றது, ஸ்திரமானது என்று கருதும் வைதீக சனாதன தர்மம்,உலகம் மாயை, உலகத்தின் பந்தபாசங்கள் ஒட்டுறவுகள் எல்லாம் மாயை என்று கூறும் மாயாவாதம், அறம் பொருள் இன்பம் என்ற மூன்றையும் கடந்த அதீதக் கற்பனையான 'வீட்டை'ப் பற்றி மட்டும் விசாரம் கொள்ளும் பரவுலகத்தேட்டம் முதலியவற்றை வற்புறுத்திச் சென்ற சமயவாதிகளோடு சேர்க்க முனைகிறார்கள்,

பாரதி தெய்வ நம்பிக்கை கொண்டவன்தான். ஆனால், தெய்வ நம்பிக்கை ஒன்றே விமோசன மார்க்கம் என்று கருதியவன் அல்ல; தெய்வத்தின் பேரால், இன்றைய சாதியக் கொடுமைகளையும், வருணாசிரம தருமங்களையும் நிலைநிறுத்த எண்ணிய கொடும்பாவி அல்ல. பரலோக சாம்ராஜ்யத்தில்தான் மக்களுக்கு விடுதலையும் சாயுஜ்ய மும் கிட்டும் என்று கூறிய ஏமாற்றுக்காரன் அல்ல; உலகத் தையோ உலகத்துப் பொருள்களையோ, உலக மக்களையோ மாயை என்று கருதிய சமூகத் துரோகியுமல்ல.

பாரதி தெய்வத்தை நம்பினான். எனினும் பண்டை வேதாந்தக் கருத்துக்களை அவன் ஒப்புக் கொள்ளவில்லை.

''பொய்யொழுக்கை அறமென்று கொண்டும்
பொய்யர் கேலியைச் சாத்திரமென்றும்
ஐயகோ எங்கள் பாரதநாட்டில்
அறிவிலார் அறப்பற்று மிக்குள்ளோர்
நொய்யராகி அழிந்தவர்கோடி!''

என்ற உண்மையை உணர்ந்தவன் அவன்.

செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாமென்று எண்ணியிருப்பார்
பித்த மனிதர்; அவர் சொலும் சாத்திரம்
பேயுரையாம் என்று இங்கு ஊதேடா சங்கம்

என்று பரலோகத் தேட்டத்துக்கு அறம் பாடியவன் பாரதி.

''இந்த உலகமே பொய் என்று நமது தேசத்தில் ஒரு சாத்திரம் வழங்கி வருகிறது. சந்நியாசிகள் இதை ஓயாமல் சால்லிக் கொண்டிருக்கட்டும். அதைப்பற்றி இந்த நிமிஷம்

எனக்கு வருத்தமில்லை. குடும்பத்திலிருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? நடுவீட்டில் உச்சரிக்கலாமா? அவச்சொல்லன்றோ? நமக்குத் தந்தை வைத்துவிட்டுப் போன வீடும் வயலும் பொய்யா? தங்கச் சிலைபோல் நிற்கிறாள் மனைவி. நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைந்தாள். நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள். நமது குழந்தைகளை வளர்த்தாள். அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானா? பெற்றவரிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா?''

என்று உருக்கமாகக் கேட்டவன் அவன். பாரதி பூவுலக வாழ்க்கையை நம்பினான். மனிதர்களை நம்பினான். வாழ்வு மலரவேண்டுமென்றால் அது இந்த உலகத்திலேயே மலர வேண்டும் என்று விரும்பினான். மக்கள் அனைவரும் அமரர்களாய் வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டான்.

''வானகம் இங்கு தோன்றிடல் வேண்டும்.''
''மண்ணில் தெரியுது வானம்—அது நம்
வசப்படலாகாதோ''

என்று பாடினான்.

பொய்க்கும் கலியை நான் கொன்று
பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்கும் கிருத யுகத்தினையே
கொணர்வேன் தெய்வ விதியிஃதே

என்று சபதம் கூறினான். எனவேதான் பாரதி தெய்வ நம்பிக்கை கொண்டவனான போதிலும்,

சொல்லடி சிவசக்தி—எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்;
வல்லமை தாராயோ—இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே!

என்று தான் நம்பிய தெய்வத்திடம் வேண்டிக் கொண்டான். மாநிலம் பயனுற வாழாத வாழ்க்கையை ''நிலச்சுமை'' எனக் கருதினான் பாரதி.

எனவே பாரதியை வேதாந்தியென்று கூறுபவர்கள் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறார் கள்; பாரதியின் முகத்தில் கரியைப் பூச முனைகிறார்கள். அவர்கள் கூறுவது போல் பாரதி பஜகோவிந்தப் பண்டாரம் அல்ல; அருள் நெறித் திருக் கூட்ட அடியார்க்கு நல்லான் அல்ல; பாரதி வேதாந்தி என்றால் பாரதி வாழ்வை நம்பிய வேதாந்தி. அதாவது சுருங்கச் சொன்னால் வாழ்க்கைதான் பாரதியின் ''வேதாந்தம்'' வாழ்க்கைதான் பாரதியின் தத்துவார்த்தம்.

## பாரதி சிரஞ்சீவிக் கவியில்லையா?

பாரதியைச் சமத்காரமாகத் திரித்துக் கூறும் வேறு சில பிற்போக்காளர்கள் பாரதியின் சிரஞ்சீவித்துவத்தை அவனது தேசியப் பாடல்கள் நீங்கிய தெய்வப் பாடல்களில் மட்டுமே காணுகிறார்கள். இவர்கள் உலகம் மாறுகின்றது, உலக வாழ்க்கை மாறுகின்றது, உலக மக்களின் உணர்ச்சி களும் எண்ணங்களும் மாறிக் கொண்டிருக்கின்றன என்ற உண்மையை உணராதவர்கள்; உணர்ந்தாலும் ஒப்புக் கொள்ளத் துணியாதவர்கள்; ''பாரதி அவன் காலத்து நிகழ்ச்சிகளைப் பற்றித் தானே பாடினான். நித்தியமான உண்மைகளைப் பற்றிப் பாடவில்லையே'' என்று அங்கலாய்ப் பவர்கள், நித்தியமான உண்மைகள் என்று இவர்கள் கூறுவது தெய்வம், காதல் முதலியவைதாம். ஆனால், மனித குலத்தின் வளர்ச்சிக் கதியில் தெய்வம் மட்டுமென்ன, சகல தத்துவங்களுமே மாறி மாறி வந்திருக்கின்றன, மறைந்தும் வந்திருக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்று பாடிய புறநானூற்றுப்புலவனின் பாடல் இன்று செல்லுபடியாகுமா?

அதேபோல் பஞ்சபாண்டவர் மணந்தது போல் ஐந்து பேருக்குமே அழியாத பத்தினியாக இருந்து, இன்று பெண் குலம் மண வாழ்க்கையில் ஈடுபட முடியுமா? முடியாது. உலக மக்களின் வாழ்க்கைதான் நித்தியமானது. அவர்களது உணர்ச்சிகள், ஆசாபாசங்கள், நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற வேட்கை—இவையே நித்தியமானவை. சங்க காலத் தமிழனின் காதல் வாழ்க்கை வேறு; இன்றைய மக்களின் வாழ்க்கை நிலை வேறு. காட்டுமிராண்டியாக இருந்த மனிதன் பச்சை மாமிசத்தைத்தான் தின்றான்; இன்றைய மனிதன் அப்படிச் செய்ய முடியாது. பூர்வ காலத்து மனிதன் இடியையும் மின்னலையும், காற்றையும் கண்டு பயந்தான்; இன்றைய மனிதன் அவற்றை வெற்றி கொண்டு, வாழ்க்கை நடத்துகிறான். எனவே, எல்லாம் மாறிக் கொண்டிருக்கின்றன. இந்த மாற்றத்துக்கு தெய்வம் மட்டும் விதி விலக்கல்ல. சமுதாயத்தின் பல்வேறு கால கட்டங்களில் எப்படி, தோற்றமும், வளர்ச்சியும், அழிவும், மாற்றமும் ஏற்பட்டு வந்துள்ளனவோ, அதுபோல் தெய்வமும் தோன்றும்; வளரும்; தேயும்; மறையும். எந்தத் தத்துவாசிரியரானாலும் காலத்தைத் தாண்டி வாழ முடியாது. இருபதாம் நூற்றாண்டு மனிதன் சங்க காலத்திலோ, அதற்கும் முந்திய காலத்திலோ, அல்லது கி. பி. 3000த்திலோ வாழ முடியாது கால வரம்புக்கும் சமுதாய உணர்ச்சிகளுக்கும் கட்டுப்பட்டவனே மனிதன்; கவிஞன். இதற்கு எந்தக் கவிஞனும் விதி விலக்கல்ல. ராமானுஜர் ஆகட்டும், சங்கராச்சாரியாகட்டும், சேக்கிழார் ஆகட்டும், கம்பன் ஆகட்டும், நம்மாழ்வார் ஆகட்டும், மாணிக்கவாசகர் ஆகட்டும், எவரும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்த உண்மையையும் பாரதி உணர்ந்திருந்தான். எனவேதான்,

காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்துக் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய்—எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றுமில்லை

என்று பாடிச் சென்றான். எனவே பாரதி எந்த அளவுக்குத் தனது காலத்திற்கேற்ற வகையில் நூல்களையும் ஒழுக்க நியதிகளையும் இயற்றிக்கூறினானோ அந்த அளவுக்கு அவன் பெருங்கவிஞனாக விளங்குகிறான். ஆனால் பாரதியைப் போல் காலப்போக்கின் கதியை, சரித்திரப் போக்கை உன்னிப்பாகக் கவனித்து மனித சமுதாயத்துக்காகப் பாடுபட்ட தமிழ்ப்பெருங் கவிஞன் வேறு எவருமில்லை என்று சொல்லலாம்.

## பாரதி பார்ப்பனனா?

பாரதியை நன்குணர்ந்த தமிழர் சமுதாயத்தினரிடையே இப்படிப்பட்ட கேள்வியை எழுப்புவது அறிவீனம் ஆகும். சமுதாயத்தின் சகல ஜாதிக் கொடுமைகளையும், பிரிவினைகளையும் கடுமையாக எதிர்த்து, தன் வாழ்வையே அதற்கு அர்ப்பணித்தவன் பாரதி.

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

என்று சிறு 'பாப்பா'க்களுக்கும் கற்றுக்கொடுத்த பாவலன் அவன்.

"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே!"

என்றும்,

''இந்நாளிலே பொய்மைப் பார்ப்பார்—அவர்
ஏது செய்தும் காசுப் பெறப் பார்ப்பார்''

என்றும் பாடியவன் அவன்.

நந்தனைப் போலொரு பார்ப்பான்—இந்த
நாட்டினிலில்லை; குணம் நல்லதாயின்
எந்தக் குலத்தினரேனும்—உணர்வு
இன்பமடைதல் எளிதெனக் கண்டோம்

என்றும்,

சூத்திரனுக் கொருநீதி—தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின் அது
சாத்திரம் அன்று, சதியென்று கண்டோம்

என்றும் ஆணித்தரமாக, பார்ப்பனியத்தை, ஜாதிப் பிரிவினையை ஆதரிக்கும் சனாதனக் கொடுமையை எதிர்த்தவன் பாரதி. இன்றைய திராவிடச் செம்மல்கள் காணுவது போல் பாரதி பழமை விரும்பியல்ல. சென்று போன நாட்களை எண்ணி ஏங்கும் பிறவி அல்ல.

சென்றதினி மீளாது மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தைசெய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்!

என்று பாடியவன் பாரதி.

## பாரதி யார்?

பாரதி வேதாந்தியல்ல; பாரதி பார்ப்பனன் அல்ல பாரதி அற்பாயுள் கவிதைகளை எழுதியவனும் அல்ல. அப்படியானால் பாரதி யார்? பாரதியின் பாரம்பரியம் என்ன? அதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். கவிஞன் என்பவன் சமுதாயத்தின் ஊதுகுழல் என்றும், மனித

குலத்தின் மனச்சாட்சியின் குரல் என்றும் அறிஞர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் பாரதி இருபதாம் நூற்றாண்டின் சகாப்த புருஷனாக, இந்த நூற்றாண்டில் வாழ்ந்த மக்களின் மனச்சாட்சியின் குரலாக விளங்கினான். அதுதான் பாரதியின் பெருமை; அதுவே பாரதியின் உண்மையான பாரம்பரியம். அவனது பாரம்பரியம் காலத்தோடு, அவன் காலத்தில் நிலவிய முற்போக்காளர்களோடு, முற்போக்குச் சிந்தனைகளோடு, தத்துவங்களோடு, சக்திகளோடு ஒட்டி வளர்ந்த பாரம்பரியம். எவ்வாறு?

## காலத்தால் உருவான கவிஞன்

பாரதி பிறந்தது 1882 ஆம் ஆண்டு; மறைந்தது 1921 செப்டம்பர் மாதம். வாழ்ந்தது 39 வருடங்கள். பாரதி 15-வது வயதிலேயே திறமையாகக் கவிதைகள் புனையத் தொடங்கிவிட்டான். அது மட்டுமல்ல, தனது பிறந்த ஊராகிய எட்டயபுரத்திலேயே அடங்கிக் கிடக்காமல், காசி வரையிலும் சென்று திரும்பி விட்டான். தனது இள வயதிலேயே பாரத சமுதாயத்தின் பல்வேறு மொழிபேசும் மக்களையும், அவர்கள் பண்பாட்டையும் நேரிலேயே கண்டறிந்தான். தனது 22 ஆவது வயதில், அதாவது 1904 ஆம் ஆண்டில் பத்திரிகைத் தொழிலில் புகுந்தான். பத்திரிகைத் தொழில் மூலம் அவன் உலகத்தின் போக்குகளையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்து வந்தான்.

1905-ம் வருஷத்திலே ரஷ்யநாட்டில் புரட்சி நடந்தது. அதன் பிரதிபலிப்பு இந்தியாவிலும் ஏற்பட்டது. கர்சானின் ஆட்சியைக் கண்டு இந்தியாவிலுள்ள மிதவாதிகளே கொதித்தெழும் நிலைமை ஏற்பட்டது. சுதேசிய இயக்கம் தீவிரமாகியது. அன்று பாரதியின் மனத்திலே குடியேறிய தேசபக்திக் கனல் அவன் சாகும்வரையிலும் அணையவில்லை. அன்று முதல் பாரதி சமுதாயத்தின் சகல உள்ளோட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் கவனித்து வந்தான்; தேசியப் போராட்டத்தில் தலைசிறந்த கவிஞனாகப் பங்கெடுத்துக் கொண்டான்.

1905 ஆம் வருஷத்துப் புரட்சியைக் கண்டது போலவே 1917 ஆம் வருஷத்து அக்டோபர் புரட்சியையும் தன் வாழ்விலேயே கண்டவன் பாரதி. ரஷ்ய நாட்டின் சரித்திரத்தையே மாற்றியமைத்த ஒரு பெரும் போராட்டத்தின் ஆரம்பத்தையும் முடிவையும் கண்டவன் பாரதி. இருபெரும் புரட்சிகளுக்கூடே வளர்ந்தவன், உருவானவன் பாரதி. மானிட சமுதாயத்துக்கு வாழ்வுண்டு. விடுதலையுண்டு, விமோசனம் உண்டு என்ற உண்மையை பிரத்தியட்ச பூர்வமாக 1917 ஆம் வருஷத்துப் புரட்சி நிரூபித்ததை அவன் கண்டான். எனவேதான் பாரதி இந்திய மக்களின் விடுதலைக்கும், விமோசனத்துக்கும் தடையாக இருந்த அன்னிய ஏகாதிபத்தியத்தையும், உள்நாட்டு நிலப்பிரத்துவத்தையும் பல்வேறு ரூபங்களில் எதிர்த்துப் பாடினான்.

பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை
கொண்டு
போகவோ? நாங்கள் சாகவோ?

என்று குமுறினான்.

ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி?

என்று அடித்துக் கேட்டான்.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்

என்று ஜெயகோஷம் எழுப்பினான்.

இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்,
தனியொருவனுக்கு உணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

என்றும்,

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்! இங்கு
வாழும் மனிதர் எல்லோருக்கும்;
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்

என்றும் பாடினான். அதுமட்டுமல்ல உழைக்கின்ற மக்களுக்கே உலகம் என்ற உண்மையையும் அவன் உணர்ந்து பாடினான்.

அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!
பெரும்புகழ் உமக்கே இசைக்கின்றேன்.
பிரமதேவன் கலைஇங்குநீரே!

என்று தொழிலாளி மக்களை வாழ்த்தினான்.

அதுபோலவே நிலப்பிரபுத்துவக்கொடுமைகளான பெண்ணடிமையையும் ஜாதிக் கொடுமையையும் சுரண்டலையும் அவன் எதிர்த்தான்.

பெண்டாட்டிதனை அடிமைப்படுத்த வேண்டி
பெண்குலத்தை முழுதடிமைப்படுத்தலாமோ?

என்றும்,

ஈனப் பறையர்களேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங்கிருப்பவர் அன்றோ?

என்றும்,

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்றும் ஆணையிட்டான்; அறைகூவி அழைத்தான்.

சமுதாய வாழ்க்கையின் சகல மாற்றங்களையும் உலகத்து நிகழ்ச்சிகளையும் அவன் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வந்தான். எனவேதான் ஆங்கிலேயரோடு பேரம் பேசிய மிதவாதிகளை அவன் கண்டித்தான். ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள சின்னஞ் சிறு பெல்ஜிய நாடு தன் நாட்டின் வழியே அன்னியச் சேனையைப் போகவிடாது எதிர்த்த வீரத்தைக் கண்டு பாராட்டினான். 'அறத்தினால் வீழ்ந்து விட்டாய்!' என்று வாழ்த்தினான்.

போருக்குக் கோலம் பூண்டு
புகுந்தவன் செருக்குக் காட்டை
வேருக்கும் இடமில்லாமல்
வெட்டுவேன் என்று நின்றாய்

என்று மனமார வாயார வாழ்த்தி வணங்கினான்.

அதுபோலவே பிஜித் தீவிலும், வேறுள்ள தூரா தொலைச் சீமைகளிலும் அடிமைகளாக வாழ்ந்த மக்களைக் கண்டு, பிழைப்பு நாடி அக்கரைச் சீமைக் கரும்பு தோட்டங் களுக்குச் சென்ற தமிழ் நாட்டு ஆண், பெண்களின் அவதியைக் கண்டு,

நெஞ்சம் குமுறுகிறார்—கற்பு
நீங்கிடச் செய்யும் கொடுமையிலே அந்தப்
பஞ்சை மகளிரெல்லாம்—துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமும் இல்லாதே—அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்சவிடலாமோ?

என்று பாடினான்.

அதுபோலவே ரஷ்ய நாட்டில் புரட்சி நடந்தேறிய சுபச் செய்தியைக் கேட்டு,

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றில் எழுந்ததுபார்; குடியரசென்று
உலகறியக் கூறிவிட்டார்;
அடிமைக்குத் தளையில்லை; யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றார்.
இடிபட்ட சுவர்போலே கலி விழுந்தான்;
கிருதயுகம் எழுக மாதோ!

என்று வாழ்த்திப் பூரித்தான். அதுமட்டுமல்ல, அப்படிப் பட்ட புதிய வாழ்க்கை இந்த நாட்டிலும் பூத்து மலர வேண்டும்;

முப்பது கோடி ஜனங்களின்—சங்க
முழுமைக்கும் பொதுவுடைமை
ஒப்பிலாத சமுதாயம்—இந்த
உலகத்துக்கோர் புதுமை

இந்திய நாட்டிலும் உருவாக வேண்டும் என்று கனவு கண்டான்.

எனவே பாரதி சமுதாயத்தை வாழவைக்க வேண்டும் என்று விரும்பிய, பாடுபட்ட கவி. சமுதாயத்தை வாழ வைப்பதற்கு இடையூறுகளாகவுள்ள சகலவிதமான சுரண் டல் முறைகளையும், கொடுமைகளையும் எதிர்த்துக் குமுறிய கவி; மனித குலத்தில் மனச்சாட்சியின் சகல நாடித் துடிப்புகளையும் அவ்வப்போது தொட்டறிந்து அவற்றைச் சொல்லிலே வடித்தெடுத்த சுதந்திரக் கவி.

## யாருக்காகப் பாடினான்?

பிரஞ்சு நாவலாசிரியரான பிரபல எழுத்தாளர் ரோமான் ரோலந்து பின் வருமாறு எழுதுகிறார்:

''நான் ஏன் எழுதுகிறேன்? யாருக்காக எழுதுகிறேன்? இவ்விரண்டு கேள்விகளையும் நான் துண்டுபடுத்த முடியாது. ஏன் எழுதுகிறேன்? ஏனெனில் என்னால் அதைத் தவிர்க்க முடியாது. ஏனெனில் நான் காகிதத்தில் எழுதாவிட்டாலும், எனது எண்ணங்களை என் மனசிலேனும் எழுதித்தான் தீர வேண்டும்... ஏனெனில் எழுதுவது என்பது எனக்கு உயிர்வாழ மூச்சு விடுவது போலத்தான்...என்னுடைய நடவடிக்கைகள் எல்லாம் எங்கும் எப்போதும் உயிர்ப்பொறி தெறிப்பதாகவே இருக்கும். நான் எப்பொழுதும் முன்னேறிக் கொண்டே வருகிறேன். நான் உயிருள்ள வரை நிற்க முடியாது. அதனால்தான் உழைக்கும் வர்க்கத்தின் ஒன்றுபட்ட சக்தியோடு, உருண்டோடும் மனித சமுதாயத்தின் பாதையை வகுத்துச் செல்லும் மக்களோடு, நான் இணைந்து நிற்கிறேன். சரித்திரத்தின் பரிணாம வளர்ச்சியின் தவிர்க்க முடியாத கதியோடு அவர்கள் செல்கிறார்கள். நானும் அந்த நியதிக்குக் கட்டுப்பட்டவன்.

''நான் யாருக்காக எழுதுகிறேன்? யார் முன்னேறிச் செல்லும் சேனை வெள்ளத்துக்கு முன்னோடியாக இருக்கிறார்களோ, அவர்களுக்காக! வர்க்கபேதமும் குறுகிய கட்டுப்பாடுகளுமற்ற மனித சமுதாயத்தைச் சமைப்பதற்காக! யார் அந்தச் சர்வ தேசியப் பெரும் போராட்டத்தைத் துரிதப்படுத்துகிறார்களோ—அவர்களுக்காக! எழுத்தாளர்களான நாங்கள் எங்களுக்குப் பின் தங்கியவர்களைத் துரிதப்படும்படி சொல்கிறோம். ஆனால் நாங்கள் அவர்களுக்காகக் காத்திருக்க முடியாது. அவர்களாகத்தான் எங்களை எட்டிப் பிடிக்க வேண்டும். முன்னேறும்படை என்றும் முடங்கி நிற்பதில்லை.''

மகாகவி பாரதி முன்னேறும் படையின் முன்னோடிக் கவிஞன். அந்த முன்னேறும் படையின் வேகத்தை, அந்த முன்னோடிக் கவிஞனின் பாரம்பரியப் பாதையை, எத்தனை பஜகோவிந்தப் பண்டாரங்கள் ஒன்று சேர்ந்தாலும், எத்தனை அருள்நெறி அடியார்கள் அணி திரண்டாலும், எத்தனை 'ஆரியத் துவேஷிகள்' களத்திலே குதித்தாலும் தடுத்து நிறுத்த முடியாது.

ஆம், முன்னேறும் படை என்றும் முடங்கி நிற்பதில்லை.

# பாரத சமுதாயப் பாடல்

'பாரத சமுதாயம் வாழ்கவே!' என்று தொடங்கும் பாரதியின் பாடலே, அவன் எழுதிய கடைசிப் பாடல் என்ற ஒரு கருத்து நிலவி வருகிறது. இதனை வலியுறுத்துவதுபோல் பாரதியின் நெருங்கிய தோழரும், தொழில் சங்கத் தந்தையுமாகத் திகழ்ந்த வி. சக்கரைச் செட்டியார் 1-3-1922 அன்று தாம் எழுதிய ஆங்கிலக் கட்டுரையொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "பாரதியின் கடைசித் தோற்றம் கடற்கரையில் நடந்த ஓர் ஒத்துழையாமைக் கூட்டத்திலாகும். அவரைத் தமது பாடல்களிலொன்றைப் பாடும்படி ஜனங்கள் கேட்ட போது அவர் 'பாரத சமுதாயம்' என்ற பாடலைப் பாடினார். அப்பாடல் துணிவான கருத்தும், உயர்ந்த மன எழுச்சியும் பொருந்தியதாகும்."

இக்கூற்றின் மூலம் நாமும் பாரதியின் கடைசிப் பாடலாக இதனைக் கொள்வதில் தவறில்லை. இதுவே இறுதிப் பாடலாயின் வளர்ந்தோங்கிச் சிறந்த பாரதியின் அறிவின் முதிர்ச்சி நிலையில் அவதரித்த பாடல் இது என்றும் நாம் கொள்ளலாம். மேலும் இப்பாடலுக்கு ஒரு தனிச்சிறப்பும் உண்டு. இந்தப் பாடலில்தான் பாரதி முதன் முறையாகத் தமிழுக்கே புதியதான 'பொதுவுடைமை' என்ற சொற்சேர்க்கையைப் பிரயோகித்துள்ளான்; மேலும் இந்தப் பாடலில்தான் அவன் பாரத மக்களைப் பாரத சமுதாயமாகக் காண்கிறான். எனவே இந்தப் பாடல் நமது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. இதனை நாம் எவ்வாறு புரிந்து கொள்

கிறோமோ, அதனைப் பொறுத்து இதன் சிறப்பையும் நாம் உணர்ந்து கொள்ள முடியும். இந்தக் கருத்தோடு நாம் பாடலில் புகுவோம். எடுத்த எடுப்பில் பாரதி பாரத சமுதாயத்தை வாழ்த்துகிறான். வாழ்கவே என்று தான் கொடுக்கும் குரலை எதிரொலிக்கும் கோஷமாக 'வாழ்க! வாழ்க' என்ற வார்த்தைகளும் பிறக்கின்றன. இவற்றிலிருந்து,

பாரத சமுதாயம் வாழ்கவே—வாழ்க வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே! ஜய ஜய ஜய

என்ற ராஜ கம்பீரமான பல்லவி பிறந்து விடுகிறது.

ஆம், பாரத சமுதாயம் வாழ வேண்டும். பாரத நாட்டிலுள்ள ஒரு சிலரல்ல; சமுதாயத்திலுள்ள அனைவரும் வாழவேண்டும். அவ்வாறு வாழ வழியென்ன? எப்படிப் பட்ட வாழ்க்கை முறையினால் பாரத சமுதாயம் ஜெய கோஷமிட்டு வாழ முடியும்? இந்தச் சிந்தனையிலிருந்து பாட்டின் அனுபல்லவி பிறக்கின்றது. ஆம். வாழ வழியுண்டு. எந்த வழி?

முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை!

பாரதி திட்டவட்டமாகக் கூறி விடுகிறான், 'பொதுவுடைமை' தான் அதற்கான வழி என்று. இந்தப் பொதுவுடைமையையும் அவன் எப்படிக் காண்கிறான்? சமுதாயம் என்பது நெல்லிக்காய் மூட்டையைப்போல் இல்லாமல் ஜனங்களின் சங்கமாக இருக்க வேண்டும். அத்தகைய கட்டுப்பாடும் ஒற்றுமையும் கொண்ட சமுதாயத்தின் முழுமைக்கும் பாரத நாட்டுச் செல்வங்கள் பொதுவுடைமையாக வேண்டும். பொதுவுடைமை என்பது ஒரு சில துறைகளில் மட்டுமல்ல; எல்லாத் துறைகளிலும் பொதுவுடைமை.

அவ்வாறு எல்லாத் துறைகளிலும் தனியுடைமையின் பிடிப்பு தகர்ந்து பொதுவுடைமை உருவாகும்போது, அந்தச் சமுதாயம் ஒப்பில்லாத சமுதாயமாக மாறும், உலகத்துக்கொரு புதுமையாக, இதுவரை உலகம் காணாத புதுமையாகத் திகழும் என்பது பாரதியின் நம்பிக்கை.

ஆனால் இத்தகைய சமுதாயத்தை, புதுமையை உருவாக்கத் தடையாக இருக்கும் சக்திகள் என்ன? இதனை எண்ணும் போது, தனியுடைமையின் பேரால் இந்த உலகத்தில் மனிதனை மனிதன் சுரண்டி வாழும் முதலாளித்துவ வாழ்க்கை பாரதியின் கண்ணில் தோன்றுகிறது. இந்தச் சுரண்டல் மனிதனுக்கு மனிதனை எதிரியாக்குகிறது; மனிதனுக்கு மனிதனை அடிமையாக்குகிறது; மனிதனுக்கு மனிதனை துன்பத்துக்குள்ளாக்குகிறது. சுரண்டலினால் மனிதர்கள் துன்பப்படுகிறார்கள்; வறுமைப்படுகிறார்கள்; உணவுக்குக்கூட வழியின்றி நோகின்றார்கள். எனவே சமுதாயம் முழுவதும் வாழ வேண்டுமென்றால், பிறர் உழைப்பை, உணவை, உடையை, உரிமையைத் திருடுகின்ற, சட்டபூர்வமாய்ச் சுரண்டுகின்ற இந்த வழக்கம் ஒழிய வேண்டும். இந்த எண்ணத்திலிருந்து பாரதியின் சரணங்கள் பிறக்கத் தொடங்குகின்றன. வாழ்கின்ற பாரத சமுதாயத்தில்,

மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?—புலனில்
வாழ்க்கை இனியுண்டோ?—நம்மிலந்த
வாழ்க்கை இனியுண்டோ?

ஆம். மனிதனை மனிதன் சுரண்டுகின்ற வாழ்க்கை மனித வாழ்க்கையில்லை. அது புலனில்லாத, உணர்ச்சியில்லாத, அறிவில்லாத விலங்கு வாழ்க்கை. வாழ்கின்ற பாரத சமுதாயத்துக்கு அத்தகைய வாழ்க்கை உதவாது. எனவே அந்த வாழ்க்கை முறையை நாம் விட்டொழிக்க வேண்டும்.

"சரி, இந்த உலகத்தில் சிலர் வாழப் பலர் வாடுகிறார்கள் என்று சொன்னால் அதற்குக் காரணம் சுரண்டல் முறை மட்டும்தானா? உலகத்தில் எல்லோருக்கும் உணவு வழங்கக் கூடிய அளவுக்கு உலகில் உணவு உற்பத்தியுண்டா? இயற்கை நமக்குப் போதுமான உணவை வழங்குவதில்லையே. எனவே வறுமை என்பதே இயற்கைத் தாய் விதித்த தவிர்க்க முடியாத தலைவிதிதான்'' என்று சிலர் வாதம் பேசுவதும் பாரதியின் காதில் விழுகிறது. உடனே அவனுக்கு ஆத்திரம் பிறக்கிறது. பாரத பூமி அப்படியொன்றும் மலடு தட்டிப் போய்விடவில்லை என்று சுட்டிக்காட்ட முனைகிறான்:

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு
கனியும் கிழங்கும் தானியங்களும்
கணக்கின்றித் தரும் நாடு—இது
கணக்கின்றித் தரும் நாடு—நித்தநித்தம்
கணக்கின்றித் தரும் நாடு.

எல்லோருக்கும் எல்லாம் என்றதும் எல்லோருக்கும் அரை வயிறு என்று அர்த்தமில்லை; அரை வயிறு உண்ண வேண்டிய அவசியமுமில்லை. ஏனெனில் பாரதநாடு வற்றாத செல்வ வளத்தைத் தரக்கூடியது. அதுவும் ஏதோ சீசனுக்குச் சீசன் தருகின்ற நாடு என்று எண்ண வேண்டாம். 'நித்த நித்தம்' தருகின்ற நாடு, எனவே இந்த நாட்டில் பஞ்சமும் வறுமையும் என்றால், அதற்குக் காரணம் நம்மிடமுள்ள மனிதர் உணவை மனிதர் பறிக்கும், மனிதர் நோக மனிதர் பார்க்கும் 'புலனில் வழக்கம்' தான். ஆதலால் இந்த வழக்கத்தை அடியோடு தொலைத்துத் தலைமுழுக நாம் என்ன செய்ய வேண்டும்? இதற்குப் பாரதி பின்வருமாறு வழி சொல்கிறான்:

இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்;

தனியொருவனுக்கு உணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

இங்கேதான் நாம் பாரதியின் புரட்சியை, தமிழ் இலக்கிய உலகம் அதுவரையில் காணாத ஒரு புதுமையைக் காண்கிறோம்; புதிய குரலைக் கேட்கிறோம். எப்படி? நாம் வாழ்வதற்குப் பாரதி புதிய விதி கூறுகிறான். இது வரையில் எத்தனையோ சட்ட திட்டத்தை நாம் கண்டு விட்டோம். அர்த்த சாஸ்திரம் முதலிய பல்வேறு சட்ட நூல்களிலிருந்து இந்தியன் பீனல் கோடு வரையிலும் கண்டுவிட்டோம். இவை எவையும் சமுதாயம் முழுமைக்கும் வாழ்வளிக்கவில்லை; வாழ்வை உத்தரவாதம் செய்யவில்லை. எனவே இனி நாம் ஒரேயொரு சட்டத்தை மட்டும் செய்து கொள்வோம். அது என்ன? இந்த உலகத்தில் எந்தவொரு தனி மனிதனும்—மனிதனாகப் பிறந்த எவனும்—உணவில்லை என்ற காரணத்தால் பட்டினி கிடக்கக் கூடாது; கிடந்தால் உலகத்தையே சுடுசாம்பலாக்குவோம் என்பதுதான் அந்தக் சட்டம். ஆனால் "வாழ்க வாழ்க" என்று வாழ்த்த வந்த பாடலில் இப்படி அபசுரம்போல் 'அழித்திடுவோம்' என்று பாடலாமா? ஆனால் இந்த எதிர்மறைச் சொல்தான் பாரதியின் புரட்சிக்கு வேகம் கொடுக்கிறது. நாம் உலகை அழிக்க விரும்பவில்லை. காக்கவே விரும்புகிறோம். எனவே உலகம் அழியாமல் காக்கப்பட வேண்டுமென்றால் இப்படியொரு கண்டிப்பான சட்டத்தை நாம் உருவாக்கிக் கொள்வதோடு, அதற்குக் கண்ணாடிச் சட்டம் போட்டு, மாலையிட்டுக் கும்பிட்டுக் கொண்டிராமல், அதனை எந்த நாளும் காக்கவும் வேண்டும். அவ்வாறு காத்தால், அதாவது உலகத்தில் வறுமை எவ்விதத்திலும் தலைதூக்காது நாம் பார்த்துக் கொண்டால், உலகமும், பாரத சமுதாயமும் வாழத்தான் செய்யும்; வாழாமற் போகாது.

ஆனால் இந்தத் தரித்திரம் பிடித்த நாட்டில் ஆன்மிகச் செல்வத்துக்கு மட்டும் குறைச்சலில்லை. மனிதர்கள் எல்லோரையும் மகேசுவரனின் அவதாரங்களாகக் கூறும் மலட்டு வேதங்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் குறைச்சலில்லை.

மனிதனுக்கு வயிறு நிறைந்தால் மட்டும் போதாது. இதயமும் நிறைய வேண்டும் என்று இந்த வேதங்கள் கூறுகின்றன. ஆம், உண்மைதான். ஆனால் இதயம் மட்டும் நிரம்பி, வயிறு நிரம்பாமல் இருக்கலாமா? ''வயிற்றிலே ஈரத் துணியைக் கட்டிக் கொண்டிருப்பவனிடம் எந்தச் சமயப் பிரச்சாரமும் எடுபடாது'' என்றான் விவேகானந்தன். அவன் வழியிலே வந்த பாரதி அதையும் எண்ணிப் பார்க்கிறான். உணவுப் பிரச்சினை தீர்ந்து விடுவதோடு பொதுவுடைமை வந்து விடுவதில்லை. மனித இதய வளர்ச்சியும் பெறவேண்டும். கலாசார மேம்பாடும் அடைய வேண்டும். இதய வளர்ச்சியைக் கருதிய நமது நாடு மனிதர்களையெல்லாம் ஆண்டவனின் அவதாரங்களாகப் பார்த்தது. இதனை நினைவு கூர்கிறான் பாரதி:

''எல்லா உயிர்களிலும் நானே இருக்கின்றேன்''
என்றுரைத்தான் கண்ணபெருமான்

இந்தக் கீதாசாரியனின் கூற்று உண்மையானால், இந்த உலகத்தில் பிறந்த எல்லோரும் கண்ணன் அவதாரங்கள் தான். ஆனால் அந்த அவதாரங்கள், அந்தக் கடவுளர்கள் பசியாலும் பிணியாலும் வாடலாமா? எனவே அவர்களைக் கடவுள் நிலைக்கு, அமரநிலைக்கு உயர்த்த வேண்டுமானால், முதலில் அவர்களை ஈனக் கவலை இருளிலிருந்து விடுபடச் செய்ய வேண்டும். அதற்குப் பொதுவுடமை முதற்படி. எனவே அமரநிலை, தெய்வத் தன்மை பெறுவதற்கு, மிருகமாக வாழும் மனிதன் மனிதநிலைக்கு வருவதோடு மட்டுமல்லாமல், தேவநிலைக்கு உயர்வதற்கும் பொது உடைமை தேவை என்று காண்கிறான் பாரதி, இதிலிருந்து அடுத்த அடிகள் பிறக்கின்றன:

எல்லாரும் அமரநிலையை எய்தும் நன்முறையை
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம், ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்.

இவ்வாறு ஆம், ஆம், ஆம்—என்று முக்காலும் கூறிப் பொதுவுடைமைத் தத்துவம் இந்திய நாட்டு மரபுக்கும்

பண்பாட்டிற்கும் உகந்ததுதான் என்று உறுதி கூறுகிறான் பாரதி. இறுதியில் அவன் தனது பாட்டில் தான் வகுக்கின்ற இந்தப் புதிய பாரத சமுதாயம் எப்படிப்பட்டது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ளும் விதத்தில் பாடத் தொடங்கு கிறான்.

'தம்பி! உனக்கு இனம், குலம் என்று சொன்னால்தான் புரியுமா? ஜாதி, சமயம் என்றால்தான் புரியுமா?

'ஐயா! உங்களுக்கு எடைக்கல்லும் தராசும்தான் புரிகிற பாஷையா? விலையும் மதிப்பும்தான் விளங்கக்கூடிய மொழியா?

'உங்களுக்கு அரசனில்லாத ஆட்சியைப் பற்றி கற்பனையே செய்ய முடியாதா? அப்படியென்றால் நான் வகுக்கின்ற புதிய சமுதாயத்தை, நீங்களும் புரிந்து கொள்ளுங்கள்!' என்று சொல்வது போல் பின்வருமாறு பாடுகிறான்:

எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்.
எல்லாரும் ஓர் நிறை; எல்லாரும் ஓர் விலை;
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!

எல்லாரும் எல்லாம் என்று அழுத்தியழுத்திப் பாடித் தனது பாடலை அருமையாக முடிக்கிறான். பாரதி கண்ட பாரத சமுதாயக் கனவு திட்டவட்டமான சிந்தனை வளர்ச்சி யோடும், தெளிவோடும், தர்க்க ரீதியாக வளர்ச்சி பெற்றுச் சிகரம் போல் பொலிவு பெறுவதை இந்தப் பாட்டில் நாம் காண்கிறோம்.

அற்புதமான பாட்டு இது! இந்த விளக்கத்தோடு பாரதியின் இந்தப் பாடலை அணுகிப் படியுங்கள். நான் கூறாத, எனக்குப் புலப்படாத பல உண்மைகள் உங்களுக்குப் புலப்படலாம்.

Code No. A 517

# எமது சிறந்த நூல்கள்

**ரகுநாதன்**

*பாரதி காலமும் கருத்தும்*

*பாரதியும் ஷெல்லியும்*

*பாரதியும் புரட்சி இயக்கமும்*

*தமிழால் ஏலாதா?*

*கவியரங்கக் கவிதைகள்*

*பஞ்சும் பசியும்*

**ப. ஜீவானந்தம்**

*பாரதி வழி*

**க. கைலாசபதி**

*இரு மகாகவிகள்*

*பாரதி ஆய்வுகள்*

**சி. கனகசபாபதி**

*பாரதி-பாரதிதாசன் கவிதை மதிப்பீடு*

**தி. முத்துகிருஷ்ணன்**

*மகாகவி பாரதியார்*
*வாழ்க்கைச் சித்திரம்*

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
சென்னை-600 098.